விசயநகரப் பேரரசு
கிருட்டிணதேவராயர்

(VIJAYANAGAR EMPIRE - KRISHNADEVARAYAR)

பு. ச. அரங்கநாதன்



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—589

விசயநகரப் பேரரசு
கிருட்டிணதேவராயர்

ஆசிரியர்

பு. ச. அரங்கநாதன், எம்.ஏ. (வரலாறு), எம்.ஏ. (தமிழ்), பி.டி.,

பேராசிரியர் வரலாற்றுத்துறை,

அரசு பயிற்சிக் கல்லூரி, வேலூர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—October, 1974.

T.N.T.B.S. (C.P.) No. 589

VIJAYANAGAR EMPIRE - KRISHNADEVARAYAR

P. S RANGANATHAN

Price Rs. 5-10

Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by
THIRIPURAM PRINTERS,
55, Strahans Road,
Madras-6000012.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினன்காண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன் வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான விசயநகரப் பேரரசு—கிருட்டிணதேவராயர் என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 589ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 624 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை. ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

1. விசயநகரத் தோற்றம்

சீர் மிகுந்த விசயநகரம் தென்னக வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ளது. இந்து சமயத்தை நிலைநாட்டிய பெருமை அதற்குண்டு. தக்காண இந்திய மக்கள், தாங்கள் சுயேச்சையாகத் தங்கள் சமயத்தைப் பின்பற்ற நல்லதொரு வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். கி.பி. *1329*-ல் முகம்மது பின்துக்ளக் தக்காண வெற்றிக்குப் பின் தேவகிரியைவிட்டு வட இந்தியா சென்றபோது, தங்கள் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள முயன்றனர். முகம்மதிய ஆட்சியை மக்கள் விருப்பத்தோடு ஏற்றுக் கொள்ளவில்லை. சைவ சமயத்தை மீண்டும் தென்னகத்தில் பரப்ப விரும்பிய அவர்களது தலைவர்களும் இச் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். முகம்மதியர் படையெடுப்பால் ஏற்பட்ட விளைவுகளை எண்ணி வேதனையடைந்தனர். அவர்தம் நாடுகளும் நகரங்களும் கொள்ளையிடப்பட்டன. இந்து சமயக் கோயில்களும், மடங்களும் தாக்கி அழிக்கப்பட்டன. முகம்மதிய மதத்தில் மக்களைச் சேர்க்க வன்முறைகள் கையாளப்பட்டன. எனவே, அரசியல், பொருளாதார, சமய, கலைத்துறைகளில் குழப்பம் ஏற்பட்டது. இத்தகைய குழப்பத்தை அடக்க முகம்மதியப் படையெழுச்சிகள் பலமுறை தோன்றின. அதனால் இந்துக்கள் ஆத்திரம் கொண்டு ஓர் எதிர்ப்பு முன்னணியை உருவாக்க முயன்றனர். *1335* ஆம் ஆண்டு மாபார்க் கலகம் ஏற்பட்டது. அதில் முகம்மதியரது குருதி வெறியை மக்கள் கண்டனரேயன்றி வேறெந்த நன்மையையும் காணவில்லை. அப்பொழுது ஏற்பட்ட பிளேக்கில் சுல்தான் இறந்ததாகச் செய்தி பரவலாயிற்று. இதுதான் தக்க சமயமென்று, தென்னிந்தியச் சிற்றரசர்கள் கலகஞ் செய்து, அதன் மூலம் விடுதலைக்கு வழி உண்டாக்கலாமென உணர்ந்தனர். இத்தகைய எண்ணத்தின் விளைவே, விசயநகரத் தோற்றத்துக்கு வித்திட்டது. கிருஷ்ணை துங்கபத்திரா ஆறுகளுக்குத் தெற்கில் உள்ள

பகுதி, முகம்மதியப் படையெடுப்பால் அழிக்கப்படாதவாறு, சில இந்து சமய அரசர்கள் இராணுவத் துணையுடன் காப்பாற்ற முயன்றனர்.

இத்றகிடையில் ஹொய்சள மன்னர் மூன்றும் வல்லாளர், தில்லி சுல்தானுடன் கொண்டிருந்த தொடர்பினை நீக்கிக்கொண்டு ஆனெகுந்திப் பகுதியில் ஆளுநராக உள்ள முகம்மது மாலிக்கை எதிர்த்தார். நூனிஸ்[1] குறிப்பிட்டுள்ளபடி, வல்லாளர் மாலிக்கை நோக்கி, 'உமக்கெதிராக மக்கள் புறப்பட்டுவிட்டனர். ஒவ்வொருவரும் தம் விருப்பம் போல் தலைமையேற்க உள்ளனர். உம் பக்கம் யாரும் இல்லை. மக்கள் கோட்டைக்குள்ளே உம்மைச் சிறை செய்ய வந்துள்ளனர். உணவுப் பொருள்கள் ஏதும் உள்ளே உமக்கு அனுப்பப்படமாட்டா. அவர்கள்மேல் திணிக்கப்பட்ட வரிகளும் கொடுக்கப்படமாட்டா' என்று கூறி அவரை முற்றுகையிட்டனர். வேறு வழியின்றி, இச் செய்தியைச் சுல்தானுக்குத் தெரிவித்தனர். முகம்மது பின் துக்ளக், தம் அலுவலாளர்களால் அங்கு அமைதியை நிலைநாட்ட முடியவில்லை என்பதனை உணர்ந்து, அப் பகுதியில் ஏற்கெனவே அரசாங்க அலுவலிலிருந்த அரிஅரன், புக்கன் என்ற இருவரிடத்தும், 'முகம்மதிய சமயத்திலிருந்து மாற மாட்டோம்' என்ற உறுதிமொழியைப் பெற்றுக்கொண்ட பின்னர் அவர்களை அவ்விடம் அமைதி நிலைநாட்ட அனுப்பினார்.

முதலாம் அரிஅரன், முதலாம் புக்கன் ஆகிய இருவரும் சங்கம குமாரர்கள் ஐவரைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஆனெகுந்திக்குச் செல்வதற்கு முன்னர், வாரங்கல் மன்னர் இரண்டாம் பிரதாபருத்திரனின்கீழ்ப் பணியாற்றினர். 1323-ல் வாரங்கல், முகம்மதிய ஆட்சிக்குட்பட்டவுடன் அங்கிருந்து காம்பிலிக்குச் சென்றனர். 1327-ல் காம்பிலி வீழ்ச்சியுற்றபோது, அவர்கள் அரசியல் கைதிகளாகத் தில்லிக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அங்கு அவர்கள் முகம்மதிய சமயத்தைத் தழுவியதால் சுல்தானுடன் மிக நெருங்கிய நிலையில் பழகி வந்தனர். எனவே, சுல்தான் தற்போது காம்பிலியில் அமைதியை நிலைநாட்டவும், இந்துக்களின் கிளர்ச்சியை அடக்கவும், முகம்மது மாலிக்கைப் பதவியிலிருந்து நீக்கி அவர்களை நியமித்தார். அவர்கள் தென்னிந்தியாவிற்கு வந்த பின்னர் முகம்மதிய சமயத்தைக் கைவிட்டுவிட்டு, ஒரு சுதந்திர இந்து சமய ஆட்சியை உருவாக்குவதில் முனைந்தனர். அதுவே விசயநகரப் பேரரசாக உருவாயிற்று. ஏற்கெனவே அவர்கள் ஆனெகுந்தி அரச பதவியில் இருந்த காரணத்தால் அவர்களுடைய

1 Nunish 'He told the Sulthan that the land was risen against him'

வேலை சற்று எளிதாகவே இருந்தது. எனினும், அவர்கள் முகம்மதிய சமயத்தைச் சார்ந்தவர்கள் என்ற எண்ணம் மக்கள் உள்ளத்தில் இருந்ததால் அவர்களுக்குச் சிறுசிறு எதிர்ப்புகள் தோன்றலாயின. அச் சமயம் அவர்கள் வித்தியாரண்யர் என்ற இந்து சமயத் தலைவரைச் சந்தித்தனர். அவரது சிறந்த போதனைகளைக் கேட்ட பின்னர் அவரையே தங்கள் குருவாகக் கொண்டனர்; முகம்மதிய சமயத்தை விட்டு இந்து சமயத்தில் சேர்ந்தனர். இவ்வாறு சமய மாற்றம் பெற்றதால் இந்து தர்மத்தை நிலைநாட்டும் பொறுப்பினை ஏற்றனர். மக்கள் மனத்தில் அவர்களது சமயம்பற்றிய ஐயம் குறையலாயிற்று. அதனுடன் அரிஅரன், அவ் விடத்தின் கடவுளாக விளங்கும், 'ஸ்ரீ விருபாக்ஷர்' பெயரில் அரசியலைத் தொடங்க ஆரம் பித்தார். மற்றும் எல்லா அரசாங்க ஆவணங்களிலும் அக் கடவுளின் பெயரில் கையெழுத்திட்டார். (இவ்வாறு விசயநகரப் பேரரசின் தோற்றம் *1336*ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *18*ஆம் நாள் ஏற்பட்டது.)

விசயநகர் அமைப்பு

நூனிஸ் விசயநகர அமைப்புப் பற்றி ஒரு கதையைக் குறிப்பிடு கின்றார். ஒரு சமயம் அரசன் வேட்டைக்குப் போகையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு முயல், வேட்டை நாய்களை எதிர்த்து விரட்டுவதைக் கண்டதாகவும், அதைப்பற்றித் தன் குருவான வித்தியாரண்யரிடம் கூறியதாகவும், அவர் அறிவுரையின்படி, அந் நிகழ்ச்சி ஏற்பட்ட இடத்தில் ஒரு சிறப்பு இருப்பதாக நம்பி, அங்கு ஒரு நகரை நிறுவினதாகவும், அந் நகரே விசயநகரம் எனவும் அறிவிக்கின்றார்.

அந் நகருக்கு விருபாக்ஷபுரம், ஹோசப்பட்டினம், வித்தியா நகரம் (City of learning), விசயநகரம் (City of victory) முதலிய பல பெயர்கள் இருந்தனவாகக் கல்வெட்டுகளின் மூலம் அறிகின்றோம். *1339*ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றிலிருந்து மூன்றாம் வல்லாளர் ஹொய்சள நாட்டின் தலைநகராக விருபாக்ஷபுரத்தை அமைத்திருந் தார் என்றும், விருபாக்ஷர் கோவில் கல்வெட்டிலிருந்து ஹம்பி, ஹொய்சள நாட்டிற்கு உட்பட்டிருந்தது என்றும் அறிய முடிகின்றது. முதலாம் அரிஅரனது குறிப்பிலிருந்து வித்தியா நகரமே அவரது ஆட்சியின் தலைநகரமாக விளங்கியதாக அறிகிறோம். ஆனால், முதலாம் புக்கன் ஆட்சிக் காலத்தில், அவருடைய தலைநகரம் ஹோசப் பட்டினம் என்றும் ஒரு குறிப்பு அறிவிக்கின்றது. எனினும், *1378*ஆம் ஆண்டுக் கல்வெட்டின் மூலம் உலகை வென்ற அவ் வரசர், தம் வெற்றியைக் குறிக்கும் வகையில் 'விஜயம்'

என்ற நகரைத் தலைநகராக அமைத்தார் என அறிகின்றோம். எனவே, விசயநகர அமைப்பு, ஹொய்சள நாட்டு மூன்றும் வல்லாள ராலா அரிஅரபுக்கராலா என்பதைப்பற்றித் திட்ட வட்டமாகக் கூற முடியவில்லை; என்றாலும், அவ் வரசர்கள் விசயநகரத்தை அமைத்ததன் நோக்கம், வட இந்தியாவிலிருந்து ஏற்படக்கூடும் படையெழுச்சிகளிலிருந்து தங்கள் நாட்டைக் காப்பாற்ற வேண்டு மென்பதேயாகும். அந் நகர் அமைந்துள்ள இடம், அவர் களது நோக்கத்தை ஈடேற்றக்கூடிய தகுதி வாய்ந்தது என்பதை அந் நகரின் நில அமைப்பிலிருந்து அறிந்துகொள்ள முடியும்.

தென்னிந்தியாவின் நடுப்பகுதியில் விசயநகரம் அமைந் துள்ளது. அது துங்கபத்திராவின் தென்கரையில் ஆனெகுந்திக்கு நேர் எதிராக உள்ளது. அதனருகில் செல்லும் துங்கபத்திரா ஆற்றின் ஓட்டம் மிக விரைவாக இருக்கின்றது. நீர்வீழ்ச்சிகளும், மிகப்பெரிய பள்ளங்களும் அவ் வாற்றில் உள்ளன. மழைக் காலங் களில் அவ் வாற்றில் ஏற்படும் பெரு வெள்ளத்தைக் கடந்து செல்லுதல் இயலாத காரியம். எனவே, அந்நியர் படையெடுப் புக்குச் சிறந்த அரணாக, துங்கபத்திரா ஆறு வடபால் அமைந் துள்ளது. மற்றும், அப் பகுதியானது மலைகளாலும், குன்றுகளாலும், காடுகளாலும், சூழப்பட்டுள்ளதாலும், ஆழ்ந்த நீர்ப் பள்ளங்களைத் தன்னிடத்துக் கொண்டிருந்ததாலும், முகம்மதியர்களது குதிரைப் படை அந் நிலப்பகுதியில் முன்னேறிச் செல்ல முடியாது. அத னுடன் நீர்நிலைகளில் முதலைகளும், காடு மலைகளில் குரங்குகளும் மிகுதியாக உள்ளதால் எதிரிகள் எளிதில் உட்புக முடியாதவாறு இயற்கை அரணை அந் நகர் பெற்றுள்ளது.

அந் நகரைப் பற்றி அறிஞர் புரூஸ் ஃபூட் (Bruce Foote) குறிப் பிடும்போது அதன் இயற்கைச் சூழ்நிலையைப் பின்வருமாறு நன்கு விளக்கியுள்ளார்.

‘அங்குக் கருங்கற் குன்றுகள் நிறைந்துள்ளன. அவ்விடத்தில் புல்லைக் காண்பது அரிது; பெரும் பாறைக் கற்கள் அங்குமிங்கும் குவிந்து கிடப்பதைக் காணலாம். 250 அடி உயர அளவுக்குங்கூடக் கற்குவியல்கள் உள்ளன.’

அவரது வருணனையிலிருந்து, வீரகாவியம் சிறப்பிக்கும் கிஷ் கிந்தையாக அந் நகரம் இருக்கலாமென எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில், இராமாயணம் குறிப்பிடும் ரிஷ்யமுகப் பர்வதம், மாதங்கா மலை, பம்பாசரஸ் போன்ற பெயர்கள் அப் பகுதியில் இன்றும் இருப்பதாக அறிகிறோம். அப் பகுதியிலுள்ள குரங்குகள் வாலி, சுக்ரீவன் இனத்தவர் என்றும், அங்குள்ள பாறைக் குவியல்கள்

சேதுபந்தனத்துக்காகச் சேகரிக்கப்பட்டவை என்றும் கருத இடமுண்டு. அப் பகுதியில் அனுமனை வழிபடு தெய்வமாகக் கொண்டு ஒழுகி வருவதைக் காணும்போது, அப் பகுதியைக் கிஷ்கிந்தையாக எண்ணுவதில் தவறில்லை. இவ்வாறு விசயநகரம் அமைந்த 'அம்பி' என்னுமிடத்தைப் பற்றிய கருத்துகள் பல நிலவுகின்றன.

சங்கம குமாரர்களான அரிஅரர், புக்கர் ஆகியோர்களை ஹொய்சளரோடு இணைத்துக் காட்டும் சான்றுகள் பல உள்ளன. முதலாம் புக்கன் ஹோசல நாட்டில் ஓர் ஆட்சியாளராக இருந்தார் என்று சில குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஃபெரிஷ்டா (Freishta) என்பவர் மூன்றும் வல்லாளர்தாம் விசயநகரத் தோற்றத்துக்கே காரணமானவர் என்று உறுதியாகக் கூறுகிறார். சங்கம குமாரர்கள் அவருக்கு உறவினர்கள் என்றும், அவரது ஆட்சியில் அவர்கள் அரசாங்கப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர் என்றும், அவர் இறந்த பின் அவரது நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டே அவர்கள் விசயநகர அமைப்புக்கான முயற்சியில் ஈடுபட்டதாகவும் கூறுகின்றார். 17ஆம் நூற்றாண்டில் அவர் பீஜப்பூர் நகரத்தில் கேட்டு எழுதிய கருத்தாக விளங்குவதால், இன்றைய ஆராய்ச்சியாளரது கருத்துக்கு அது ஒத்துள்ளது என R. மஜூம்தார் தம் நூலில் விளக்குகின்றார். எனினும், அவர்கள் ஹொய்சள மரபினைச் சேர்ந்தவர்களல்லர் என்றும், தாங்களே தங்கள் சொந்த முயற்சியால் மாதவ வித்யாரண்யரது அறிவுரையின்படி விசயநகரை அமைத்தனர் என்றும் ஒரு சில அறிஞர்கள் கருதுகின்றனர்

எவ்வாறாயினும், விசயநகர அரசின் அமைப்பு மூன்று நூற்றாண்டுகள், பண்டைக் கால சமயம், கலை ஆகியவற்றைப் பாதுகாத்த பெருமையைப் பெறுவதோடு, புதிய எண்ணங்களும் சமயங்களும், பண்டைய இந்து சமய நிலையை அழித்துவிடாதவாறு காத்தன என்பதை யாரும் மறுக்க முடியாது. அதனுடன் பாமினி அரசின் செல்வாக்கை வளரவொட்டாதவாறு தடுத்து நிறுத்தவும் அது பெரிதும் உதவியாயிருந்தது. எனவே, அன்றைய அரசியல் சூழ்நிலைக்கு முக்கியச் சாவியாக விசயநகரம் அமைந்திருந்தது என்பது வெள்ளிடைமலை. அரிஅரர், எதிரிகளால் எளிதில் தாக்க முடியாதவாறு தம் தலைநகரம் அமையவேண்டும் என விரும்பினார். ஏற்கெனவே உள்ள ஆனெகுந்தி, துங்கபத்திரையின் வடபால் மலைமேல் இருப்பினும், எதிரிகள் கையில் இருமுறை சிக்குண்டதால், அதைவிட மிகப் பாதுகாப்பான இடமொன்றைத் தேர்ந்தெடுக்க விரும்பினார். வித்தியாரண்யரது ஆலோசனையின்படி ஆற்றின் கரையில் விருபாக்ஷர் கோவிலுக்கருகில் உள்ள இடம்

ஹேமகூடம், மாதங்கா மலைகளால் சூழப்பட்டிருப்பதைக் கண்டு அவ் விடத்தில் விசயநகரத்தை நிறுவத் தீர்மானித்தார். அதன்படி அந் நகரை நிறுவ ஏழாண்டுக்காலம் பிடித்ததாகத் தெரிகிறது.

அந் நகர அமைப்பில் முக்கியப் பங்குகொண்ட வித்தியாரண்யரைப் பற்றியும் கருத்துவேறுபாடு இருக்கக் காண்கிறோம். S. K. அய்யங்கார் தாம் எழுதிய 'விசயநகர வரலாற்றின் அடிப்படைச் சான்றுகள்' என்ற நூலின் முன்னுரையில் மாதவாசாரியா என்கிற வித்தியாரண்யரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அவர் 85 ஆண்டுகள் (*1302–1387*) வாழ்ந்திருந்ததாகவும் சிறந்த பாண்டித்தியம் (Scholar-Ship) உடையவராகவும், விசயநகர அரசில் மிக்க பெருமை பெற்றிருந்ததாகவும் சிறப்புறக் கூறப்படுகிறார். அதே பெயருடைய ஓர் அமைச்சர் புத்தர் காலத்தில் இருந்ததாகவும், அவரைப்பற்றி 'உபநிடதத்துகளின் பாஷையை வகுத்தவர்' என்ற பெருமையும் கூறப்பட்டுள்ளது. ஆயினும், அவர்கள் இருவரின் பெயர் 'மாதவாசாரியா' என்று இருப்பினும் ஒருவர் சைவசமயத்தவராயும், மற்றொருவர் அத்வைத சமயத்தவராயும் காணப்படுகின்றனர். இருவரது கோத்திரங்களும், சூத்திரங்களும் வேறுபட்டுள்ளன. இரண்டாமவருக்கு 'உபநிடத்துகளின் பாஷையை வகுத்தவர்' என்ற பெருமை தந்திருப்பதிலிருந்தே, அவரை முதல்வரான மாதவாசாரியாரிடமிருந்து வேறொருவர் எனப் பிரித்துக்காட்டவேயாகும் என்று S. K. அய்யங்கார் கருதுகின்றார். ஏனெனில், முதல் மாதவாசாரியாருக்கு 'வேதங்களின் பாஷையை வகுத்தவர்' என்ற பெருமையிருந்ததனாலே, அவ்விருவரில் முதலில் கூறப்பட்டவரே விசயநகர அமைப்புக்கு உறுதுணையாயிருந்தவர் எனக் கருதுதல் நியாயம் என முடிக்கின்றார். மேலும், அறிஞர் நூனிஸ் அச் சமயத் தலைவரின் பெயரை வைத்தே 'விசயநகரம்' என அந் நகருக்குப் பெயரிட்டதாகக் கூறுகின்றார். வேதங்களுக்கு விளக்கம் எழுதிய சாயனர் அவருடன் பிறந்தவர் என்றும், அவர் சிறந்த அரசியல் அறிஞர் என்றும், அவரே சிருங்கேரி மடத்தின் தலைவராக விளங்கினார் என்றும் அறிகின்றோம். விசயநகரப் பேரரசர்களும் சிருங்கேரி மடத்திற்கு உதவிப்பொருள் வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. எனவே, மாதவ வித்யாரண்யரே விசயநகர அமைப்புக்கு அறிவுரை வழங்கிய பெருமை பெற்றவர் என்பது நன்கு புலனாகிறது.

முடிவாக, ஹேமகூட மலையைச் சுற்றிப் புதிய நகரம் ஒன்றை நிறுவவேண்டும் என்ற எண்ணம் வித்தியாரண்யர் மனத்தில்தான் தோன்றியது என்றும் அவர் தம்முடைய அரச மரபு மாணவர்களான அரிஅரனுக்கும், புக்கனுக்கும் அக் கருத்தை எடுத்துக்

கூறினர் என்றும், அவர்கள் தங்கள் குருவின் ஆணையை மேற்கொண்டு நகர அமைப்பில் ஈடுபட்டனர் என்றும் R. C. மஜூம்தார் தாம் வெளியிட்டுள்ள நூலில் குறிப்பிடுகின்றார். அதிலிருந்து விசய நகர அமைப்புக்கான கருத்தைத் தந்தவர் வித்தியாரண்யர் என்னும் துறவி என்பதும், அரசன் என்ற முறையில் அரிஅரன் அந் நகரத்தை நிறுவுவதற்கான ஆணையைப் பிறப்பித்தவன் என்பதும் அரசன் ஆணைப்படி அந் நகரத்தைக் கட்டி முடித்தவன் புக்கன் என்பதும் நன்கு புலனாகின்றது. எனவே, விசயநகர அமைப்பில் முக்கியப் பங்கு கொண்டவர்கள், முறையே வித்தியாரண்யர், அரிஅரன், புக்கன் ஆகியோர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.)

2. கிருட்டிணதேவராயருக்கு முன் ஆண்ட அரசர்கள்

	பெயர்	பதவி ஏற்ற ஆண்டு	முக்கியச் செய்தி
	I. சங்கம மரபினர்		
1	முதலாம் அரிஅரன்	1336	விசயநகர அரசு அமைப்பு
2	முதலாம் புக்கன்	1356	
3	இரண்டாம் அரிஅரன் (புக்கனது குமாரன்)	1377	விருபாக்ஷசிவனை வழிபட்டார்கள்
4	இரண்டாம் புக்கன் (அரிஅரனது குமாரன்)	1404	
5	முதலாம் தேவராயன்	1406	
6	வீர விசயன்	1422	
7	இரண்டாம் தேவராயன்	1425	அரசு செல்வாக்குடன் பரந்து இருந்தது
8	விருபாக்ஷர்	1465	அமைச்சர் சாளுவ நரசிம்மன் 1455ஆம் ஆண்டுமுதல் அதிகாரம் செலுத்தினர்.
9	ப்ரௌட தேவராயன்	1485	

	பெயர்	பதவி ஏற்ற ஆண்டு	முக்கியச் செய்தி
	II. சாளுவ மரபினர்		
1	சாளுவ நரசிம்மன்	1486	வைணவ சமயத்தினர்
2	இம்மடி நரசிம்மன்	1492	நரச நாயகரிடம் அதிகாரம் இருந்தது.
	III. துளுவ மரபினர்		
1	நரச நாயகர்	1503	
2	வீர நரசிம்மர்	1506	
3	கிருட்டிண தேவராயர்	1509	அரசின் உன்னத நிலை

(அ) முதலாம் அரிஅரன் (1336 - 56)

சங்கம குமாரரான அரிஅரன் 1336ஆம் ஆண்டு விசயநகர அரசராக முடிசூட்டிக் கொள்ளும்போது அவரது ஆட்சி தென் கிழக்கில் நெல்லூர் முதல் மேற்கில் தார்வார் வரையிலும் வடக்கில் பாதாமி வரையிலும் பரவியிருந்தது. எனினும் மூன்றும் வல்லாளர், கர்நாடக நாட்டெல்லை அரிஅரன் ஆட்சி எல்லைக்குத் தெற்கிலும் மேற்கிலும் பரவியிருந்ததால் அவர் பொறுமை எண்ணத்தோடு அச் சிற்றரசினை வெற்றிபெற விழைந்தார். பலமுறை தம் படைகளை அனுப்பியும் விசயநகர அரசை வீழ்த்த முடியவில்லை. ஏனெனில், மூன்றும் வல்லாளர் ஏற்கெனவே தமிழ்நாட்டில் படையெடுத்து இருந்ததாலும், மதுரைச் சுல்தானுடன் ஏற்பட்ட தகராறுகளாலும், விசயநகர அரசினை அழிக்கும் நோக்கத்தில் அதிகக் கவனம் செலுத்த இயலவில்லை.

இதற்கிடையில், முதலாம் அரிஅரன், தம் நாட்டிற்குத் தக்க பாதுகாப்புச் செயல்களில் ஈடுபடலானுர். கோட்டை கொத்தளங்களையே, தற்காப்பாக நினைத்த காலமானதால் அவர் விசயநகரக் கோட்டை கட்டியதோடு நில்லாமல், தேவகிரியிலிருந்து சுல்தான்கள் படையெடுப்பைச் சமாளிக்க வாதாபிக் கோட்டையைப் பலப்படுத்தினுர். வலிமை பொருந்திய படை ஒன்றினைத் திறமையுள்ள தளகர்த்தர் ஒருவரிடம் ஒப்படைத்தார். தம் ஆட்சியின்

கிழக்குப் பகுதிக்கு நெல்லூர் மாவட்டத்திலுள்ள உதயகிரியைத் தலைநகராக்கிச் சிறந்த கோட்டையை அமைத்துத் தம் தம்பியான கம்பணனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார். மூன்றும் வல்லாளரின் நடவடிக்கையைக் கவனிக்கும் பொருட்டு இளவரசரான, மற்றொரு தம்பியான முதலாம் புக்கனிடம் மேற்குப் பகுதியை ஒப்படைத்து அனந்தப்பூர் மாவட்டத்தினுள் குத்திக் கோட்டையை வலுப்படுத்தினர். இவ்வாறு விசயநகரப் பேரரசின் எல்லைப்புறப் பாதுகாப்பினைச் செய்தபின், நிர்வாகத்துறையில் தம் கவனத்தைத் திருப்பினர். நாட்டின் வளப்பத்தைப் பெருக்க, காட்டினை அழித்துப் பயிரிடும் நிலங்களாக மாற்றிக்கொள்ளக் குறைந்த குத்தகைக்கு வேண்டுவோருக்கு வழங்கினர். தம் நாட்டினைப் பல தலங்களாகவும், நாடுகளாகவும் பிரித்து, அவற்றில் வரிவசூல் செய்யவும், உள்ளூர் ஆட்சிப் பொறுப்பினைக் கவனிக்கவும் அரசாங்க அலுவலர்களை நியமித்தார்

இதற்கிடையில் மதுரைச் சுல்தானோடு போரிட்டுச் சூழ்ச்சியால் மூன்றும் வல்லாளர் கொல்லப்பட்டார். அதற்குப்பின் ஹொய்சள அரசர் நான்காம் வல்லாளர் விசயநகரப் படைக்கு ஆற்றாது தோற்றோடினர். எனினும், அந் நாட்டு முக்கியத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து எதிர்க்க முற்பட்டனர். எனினும், *1346*-ல் புக்கன் அவர்களையெல்லாம் அடக்கித் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். அவ் வெற்றிக்கு அறிகுறியாகச் சிருங்கேரியில் வித்யாதீர்த்தர் தலைமையில் *1346*-ல் மிகச் சிறப்பாக விழாவொன்றினை நடத்தினர்.

அரிஅரனைப் பற்றி *1356*–க்குப் பின் ஏதும் செய்தி கிடைக்காததால், அவர் அவ் வாண்டே இறந்திருக்கக் கூடுமெனக் கருதுகின்றனர்.

(ஆ) முதலாம் புக்கன் (1356-77)

முதலாம் அரிஅரன் மக்கட் பேறின்றி இறந்ததால் அவருடைய சகோதரர் புக்கன், பட்டத்திற்கு வந்தார். அவர் விசயநகர அரசை இணைத்துப் பலப்படுத்த வேண்டும் என விரும்பினர். அரிஅரன் தம் தம்பிமார்களுக்குக் கொடுத்த பொறுப்பினை அவர்கள் மறந்து, தங்களது சுய ஆட்சியாகக் கருதலாயினர். எனினும், முதலாம் கம்பணர் துணைகொண்டு மதுரை நோக்கிப் படையெடுக்கச் செய்தார். கம்பணர் மதுரைச் சுல்தான்கள் ஆட்சியை முடிவுறச் செய்து, கோலார் மாவட்டத்துக்கும் (முல்பகாலுக்கும்) தமிழ்நாட்டுக்கும் அரசப் பிரதிநிதியாக அமர்ந்தார்.

நூனிஸ், புக்கன் ஒரிஸ்ஸாவை வென்றதாகவும் குறிப்பிடு கிறார். இராச பரமேஸ்வரன், மகாராசாதிராசன் முதலிய பட்டங் களை அவர் சூடிக்கொண்டார். புக்கன் முதலாம் முகம்மதுஷாவுடன் இருமுறை போரிட்டார். கி.பி. *1367*-ல் நடைபெற்ற போரில் அவர் தோற்றார். ஃபெரிஷ்டா இதைப்பற்றி வேறுவிதமான கருத்தைக் கூறுகின்றார். மதுரைச் சுல்தானுடன் நடத்திய போரில் முதலாம் கம்பணன் தலைமையில் வெற்றிபெற்று, இராமேசுவரம் வரை தம் ஆட்சியைப் பரப்பினார். அவர் காலத்தில் சீனப் பேரரசரும் மலபார், ஈழம் முதலிய பல நாட்டு அரசர்களும் அவர் அவைக்கு, அரசியல் தூதுவர்களை அனுப்பினர். முதலாம் கம்பணன் இறந்ததும், அவரது குமாரர்கள் உதயகிரி அரசைத் தங்களுக்குள் பகிர்ந்து ஆள முயன்றனர். முதலாம் புக்கன், அவர்களின் போக்கு, நாட்டைப் பிரிக்கும் நிலையை உருவாக்கி விடும் என்பதனை உணர்ந்து, தம் குமாரர்களையே ஆளுநர்களாக அனுப்பி, நாடு பிரிந்து போகாதவாறு கவனித்துக் கொண்டார்.

முதலாம் கம்பணனது போர்த்திறனையும், ஆளும் திறனையும் கண்டு மெச்சிய புக்கன், தமக்குப்பின் அவரையே அரசராக்க நினைத்திருந்தார். ஆயினும், முதலாம் கம்பணன் *1374*-ல் இறக்கவே, தம் குமாரர்களில் யாரிடம் தமக்குப்பின் விசயநகர அரசு பொறுப்பை ஒப்படைப்பது எனப் பெரிதும் சிந்தனை செய்ய லானார். கடைசியில் இராணி, கௌராம்பிகா குமாரனான இரண்டாம் அரிஅரனையே தேர்ந்தெடுத்தார். அவர் இதுவரை எந்த அரசியல் நிர்வாகத்திலும் பங்கெடுத்துக் கொள்ளாதவர். அத்தகையாரை தமக்குப்பின் அரசராக முடிசூட்டிக் கொள்ள அவர் தேர்ந்தெடுத்த தற்குக் காரணம் யாதென விளங்கவில்லை. அவர் காலத்தில் சமய சம்பந்தமாக ஏற்பட்ட சிக்கலைப் பெருந்தன்மையோடு தீர்த்து வைத்தார். சமண, வைணவ சமயத்தவர்களது தகராறைத் தீர்க்க ஓர் ஆணை பிறப்பித்தார். எல்லாச் சமயமும் தமக்கு ஒன்றே என்றும், எல்லாச் சமயத்தவருக்கும் தம் ஆட்சியில் பாதுகாப்பும், உறுதுணையும் அளிக்கப்படும் என்றும் அறிவித்தார். சிறந்த அரசராக விளங்கிய அவர் பிப்ரவரி *1377*-ல் காலமானார்.

(இ) இரண்டாம் அரிஅரன் (1377 - 1404)

முதலாம் புக்கனுக்குப்பின் அவரது குமாரர் இரண்டாம் அரிஅரன் *1377* பிப்ரவரி மாதத்தில் விசயநகர அரசப் பதவியை ஏற்றார். அப்பொழுது தமிழ்நாடெங்கிலும் கலகம் எழுந்தது. அவருடைய சகோதரர்கள் தங்களுக்கு அரசப் பதவி கொடுக்கப் படாததால், அக் கலகம் ஏற்பட அவர்களும் காரணமாயிருந்தனர்.

எனினும், இரண்டாம் அரிஅரன் தம் குமாரன் விருபாக்ஷனை (விருப்பன்ன உடையார்) தமிழ்நாட்டு அரசப் பிரதிநிதியாக்கி அவனைக்கொண்டே 1377ஆம் ஆண்டு இறுதிக்குள் கலகத்தை அடக்கினர். விருபாக்ஷன், சிங்களம் வரை சென்று, அம் மன்னரிடம் காணிக்கை பெற்று வந்தார்.

அதுதான் ஏற்ற சமயமென்று பாமினி சுல்தான் முஜாஹித் ஷா, விசயநகரத்தின்மீது படையெடுத்தார். ஃபெரிஷ்டா (Ferishta) அப் போரைப்பற்றி மிக விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். முதலில் ஒருசில வெற்றிகள் முஜாஹித் ஷாவுக்குக் கிடைத்தாலும், பிறகு எதிர்க்க முடியாதவாறு திரும்ப நேரிட்டது. போகும் வழியில் அதோனிக் (Adoni) கோட்டையை 9 மாதம் முற்றுகையிட்டார். முடிவில் அக் கோட்டையைக் கைப்பற்ற முடியாமல் திரும்பித் தம் தலைநகரம் நோக்கிச் செல்லும்போது வழியில் அவரது பாசறையில் 1378-ல் கொலை செய்யப்பட்டார்.

இச் சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக்கொண்டு பாமினி சுல்தானியரது ஆட்சிக்குட்பட்ட கொங்கணத்தின் மீதும் வட கருநாடகத்தின் மீதும் பெரும்படையுடன் இரண்டாம் அரிஅரன் படையெடுத்தார். தக்காணத்தின் மேற்குக் கடற்கரைப் பகுதிகளைத் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். அதேபோல் விசயநகருக்குக் கீழ்ப் பகுதியில் உள்ள அத்தங்கி (Addanki), ஸ்ரீசைலம் மாவட்டங்களை, கொண்டவீடு (Kondavidu) அரசர் அனவேமா (Anavema) இறந்ததும் தம் ஆட்சிக்குட்படுத்தினர். அவரது ஆட்சியின் கடைசிக் காலத்தில் அந்நியர் தொல்லையின்றி நிம்மதியாக ஆட்சி புரிந்தார். 1403ஆம் ஆண்டின் இறுதியில் நோய்வாய்ப்பட்டு 1404ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16ஆம் தேதி இறந்தார். அவரது 28 ஆண்டுக்கால ஆட்சியில் விசயநகர அரசு எல்லாத் திசைகளிலும் பரவியிருந்தது.

இரண்டாம் அரிஅரன் இறந்தவுடன் பட்டத்திற்குப் போட்டி ஏற்பட்டது. அவரது குமாரர்களான முதலாம் விருபாக்ஷன், இரண்டாம் புக்கன், முதலாம் தேவராயன் ஆகியோர் போட்டியிட்டனர். இரண்டாம் அரிஅரன் இறந்ததும் முதலாம் விருபாக்ஷன் பட்டம் ஏறியதாகவும், ஓராண்டுக் காலமே அவர் ஆட்சி செலுத்தியதாகவும் தெரிகிறது. இரண்டாம் புக்கன் தம் அண்ணனைப் பட்டத்திலிருந்து இறக்கித் தாம் அரசை ஏற்றுக்கொண்டு சில காலம் இருந்து பின் முதலாம் தேவராயனுக்கு விட்டுவிட வேண்டியதாயிற்று என அறிகிறோம். முதலாம் தேவராயன் 1406 முதல் 1422 வரை விசயநகர அரசராக விளங்கினர்.

(ஈ) முதலாம் தேவராயன் (1406-22)

முதலாம் தேவராயன் தம் முடிசூட்டு விழாவினை 1406ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் தேதி நடத்தியதாக அறிகிறோம். அவரது ஆட்சிக் காலம் முழுமையும் போரிலேயே கழிக்க வேண்டியதாயிற்று.

ஃபெரிஷ்டா (Ferishta) கூற்றுப்படி பாமினி சுல்தான் ஃபிரூஸ் ஷா (Firuz Shah) எந்த எதிர்ப்புமின்றி விசயநகரத்தின்மீது படையெடுத்தார். அந் நகரத்தை அழிக்க முயன்றார்; ஆனால் முடியவில்லை. இருப்பினும் அந் நகரத்தின் வெளிப்புறத்தில் உள்ள கிராமச் சூழ்நிலையில் தங்கியிருந்தார். தேவராயரோடு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளத் தமக்கு விருப்பம் என்று தெரிவித்து அதற்குரிய நிபந்தனையைக் கூறினார். அஃதாவது, தேவராயர் தரும் பொருள்களோடு, அவரது மகளைத் தமக்கு மணம் புரிவித்து, சீதனமாகப் பங்காப்பூர்க் (Bankapur) கோட்டையையும் அளிக்க வேண்டுமென்பதாகும். தேவராயர் அதற்குச் சம்மதித்துத் தம் மகளை ஃபிரூஸ்ஷாவுக்கு மணம் புரிவித்தார். சுல்தான் படைகளை விசயநகர அரசர் எதிர்க்கவில்லை என அவர் குறிப்பிட்டிருப்பதும் பொருத்தமற்றது. இவற்றிற்கேற்ற சான்றுகள் ஏதும் சரிவரக் கிடைக்கவில்லை.

ஆனால், 1419-ல் நடைபெற்ற இரண்டாவது போரில் விசயநகர அரசர் வெற்றி பெற்றார். நிகோலோகோந்தி 1420-ல் விசய நகரத்தை நேரில் கண்டு அன்றைய நிலைகளைப்பற்றி எழுதியுள்ளார். அதில் 'விசயநகரப் பேரரசர் மற்றைய இந்திய அரசர்களைவிட வலிமை வாய்ந்தவர் என்றும், அக் காலத்தில் நவராத்திரி, தீபாவளி போன்ற பல விழாக்கள் நடைபெற்றன வென்றும், தண்டனை கடுமையாக இருந்தது' என்றும் குறிப்பிடுகின்றார்.

தேவராயர் சைவப் பற்றுடையவர். விசயநகரத்தில் பல கோயில்களைக் கட்டியுள்ளார், கல்விமான்களை ஆதரித்தார். அவர் காலத்தில் தென்னிந்தியாவில் விசயநகரம் சிறந்த கல்விக் கூடமாகத் திகழ்ந்தது. வித்யாநகரம் கல்விக்கு இருப்பிடம்— என்ற பெயருக்கேற்ப அமைந்திருந்தது.

(உ) முதலாம் வீரவிசயன்

முதலாம் தேவராயருக்குப்பின் அவரது குமாரர் இராமச் சந்திரன் பதவி ஏற்றார். அவர் ஆறுமாத காலமே அரசாண்டதாகத் தெரிகிறது. வித்தியாரண்யக் கலைஞான்ம் என்னும் பாடலில்

முதலாம் தேவராயருக்குப்பின் இராமச்சந்திராவும், முதலாம் வீர விசயனும் முறையே ஆட்சிபுரிந்தனர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே, இராமச்சந்திராவுக்குபபின் முதலாம் வீரவிசயன் பட்டம் ஏறினர். அவருக்கு விஜய பூபதி, விஜய புக்கன், வீரபுக்கன் எனப் பல பெயர்கள் உண்டு. அவரது ஆட்சிக்காலம் பற்றி கருத்து வேறுபாடுகள் பல உள்ளன.

நூனிஸ் குறிப்பின்படி அவர் ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்த தாக அறிகிறோம். ஏனைய வரலாற்று ஆசிரியர்கள் ஆறுமாதம் முதல் இரண்டு ஆண்டுகளுக்குட்பட்டதாகவே குறிப்பிடுகின்றனர்கள். எனினும், விசயநகரக் கலவெட்டுகளின் மூலம் விசயனது ஆட்சிக் காலம் கி.பி. 1422 முதல் 1430 வரை இருந்ததாக அறிகின்றோம். அவர் ஆட்சியில் தாம் ஏதும் முக்கியப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாது தம் மகன் இரண்டாம் தேவராயனிடம் விட்டு விட்டார். அவர் காலத்தில் பாமினி சுல்தான்களுடனும், ஒரிஸ்ஸா தளபதியுடனும் இரு போர்கள் நிகழ்த்தப்பட்டன. அவ் விரண்டும் அவர் மகன் இராண்டாம் தேவராயன் தலைமையிலேயே நடை பெற்றன. எனவே, விசயநகர அரசர்களில் வலிமை குறைந்த அரசராகவே அவர் திகழ்ந்தார்.

(ஊ) இரண்டாம் தேவராயன்

அவருக்குப் பின் ஏற்கெனவே அரசாட்சியில் பங்கு கொண் டிருந்த விசயனது குமாரர் இரண்டாம் தேவராயர் பட்டத்திற்கு வந்தார். அவரது பதவிக் காலத்தில் பல போர்களில் அவர் ஈடுபட வேண்டியதாயிற்று. அவற்றில் பாமினி சுல்தான்களுடன் நடத்திய போர் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். அஹமதுஷா, தம் பாமினி அரசின் தலைநகரைக் குல்பர்க்காவிலிருந்து பீஹாருக்கு மாற்றிய சமயமும் அதுவேயாகும்(கி.பி. 1423). பாமினி அரசரது எதிர்ப்பைச் சமாளித்து வெற்றி கொண்டபின் ஆந்திர, ஒரிஸ்ஸா மன்னர்களுடன் போரிட வேண்டியதாயிற்று. அவர்களிடமிருந்து விசயநகர அரசுக்குட்பட்ட நாடுகளை மீண்டும் கைப்பற்றினர். போர்களை வெற்றிகரமாக முடித்தபின் அவர் விசயநகர அரசின் சிறந்த ஆட்சிக்கு வழிவகுத்தார். அந்நியர் தொல்லையின்றி ஆறு, ஏழு ஆண்டுகள் அவ் வரசு அமைதியாக நடைபெறலாயிற்று என்றாலும் பாமினி அரசர் அஹமத்ஷா இறக்கவும், அவருக்குப்பின் பட்டத் துக்கு வந்த அவருடைய குமாரர் இரண்டாம் அலாவுதீன் இருமுறை விசயநகர அரசுடன் போரிட்டார். கிருஷ்ணா, துங்க பத்திரா நதிகளுக்கு இடையில் உள்ள முத்கல், ரெய்ச்சூர்க் கோட்டைகளை அடைவது பற்றியே அப் போர்கள் எழுந்தன.

முதற் போரில் (1435-36) இரண்டாம் அலாவுதீன் முயற்சி பயனற்றுப் போய்விட்டது. இரண்டாவது போர் (கி.பி. 1443) ஏற்படக் காரணங்கள் :

ஃபெரிஷ்டா (Ferishta) கூற்றின்படி இரண்டாம் தேவராயர் தம் படைகள் பாமினி சுல்தான்களிடம் தோற்பதற்குக் காரணங்கள் எவையென ஆராய்ந்ததாயும், அதன் முடிவாக, தம்மிடம் இருந்த குதிரைப்படை திறமையற்றதென்றும், பாமினி சுல்தான்களிடம் இருந்த வில்லாளிகள் திறமையுடையவர்களென்றும் அறிந்தார். உடனே தமது படையில் இஸ்லாமிய வீரர்களைச் சேர்ப்பதற்கு முயன்றார் என்றும் அதன் விளைவாக இரண்டாயிரம் முஸ்லிம்களையும் ஆறுயிரம் இந்துக்களையும் கொண்ட சிறந்த படையை உருவாக்கிப் பாமினி சுல்தான்மீது படையெடுத்தார் என்றும் கருதுகின்றார். ஆனாலும், இது ஏற்ற காரணமாகத் தோன்றவில்லையென R. C. மஜும்தார் போன்ற சரித்திரப் பேராசிரியர்கள் கருதுகின்றனர். ஏனெனில், ஏற்கெனவே முதலாம் தேவராயர் காலத்திலேயே முஸ்லிம் வீரர்களைத் தம் படையில் சேர்க்கும் வழக்கம் இருந்தது ; தற்போது செய்தது ஒன்றும் புதியதன்று என்பதாம். அதனுடன் அப்துர் ரஸாக் (Abdur Razaak) என்னும் பாரசீகத் தூதர் தரும் குறிப்பினை நோக்கும் போது போருக்குக் காரணம் வேறுவகையாகத் தோன்றுகிறது. இரண்டாம தேவராயருடைய சகோதரர்களுள் ஒருவர், அவர் கட்டிய புதிய அரண்மனையில் விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்து அரசரையும், இளவரசரையும், பிரபுக்களையும் விருந்துக்கு அழைத்ததாகவும், அவ் விருந்துக்கு வந்தவர்கள் அத்தனை பேரையும் கொலை செய்ததாகவும், அரசர் அவ் விருந்துக்கு வராமையால், அவரை நேரில் வந்து அழைப்பதுபோல் பாசாங்கு காட்டி, திடீரென அவர்மீது பாய்ந்து குத்திக்கொல்ல முயன்று, அவர் இறந்ததாகக் கருதித் தாமே அரியணையில் ஏறி அமர்ந்ததாகவும், மூர்ச்சையடைந்த அரசர் தெளிந்து எழுந்து, அங்குள்ளோரைக் கொண்டு தம் தம்பியைச் சிரச் சேதம் செய்ததாகவும், அதனால் எழுந்த குழப்பத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, பாமினி சுல்தான், வியசநகர அரசர் தமக்கு 7 இலட்சம் வராகன் தராவிடில் போருக்கு வருவதாகக் கூறவும் அதனை இரண்டாம் தேவராயர் மறுக்கவே போர் எழக் காரணமாயிற்று என்றும் கூறுகின்றார். அப் போரின் விளைவுகளைப் பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஃபெரிஷ்டா (Ferishta) குறிப்பிட்டபடி முதற் போரில் முட்கல் கோட்டையைப் பிடித்து இரண்டாம் தேவராயர் வெற்றி பெற்றதாகவும், அடுத்த போரில் இரண்டாம் தேவராயரின் மூத்தகுமாரன் கொலையுண்டதாகவும், படைகள் பின்வாங்கி ஓட்டம்

பிடித்ததாகவும் கூறுகிறார். இரண்டாம் தேவராயர் சுல்தானுக்கு ஆண்டுக்கொருமுறை ஒரு குறிப்பிட்ட தொகையைக் கப்பம் கட்ட ஒத்துக்கொண்டதாகவும் குறிப்பிடுகிறார். பாரசீகக் குறிப்பின்படி, சுல்தானுடைய எல்லை, பீஜப்பூர் மாவட்டத்திலுள்ள ஹல்சங்கி (Halsangi) என்ற கிராமத்தைத் தென் பிராந்தியத்தில் தாண்டவில்லையென்றும், உடன்படிக்கைக்குப் பின்னும் ராயரின் ஆட்சி கிருஷ்ணை, துங்கபத்திராக் கழிமுகத்தில் நடைபெற்று வந்தது என்றும் குறிப்பிடுவதால், ஃபெரிஷ்டாவின் கூற்றினை முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

இரண்டாம் தேவராயரின் தானைத்தலைவன் லக்கண்ணு (Lakkanna Dannaik) தலைமையில் கப்பற்படை இலங்கைமீது படையெடுத்துச் சென்றதாகவும், சிங்களம் வரை தம் ஆட்சிக்குட்படுத்திக் கப்பம் கட்டும்படி ஏற்பாடு செய்து வந்ததாகவும், அதனால் ராயரின் ஆட்சி குல்பர்க்கா முதல் இலங்கை வரை பரவியிருந்ததாகவும் அப்துர் ரஸாக் (Abdur Razzak, 1442) குறிப்பிடுகின்றார்.

அப்துர் ரஸாக் ஒரு புலமை வாய்ந்த முகம்மதிய-பாரசீக அரசியல் தூதர். அவர் இரண்டாம் தேவராயரின் ஆட்சியைப் பற்றிச் சிறப்பித்துத் தம்முடைய 'பாரசீக வரலாறு' என்ற நூலில் எழுதியுள்ளார். அதில் ராயரின் ஆட்சிப் பரப்பு, பாமினி சுல்தான்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு, அவரைக் கொல்ல நடந்த சதித் திட்டம், அவரது தானைத் தலைவரது வெற்றிச் செயல்கள் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. விசயநகரைப் போன்ற பிறிதொரு நகரத்தை இவ் வுலகத்தில் தாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை என வியப்பு மிகுதியோடு கூறுகின்றார்.

(எ) இரண்டாம் விசயராயர் (1446 - 47)

இரண்டாம் தேவராயருக்குப்பின் அவரது சகோதரர் இரண்டாம் விசயராயர் பதவியேற்றார். அவர் மிகக் குறைந்த காலமே ஆட்சி செய்தார். அவர் செய்த முக்கியச் சீர்திருத்தம் அரசாங்க ஊழியர்களிடமிருந்த லஞ்ச ஊழலை ஒழிக்க ஒரு சட்டம் கொண்டு வந்ததாகும். ஆனால், அதனை நிறைவேற்றி முடிக்கும் வரை அவர் அரச பதவியில் இல்லை.

(ஏ) மல்லிகார்ச்சுனர் (1447 - 65)

இரண்டாம் தேவராயரின் குமாரர் மல்லிகார்ச்சுனர் விசய ராயருக்குப்பின் பட்டமேற்றார். பாமினி சுல்தானும், ஒரிஸா நாட்டுத் தளபதியும் சேர்ந்து படையெடுத்து வந்ததாகவும்

மல்லிகார்ச்சுனர் வெற்றி பெற்றதாகவும் கங்கதாசர் (Gangadasar) தம்முடைய நாடக நூலில் எழுதியுள்ளார். எனினும் மல்லிகார்ச் சுனரின் படைபலமின்மையை உணர்ந்து ஒரிஸ்ஸா நாட்டுக் கபிலேந்திரன் தன் ஆட்சியினைத் தெற்கில் பரப்பலானன். 'பிரபன் னமிர்தம்' என்ற வைணவ ஆசிரிய மரபு நூலொன்றில் இரண்டாம் விருபாக்ஷன், மல்லிகார்ச்சுனரையும் அவரது அரச குடும்பத்தின ரையும் கொலை செய்துவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் விருபாக்ஷர் உண்மையில் அவரைக் கொலை செய்தாரா இல்லையா என்ற ஆராய்ச்சி ஒரு புறமிருக்க, அவர் வன்முறையில் அரசைக் கைப்பற்றினர் என்ப தற்குப் பல சான்றுகள் உள்ளன.

(ஐ) இரண்டாம் விருபாக்ஷர் (1465-85)

முறையற்ற வகையில் இரண்டாம் விருபாக்ஷர் வாள் கொண்டு அரியணையேறினர் என சீசைலம் செப்பேடுகளும் சில கல்வெட்டு களும் தெரிவிக்கின்றன. மூன்றும் முகம்மதுஷா, கஜபதி கபிலேந் திரர் இறக்கவே, தைரியமாகத் தம் ஆட்சியைப் பரப்ப முயன்றூர். அவரது பிரதம அமைச்சர், முகம்மது காவன் திட்டப்படி அவரது படை கோவாவைக் கைப்பற்றி, பின் விசயநகரத்தின்மீது படை யெடுத்தது. இதற்கிடையில் சந்திரகிரியின் (சித்தூர் மாவட்டம்) ஆட்சித் தலைவராய் இருந்த சாளுவ நரசிம்மர், தம் அதிகாரத்தை யும் பெருக்கிக்கொள்ள முனைந்தார். இரண்டாம் விருபாக்ஷர் ஆட்சி ஆரம்பத்திலேயே, அவரது பலமின்மையைப் பயன்படுத்திக் கொண்டு சித்தூர், ஆர்க்காடு, கோலார் மாவட்டங்களில் தம் அதிகாரத்தை நிலைநாட்டினர். இரண்டாம் விருபாக்ஷரால் விரட்டியடிக்கப்பட்ட மல்லிகார்ச்சுனரின் குமாரன் ராஜசேகரன் அவரது சபையில் அடைக்கலம் புகுந்தான். அந்த அளவுக்குச் சிறப்போடு ஆட்சியை நடத்தலானர். *1469*-ல் பாண்டியர் காஞ்சியின்மீது படையெடுத்தனர். சாளுவ நரசிம்மர் அவர்களை இராமேஸ்வரம் வரை விரட்டியடித்தார். அங்குச் சிங்கள நாட்டுப் புத்த அரசனல் அனுப்பப்பட்ட வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு திரும்பினர். மூன்றும் முகம்மதுஷா திடீரெனத் தம் படையுடன் காஞ்சியைத் தாக்கினர். அச் சமயத்தில் அவரது பிரதம அமைச்சர் முகம்மது காவன் கொலை செய்யப்பட்டதாலும், சுல்தான் இறந்து விட்டதாலும் பாமினி நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. இரண்டாம் விருபாக்ஷரோ குடி, சிற்றின்ப நுகர்ச்சி ஆகியவற்றில் ஈடுபட் டிருந்தார். *1485*-ல் அவரது மகனலேயே அவர் கொலையுண்டார். இந்தச் சூழ்நிலையைச் சாளுவ நரசிம்மர் நன்கு பயன்படுத்திக் கொண்டு தம் ஆட்சியைப் பரப்பலானர்.

இரண்டாம் விருபாக்ஷருக்குப் பின் அவரது மகன் ப்ரௌட தேவராயன் (*1485*) தன் சகோதரனால் அளிக்கப்பட்ட ஆட்சியை ஏற்றான். அவனது ஒழுக்கக் கேட்டினைத் தமக்கு அனுகூலமான சூழ்நிலையாக ஏற்படுத்திக்கொண்டு, சாளுவ நரசிம்மர் அவன் ஆட்சிக்குட்பட்ட பிரபுக்களையும் அதிகாரிகளையும் தம் வயப் படுத்திக் கொண்டார். பின்னர், ஈசுவர நாயகனது குமாரனான நரச நாயக்கரது தலைமையில் ஒரு படையை வியசநகரம் நோக்கி அனுப்பினார். ப்ரௌட தேவராயன் ஓட்டம் பிடித்தான். எத்தகைய எதிர்ப்புமின்றி விசயநகர அரசைக் கைப்பற்றி 1485-ல் சாளுவ நரசிம்மர் முடிசூட்டிக் கொண்டார். இதனுடன் முதல் வமிசமான சங்கம வமிசம் முடிவுற்றது. அதன்பின் சாளுவ வமிசம் ஆட்சி புரியலாயிற்று.

(ஓ) சாளுவ நரசிம்மர் (1486-90)

'சாளுவர்' பெயர்வரக் காரணம்

'சாளுவர்' என்ற சொல் தெலுங்கிலும் கன்னடத்திலும் வழங்கப்படுகிறது. அச் சொல் வேட்டையின்போது பயன்படுத்தப் படும் ஒருவகைப் பறவையைக் குறிப்பதாக உள்ளது. சாளுவ நரசிம்மரது பாட்டனார், முதலாம் கம்பணரின் மதுரைப் படை யெழுச்சின்போது கலந்துகொண்டார். அவரது திறனை மெச்சிச் 'சாளுவர்' என்ற பெயரை அவருக்குச் சூட்டினார். அவரது பரம் பரையினருக்கும் அப் பெயர் வழங்கி வரலாயிற்று. அம் மரபினர் விசயநகரப் பேரரசர்களுடன் ஒத்துழைத்தனர். சாளுவ நரசிம்மரின் சிறிய தகப்பனார் இரண்டாம் தேவராயரின் தமக்கையை மணந்து கொண்டதாகவும், சந்திரகிரியில் அவர் ஆட்சி நடத்தி வந்ததாக வும் தெரிகிறது. அவருக்குப்பின் சாளுவ நரசிம்மர் அரசரானார்.

விருபாக்ஷரின் மகன் நடத்திய ஒழுக்கக்கேடான ஆட்சியைத் தமக்குச் சாதகமாகக் கொண்டு சாளுவ நரசிம்மர் அரியணை ஏறினார். போர் ஏதுமின்றி முக்கிய அதிகாரிகளையும் பிரபுக்களையும் தம் வயப்படுத்திக்கொண்டு தந்திரமாக முடிசூட்டிக் கொண்டார். எதிர்ப்புகளை எளிதில் சமாளித்தார். விசயநகரப் பேரரசினைக் காக்கவே அவர் அத்தகைய செயலில் ஈடுபட்டார். இழந்த நாடுகளை மீண்டும் போரிட்டு வென்றார். துளுவ வமிச நரச நாயக்கரை அமைச்சராக நியமித்து அவர் துணைகொண்டு 1490-ல் முட்கல், ரெய்ச்சூர்க் கோட்டைகளைக் கைப்பற்றினார். ஒரிஸ்ஸா மன்னர் புருஷோத்தம கஜபதி அவரால் தோற்கடிக்கப்பட்டார் என்றாலும், உதயகிரியைச் சாளுவர் இழந்துவிட்டார். அராபிய

வியாபாரிகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டார். சிறந்த குதிரைகளை அவர்களிடமிருந்து வாங்கி நல்ல குதிரைப்படை ஒன்றை அவர் நிறுவியதாக நூனிஸ் குறிப்பிடுகின்றார். விசயநகரச் சாதாரண வியாபாரிகளைக்கூடச் சிறந்த போர்ப்படை வீரர்களாக மாற்றினார். அதனால் விசயநகரப் பேரரசுக்கு அந்நியர்களால் எந்த ஆபத்தும் ஏற்படாதென்பது அவரது கருத்தாகும். அவர் 1490-ல் நரசநாயகரிடம் தம் மக்களையும் அரசையும் ஒப்படைத்துவிட்டு மாண்டார்.

(ஓ) நரச நாயகர் (1492–1530)

சாளுவ நரசிம்மர் தாம் இறக்கும்போது தம்முடைய குமாரர்கள் இருவரும் இளைஞர்களாய் இருந்ததால் அவர்கள் அரச பதவியேற்கும் வயது வரும் வரை அவர்களுக்குப் பாதுகாவலராக இருக்கும்படியும், பின்னர் அவர்களை அரியணையேற்றும்படியும், நரச நாயகருக்கு உத்தரவிட்டார். அதன்படியே அவர் மூத்த மகனை 'திம்மா' என்ற யுவராஜனை அரியணையில் அமர்த்தி, தாமே முன்னின்று அரசாட்சியை நடத்தலானார்.

சாளுவ நரசிம்மரின்கீழ்ப் பணியாற்றிய துளுவ குலத் தலைவர்களில் மிகவும் சிறந்தவர் நரச நாயகராவார். திம்மா பகைவர்களால் கொலையுண்டு இறக்க, அவரைக் காக்கும் பொறுப்பேற்ற நரச நாயகர் அப் பகைவனைத் தண்டித்து, அவரது தம்பி இளைஞனையினும் அவனையே அரியணையில் இருத்திவிட்டு ஆட்சி நடத்தினார். அரியணையில் அமர்ந்து அரசியல் பொறுப்பினை ஏற்று, அரச குமாரர்களைக் காத்து அரசாட்சி நடத்தியதால் அவர் ரக்ஷகர்த்தா, ஸ்வாமி என்றழைக்கப்பட்டார். தலைசிறந்த சேனாதிபதியாக விளங்கினார். மற்றும் மகாபிரதானியர், காரியகர்த்தர் என்றும் அழைக்கப்பட்டார்.

இரண்டாம் நரசிம்மன் பெயரளவுக்கே ஆட்சி புரிந்தார். உண்மையில் ஆட்சி அதிகாரம் நரச நாயகரிடமிருந்தது. அவரது ஆட்சியில் கல்விமான்கள் சிறப்புற்றிருந்தனர். நந்திமல்லையா முதலிய தெலுங்குப் புலவர்களை அவர் ஆதரித்தார்.

(ஔ) வீர நரசிம்மர் (1506–1509)

நரச நாயகருக்குப்பின் அவரது மூத்த குமாரர் வீர நரசிம்மர் ஆளும் பொறுப்பினை ஏற்றார். அப்போது இம்மடி நரசிம்மர் (இரண்டாம் நரசிம்மர்) அரச பதவியைத் தாமே வகிக்கும் வயதை அடைந்திருந்தார். வீர நரசிம்மர் இரண்டாம் நரசிம்மரை அரச

பதவியிலிருந்து நீக்கித் தாமே அரசாள விரும்பினர். எனவே, அவரைப் பெனுகொண்டாக் கோட்டையில் தங்கியிருக்கும்போது கொலை செய்துவிட்டு வீர நரசிம்மர் (1506) அரியணையேறினர். அதனுடன் சாளுவ மரபு அழிவுற்றது.

அதனை அறிந்த பிரபுக்களும் அதிகாரிகளும் வீர நரசிம்மருக்கு எதிராகப் பல கலகங்களை உருவாக்கினர். எல்லாவற்றையும் எளிதில் அடக்கினர். 'சாளுவ திம்மா' என்பார் வீரநரசிம்மரின் 'மகாபிர தானி'யாக விளங்கினர். அவர் துணைகொண்டு நரச நாயகர் காலத்தில் இழந்த நாடுகளை வென்றார். மைசூர், துளுப்பகுதிகளையும் கைப்பற்றினர். போர்ச்சுகீசியரோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு சிறந்த குதிரைகளை வெளிநாட்டிலிருந்து வாங்கினர். சாதி சமய வேறுபாடின்றித் திறமையுள்ள வீரர்களைப் படையில் சேர்த்தார். குடியானவர்களது குறைகளை நேரில் கேட்டறிந்து அவற்றை நீக்கினர். திருமண வரியை நீக்க அவர் பெரிதும் முயன்ருர். தம் கடைசிக் காலத்தில், வீர நரசிம்மரது ஒன்றுவிட்ட உடன்பிறப்பாளரான கிருட்டிணதேவராயர் தமக்குப்பின் அரச பதவிக்கு வரும் திறமை உடையவர் என்பதை அறிந்து அதனைத் தடுக்கத் தம் 'மகாபிரதானி' யான சாளுவ திம்மாவை அழைத்து அவரது கண்களைப் பிடுங்கி வருமாறு ஏவினர். திம்மா ஏற்கெனவே கிருட்டிண தேவராயருடன் நட்புக் கொண்டவரானதால், அவரது கண்களுக்குப் பதிலாக ஆட்டின் கண்களைக் கொண்டுவந்து இறக்கும் தறுவாயில் உள்ள வீர நரசிம்மரிடம் காட்டினர். அவ ரக்க மகிழ்ச்சியோடு இறந்தார் எனத் 'தெலுங்கு மரபுரை'யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. கிருட்டிணதேவராயர்

(i) பிறப்பும் முடிசூட்டலும்

கிருட்டிணதேவராயர் நரச நாயகருக்கும், நாகமாம்பாளுக்கும் மகனாகத் தோன்றினர். அவருடைய தந்தைக்கு மூன்று மனைவியர் இருந்தனர். இவர் இரண்டாம் மனைவியின் குமாரர். கிருட்டிண தேவராயர் தாம் எழுதிய 'ஆமுக்த மால்யதா' என்னும் தெலுங்குக் கவிதையில் அவருடைய தந்தைக்கு 'இரு மனைவியர் உண்டென்றும், முதல் மனைவியான திப்பம்மாளுக்கு வீர நரசிம்மனும் இரண்டாம் மனைவியாகிய நாகமாம்பாளுக்குத் தாமும் பிறந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.[1] கிருட்டிண தேவராயர் பிறந்த தேதி பற்றி இருவகையான கருத்துகள் நிலவுகின்றன. தெலுங்கிலுள்ள இரு கவிதைகளிலிருந்து ஆராயுமிடத்து அவர் பிறந்தது ஒன்றில் சக ஆண்டு 1387 என்றும், மற்றொன்றில் சக ஆண்டு **1409** என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றின்படி முதலில் குறிப்பிட்ட தேதியைக் கொண்டு கணக்கிடும்போது, கிருட்டிண தேவராயர் தம்முடைய 45ஆவது வயதில் அரச பதவியை ஏற்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. பின்னர்க் குறிப்பிட்ட தேதியைக் கவனிக்கும்போது அவர் தம்முடைய **21**ஆவது வயதில், அரசராக அமர்த்தப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இவ்விரண்டு தேதிகளில் எது சரி என ஆராயுமிடத்து, நூனிஸ் என்பவர் தரும் குறிப்பில் 'கிருட்டிணதேவராயர் அரச பதவியில் அமரும்போது அவர் **20**ஆண்டுகள் நிரம்பியவராகக் காணப்பட்டார்' என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து மேலே குறிப்பிட்டுள்ள இரண்டாவது ஆண்டாக விளங்கும் சக ஆண்டு **1409** என்பதே அவர் பிறந்த சரியான தேதி என்று தெரிகிறது. மேலும், நூனிஸ்

1 Sources of Vijayanagar History, Madras University, Page (109—110)
Krishna Raya in his work says that Narasa had two wives, Tippamba and Nagamamba by whom he had two sons Vira Narasimha and Krishna Raya respectively.

கருத்தை வலியுறுத்தும் வகையில் 'பயஸ்' (Paes) என்பவர் கிருட்டிண தேவராயரைப் பற்றித் தந்துள்ள விளக்கத்தில், 'கிருட்டிணதேவராயர் அரியணை ஏறும்போது 45 ஆண்டு வயது நிரம்பிய ஓர் அனுபவசாலியாக இல்லாது ஓர் இளம் வாலிபராகக் காணப்பட்டார்' எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, நூனிஸ், பயஸ் என்பவர்களின் குறிப்புகளையொட்டிக் கிருட்டிண தேவராயர் பிறந்த ஆண்டு சக ஆண்டு 1409 என்று முடிவு செய்வதே பொருத்தமானதாகும்.

முடி சூட்டு விழா

விசயநகரப் பேரரசரான கிருட்டிண தேவராயர், இங்கிலாந்து அரசர் எட்டாம் ஹென்றிக்கும், ஐந்தாம் சார்லசுக்கும் சம காலத்தவர். அவரது மூத்த சகோதரர் வீர நரசிம்மர் இறந்ததும் அவர் பதவியேற்ருர். அவர் அரச பதவி ஏற்றது 1509ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் தேதியிலிருந்து அக்டோபர் மாதம் 14ஆம் தேதி வரை என்று ஒரு சாராரும், நவம்பர் 13ஆம் தேதி வரை என்று மற்ருெரு சாராரும் கருதுகின்றனர். என்ருலும் அவரது முடிசூட்டு விழா 1510ஆம் ஆண்டு ஜனவரி 23(அ) 24ஆம் தேதிகளில் நடைபெற்றிருக்கும் என்றும், அதே நாளில் அவர் கோயில்களுக்கு அளித்த நன்கொடை விவரங்களின் மூலம் தெரிகின்றது. ஆகவே, முடிசூட்டு விழா அவர் பதவியேற்ற பின், காலம் கடந்து நடந்திருக்குமா என்ற ஐயம் எழுகின்றது. அதைப்பற்றி ஆராய்ந்தால், ஒரு நாட்டின் அரசர் இறந்ததும், அந் நாட்டினைக் காக்கும் பொருட்டு உடனே அரச பதவியை ஏற்றுக்கொண்டாலும், துக்க நாள்களைக் கழித்த பின்னர் முறைப்படி முடிசூட்டிக் கொள்வது மரபு ஆனதால், கிருட்டிணதேவராயர் தம் சகோதரர் இறந்ததும் அரச பதவியை ஏற்றுக்கொண்டு, பின்னர்ச் சில மாதங்கள் கழித்து முடிசூட்டிக் கொண்டார் என்பது சரியே எனத் திரு. S. K. அய்யங்கார் தம் கருத்தினைத் தெரிவித்துள்ளார். அதனுடன் ஹம்பியிலுள்ள கல்வெட்டுகளின் மூலம் அவரது கருத்துகள் வலியுறுத்தப்படுவதால் கிருட்டிண தேவராயர் முடிசூட்டிக் கொண்டது 1510ஆம் ஆண்டு ஜனவரி 23(அ) 24ஆம் தேதியே என்பது வெள்ளிடைமலை.

நூனிஸ் என்பவர் முடிசூட்டு விழா, காலங் கடந்து நடைபெற்றது பற்றிப் பின்வரும் குறிப்பினைத் தருகின்ருர். அரசரான வீர நரசிம்மர் நோய்வாய்ப்பட்டு இறப்பதற்கு முன் தம் அமைச்சர் சாளுவ திம்மய்யாவை அழைத்து, அவர் முன் தம் எட்டு வயது மகனை நிறுத்தித் தாம் இறந்த பிறகு அவனுடைய வயதைக் கவனியாது அவனை அரசனுக்க வேண்டுமென ஆணையிட்டார். மேலும், அவ் வரச பதவி தம் குமாரன் இளையவனுனதால், வயது

முதிர்ந்த கிருட்டிண தேவராயரைச் சாரும் என்று எண்ணி எவ்வாறேனும் தம் குமாரனையே அரசனுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். அதனுடன் கிருட்டிண தேவராயரது இரு கண்களையும் பிடுங்கித் தாம் இறப்பதற்கு முன் தம்மிடம் அவற்றைச் சேர்ப்பிக்க வேண்டும் என்றும் ஆணையிட்டார். அவ்வாறு செய்வதன் மூலம் தம் மகன் அரச பதவியில் அமருவதற்கு யாதோர் இடையூறும் ஏற்படாது என்றும் கூறினர். சாளுவ திம்மமையா அவ்வாறே செய்வதாகக் கூறிவிட்டுக் கிருட்டிண தேவராயரைத் தனியாகச் சந்தித்தார், அவரிடம் வீர நரசிம்மருடைய கருத்தை வெளியிட்டார். அதனைக் கேட்ட கிருட்டிணதேவராயர் மிகவும் வேதனையடைந்து தமக்கு அரச பதவியே வேண்டா என்றும், தமக்குள்ள மரபு-உரிமையினுல் அரசாங்க வேலை வேறு ஏதேனும் கிடைப்பினுங்கூட அதுவும் வேண்டா என்றும் கூறித் தம்மை ஒரு சந்நியாசி போல உலகில் எங்கேனும் சென்று பிழைத்துக்கொள்ள அனுமதியளித்தால் போதும் என்றும் திம்மையாவை வேண்டினர். மேலும், தம் கண்களை நீக்கும் அளவு தம் சகோதரர் ஆணையிடுவதற்கான தவறுகள் ஏதும் தாம் இழைக்கவில்லை என்று கூறி, தம்மைத் தம் கண்களுடன் பிழைத்துப்போக விட்டுவிடும்படி அவரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். மனம் இளகிய சாளுவ திம்மையா அன்றைய அரசியல் சூழ்நிலையை எண்ணிப் பார்த்து, இருபது வயதுக்கு மேற்பட்ட கிருட்டிண தேவராயரே, வீர நரசிம்மருக்கு அடுத்துப் பதவியேற்பதற்குப் பொருத்தமானவர் என முடிவு செய்தார். எனவே, ஆட்டின் கண்களைக் கொண்டு, சாகும் தறுவாயில் உள்ள அரசரிடம் அதைக் கிருட்டிணதேவராயரின் கண்கள் எனக் கூறி, அரசனை மனநிம்மதியுடன் இறக்கச் செய்தார். பின்னர்க் கிருட்டிண தேவராயரையே அரசராக்கினர்.

நூனிஸ் தரும் மேற்கண்ட குறிப்பு உண்மையான கருத்துகளின் அடிப்படையில் எழுந்ததா இல்லையா என்பது பற்றிய ஆராய்ச்சி ஒருபுறமிருக்க, வீர நரசிம்மருக்கும், கிருட்டிண தேவராயருக்கும் சுமுகமான உறவு நிலை இல்லையென்பதும், கருத்து வேறுபாடுகள் பல இருந்திருக்கக் கூடும் என்பதும் புலனுகின்றன. எனவே. முடிசூட்டு விழா அன்றைய அரசியல் சூழ்நிலையில் எழுந்த பல சர்ச்சைகளைத் தீர்த்து நடத்த வேண்டியிருந்ததால் காலதாமதம் ஆகியிருக்கக் கூடுமென்பது துணிபு.

நூனிஸின் குறிப்பின்படி வீர நரசிம்மர் பதவி ஏற்றது விசயநகர அரசின் பல மாநிலங்களில் குழப்பம் தோன்றுவதற்கு அறிகுறியாக அமைந்தது. அவர் தம் குறுகிய ஆட்சிக் காலத்தில் குழப்பங்களை அடக்கி ஒரு நிலையில் கொண்டுவரப் பாடுபட்டார். தமக்குப் பின்

பதவிக்கு வருபவர்களுக்கு நல்லதோர் அரசியல் சூழ்நிலையை அவரால் அமைத்து வைக்க முடியவில்லை. எனவே, கிருட்டிண தேவராயருக்கும், அவரது அமைச்சர் சாளுவ திம்மருக்கும் மாநிலத் தலைவர்களை அடக்கி விசயநகர அரசை நல்ல நிலையில் நிறுவப் பல இன்னல்கள் ஏற்பட்டன. அவற்றில் வடக்கில் பீஜப்பூர் அரசும் கிழக்கு, வடகிழக்குப் பக்கங்களில் கலிங்க அரசும் முக்கியமானவை. மற்றும் ஆங்காங்கு எழுந்த கலகங்களை அவ்வப்பொழுது அடக்க வேண்டியிருந்தது. மேலும், தம் முன்னோர்களிடமிருந்து பிறரால் கவர்ந்து செல்லப்பட்ட நாடு நகரங்களை மீட்டு விசயநகர அரசினைப் பேரரசாக அமைக்கவேண்டியிருந்தது. இவ்வாறு பல தொல்லைகளை எதிர்த்துச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலையில் கிருட்டிண தேவராயர் அரச பதவியினை ஏற்றார். அவற்றில் சிறப்பாக ரெய்ச்சூர், கொண்டவீடு, உதயகிரி ஆகிய மூன்றையும் விசயநகரப் பேரரசில் இணைக்க வேண்டும் என்ற தம் முன்னோர்களின் ஆசையை நிறைவேற்ற அவர் உறுதி பூண்டார்.

'ராயவாசக'த்தின்படி கிருட்டிணதேவராயரின் முடிசூட்டு விழா நிகழ்ச்சிகள் பின்வருமாறு நடைபெற்றதாக அறிகிறோம்.[1] 'வீர நரசிம்மர் பல நாயகர்களை நோக்கித் தமக்கு வயதானதால் அவ்வரசுக்குக் கிருட்டிண தேவராயரை குடிசூட்ட ஏற்பாடு செய்யுமாறு கூறினர். அதனுடன் அரசாங்க மோதிரத்தையும் நல்ல நேரத்தில் கிருட்டிண தேவராயருக்கு அளித்தார்.

அதன்படியே அமைச்சர்களும், தலைவர்களும், அலுவலர்களும், பிரபுக்களும், புலவர்களும் ஒன்றுசேர்ந்து கிருட்டிண தேவராயரை நல்ல முகூர்த்தத்தில் நீராட்டுவித்து, பொன்னால் ஆன அரியணையில் அமர்த்தினர். அவ் விழாவில் ஒரு கோடிப் பசுக்களையும், ஓராயிரம் குடும்பத்தினருக்கு இடவசதியையும் தானமாகக் கொடுத்தார். பின்னர், அந்தணர்கள் வேத மந்திரங்களை ஓத நான்கு கடல்களிலிருந்தும் கொண்டுவரப்பட்ட புனித நீராலும், புண்ணிய நதிகளான கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி, தாமிரபரணி ஆகியவற்றிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித நீராலும் நீராட்டப்பட்டார். பலவகை இசைக் கருவிகள் வாசிக்கப்பட்டன. பொன் நாணயங்களும், நவரத்தினங்களும் அவர்மீது அபிஷேகம் செய்யப்பட்டன. புதிய வெண்மையான துணியினால் அவர் மீது உள்ள ஈரத்தைப் போக்கினர். அவருக்குச் சந்தனம், புனுகு, ஜவ்வாது பூசப்பட்டன. பின்னர்ப் பொன்னுடைகளை அணிந்துகொண்டு சபையோர்களை அவரவர்கள் இடத்தில் அமருமாறு கூறினர்.

[1] Rayavachakam, pp. 15 to 17.

ராயர் தம்முடைய குமாரர்கள், மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடன் விருந்துண்டார். அவருடைய கைகளைப் புனித நீரில் கழுவிக்கொண்டு ஆசமனம் செய்துகொண்டார். காலில் பிரகாசிக்கும் காலணிகளை அணிந்துகொண்டு இராமாயணத்தின் சருக்கத்தைப் பாடிக்கொண்டு சில படிகள் முன்னே நடந்து சென்றார். பிறகு இரத்தினக் கம்பளத்தில் அமர்ந்துகொண்டு தம்மைக் காணத் தல நாயகர்களையும், அப்பாஜி, ஏனைய மந்திரிகள் ஆகியோரையும் வருமாறு ஆணையிட்டார்.'

எனவே, அவர் பதவியேற்றுச் சுமார் ஒன்றரை ஆண்டுகள் தம் நாட்டு எல்லையை விட்டு வெளியே செல்லாமல் தலைநகரில் இருந்து கொண்டே, ஒற்றர்களின் மூலம் அயல்நாடுகளின் நிலைகளைப் பற்றி அறிந்து வரலானார். இராயவாசகமு, கிருட்டிணராய விஜயம் ஆகிய கவிதைகளிலிருந்து கிருட்டிண தேவராயர் முதன்முதல் தம் கவனத்தை இராணுவ, சிவில், நிர்வாக வருமானத்தில் செலுத்தினார் என அறிகிறோம். தம் அரசுக்குட்பட்ட பல நாடுகள், தாம் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியையோ, இராணுவத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளையோ சரிவர நடத்தவில்லை எனக் கண்டறிந்தார். அமைதியான நிலையில் அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர அவர் ஒரு வழி வகுத்தார். அவர் தம் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்ள, அவ் வரசின் முக்கியமான, மிக்க செல்வாக்குடைய தலைவர்கள் அடங்கிய ஒரு பட்டியலைத் தயாரித்தார். அதன்படி அவர்கள் அனைவருக்கும் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்ளுமாறு அழைப்புகள் விடுத்தார். பின்னர், அவர்களை வரவேற்றுத் தனியான ஓர் இடத்தில் இருத்தி அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தலைநகரில் வைத்துக்கொள்ள வேண்டிய போர்ப் படைகளின் அளவையும், தற்போது அவர்களிடமுள்ள படைகளின் எண்ணிக்கையையும் பற்றி விசாரணை நடத்தினார். படைகள் குறைவாயுள்ள தலைவர்களுக்கு, அவசரத் தேவைக்கென நியமிக்கப்பட்டுள்ள ஆள்களிலிருந்து வேண்டிய அளவு தேர்ந்தெடுத்துப் போர்ப்படைகளின் முழு அளவினைச் சரி செய்ய உத்தரவிட்டார். அவ்வாறு செய்வதன் மூலம், ஆயுதம் தாங்கிய குதிரைப்படை 24 ஆயிரமும், யானைப்படை 10 ஆயிரமும், காலாட்படை ஓர் இலட்சமும் கிருட்டிண தேவராயர் வசம் வந்து சேர்ந்தன.

(ii) திருமணம்

கிருட்டிண தேவராயர் ஸ்ரீரங்கப்பட்டணத்து அரச குமாரியான திருமலா தேவியைத் திருமணம் செய்துகொண்டு அவரையே பட்டத்தரசியாக்கினார். 'பிரபோத சந்திரோதய வியாக்யா' என்ற

கவிதையில் ஒரிஸ்ஸா கஜபதி அரசர் பிரதாபருத்திரனின் மகளையும் கிருட்டிண தேவராயர் மணந்துகொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 'துக்கா பஞ்சகம்' என்ற கவிதையில் பிரதாப ருத்திர கஜபதியின் மகளான துக்கா என்பவள் ஐந்து பாடல்களில் கிருட்டிண தேவராயர் தன்னைத் திருமணம் செய்துகொண்டபின் தன்னுடன் வாழ்க்கையை நடத்தாது தன்னைத் தனியே ஒதுக்கி விட்டதாக வருந்தி எழுதியுள்ளார்.[1] இதிலிருந்து கிருட்டிண தேவராயருக்கு இரு மனைவியர் இருந்தனர் என்றும் அவர்களில் திருமலாம்பாவையே பட்டத்தரசியாகக் கொண்டு துக்காவைக் கவனியாது இருந்தார் என்றும் தெரிகிறது. 'ராயவாசகமு' என்ற கட்டுரையில் பிரதாப ருத்திர கஜபதியின் மகள் பெயர் ஜகன் மோகினி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஜகன்மோகினியின் வேறு பெயர் துக்கா என அறிகின்றோம்.[2] அவருடைய மனைவிமார்களில் ஒருவருடைய பெயர் சின்னதேவி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தச் சின்னதேவி என்பவர் அவரால் மிகவும் விரும்பப்பட்ட ஒரு நடன மாது என அறிகின்றோம். துக்கா என்பவர் பெயர் இலக்கியங்கள் தவிர வேறு எவற்றிலும் காணமுடியவில்லை. எனவே, ராயருடன் மிக நெருங்கி இருந்த பட்டத்தரசிகள் திருமலாதேவியும், சின்னதேவியுமாவர். அவ் விருவர்களது செம்பினாலான உருவங்களை இன்றும் திருப்பதித் திருவேங்கடவன் ஆலயத்தில் ராயருடன் காணலாம்.

(iii) செய்த போர்கள்

கிருட்டிண தேவராயர் செய்த போர்களைப்பற்றி 'ராயவாசகமு' என்ற கட்டுரையில் மிக விவரமாகத் தரப்பட்டுள்ளது. கிருட்டிண தேவராயர் முடிசூட்டிக்கொண்டபின் தம்மிடமுள்ள கருவூலத்தையும் போர்ப்படைகளையும், படையெடுப்புக்கான இதர தயாரிப்புகளையும் அமைச்சர் அப்பாஜியுடன் பார்வையிட்டார். அதன் பின் தம் ஆட்சிக்குப்பட்ட 18 மாநிலங்களிலிருந்து (கப்பணங்களிலிருந்து) அழைக்கப்பட்ட பிரபுக்களுக்கும், கனவான்களுக்கும் விருந்து ஒன்று கொடுத்தார். அவ் விருந்தில் அவர்களிடம் எதிரிகளின் எல்லைக்குள் 30 மைல் தூரம் சென்று வழியில் கிடைக்கும் ஆடு மாடுகள், ஆள்கள் ஆகியோரைக் கவர்ந்து வருமாறு உத்தர விட்டார். தலைநகரத்தில் அமைச்சர் அப்பாஜியைச் சில குதிரை

1 Five verses are ascribed by tradition to Tukka, the daughter of Pratapa Rudra Gajapathi. the ru er of Orissa, who was given in marriage to Krishna Raya. She is said to have been neglected by her husband and to have led life of seclusion at Kambam. In the verses She bemoans her husbands neglect of her' Sources of Vijayanagar History—p. 143.

2 The Gajapathi gave his daughter Jagan Mohini to Krishna Raya in marriage-Surces of Vijayanagar History, p. 160

வீரர்களுடன் தங்கி அந் நகரினைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு ஆணை பிறப்பித்தார். ஏனைய படைத்தலைவர்கள், குதிரை வீரர்கள், யானை வீரர்கள், அலுவலர்கள் ஆகியோரைப் போர் முரசம் கொட்டி விட்டுப் போருக்கு எழுமாறு உத்தவிட்டார்.

போருக்குமுன் ராயர் செய்த செயல்கள்

கிருட்டிண தேவராயர் தம்முடைய அமைச்சரான சாளுவ திம்மரை அழைத்துக் கஜபதியுடன் போர் செய்ய ஆயத்தமாகுமாறு ஆணையிட்டார். போருக்குப் புறப்படுவதற்கு நல்ல நாள் எதுவென அறிந்துகொள்ள விரும்பினர். அதற்காக மஞ்சள் குங்குமம் கலந்த அரிசியை வண்ணான் வீட்டுக் கூரையின்மேல் தெளித்தனர். சிறிது நேரத்தில் வண்ணான் மன மகிழ்ச்சியோடு ஒரு பாடலைப் பாடினன். அப் பாடலின் கருத்தாவது, "கொண்டவீடு நம்முடையதே, கொண்டபல்லியும் நம்முடையதே ; யாராவது என்னுடைய கூற்றை உண்மையென நம்பாவிடில் அவர்களுக்குக் கடகம் வரை உள்ள நாடுகள் நம்முடையனவே' என்பதாம். வண்ணானுடைய பாடலை ராயருக்குத் தெரிவித்தார்கள். உடனே, பேரரசர் மகிழ்ந்து அதுதான் தக்க தருணம் என்று கீழ்த்திசை நோக்கிப் படையெடுத்தார். ஒரே படையெடுப்பில் உதயகிரி, அத்தங்கி, வினுகொண்டா, பெல்லம்கொண்டா, நாகார்ஜுனகொண்டா, கெத்தவரம் முதலிய கோட்டைகளைக் கைப்பற்றினர். அதன் பிறகு கொண்டவீட்டுக் கோட்டையை, அதன் மதில்களை இடித்துக் கைப்பற்றினர். பிரதாப ருத்திர கஜபதியின் குமாரனை வீரபத்திர கஜபதியையும் அவருடன் உள்ள பிரபுக்கள், தளகர்த்தர்கள் ஆகியோரையும் உயிருடன் கைது செய்தார். அக் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு அவர்கள் பாதுகாப்புக்கு உறுதியளித்தார். இக் கருத்தைப் பற்றிய பாடலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.[1]

'முன்பு அறிவற்ற தன்மையில் பிரதாபருத்திரன் கிருட்டிண ராயரது குமாரனை மன்மதனைக் கொண்டவீட்டுக் கருகில் கொலை செய்தான். அஃது ஒரு மனிதத் தன்மையுடைய காரியமா? ஆனால், பெருமை வாய்ந்த பேரரசர் கிருட்டிணராயர் பிரதாப ருத்திரரின் குமாரனை வீரபத்திரனுக்குக் கொண்டவீடு போர்க் களத்தில் கருணையுள்ளத்தோடு பாதுகாப்பு அளித்தார்.'

கஜபதியின் அலுவலர்களுக்கும் அவ்வாறு பாதுகாப்பு அளித்த ராயர், தாம் சிம்மாசனம் ஏறச் செல்லும் வரையில் அனைவரும் அவரது அடிபணியுமாறு சென்றார். அதற்குப்பின், கடகம் வரையில்

1 The stanza is taken from Nandi Timmana's 'parijata paharanam'

சென்று அங்குக் கஜபதியைத் தாக்கி அவன் மகளை மணந்து கொண்டார். பின்னர்க் கஜபதிக்கு கிருஷ்ணா நதிக்கு வடபாலுள்ள நாடுகளைத் திருப்பி அளித்துவிட்டார். கொண்டவீட்டுக்கு ஆளுநராகச் சாளுவ திம்மரசரின் உறவினரை நியமித்துவிட்டு ராயர் விசயநகரம் திரும்பினர். [Kaifiyat of Kondavidu, Mac. Mss. 15-4-40. pp. 18 ff.]

(அ) உம்மத்தூர் வீழ்ச்சி

தம்முடைய பெரும்படையுடன் கிருட்டிண தேவராயர் தம் முன்னோர்களிடம் பணியாது சுதந்திரமாக ஆட்சி செய்யும் உம்மத்தூர் (Ummattur) அரசின் மீது படையெடுத்தார். அவ் வரசுக்கு உட்பட்ட ஸ்ரீரங்கப்பட்டணம், சிவசமுத்திரம் ஆகிய இரு கோட்டைகளும் காவேரி நதிகளுக்கு இடையிலுள்ள தீவுகளில் அமைக்கப்பட்டிருப்பதால் அவற்றைக் கைப்பற்றுவது கடினம் என அறிந்தார். கங்கராசு கிருட்டிணதேவராயரது படையெடுப்புக்கு அஞ்சித்தலைநகரத்தை ஸ்ரீரங்கப்பட்டணத்திலிருந்து சிவசமுத்திரத்துக்கு மாற்றி அக் கோட்டையைப் பெரும் படைகளாலும், அதிகப் போர்க் கருவிகளாலும் பலப்படுத்தினர். கிருட்டிண தேவராயருடைய படையெடுப்பு இரு ஆண்டுகள் நடைபெற்றன (*1511-12*). முதன்முதலில் ஸ்ரீரங்கப்பட்டணக் கோட்டையைத் தாக்கி அதைக் கைப்பற்றிக்கொண்டார். அங்குள்ள ஆதி அரங்கநாதரை வழிபட்டுவிட்டுப் பின்னர்ச் சிவசமுத்திரத்தை நோக்கித் தம் பெரும் படையை அனுப்பினர். ஓராண்டுக் காலம் சிவசமுத்திரக் கோட்டையைக் கைப்பற்ற முழு மூச்சுடன் படையெடுப்பை நடத்தினர். கோட்டைக் குள்ளிருந்த கங்கராசா இனித் தம்மால் கோட்டையைப் பாதுகாக்க முடியாது என்றறிந்து அதனை விட்டு வெளியேறி, உயிர் தப்பித்துக்கொள்ள ஓட்டம் பிடித்தார். அவ்வாறு தப்பிச் செல்லும்போது வழியிலுள்ள காவேரி ஆற்றில் மூழ்கி மரணமடைந்தார். கிருட்டிண தேவராயர் சிவசமுத்திரக் கோட்டையைக் கைப்பற்றி அதனுடைய கோட்டை கொத்தளங்களைத் தரைமட்டமாக்கி அங்குள்ள புரட்சி வீரர்களின் தலைவனிடம் ஒரு புதிய மாநிலமாக உம்மத்தூரை அமைத்து, அதனை ஆளும் பொறுப்பை ஒப்படைத்தார். மீண்டும் ஸ்ரீரங்கப்பட்டணத்தை அதன் தலைநகராக்கி, தம் ஆணைக்குக் கீழ்ப்படிந்த அரசாக அதனை நடத்துமாறு ஆணையிட்டு, பின் தம் படையுடன் தலைநகர் நோக்கி வெற்றிப் பெருமிதத்தோடு திரும்பினர்.

(ஆ) பாமினி அரசுடன் நடத்திய போர்

பாமினி சுல்தான் முகம்மது ஷா, பீஜப்பூர் சுல்தான் யூசுப் அடில்கானின் தூண்டுதலின் பேரில் பெரும்படை திரட்டிக்

கொண்டு விசயநகரை நோக்கிப் போருக்கு எழுந்தார். அவருடைய படையெடுப்பைத் தோனி (Doni) என்னுமிடத்தில் விசயநகர அரசின் படைகள் தடுத்து நிறுத்தின. போரில் பாமினி அரசு படைகள் படுதோல்வி யுடைந்தன. முகம்மது ஷா காயமுற்றார். எனவே, படை பின்வாங்கியது. என்றாலும் கிருட்டிண தேவராயர் முகம்மதியப் படைகளை விடாது துரத்தும்படி ஆணையிட்டார். மீண்டும் இரு படைகளும் கோவெலகொண்டா (Kovelakonda) என்னுமிடத்தில் பெரும் போரிட்டனர். கோவெலகொண்டாப் போரில் மீண்டும் விசயநகரப் படையே வெற்றி பெற்றது. முகம்மது ஷாவைப் போருக்குத் தூண்டிவிட்ட யூசப் அடில்கான் அப்போரில் கொல்லப்பட்டார். எனவே, பீஜப்பூர் அரசில் குழப்பமும் ஒழுங்கின்மையும் ஏற்பட்டன.

பீஜப்பூர் அரசின் இத்தகைய நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு கிருஷ்ணை, துங்கபத்திரா நதிகளுக்கு இடையிலுள்ள ரெய்ச்சூர்க் கோட்டையின்மீது கிருட்டிண தேவராயர் படையெடுத்தார் (கி பி. 1512). ரெய்ச்சூரைக் கைப்பற்றிய பின் ஒரு நாளைக்கு ஒரு கோட்டை வீதம் குல்பர்க்கா, பீரார் முதலிய கோட்டைகளைக் கைப்பற்றிப் பாமினி சுல்தான்கள் தம்மைக் கண்டு அஞ்சும்படி ராயர் வெற்றிவாகை சூடினர். கடைசியில் சுல்தான் முகம்மது ஷாவை அழைத்து அவரிடம் பாமினி அரசுகளின் பொறுப்பை ஒப்படைத்துத் தம் ஆணைக்குட்பட்டவராயும், தம் அரசுடன் தோழமை பூண்டவராயும், அவர் விளங்க வேண்டுமென ஏற்பாடு செய்துவிட்டுத் தம் தலைநகர் திரும்பினர். கிருட்டிண தேவராயர் சிறந்த போர் வீரர்மட்டுமன்று, அவர் மிக்க திறமையுள்ள அரசியல்வாதி என்பது அவர் முகம்மது ஷாவை மீண்டும் பாமினி சுல்தானக ஆக்கியதிலிருந்து நன்கு புலனாகிறது. அச் செய்கை மற்றைய பாமினி சுல்தான்கள், முகம்மது ஷாவின் மீது பொறுமையும், வெறுப்பும் கொள்வதற்கு வழிவகுத்தது. அதன் மூலம் முகம்மதிய அரசர்களுக்குள்ளே ஒற்றுமையும், அமைதியும் மறைந்து, அவர்களுக்குள் சிறுசிறு பூசல்கள் எழும் என்பது துணிபு. எனவே, தமக்கு விரோதமாயுள்ள பாமினி அரசுகள் ஒன்றோடொன்று பகைமை கொண்டு இருப்பதுதான் சிறந்தது என்று எண்ணியே அச் செய்கையினைக் கிருட்டிண தேவராயர் மேற்கொண்டார்.

பாமினி சுல்தான்களுடன் கிருட்டிண தேவராயர் நடத்திய போரினைப்பற்றி 'ராயவாசகமு' என்ற கட்டுரையில் வந்துள்ள கருத்துத் திரட்டப்பட்டுப் பின்னர்த் தரப்பட்டுள்ளது.

மூன்று முகம்மதிய சுல்தான்களும் பீஜப்பூர் அடில்ஷா, கோல் கொண்டா குதுப்ஷா (Kutb Shah), பீடார் பேரிட்ஷா (Birad Shah) தங்களுடைய படைகளைத் திரட்டிக்கொண்டு கிருஷ்ணு நதியைக் கடந்து தெற்குக் கரையில் முகாமிடலாயினர். அப் படையில் ஓர் இலட்சம் குதிரைகளும், ஓராயிரம் யானைகளும் இருந்தன. கிருட்டிண தேவராயரும் ஒற்றர்கள் மூலம் அவர்களுடைய படை பலத்தையும், அவர்கள் தம் ஆட்சிக்குட்பட்ட இடங்களில் செய்யும் அழிவுகளையும் அறிந்துகொண்டார். கிருஷ்ணு நதிக்குத் தெற்கே அவர்கள் செய்த அக்கிரமங்களை அறிந்து மிகவும் கோபம் கொண்டார். உடனே, அவர் அமரநாயகத் தலைவர்களையும் அவர்களின் முதன்மை அலுவலரான பெம்மசானி ராமலிங்கத்தையும் அழைத்து, என்ன செய்யலாமென ஆலோசனை நடத்தினர். அப்பொழுது பெம்மசானி ராமலிங்கம் அது ஒன்றும் கடினமான காரியமில்லை என்றும், தம்மை ஒரு படையுடன் அனுப்பினல் அவர்கள் முகாமிட்டுள்ள கூடாரங்களின் கயிற்றினைத் துண்டித்து, ஒரு சமிக்ஞை செய்தவுடன் திடீரென எதிரிகளின் படைமீது பாய்ந்து அவர்களைச் சிதறடிக்கலாமென்றார். அதனுடன் குளிர் நாட்டிலிருந்து வந்த முகம்மதியப் படைகள் வெப்பமான கோடையில் தம் படைகளுடன் போரிடல் கடினம் என்றார்.

படைத்தலைவர் பதிலைக் கேட்ட பேரரசர் மகிழ்ந்து, அவரது திட்டத்தை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக வெற்றிலை பாக்கினை அவருக்கு வழங்கினர். ராமலிங்கர் உடனே தம் படைகளிருப்பிடம் வந்து அரசரது கருத்தினை வெளியிட்டார். அவர்களுக்கு அரசரிடம் இதுகாறும் தாம் பெற்றுவந்த நன்மைகளுக்கான நன்றி தெரிவிக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது என்றும், படைவீரர்கள் போரில் தங்கள் பெருமைகளை உயர்த்திக் கொள்ளலாமென்றும் கூறினர். வீரமுள்ளவர்களைத் தம் பின்னேக்கி வரச் சொல்லியும் ஏனையோர்களை அங்கேயே கூடாரத்தில் தங்கியிருக்கும்படியும் உத்தரவிட்டார். வாளேந்திய வீரர்கள் எட்டு ஆயிரம் பேர் அவரைப் பின்தொடர்ந்தனர். போர்க்களத்தைத் திருமண மேடையாக எண்ணிச் சென்றனர். இவர்களைச் சமாளிக்க எதிரிகளிடம் 60 ஆரயிம் வாள் வீரர்களும், அவர்களுக்கு உதவியாக 10 ஆயிரம் குதிரைப் படையும், ஓர் ஆரயிம் யானைப் படையும் தயாராக இருந்தன.

முதலில் எதிரிகளுடைய யானைப் படையையும், குதிரைப் படையையும் வாளினுலும், ஈட்டியினுலும் தாக்கி, ஒரு சில மணி நேரத்துக்குள் எதிரிகளின் 4 ஆயிரம் குதிரைப் படை

களையும் பின்னர் 60 ஆயிரம் வீரர்களில் 4 ஆயிரம் பேரையும் கொன்றனர். இத் தருணத்தில் ராமலிங்கர் கூடாரங்களை அணுகி அவற்றின் கயிறுகளைத் துண்டித்து ஒரு சமிக்ஞையைக் கிருட்டிண தேவராயருக்குக் கொடுத்தார். உடனே அவரே தம்முடைய பட்டத்து யானைமீது ஏறி, தம் படைகளுடன் போர்க் களத்தில் தோன்றினர். அவரது படையில் 120 யானைகளும், 60 ஆயிரம் குதிரைகளும், 5 இலட்சம் வீரர்களும் இருந்தனர். அதே சமயம் கிருஷ்ண நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. முதலில் எதிரியின் யானைப் படையைத் தாக்கியபோது, வெப்ப மான காலமானதால் யானைகள் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் ஆற்றிலிருந்து வீசும் குளிர்காற்றை நோக்கி ஓடலாயின. அவ்வாறு ஓடியவை ஆற்றில் மூழ்கி அடித்துச் செல்லப்பட்டன. எஞ்சியுள்ள படைகளும் வீரர்களும் எதிர்த்து நிற்க முடியாமல் ஆற்றில் இறங்கி நீந்தித் தப்பித்துக்கொள்ள முயன்றனர். அவ்வாறு செல்லும் போது அநேகர் உயிரிழந்தனர்.

ஆற்றின் தென்கரையில் எதிரிப்படைகளில் மூன்றில் ஒரு பங்குதான் எஞ்சியிருந்தது. அவர்கள் யானைகள்மீதும், படகு களின்மீதும் ஏறித் தங்கள் தங்கள் தலைநகரான பீஜப்பூர், கோல் கொண்டா, அகமதுநகர் ஆகிய இடங்களுக்குத் திரும்பிப் பின் வாங்கிச் சென்றனர். கிருட்டிண தேவராயர் ஆற்றங்கரைக்கு வந்து அங்குள்ள தம் படைகளை நோக்கி, தலைவனின்றியிருக்கும் யானைகளையும், குதிரைகளையும் கைப்பற்றுமாறு ஆணையிட்டார். மேலும், அவர்களது கூடாரத்தில் உள்ள பொருள்களையும், முரசங்களையும் கவருமாறு ஏவினர். பின்னர் மாபெரும் சபை ஒன்றைக் கூட்டினர். அச் சபைக்கு அமைச்சர் அப்பாஜி, படைத் தலைவர்கள், அய்யமராசு, கொண்டமராசு, பாச்சராசு, புலவர்கள்' முக்கு திம்மண்ண, அல்லசானி பெத்தண்ண, மாதயகாரி மல்லண்ண ஆகியோர் வந்திருந்தார்கள். அப்போது பேரரசர் தம் வெற்றிபற்றி அவர்களை விவரிக்கச் சொன்னபோது முக்கு திம்மண்ண ஒரு பாடலைப் பாடினர். அதன் கருத்தாவது, "ஓ! கிருட்டிணராயா! உம் பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே முகம்மதிய எதிரிகள் உடைபட்டுப் பறந்து சென்றனர். யானைகள் உம்மிடத்தில், அவைகளின் தலைவனை யானையைக் (கஜேந்திரனை) காத்த விஷ்ணுவாகிய தெய்வத்தினைக் கண்டதால் திரும்பி ஓட்டம் பிடித்தன.' என்பதாம். மழைக் காலத்துக்குப் பின் படை யெடுப்பை வைத்துக்கொள்ளலாம் என அமைச்சர்கள் கூற, அதன் படி கிருட்டிணதேவராயர் படையெடுப்பை நிறுத்திக்கொண்டார்.

(இ) ஒரிஸ்ஸா போர்

கிருட்டிண தேவராயர் விசயநகரப் பேரரசை ஒட்டியுள்ள உதயகிரி, கொண்டவீடு ஆகிய இரு மாநிலங்களை ஏற்கெனவே அவரது முன்னோர்கள் காலத்தில் கஜபதி கவர்ந்துகொண்டுள்ளார் என்பதை அறிந்தார். அவர் மீண்டும் அவற்றைத் தம் ஆட்சியில் சேர்க்க விரதம் பூண்டார். எனவே, ஒரிஸ்ஸா அரசுடன் போரைத் தொடங்கினுர் அவர் ஒரிஸ்ஸாவுடன் நடத்திய போர்கள் ஐந்து நிலைகளில் நடைபெற்றன என்று கூறலாம்.

முதன்முதலாக 1513ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் உதயகிரிக் கோட்டையைப் பெரும் படையுடன் தாக்கினுர். அதை அறிந்த பிரதாபருத்ர கஜபதி தம்முடைய பெரும் படையைக் கொண்டு கிருட்டிண தேவராயர் படையை எதிர்த்தார். என்ருலும், ராயர் ஒரியப் படையைத் தோற்கடித்ததோடு விடாது அவற்றைக் கொண்டவீடு வரையில்விரட்டிஒட்டினுர். இதற்கிடையில் உதயகிரிக் கோட்டையைக் கைப்பற்ற முயற்சி செய்தார். எனினும் அவரால் அக் கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. ஏனென்ருல், அக் கோட்டைக்குச் செல்லும் வழி மிகக் குறுகியதாகவும், ஒருவர் பின் ஒருவர் செல்லும் வழியாகவும் இருந்தது. அதை அறிந்த கிருட்டிண தேவராயர், அக் கோட்டைக்குச் செல்லும் வழியிலுள்ள பாறைகளையும் மற்றத் தடைகளையும் தம் ஆள்களைக் கொண்டு உடைத் தெறிந்தார். அதனுல் பாதை அகலமாக்கப்பட்டு ஆள்கள் கோட்டைக்கு எளிதில் செல்லும்படியாக அமைந்தது. எனவே, அவருடைய பெரும் படை கோட்டையைச் சுற்றி நின்றுகொண்டு காவல் புரிய ஆரம்பித்தது. அதனுடன் சுற்றிலும் ஒரு சுவரையும் எழுப்பிவிட்டது. அதனுல் அக் கோட்டைக்கு உள்ளே இருந்த ஒரியர்கள் வெளித் தொடர்பின்றி நீண்ட காலம் இருக்க முடியாத நிலை ஏற்பட்டதால் கிருட்டிண தேவராயரிடம் சரணடைந்தனர். அதனுல் உதயகிரிக் கோட்டை கிருட்டிண தேவராயர் வசமாயிற்று.

இரண்டாம் நிலையில் உதயகிரிக் கோட்டையை வெற்றி கொண்ட கிருட்டிண தேவராயர் தம் படையினைக் கொண்டவீடு நோக்கிச் செல்ல ஆணையிட்டுவிட்டு விசயநகரம் நோக்கித் திரும்பிவிட்டார். அவரது படைகள் கொண்டவீடு நோக்கிச் செல்லும்போது வழியில் உள்ள கிராமங்களைக் கொளுத்தியும், கிராமப்புறங்களில் கொள்ளையிட்டும் சென்றன. போர்க் கருவி களும், வெடிமருந்துகளும் உள்ள எத்தனையோ முக்கிய இடங்கள் கஜபதியினுடையவை தீக்கிரையாயின. ஆங்காங்கிருந்த வீரர்கள் கிருட்டிண தேவராயர் படைக்கு அஞ்சி ஓட்டம் பிடித் தனர். எனவே, கிருட்டிண தேவராயருடைய படைகள் கந்துகூர்

(Kandukur), அத்தங்கி (Addanki), வினுகொண்டா (Vinukonda), பெல்லம்கொண்டா (Bellamkonda), நாகார்ஜுனகொண்டா (Nagarjunakonda), தாங்கடா (Tanguda), கெத்தவரம் (Ketavaram) முதலிய கோட்டைகளை எளிதிலே ஒன்றன்பின் ஒன்றுகக் கைப்பற்றிக்கொண்டு கொண்டவீடு நோக்கி வந்தன. வழியில் கைப்பற்றிய கோட்டைகளும் அதைச் சார்ந்த நாடு நகரங்களும் கிருட்டிண தேவராயருடைய ஆட்சிக்கு உட்பட்டு வருவதைக் கண்ட படைகள் மிக்க தைரியத்துடன் கொண்டவீடு கோட்டையை முற்றுகையிட்டன. கொண்டவீடு கோட்டையானது மிக உயர்ந்த மலை உச்சியில் சிறந்த போர்த்தளங்களோடு மிக்க வலிவாகக் கட்டப்பட்டிருந்தது. இவ்வாறு இயற்கைத் துணையோடு அமைக்கப்பட்ட அக் கோட்டையை ஓரிஸ்ஸா நாட்டுப் பிரபுக்களும், படைகளும் காவல் புரிந்து வருவதால் *அக் கோட்டையைக் கிருட்டிண தேவராயரின் போர்ப் படைத் தளகர்த்தரான சாளுவ திம்மா மூன்று மாதங்கள் பெரு முயற்சி எடுத்தும் அவரது படையினுல் கைப்பற்ற முடியவில்லை. அதை அறிந்த கிருட்டிண தேவராயர் சிறந்த பயிற்சி பெற்ற படையுடன் கொண்டவீடு கோட்டையை வந்தடைந்தார். கிருட்டிண தேவராயரைக் கண்டவுடன் அவரது படைகள் மிக்க ஆரவாரம் செய்து அம் முற்றுகையில் மிக்க தீவிரமாக ஈடுபட்டன. அவருடைய படைகள் கோட்டையைச் சூழ்ந்துகொண்டு கோட்டைக்குள்ளேயும், வெளியேயும் யாரும் போக முடியாதவாறு தடை செய்துவிட்டன. கிருட்டிண தேவராயர் மரத்தால் பல சப்பரங்களைத் (Platforms) தயார் செய்து அவற்றின் மீது தம் ஆள்களை ஏற்றிக் கோட்டையைக் காக்கும் வீரர்களோடு சரிசமமான உயரத்தில் நின்று போரிடும்படி ஏற்பாடு செய்தார். அவற்றின் துணைகொண்டு கோட்டைக்குள்ளே இருக்கும் படைகளை, அவர் படைகள் சுலபமாகத் தாக்கின. இதற்கிடையில் கோட்டைச் சுவர்களை இடித்து ஒரு சில வீரர்கள் தரைமட்டமாக்கினர். பின்னர், கோட்டைக்குள் கிருட்டிணதேவராயரின் படை வீரர்கள் புகுந்து அக் கோட்டைக்குள்ளிருந்த பல ஒரியா நாட்டுப் பிரபுக்களையும், கஜபதியின் வாரிசான அவரது குமாரன் வீரபத்ரன் என்ற இளவரசனையும், கஜபதியின் பட்டத்து அரசிகளில் ஒருவரையும் சிறை செய்து அவர்களைக் கைதிகளாக விசயநகரத்துக்கு அழைத்துச் சென்றுர்கள். கொண்டவீடு கோட்டை கிருட்டிண தேவராயர் வசமாயிற்று.

மூன்றும் நிலையாகக் கிருட்டிண தேவராயரது படை, கிருஷ்ண நதிக்கரையில் உள்ள விஜயவாடாக் கோட்டையை நோக்கிச் சென்றது. அக் கோட்டையைச் சுற்றி முற்றுகையிடும் சமயத்தில் கிருட்டிண தேவராயர் வந்து அப் படையுடன் கலந்துகொண்டார்.

அவர் வந்து சேர்ந்தவுடன் அப் படையில் வீரவுணர்ச்சி ஏற்பட்டது. அதனால் அக் கோட்டையை மிக்க வேகத்துடன் வீரர்கள் தாக்கினார்கள். கோட்டைக் காவலில் இருந்தவர்கள், எதிரிகளை எதிர்த்து நிற்க முடியாமல் கோட்டைக் கதவுகளின் திறவுகோல்களைக் கிருட்டிண தேவராயர் கையில் ஒப்படைத்து விட்டுப் பணிந்தனர். எனவே, விஜயவாடாக் கோட்டை விசய நகரப் பேரரசில் சேர்ந்தது. அதன் பிறகு விஜயவாடாவுக்கு வடமேற்கே பத்து மைல் தொலைவிலுள்ள கொண்டபல்லிமீது போர்ப் படைகள் திரும்பின. கொண்டபல்லி கிருஷ்ணாநதியின் வடகரையில் உள்ளது. அக் கோட்டையைத் தாக்கக் கிருட்டிண தேவராயர் தம் படையுடன் முயற்சி செய்யும்போது, திடீரெனப் பிரதாப ருத்ர கஜபதி ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு கிருட்டிண தேவராயருடைய படையைத் தாக்கினார். அக் கோட்டைக்குள்ளே இருக்கும் போர்க்கலங்கள் கிருட்டிண தேவ ராயர் கையில் சிக்குமானால், தாம் வெற்றி பெற முடியாது என்றறிந்த கஜபதி, அக் கோட்டையின்மீது அவர்கள் செல்லும் போக்கைத் தடுத்து நிறுத்த முயன்றார். அதை உணர்ந்த கிருட்டிண தேவராயர், தம் படையின் ஒரு பகுதியைக் கோட்டையைச் சூழ்ந்திருக்குமாறு ஆணையிட்டுவிட்டு, எஞ்சியுள்ள பெரும் படையோடு கஜபதியைத் தாக்க ஆரம்பித்தார். அப் போரில் கோட்டைக்கருகில் உள்ள ஒரு சிற்றாற்றைக் கிருட்டிண தேவராயக் கடக்க முயற்சி செய்யும்போது கஜபதி தடுத்துத் தாக்கினார். என்றாலும், கிருட்டிண தேவராயருக்கு முன் எதிர்க்க முடியாமல் கஜபதி தவித்தார். தமக்குத் தோல்வி ஏற்படும் என்பதை உணர்ந்த கஜபதி தம் உயிரைக் காத்துக்கொள்ளும் பொருட்டுத் தலைமறைவாக ஓட்டம் பிடித்தார். கஜபதி தோற்று ஓடியதைக் கண்ட கிருட்டிண தேவராயர், தம் படைகளுள்ள இடம் நோக்கித் திரும்பினார். இரு மாதங்களாக முற்றுகையிட்டபின் கொண்டபல்லிக் கோட்டை கிருட்டிண தேவராயருக்கு அடிபணிந்தது. அதையும் தம் ஆட்சியுடன் சேர்த்துக்கொண்டார்.

பின்னர், கஜபதியின் ஆட்சிக்குட்பட்ட தெலிங்கானாவையும், வேங்கியையும் கைப்பற்றத் திட்டமிட்டார். கஜபதியின் துணை கொண்டு, முகம்மதியரிடமிருந்து தெலிங்கானாவைக் கைப்பற்றிய சீதாபதி என்பவர் அப்பொழுது தெலிங்கானாவை ஆட்சி புரிந்து வந்தார். கிருட்டிண தேவராயர் வாரங்கல் வழியாக மேற்குப் பக்கமாகக் கோதாவரியை அடைந்து, அங்கிருந்து ஆற்றங்கரை யோரமாகவே கிழக்கு நோக்கித் தம் படைகளைச் செலுத்தினார். படைகள் ராஜமந்திரியை நோக்கி வருவதைக் கண்ட கஜபதி, தெலிங்கானாவின் தளபதியாகிய சீதாபதியை விசயநகரப்

படைகளை எதிர்க்குமாறு ஏவிவிட்டார். விசயநகரப் படைகள் இரு மலைகளுக்கிடையில் கடந்து செல்ல வேண்டிய ஓர் இடத்தில் சீதாபதி 60 ஆயிரம் வில் வீரர்களைக் கொண்டு எதிரிகளை மிகக் கடுமையாகத் தாக்குமாறு ஆணையிட்டார். அவருடைய விற் படையினர் அக் கணவாய்க்கு இரு மருங்கிலும் உள்ள பாறைகளின் மீது ஏறி வில்லில் பாணங்களைத் தொடுத்துத் தயாராக நின்றனர். அதை அறிந்த கிருட்டிண தேவராயர் தமது குதிரைப் படைகளை இரு கூறுகப் பிரித்து மலைப்பாறைகளின் மேலுள்ள எதிரிகளைப் பின்புறமிருந்து தாக்குமாறு ஏவினர். சீதாபதியின் வீரர்கள் தங்களுக்குப் பின்புறம் அத்தகைய தாக்குதல்கள் தோன்றும் என்பதை அறியாமல் இருந்ததால், அதனைச் சமாளிக்க முடியாது ஓட்டம் பிடித்தனர். சீதாபதியின் படைகள் குழப்பமடைந்து ஓடுவதைக்கண்ட கிருட்டிண தேவராயர் எஞ்சியுள்ள படைகளைக் கொண்டு எதிரிகளை விரட்டியடித்தார். கடைசியில் எதிரிப் படை வீரர்கள் அருகிலுள்ள ஒரு கோட்டையில் சரணடைந்தனர். பின்னர், 30 ஆயிரம் குதிரைப்படையினரை அக் கணவாயைக் காவல் புரியுமாறு ஆணையிட்டுவிட்டு, ராஜமந்திரி நோக்கிப் புறப் பட்டார். எஞ்சியுள்ள படைகளைக் கொண்டு ராஜமந்திரியை எளிதில் கைப்பற்றினர். பின்னர் வேங்கி முழுமையும் தம் ஆட்சிக் குட்படுத்தி விட்டு 1516-ல் தமது வெற்றிக்கு அறிகுறியாகச் சிம்மா சலத்தில் ஒரு வெற்றித் தூண் நிறுவினர். அங்குள்ள சிம்மாத்ரி நாதரை வழிபட்டு, அங்கு ஒரு படையை நிறுத்திவிட்டுத் தலை நகரம் திரும்பினர்.

கஜபதி பல இடங்களில் போரில் தோற்றும், தம் ஆட்சிக்குட் பட்ட பல நாடுகளை இழந்தும்கூட ராயருடன் உடன்படிக்கை செய்துகொள்ள விரும்பவில்லை. அதனை அறிந்த ராயர் கஜ பதியின் தலைநகரமாகிய கட்டாக்கை நோக்கிப் படையெடுத்தார். அவர் கட்டாக்கைக் கைப்பற்றினர் என்று வரலாற்று அறிஞர்களில் ஒரு சாராரும், இல்லையென்று ஒரு சாராரும் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். அப் படையெடுப்பைப்பற்றி 'ராயவாசகமு' என்ற கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 'கஜபதி யின் படை இதுகாறும் தம்மை எதிர்த்தவர்களுடைய படைகளை விட அதிகமாயிருப்பதை அறிந்துகொண்ட ராயர், அமைச்சர், அப்பாஜியைத் தனியாக என்ன செய்வதெனக் கலந்து ஆலோசிக்க லானர். அமைச்சர், தந்திரத்தின் மூலமன்றிப் போர் மூலம் கஜபதி யைச் சரணடையச் செய்வது கடினம் என்று கூறினர். அதற்கான ஓர் ஏற்பாட்டை இருவரும் செய்தனர். கஜபதிக்கு உறுதுணையாக இருக்கும் 16 பாத்திரர்களுக்கும் (Patras) அப்பாஜி தங்க நாணயங் களும், மதிப்பிடத்தக்க பொருள்களும் அடங்கிய பெட்டிகளையும்,

இரகசியக் கடிதங்களையும் ஒற்றர்கள் மூலம் அனுப்பினர். அக் கடிதங்கள், கிருட்டிண தேவராயருக்கும் அப் பதினறு தலைவர்களுக்கும் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காகவே அனுப்பப்பட்டன. அப் பதினறு பேரும் கஜபதியுடன் ராயர் நடத்தும் போர்களில் கலந்துகொள்ளாமல், கஜபதியைத் தனித்து விட்டு விடவேண்டுமென்பதே அவ் ஒப்பந்தத்தின் கருத்தாகும். எனினும் கஜபதியின் ஒற்றர்கள் ஒரு சில பெட்டிகளைக் கைப்பற்றி அவற்றைக் கஜபதியிடம் ஒப்படைத்தனர். அவர் அக் கடிதங்களிலுள்ள செய்திகளைப் படித்துப்பார்த்தும், பெட்டிகளிலுள்ள விலைமதிப்பற்ற பொருள்களைக் கண்டும், தமக்குப் பாதுகாப்பும், உறுதுணையும் தம் நண்பர்களால் கிடைப்பது அரிது என்று அஞ்சினர். உடனே தம் முகாமை விட்டு யாருக்கும் தெரியாமல் வடதிசை நோக்கிப் பயணமானர்.

மறுநாள் அரசரது சபா மண்டபத்திற்குச் சென்ற பதினறு பாத்திரர்களும், அரசர் ராயருக்குப் பயந்து ஓடிவிட்டார் என்பதையறிந்து தங்கள் தங்கள் கோட்டைகளுக்குத் திரும்பிச் செல்லலாயினர். அதை அறிந்த கிருட்டிண தேவராயர் தம்முடைய படையினை அனுப்பித் தலைநகரையும், அரண்மனையையும் முற்றுகையிடச் செய்தார். பின்னர் ராயர், கஜபதியின் அமைச்சர்களை அழைத்துத் தாம் அந் நாட்டின்மீது படையெடுத்தது வெறும் வெற்றியை நிலைநாட்டவேயன்றி, அதனை நிரந்தரமாகத் தம் ஆட்சிக்குட்படுத்தும் நோக்கத்தோடு அன்று என்று கூறினர். அதனுடன் கஜபதி தம்முடன் உடன்படிக்கை செய்துகொண்டால் அவரது நாட்டை அவருக்கே திருப்பிக் கொடுத்துவிட்டுத் தாம் தம் தலைநகரம் செல்ல விரும்புவதாகவும் கூறினர். ராயரது கருத்தறிந்த அமைச்சர்கள் தம் நாட்டிற்கு வடபால் சென்றுள்ள அரசருக்கு அச் செய்தியைத் தெரிவித்தனர். கஜபதி தம் செயலுக்கு வருந்தித் தலைநகருக்குத் திரும்பி வந்து, அங்குக் கிருட்டிண தேவராயரைச் சந்தித்துத் தம்மை மன்னிக்கும்படி கூறினர். உடனே பதினறு தலைவர்களும் அச் செய்தியைக் கேட்டு அவர்களும் தம் அரசரைப் போலவே கிருட்டிண தேவராயரைப் பணிந்து மன்னிப்புக் கோரினர்கள்.

கஜபதியும் அவரது தலைவர்களும் தம்மிடம் மன்னிப்புக் கோரியதைக் கண்ட கிருட்டிண தேவராயர் மிக்க மகிழ்ச்சியடைந்தார். கஜபதிக்கு அவர் நாட்டைத் திருப்பிக் கொடுத்ததோடு அவர்கள் அனைவருக்கும் பொன்னும் பொருளும் நன்கொடையாக அளித்தார். ராயரது பெருந்தன்மையைக் கண்ட கஜபதி தம் மகள் ஜகன்மோகினியை அவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். தமிழ் நாவலர் சரிதையில் குமார சரஸ்வதி என்பவர்

ஒரிஸ்ஸாக் கஜபதியை ராயர் வெற்றிபெற்று அவரது மகளை மணந்து கொண்ட செய்தி பற்றி ஒரு பாடலைப் பாடியுள்ளார். அது பின் வருமாறு :

'கலிங்க் மிழந்துநுதிக் கைச்சங்கந் தோற்று
மெலிந்துகட கந்நழுவ விட்டாள்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மானகிருட்ண பூபாலா வுன்றனுக்குப்
பின்னிட்ட வொட்டியன்பொற் பெண்'

கஜபதி மேலும் திருமணப் பரிசாக நவரத்தினங்களையும், விலை மதிப்பற்ற ஆபரணங்களையும், யானை, குதிரைகளையும், வாசனைப் பொருள்களையும் அளித்தார். மற்றும் (கிருஷ்ணா நதிக்குத் தெற்கில் தம் ஆட்சிக்குட்பட்ட நாடுகளை மீண்டும் கிருட்டிண தேவராய ருக்குத் தம் மகளின் சீதனமாக அளித்தார்.) திருமணத்திற்குப் பின் கஜபதியின் அமைச்சர்களும், அலுவலர்களும் உடன்வர, கிருட்டிண தேவராயர் தம் நாடுநோக்கிப் பயணமானார். மேலே கொடுத்த 'ராய வாசக'த்தின் குறிப்பின்படி கஜபதியைச் சரணடையச் செய்ய ராயரது சூழ்ச்சி நன்கு புலனாகிறது. ஆனால், நூனிஸ் என்ற அறிஞர், கஜபதியின் குமாரனை வீரபத்திரன், விசய நகரச் சிறைச்சாலையில் தற்கொலை செய்துகொண்டான் என்ற செய்திகேட்டுக்கஜபதிமனமுடைந்து ராயருடன் உடன்படிக்கைக்கு ஒத்துக்கொண்டார் எனக் குறிப்பிடுகின்றார். எவ்வாறோ (கி. பி. 1518-ல் ராயருக்கும் கஜபதிக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி கிருட்டிண தேவராயருக்குக் கஜபதி தம் மகளைத் திருமணம் செய்து கொடுத்தார் என்பதும், போரில் கிருட்டிண தேவ ராயர் கிருஷ்ணா நதிக்கு வடபால் கஜபதி ஆட்சிக்குட்பட்ட நாடு களைத் தாம் வெற்றி பெற்றிருந்தும் அவற்றைக் கஜபதிக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டார் என்பதும் உண்மையென அறிகிறோம்.)

கஜபதியைப் பற்றித் திம்மராசர்

சாளுவ திம்மராசரான அப்பாஜி, ராயரிடம் கஜபதியினுடைய பண்புகளை விளக்கினார். இஸ்லாமியர்களைப் போலக் கஜபதி இருக்க மாட்டார் என்றும், சிறந்த பெருமையுடைய அரசர் என்றும் தெய்வத்தினிடத்தும், பிராமணர்களிடத்தும் அன்புடையவர் என்றும் கூறினார்.

அவருடைய குணத்தை நிரூபிக்கும் ஒரு நிகழ்ச்சியை அப்பாஜி விளக்கினார். ஒரு சமயம் கஜபதியினுடைய விரோதிகள், ஜகன்னாதர் ஆலயத்திலிருந்து வந்த புனித நீரில் (தீர்த்தத்தில்) விஷத்தைக் கலந்து கொடுத்தனர். எப்பொழுதும் உணவுக்கு முன்

ஜகன்னுதர் ஆலயத்திலிருந்து வந்த தீர்த்தத்தை உண்ட பின்னரே கஜபதி உணவு கொள்வது வழக்கம். ஆகவே, விஷம் கலந்த அத் தீர்த்தத்தைப் பருக ஆரம்பித்ததும், அதில் விஷம் கலந்திருக்கிறதென்பதைக் கோவில் குருக்களின் புரட்சியின் மூலம் கஜபதி உணர்ந்து கொண்டார். என்றுலும், தமக்கு மிக்க விருப்ப மான தெய்வமாகிய ஜகன்னுதப் பெருமாளின்மீது கொண்டுள்ள நம்பிக்கையினுல் அத் தீர்த்தத்தைக் கவலையற்றுப் பருகினுர். அப் பெருமாளின் அருளால் நஞ்சு அவருக்கு எத்தகைய கெடுதலே யும் உண்டாக்கவில்லே. ஏனைய உணவுப்பொருள்கள் எவ்வாறு உடலில் செரிக்கப்படுகிறதோ அதைப் போலவே அவ் விடமும் செரித்தது.[1] இவ்வாறு கஜபதியின் கடவுட்பக்தியைத் திம்மராசு வியந்து கூறினுர்.

கிருட்டிண தேவராயர் ஐயமராசுவுடன் இரகசிய ஆலோசனை யில் ஈடுபட்டிருக்கும்போது மாரிச்சிராமையா என்பவர் அரசரை வணங்கிப் பீஜப்பூரிலிருந்து ஒற்றர்கள் வந்து கூறிய செய்திகளைத் தெரிவித்தார்.

பீஜப்பூர் சென்ற ஒற்றர்கள், பீஜப்பூர் நகரத்தையும் அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களையும், கோட்டை கொத்தளங்களையும், யானை குதிரைப் படைகளையும், இராணுவ வீரர்களையும், அமர நாயகர்களையும் மறைமுகமாக அணுகிப் பார்த்தார்கள். தாதிமகால் அரண்மனைக்கு வெளியில் அவர்கள் சென்றதாகவும் அங்கு அமைச்சர்களையும், இராணுவத் தலைவர்களையும், அந்நிய நாட்டு அரச தூதர்களையும் பீஜப்பூர் சுல்தான் ஆலோசனை கேட்டதாகவும் கூறினர்

கிருட்டிண தேவராயர் அரியணையேறியதும் முஸ்லிம்களின் மீது போர்தொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டிருந் தார். தம் கருத்தை விசயநகரத்திலிருந்து வெளிநாடுகளுக்குத் தெரிவிக்கச் செய்தார். சிறப்பாக அசுவபதி, கஜபதி, நரபதி ஆகிய மூவரும் அதனை அறியுமாறு திட்டமிட்டார். அவர்களில் முதல் நிலையில் இருப்பவர் நரபதி ஆவார். மற்ற இருவரும் அவருக்குப் பிற்பட்டவர்கள். கோல்கொண்டா அரசர் அக் கூற்றை மறுத்து மூன்று அரசர்களும் ஒரே சமமாக நினைக்க வேண்டியவர் களே அன்றி அவர்களில் உயர்வு தாழ்வு கற்பிப்பது தவறு என்று கருதினுர்.

சுல்தான் பீஜப்பூர்க் கோட்டையைப் பழுதுபார்த்து ஆங்காங்கே வெடி மருந்துகளையும், ஆயுதங்களையும், கல்லாலான குதிரைகளையும் புலித் தலைகளையும் சுவரின் மீது பொருத்தினுர். அதனுடன் அறுபது

1 Rayavachakam, pp. 81—82

உளவாளிகளை விசயநகருக்கு அனுப்பி அங்குக் கிடைக்கும் செய்திகளை நாள்தோறும் தெரிவிக்குமாறு ஏற்பாடு செய்தார். போர்ச் செய்தி எங்கும் பரவிற்று. எனவே, பொதுமக்கள் உட்பட அனைவரும் பாதுகாப்புத் தேட முற்பட்டனர். அங்குள்ள நிலவரத்தை ஒற்றர்கள் மூலம் ராயர் அறிந்தார். ராயர், அப்பாஜி, ஐயமராசு, கொண்டமராசு ஆகியோர் அச் செய்தியைக் கேட்டபின் ஒற்றர்களுக்கு வேண்டிய வெகுமதிகளைக் கொடுத்துப் பீஜப்பூரில் தங்கும்படியாகவும், கிடைக்கும் செய்திகளை நாள்தோறும் தெரிவிக்கும்படியாகவும் உத்தரவிட்டார்.[1]

(ச) அகமதுநகர், கோல்கொண்டா—போர்

ராயரின் ஒற்றர்களான ரா்மு, கோபோஜி ஆகிய இருவரும் முறையே அகமது நகரிலிருந்தும், கோல்கொண்டாவிலிருந்தும் ராயரைக் காணவந்தனர். அவர்களிடமிருந்து செய்தியை அறியும் ஆவலில் ராயர் தம்முடைய அமைச்சரை உடன் வைத்துக் கொண்டு விசாரித்தார். அவர்கள் பின்வருமாறு கூறினர். ந்அ, நகரங்களுக்குச் செல்பவர் அந்நியராயிருப்பின் எல்லையில் சோதனையிடப்படுவார்கள். எந்த இடத்திலிருந்து வருபவர் என்று விசாரிக்கப்படுவர். அவர்களுடைய மனத்திருப்திக்குட்பட்டவர்களைத்தாம் நாட்டிற்குள் அனுப்புவார்கள். தலைநகருக்கு உள்ளே சென்றபின் கோட்டையைக் காணவேண்டுமென்றால் அந் நகரத்தில் தெரிந்தவர் மூலமே கோட்டைக்குள் செல்ல அனுமதிக்கப்படுவர். அதற்கு அடையாளமாக முத்திரையிட்ட கடிதம் கொடுக்கப்பட்டது. அதைக் காட்டினாலன்றி உள்ளே அனுமதிக்கப்படமாட்டார்கள். எல்லாம் பார்த்துவிட்டுத் திரும்பி வரும்போது முத்திரைக் காகிதத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, அனுமதிச் சீட்டைப் பெற்றுத் திரும்பி வரவேண்டும். அவ்வாறு அனுமதி பெற்றே நாங்கள் உள்ளே சென்றோம். அங்கு முகம்மதியர் கொடுக்கும் கொடூரமான தண்டனையைப் பார்த்தோம். குற்றம் புரிந்தவர்கள் வாளினாலோ, இரம்பத்தினாலோ இருகூறாக வெட்டப்பட்டனர். கோணிப் பையில் அவர்களைக் கட்டி இரும்பு உலக்கையால் அடித்தார்கள். இரு கால்களிலும் இரண்டு துலாம் எடையுள்ள கற்களைக் கட்டி உட்காரவைத்துப் பின் ஒன்றாகச் சேர்த்துக் கட்டி நல்ல வெயிலில் தரையில் உருட்டிவிடுவார்கள். இவ்வாறு பல வகையான கொடூரச் செயல்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. யானையின் கால்களில் கட்டி இழுத்துச் செல்வார்கள். கொடூரச் செயல்களுக்குப் பயந்தவர்கள் அதிகப் பணம் கொடுத்து

1 Rayavachakam, pp. 46—51

உயிர் தப்பலாம். பணம் கொடுக்க முடியாதவர்கள் நடுத்தெரு வில் பலவாறு துன்பப்படுத்தப்பட்டுக் கொல்லப்படுவர் என்று கூறினர்.

இத்தகைய நிலையைப் பார்த்தபின் அரசாங்க அலுவலகம் நோக்கி அவ் வொற்றர்கள் சென்றார்கள். மக்கள் அங்குள்ள அலுவலர்களுக்கு வணக்கம் செலுத்திவிட்டுத் திரும்புகிற வழியில் அவர்களை நிறுத்தி அவரவர் தகுதிகளுக்கேற்ப வெகுமதிகள் தரப் படுவதைக் கண்டனர். நாணயங்களும், பெல்ட்டுகளும், கோட்டு களும், தலைப்பாகைகளும், வெற்றிலைக் கவுளிகளும் கொடுக்கும் வழக்கம் காணப்பட்டது. முதல் தலைவனிடத்தில் இப் பொருள்கள் இருக்கும். அரச தர்பாரைக் காணவரும் அனைவருக்கும் இத்தகைய சலுகைகள் உண்டு[1] என அறிந்து வந்ததாகத் தெரிவித்தனர்.

மேலும், வெளி ஒற்றர்களிடமிருந்து வந்த கடிதங்களை ஆய்ந்த தில் அமைச்சர்கள் உட்படப் போரில் ஈடுபட முடிவெடுத்தனர். ராயர் மூன்று இலட்சம் குதிரைப் படைகளையும், ஆயிரம் யானைப் படைகளையும், போதிய காலாட் படையையும் கொண்ட ஒரு பெரும் படையைத் திரட்டிப் பீஜப்பூர், கோல்கொண்டா, அகமதுநகர் ஆகிய நகரங்களின்மீது படையெடுக்கத் திட்டமிட்டார்.

இதற்கிடையில் அகமது நகர், கோல்கொண்டா அரசர்கள் 120 ஒற்றர்களைப் பல்வேறு வேடம் தாங்கி விசயநகரம் செல்லுமாறு அனுப்பினர். அவர்கள் பிராமணச் சோதிடர்களையும், இஸ்லாமியப் பக்கிரிகளையும் வரவழைத்துக் கிருட்டிண தேவராயர் முகம்மதியர் களோடு போரிட்டால் யாருக்கு வெற்றி கிடைக்கும் என முன் கூட்டிக் கூறுமாறு கேட்டனர். அதற்கு அவர்கள் 'நாங்கள் ஆய்ந்து பார்த்ததில் கர்நாடகத்தில் இறைவன் அம்சமாக ஓர் அரசர் தோன்றுவார். அவர் முகம்மதிய அரசர்களையும், அஸ்வபதி, கஜபதி போன்ற அரசர்களையும் அடிபணிய வைப்பார். வெற்றி பெற்றுத் திரும்புங்கால் கல்யாண வெங்கடேசுவரரை வழிபடுவ தோடு, 108 திருப்பதிகளையும், 72 கோயில்களையும், 18 சக்திகளையும் வழிபட்டுச் செல்வார். சேதுவில் (ராமேஸ்வரம்) உள்ள ராமநாத ஸ்வாமிக்குத் தம் மரியாதைகளைச் செலுத்துவதோடு தனுஷ்கோடி சமுத்திரத்தில் தம்முடைய போர்வாளின் இரத்தக் கறையைக் கழுவுவார். மிகப் பெரிய பேரரசராக யாதோர் எதிர்ப்புமின்றி இருபத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி புரிவார்'[2] என்றனர்.

1 Rayavachakam, pp. 55—6

2 Rayavachakam, pp. 56—60

ராயர் விசயநகரத்தில் தம் மந்திரி சபையைக் கூட்டி அவர் களை நோக்கி 'நீங்கள் பீஜப்பூர், அகமது நகரம், கோல்கொண்டா ஆகிய இடங்களிலிருந்து வந்த செய்தியினை அறிவீர்கள். அவர்கள் போர் ஆயத்தம் செய்வதற்கான ஆர்வத்திற்குக் காரணம் யாது?' என வினவினர். அதற்கு அவர்கள், 'தாங்கள் அம் மூன்று அரசு களுடனும் நட்பு முறையில் அணுக விரும்புகிறீர்கள். அதனால் அவர்கள் அனுப்பிய அரசாங்கத் தூதர்களும் நீண்ட காலமாகக் கர்நாடகத்தில் தங்கியுள்ளார்கள். அவர்கள் நம் அரசின் நிர்வாக முறையை நன்கு அறிந்திருப்பார்கள். ஆகவே, அவர்கள், தக்க யோசனையுடனும் முறையுடனும்தான் ஓலையை விடுத்திருப்பார்கள் என நம்புகிறோம்' எனக் கூறினர்.

உடனே ராயர் 'நாம் எப்பொழுதும் அத் தூதுவர்களைக் கோபத் துடனோ, மரியாதைக் குறைவாகவோ பேசியது கிடையாது. ஏற்ற வெகுமதிகள் தந்து அத் தூதுவர்களுக்குத் தகுந்த மரியாதை கொடுத்து இனிய முறையில் உரையாடினோம். அவ்வாறு இருந்தும் அவர்கள் ஏன் நம் மீது ஐயம் கொள்கின்றனர்' என்றார்.

அதற்கு ஐயமராசா, 'தாங்கள் எத்தகைய இனிய முறையில் அவர்களுடன் உரையாடினாலும் அவர்கள் அதனை உண்மையான தன்று; அரச தந்திரம் என்றே கருதுகின்றனர். அது அவர்களுக்கு இயற்கை' என்றார்.

கடைசியாக, அரசர், 'எதிர்காலத்தில் நாம் நினைத்தபடி போருக்குச் சாதகமாக அமையும் சூழ்நிலைதான் உள்ளது' எனக் கூறித் திம்மராசு முதல் ஏனைய அமைச்சர்களை அனுப்பிவிட்டார்.[1]

பிறிதொருநாள், ஏனைய சபை உறுப்பினர்களை அழைத்து ராயர் போர் தொடங்குவது பற்றிக் கேட்டபோது அவர்கள், 'நாம் நம்முடைய தைரியத்தினாலும், வீரத்தினாலும், லட்சுமியின் கருணை யாலும், இறைவனது ஆசியாலும் வெற்றி பெறுவது நிச்சயம். ஏனெனில், எங்கெங்குத் தைரியம் தோன்றுகிறதோ அங்கெல்லாம் லட்சுமி விளங்குகிறாள். எங்கெங்கு லட்சுமி இருக்கின்றாளோ அங் கெல்லாம் அரி விளங்குகிறார். எங்கெல்லாம் அரி இருக்கின்றாரோ அங்கெல்லாம் தர்மம் விளங்கும். எங்கெல்லாம் தர்மம் இருக் கின்றதோ அங்கெல்லாம் வெற்றி விளங்கும் என்ற பெரியோர் வாக்கு தங்களுக்குத் தெரியாததா. தாங்களோ தைரியத்தின் இருப்பிடம். எனவே, தாங்கள் எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அதில் வெற்றி கிடைப்பது நிச்சயம். யானைப் படையோ, குதிரைப் படையோ காலாட்படையோயல்ல, தங்கள் வெற்றிக்குக் காரணமாக

1 Rayavachakam, pp. 61—64.

அமைவது. அதைவிட இறைவனது அருளே தங்கள் வெற்றிக்கு உறுதுணையாக வருவது' என்றனர். அதனைக் கேட்ட ராயர், அப்பாஜியை அழைத்து எதிர்கால வெற்றி பெறப் போருக்கு ஆயத்தமாகுமாறு ஆணையிட்டார்.[1]

மேலும் ராயர், அமர நாயகர்களை அழைத்து அவர்களுடன் ஆலோசனை நடத்தினர். அவ் வாலோசனையில் அய்யன மாலகா அங்குசா கான், ராஜு ஜெகதேவ், திம்மப்ப நாயகா, ராச்சூரி ராமிநாயுடு, பெம்மசானி ராமலிங்க நாயுடு, ஹண்டே மல்லாராவ், போயி ராமப்பா போன்ற அமர நாயகர்கள் கலந்துகொண்டனர். அதனுடன் 18 கம்பணங்களின் தலைவர்களான பொம்மிரெட்டி, நாகரெட்டி போன்ற ரெட்டித் தலைவர்களும், அம்ம நாயசர் களான வித்தலப்ப நாயுடு போன்றோரும், மருமகன்மார்களும், குமாரர்களும், அரசாங்க அலுவலர்களும் அவ் வாலோசனை சபைக்கு வந்திருந்தனர்.

அவர்கள் வந்தவுடன் ராயர் அவர்களது நலன்களை முதன் முதல் விசாரித்தார். பின், அவர்கள் ஒவ்வொருவரிடமும் உள்ள யானைப்படை, குதிரைப் படை, காலாட் படைகளின் எண்ணிக் கையைக் கேட்டறிந்தார். அவர்கள் முன்னைவிட அதிக எண்ணிக் கையில் படைகளைத் தாங்கள் திரட்டி வைத்திருப்பதாகவும், ராயரின் உப்பைத் தின்று வளர்ந்து வரும் அப் படைகள் எந்த நேரத்தில், அவர் உத்தரவு இட்டாலும். அதே சமயம் அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றனர் என்றும் கூறினர்கள். அவர்கள் பதிலைக் கேட்ட அரசர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.[2]

(உ) பீஜப்பூர் அரசுடன் போர்.

கி பி. 1512-ல் கிருட்டிண தேவராயர் ரெய்ச்சூர்க் கோட்டை யைக் கைப்பற்றினர் என ஏற்கெனவே குறிப்பிட்டோம். அச் சமயம் சிறுவனயிருந்த இஸ்மாயில் அடில்கான் என்பவர், தாம் பட்டத்திற்கு வந்ததும் ரெய்ச்சூரை மீட்டுக்கொள்ள வேண்டு மென்று எண்ணினர். கிருட்டிணதேவராயர் ஒரிஸ்ஸாப் போரில் ஈடுபட்டிருப்பதையறிந்து, அதுவே தக்க சமயம் எனக் கருதி, கிருஷ்ணு-துங்கபத்திரா தோவாப்பின் மீது படையெடுத்து ரெய்ச் சூரைக் கைப்பற்றினர். கி.பி. 1520-ல் சாளுவ திம்மாவின் தலைமையில் ஒரு பெரும்படை ரெய்ச்சூரைத் தாக்கியது. ரெய்ச் சூருக்கு அருகில் உள்ள கோபூரில் (Gobur) பெரும் போர் நடந்தது.

1 Rayavachakam, pp. 51—54

2 Rayavachakam, pp.64—65.

இரு படைகளும் மிக வேகத்தோடு போரிட்டதால் பீஜப்பூர்ப் படைகளில் பலர் மாண்டனர். கிருஷ்ணா நதியை நீந்தித் தப்பிக்க முயன்ற சிலர் நீரில் மூழ்கி மாண்டனர். ராயரின் பெரும் படை பீஜப்பூர்ப் படைகளைத் தோற்கடித்து ரெய்ச்சூரைக் கைப்பற்ற முனைந்தது. இஸ்மாயில் அடில்கான் போர்க்களத்தை விட்டு ஓட்டம் பிடித்தார். விசயநகரப் படைகள், பீஜப்பூர்ப் படைகள் விட்டுச்சென்ற போர்க்கருவிகளைக் கவர்ந்துகொண்டன.

அடில்கான் ஓடியதோடு பீஜப்பூர்ப் போர் நின்றுவிடவில்லை. ஏனெனில் ரெய்ச்சூர்க் கோட்டையைப் பாதுகாத்து வந்த படைகள் ராயரது படைகளுக்குப் பணியவில்லை. அதனை அறிந்த ராயர் போர்த்துகீசிய வீரர்களின் துணைகொண்டு ரெய்ச்சூர்க் கோட்டையின் வெளிப்புறக் காவலைத் தகர்த்தெறிந்தார். ரெய்ச்சூர் மக்கள் கோட்டைக்குள் செல்ல முயற்சி செய்யும்போது அக் கோட்டையின் தலைவர் மக்களை அமைதியாய் இருக்கும்படி கூற வெளியே வந்த நேரத்தில், தம் எதிரிகள் கோட்டையின் வெளிப் புறத்தில் சுவர்களை உடைப்பதைக் கண்டார். அதனைப் பார்வையிடத் திரும்பியபோது அவர் சுடப்பட்டு மாண்டார். அக் கோட்டைத் தலைவன் சுட்டு வீழ்த்தப்படவே எஞ்சியுள்ள வீரர்கள் செய்வதறியாது திகைத்து, கிருட்டிணதேவராயரிடம் சரண் புகுந்தனர். ரெய்ச்சூர்க்கோட்டை தம் வசமானதால் மிக்க வெற்றிப் பெருமிதத்தோடு ராயர் விசயநகரம் திரும்பினார்.

கிருட்டிணதேவராயர் தம் சபையில் வீற்றிருக்கும்போது, அடில்கானின் தூதுவன் என்று சொல்லி ஒரு வீரன் வந்து வணங்கினான். அவன் ரெய்ச்சூர்க் கோட்டையைக் கைப்பற்றியது முறையற்றது என்றும் அக் கோட்டையைத் திருப்பித் தமது தலைவரான அடில்கானிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் கூறினான். உடனே கிருட்டிணதேவராயர் அடில்கானின் வேண்டுகோளை ஒரு நிபந்தனையின் பேரில் ஏற்றுக்கொள்வதாகப் பதிலளித்தார். அந்த நிபந்தனையாவது, அடில்கான் ராயருடைய பாதங்களை வணங்கி முத்தமிடவேண்டுமென்பதாகும். அச் செய்தியை அறிந்த அடில்கான் அதற்குச் சம்மதிப்பதாகக் கூறி இரண்டு அரசுகளின் எல்லையிலுள்ள முட்கல் என்னுமிடத்தில் அவ் விழாவை நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். அதன்படியே ராயர் தம் படைகளுடன் முட்கல்லை அடைந்தார். ஆனால், அடில்கான் அங்குக் காணப்படவில்லை. அடில்கானின் சூழ்ச்சியை அறிந்த கிருட்டிணதேவராயர் கோபங்கொண்டு தம் எல்லையைக் கடந்து பீஜப்பூரை நோக்கிப் பெரும் படையுடன் புறப்பட்டார். ஒற்றர்கள் மூலம்

ராயரின் கோபத்தை அறிந்த அடில்கான் தலைநகரத்தை விட்டு ஓட்டம் பிடித்தார். ராயர் எத்தகைய எதிர்ப்புமின்றிப் பீஜப்பூரில் புகுந்து அதன் தலைநகரைத் தம் வசப்படுத்திக் கொண்டு பல நாள்கள் தங்கியிருந்தார். ராயருக்குப் பீஜப்பூரை அழிக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லாவிட்டாலும், அந் நகரம் அவரது படைகளால் அழிக்கப்பட்டுவிட்டது. பீஜப்பூர் மக்கள், ராயர் படைகளின் தொல்லையைத் தாங்கமாட்டாமல் அந் நகருக்குத் தண்ணீர் வழங்கும் இரு நீர்நிலைகளை வறட்சியுறச் செய்தனர். அதனால் நகரில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டது. அப் பஞ்சமே ராயர் தம் நாடு திரும்புவதற்கு வழிவகுத்தது.

மீண்டும் அடில்கான் ராயருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்புவதாகப் பெல்காம் தலைவனை ஆசாத்கானை அனுப்பினான். ராயரைக் கண்டு ஆசாத்கான், முட்கலில் அடில்கான் அவரைச் சந்திக்க முடியாதவாறு செய்தது சலபத்கான் என்று கூறினர். ஆசாத்கான் தமக்குப் போட்டியாக இருக்கும் சலபத்கானை ராயரைக் கொண்டு ஒழித்துக்கட்ட விரும்பியதால் முட்கல் நிகழ்ச்சிக்கு அவனே காரணம் என்று கூறினர். அவரது பேச்சினை நம்பிய ராயர் சலபத்கானுக்கு மரணதண்டனை விதித்தார். சலபத்கான் கொலையுண்டதும் தன்னுடைய சூழ்ச்சி வெளிப்பட்டுவிடும் என்ற பயத்தினுல் ஆசாத்கான் யாரும் அறியாவண்ணம் ஓடிவிட்டான். அடில்கானின் தூதுவனது செயலைக் கண்டு வெகுண்ட ராயர் மீண்டும் பீஜப்பூர் நோக்கிப் பெரும் படையை அனுப்பினர். பீஜப்பூருக்குச் செல்லும் வழியிலுள்ள கிராமப்புறங்களைக் கொள்ளையடித்தும், கொளுத்தியும் படைகள் பாழாக்கின. ராயர் ஃபிருசாபாத் (Firusabad), ஹசானுபாத் (Hasanabad) ஆகிய இடங்களைக் கைப்பற்றினர். பின்னர், சாகர் நகரத்தை நோக்கிப் படைகள் செல்லும்போது பீஜப்பூரின் பெரும்படை ஒன்று அவர்கள் போக்கைத் தடுத்து நிறுத்தியது. இரு படைகளுக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. முடிவில் பீஜப்பூர்ப் படை தோற்றது.மேலும் ஷோராப்பூர், கெம்பா ஆகிய இரு இடங்களிலும் போர்கள் நடைபெற்றன. கடைசியாக, கிருட்டிணதேவராயர் பாமினி சுல்தான்களின் பழைய தலைநகரமான குல்பர்க்காவை முற்றுகையிட்டார். எதிரிகளின் படைகள் மீண்டும் ஒரு முறை ராயர் படைகளுடன் போரிட்டன. என்றுலும் ராயரது படைகள் குல்பர்க்கா நகரைக் கைப்பற்றி வெற்றிபெற்றன. அப் போர் பற்றி நூனிஸ் தம்முடைய குறிப்பில் ராயரின் படை குல்பர்க்காவை அழித்து அதன் கோட்டை, கொத்தளங்களைத் தரைமட்டமாக்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்மாயில் அடில்காேடு நடத்திய போர்கள் முடிவுற்றன. பாமினி அரசர்களுக்கு ஒரு நல்ல பாடத்தைக் கற்பித்ததாக எண்ணிக்கொண்டு தம் அமைச்சர்களின் ஆலோசனைப்படி ராயர் தம் தலைநகரம் திரும்பினர். அவ்வாறு திரும்புவதற்கு முன் பாமினி சுல்தானின் பழைய அரியணையில், 2ஆம் சுல்தான் முகம்மது ஷாவின் மூன்று குமாரர்களுள் மூத்தவனை அமர்த்தி முடிசூட்டினர். மற்றைய இருவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு விசயநகரம் வந்து சேர்ந்தார். அவர்களைத் தம் பாதுகாப்பில் வைத்துக்கொண்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஐயாயிரம் பொன் நாணயங்களை உபககாரச் சம்பளமாக ஆண்டு தோறும் வழங்குமாறு ஏற்பாடு செய்தார். அது முதல் பாமினி சுல்தான்கள் ஆட்சிக்கு அரசர்களை நியமிக்கும் பொறுப்பினை ராயர் தம்மிடத்தில் வைத்துக்கொண்டார். பட்டத்திலுள்ள மூத்தவனுக்கு அடில்கான் மூலம் ஏதேனும் ஆபத்து விளையுமானல், தம்மிடமுள்ள இரு சகோதரர்களில் ஒருவரைத் தாமே அப் பதவியில் நியமித்துப் பாமினி அரசர்களைத் தமக்குக் கீழ்ப் படியுமாறு வைத்துக் கொள்ளலாம் என்று ராயர் திட்டமிட்டார். இதன் மூலம் ராயர் ஒரு சிறந்த ராஜ தந்திரி என்பது புலனுகிறது.

ரெய்ச்சூர்ப் போரைக் குறிப்பிடும் உள்நாட்டுச் சான்றுகள் அதிகமாக இல்லை. ஒரே ஒரு கல்வெட்டில் ஆபத் சகாயம் என்ற அந்தணர் ராயருக்கு உதவியாக ரெய்ச்சூர், பீஜப்பூர்ப் போர்களில் பணியாற்றினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ரெய்ச்சூர் வெற்றி மிகவும் சிறப்பு வாய்ந்தது என்பதில் ஐயமில்லை. அதனல் சாளுவ நரசிம்மரின் பேரவா கிருட்டிண தேவராயரால் நிறைவேற்றப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. விசயநகரப் பேரரசின் பரப்பு, பதினைந்தாம் நூற்ருண்டின் முற்பகுதியில் இருந்த அளவு பெருகிவிட்டது. ரெய்ச்சூர்ப் போரினல் ஏற்பட்ட விசயநகர அரசின் பெருமித நிலை பின்னல் தலைக்கோட்டைப் போருக்கு ஒரு காரணமாயிற்று என்று அறிஞர் சீவெல் மிகைப்படுத்திக் கூறுகின்ருர்.

(iv) இளைய சாளுவதிம்மரின் புரட்சி

வெளிநாட்டுப் போர்களை முடித்த ராயர் உள்நாட்டில் அமைதியாக ஆட்சி புரியலாமென நினைத்தார். அதற்குள் அவரது ஆட்சிக்குட்பட்ட கீழை மாநிலங்களில் புரட்சி ஒன்று எழலாயிற்று. கிருட்டிண தேவராயருக்கு நீண்ட காலமாகப் புத்திரப்பேறு இல்லை. கடைசியாகக் கி. பி. 1518-19-ல் அவருடைய முதல் பட்டத்தரசியான திருமலாதேவி, ஓர் ஆண்குழந்தையைப்

ஈன்ருள். அக் குழந்தைக்குத் திருமலை தேவமகாராயன் என்று பெயர் சூட்டினர். தமக்குப் பின்னல் அரியணையேற வேண்டிய அச் சிறுவனை இளவரசனுக்கி அரசாட்சியை நடத்துமாறு ராயர் செய்தார். 8 மாத காலம் பதவியிலிருந்த இளவரசன் நோய்வாய்ப் பட்டு இறந்தான். தம் மகன் அவ்வாறு இறந்ததற்குக் காரணம் தம் அமைச்சர் சாளுவ திம்மராசனின் குமாரனை திம்மா தண்ட நாயகன் என ராயர் சந்தேகம் கொண்டார். தம் மகனுக்கு அவன் நஞ்சு கொடுத்துக் கொன்றதாக நம்பினர். தமக்குக் கிடைத்த அச் செய்தி உண்மையென எண்ணிக் கோபம் கொண்டு அமைச்சர் திம்மராசரையும், அவரது குமாரர்களான திம்மா தண்ட நாயகனையும், அவனது தம்பியான சாளுவ குண்டராஜனையும் சிறை செய்தார். அவர்களை மூன்று ஆண்டுகள் சிறைக் கூடத்தில் அடைத்து வைத்தார். மூன்ருவது ஆண்டின் முடிவில் திம்மா தண்டநாயகன் சிறையிலிருந்து தப்பிச் சென்று, கொண்ட வீட்டிலுள்ள தமது ஒன்றுவிட்ட சகோதர்களான அப்பா, கோபா என்ற இரு தலைவர்களைச் சந்தித்தார். அவர்கள் துணைகொண்டு ஒரு புரட்சியை ஏற்படுத்தினர். அதனை அடக்க ராயரால் எளிதில் முடியவில்லை. அவரது படைகள் பின்வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. கடைசியாக ராயர் தமது அமைச்சர்களில் ஒருவரான ராயசம் ஐயப்பராசரை, ஒரு பெரும் படையுடன் அனுப்பினர். ஐயப்பராசா திம்மா தண்டநாயகனைத் தோற் கடித்து அவரைச் சிறை செய்து விசயநகரத்திற்கு அரசியல் கைதியாக அழைத்துச் சென்ருர். கிருட்டிணதேவராயர் சாளுவ திம்மரையும் அவரது குமாரனை திம்மா தண்டநாயகரையும் குருடாக்குமாறு ஆணையிட்டார். அவர் ஆணையின்படி அவ் விரு வரது கண்களும் பிடுங்கப்பட்டன. அவர்களுள் திம்மாதண்ட நாயகர் இறந்தார். சாளுவதிம்மரும், அவரது இளைய குமாரனும் சிறையில் கைதிகளாய்க் காலம் கழித்து வந்தனர்.

(v) போர்ச்சுகீசியருடன் தொடர்பு

கிருட்டிணதேவராயர் போர்ச்சுகீசியருடன் நட்புறவு கொண் டிருந்தார். அவர்கள் தொடர்பினல் தம் படைக்கு வேண்டிய சிறந்த குதிரைகளை மிக்க எளிதில் அவரால் பெறமுடிந்தது. அங்கு வாங்கிய குதிரைப் படையினுடைய பெரும்பலத்தினல் தான் ராயரால் பாமினி சுல்தான்களை எதிர்க்க முடிந்தது. போர்ச்சுகீசியர்கள், அராபிய பாரசீக வியாபாரிகளைத் தோற்கடித் ததன் மூலம் வியாபாரத்தில் ஏகபோக உரிமையைப் பெற்ருர்கள். அதனல் ராயரது வேண்டுகோளின்படி வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட சிறந்த குதிரைகளை அவருக்கே விற்று

வந்தனர். போர்ச்சுகீசியர்களுக்கு, ராயரது நட்பு அவர் ஆட்சிக்குட்பட்ட பல நகரங்களில் வியாபாரம் செய்ய உதவியது. அதனால் போர்ச்சுகீசிய வியாபாரிகளும், பிரயாணிகளும் ராயரின் தலைநகரத்தில் தங்கி அவரது உதவிகளைப் பெற்று முன்னேற்றமடைந்தனர். ராயர் பல சலுகைகளை அவர்களுக்குக் கொடுத்தாலுங்கூட அரசியல் நிலையில் அவர்களோடு கூட்டுறவு அமைத்துக் கொள்ளவில்லை. போர்ச்சுகீசிய இந்தியாவின் கவர்னரான (ஆளுநரான) ஆல்புகற்குக்குக் கோவா கிடைத்தது குறித்து ராயர் பாராட்டுதலைத் தெரிவித்தார். அதே நேரத்தில் கள்ளிக்கோட்டைச் சாமரினுக்குப் பகையாகப் போர்ச்சுகீசியர், ராயரது கூட்டுறவை நாடினர். அவர் தம்முடன் கூட்டுறவு கொண்டால் அராபிய-பாரசீகக் குதிரைகளை வாங்கிக் கொள்ளும் தனி உரிமையை அளிப்பதாகக் கூறினர். ஆனால், ராயர் அதற்கு யாதும் பதில் கூறவில்லை. ஏனெனில், தமக்குத் தீமை செய்யாத கள்ளிக்கோட்டையிலுள்ள இந்து அரசனுக்குப் பகையாக யாருடனும் கூட்டுறவு கொள்ள அவர் விரும்பவில்லை. கி. பி. 1523-ல் போர்ச்சுகீசியர் கோவாவுக்கு அருகிலுள்ள இடத்தைக் கைப்பற்றிய போது ராயர் ஒரு சிறிய படையைச் சாளுவ திம்மரின் தலைமையில் அனுப்பினர். போர்ச்சுகீசிய வீரர்கள் ராயரின் படையை எளிதில் தோற்கடித்தனர். சாளுவ திம்மர் தம் படையுடன் பின்வாங்கினர். அதற்குப் பின் போர்ச்சுகீசியருடன் எத்தகைய போரையும் நடத்தவில்லை. போருக்குப் பின் அந் நிகழ்ச்சியை மறந்துவிட்டுப் போர்ச்சுகீசியரும், ராயரும் பழையபடியே நட்புக் கொண்டனர். கிருட்டிணதேவராயர் ஆட்சிக் காலம் முழுவதிலும் விசயநகரப் பேரரசில், போர்ச்சுகீசியர் மிக்க உரிமையுடன் வாணிகம் நடத்தி வந்தனர். அவர்களுடைய வாணிக முன்னேற்றத்திற்குப் பேரரசின் செழிப்பு மிகவும் உதவியாயிருந்தது.

(vi) ராயரின் கடைசிக்காலம்

கிருட்டிண தேவராயர் தம் ஆறு வயது மகனுக்காக அரசைத் துறந்து, தம் மகனுக்கு முடி சூட்டியதாக நூனிஸ் குறிப்பிடுகின்றார். ராயரின் மகன் நோய்வாய்ப்பட்டு ஒரு சில மாதங்களுக்குள் இறந்ததாகவும், அதன் பிறகு கி. பி. 1530 வரை ராயர் தொடர்ந்து ஆட்சி நடத்தியதாகவும், கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. ஆகவே நூனிஸ், ராயர் தம் மகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டியதையே முடிசூட்டியதாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

அவர் தமக்குப் பின்னல் அரசுக்குப் பொருத்தமானவர் யாரெனத் தேர்ந்தெடுக்க விரும்பினர். அவரது மகனோ அவர் மூத்த சகோதரர் வீரசிம்மரின் மகனோ அரியணைக்குப்

பொருத்தமற்றவர் எனக் கருதினர். தமது சிற்றன்னையான ஒப மாம்பாவின் குமாரர்களான ரங்கராயர், அச்சுதராயரைப் பற்ற நினைத்தார். ரங்கராயர், சதாசிவராயர் என்ற மகனைப் பெற்றெடுத்துப் பின் இறந்துபட்டதால் அவரது அடுத்த சகோதர னை அச்சுதராயனுக்கே முடிசூட்ட வேண்டுமெனக் கருதினர். சந்திரகிரிக் கோட்டைக்குள் பாதுகாப்பிலிருந்த அச்சுதராயரை விடுதலை செய்து அவரையே தமக்குப் பின் அரசராகும்படி ஏற்பாடு செய்தார். கி.பி. 1259-ல் ராயர் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். பின்னர் அவர் கொஞ்ச காலம் கழித்துக் கி.பி. 1530 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் காலமானர். அவரது பேரரசில் குடிமக்கள் அவரது மறைவு குறித்துக் கண்ணீர் உகுத்தனர்.

அவர் இறந்த செய்தி கேட்ட அவரது அவைக்களப் புலவர் அல்லசானி பெத்தண்ணு நான்கு பாடல்களில் ராயருடைய பெருமையை எண்ணிப்பார்த்து, வருந்திப் பின்வரும் கருத்துகளைக் கூறுகின்ருர். வள்ளலாக இருந்த அப் பேரரசர் இறந்த பின்னர் தாம் உயிரோடு இருப்பதற்குத் தம்மையே வெறுத்துப் பேசுகின்ருர். கிருட்டிணதேவராயர் இறப்பதற்கு முன் அரண்மனைக்கு வெளியில் எங்கேயாவது பெத்தண்ணுவைச் சந்திப்பாராயின் தம்முடைய பட்டத்து யானையை நிறுத்தி அப் புலவருக்கு அவர் அருகில் உட்கார இடமளித்தார். மேலும், அவர் எழுதிய 'மனு சரித்திரம்' என்ற நூலைப் பேரரசரிடம் அளித்தபோது, அப் புலவரை ஊர்வலமாகத் தலைநகரத்தைச் சுற்றி அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார். பெத்தண்ணுவைப் பாராட்டி எல்லாப் புலவர்களுக்கும் அவர் மேலானவர் எனப் பட்டம் சூட்டி அவருக்குக் 'கோகடமு' என்ற ஊரை மான்யமாக வழங்கினர். மற்றைய பாடல்களில் ஒரிஸ்ஸா நாட்டுக் கஜபதி போருக்கு வருவதை அறிந்து ராயர் உயிருடன் இருந்தால் அத்தகைய மனேதிடம் கஜபதிக்கு வந்திருக்கக்கூடுமா என்றும், ராயர் கஜபதியை முன்பு வென்றதைப் பற்றியும் கஜபதிக்கு அறிவுறுத்துவதாக எழுதியுள்ளார். இவ்வாறு பலர் ராயர் இறந்த நிலைக்குப் பெரிதும் வருந்தினர்.

4. கிருட்டிணதேவராயர்

(i) சிறந்த போர்வீரர், தானைத்தலைவர்

ராயர் சிறந்த போர்வீரரும் தானைத்தலைவருமாவார். போர்க்களங்களில் தம் படைகளுக்கு முன்னர், தாமே தலைமை தாங்கி நடத்துவதில் விருப்பம் உள்ளவர். படைகளின் முன்னே நின்று எதிரிகளுடன் நேருக்குநேர் போர் செய்வார். அதனால் அவருடைய நண்பர்களும், விரோதிகளும் ஒருமுகமாக அவரைப் பாராட்டுவார்கள். மிக்க மோசமான சூழ்நிலையில் கூடச் சிறந்த நுட்பமான அறிவுடைய தலைவரானதனால் பக்குவமாக அச்சூழ்நிலையைச் சமாளித்து வெற்றிபெறுவது அவருக்கு வழக்கம். அவர் ஆட்சி செய்த காலத்தில் தோல்வி என்பதை அறிந்ததே கிடையாது. அவருடைய படைவீரர்கள், அவரே தலைமையேற்று நடத்துவதைக் கண்டு மிக்க பயபக்தியும் உற்சாகமும் கொண்டு சரியான வீரத்துடன் போர்புரிவர். அதனால் வெற்றிக்குமேல் வெற்றி பெற்றுக கட்டாக், பீஹார், குல்பர்க்கா, பீஜப்பூர் ஆகிய இடங்களில் தங்கள் பெருமைகளை நிலைநாட்டியுள்ளனர். அவர் வெற்றி பெறுவதற்குக் காரணம், அவர் படைகளை அணிவகுத்து ஒழுங்குபெற நிறுத்துவதும மற்றும் மிக்க திறமையோடு அவற்றை இயக்கிச் செல்வதுமாகும். படைகளை அணிவகுத்துச் செல்லுங்கால் இடையில் எழக்கூடிய இடர்ப்பாடுகளைத் தம்முடைய சமயோசித புத்தியினால் வென்றுவிடுவார். உதயகிரிக் கோட்டையை அடைய அவரது போர் வீரர்களுக்குப் பாறைகளை உடைத்துப் பாதையை அமைத்ததும், கொண்டவீடு கோட்டையைக் கைப்பற்ற உயர்ந்த மரத்தாலான மேடைகளைத் தயாரித்து எதிரிகளுக்குச் சம உயரத்தில் நின்று வீரர்கள் போரிட வசதி செய்ததும், ரெய்ச்சூர்ப் போரில் புறமுதுகு காட்டிய அவரது போர் வீரர்களை வாளினால் வெட்டியதும் அவரது போர்த்திறனுக்குச் சில எடுத்துக் காட்டுகளாகும். அவருடைய வீரமும் திறனும் ஒருபுறமிருக்க, அவரது கம்பீரத் தோற்றமும் படைவீரர்கள்பால் கொண்டுள்ள

அன்பும் அவருக்குப் பெரிதும் உதவின. மேலும், போர் முடிந்த பின்னர்ப் போர்க்களத்தில் காயமுற்ருேர் அனைவரையும் நேரில் சென்று பார்த்து அவர்களை வைத்திய சாலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்து, வேண்டிய மருத்துவ உதவிகளைச் செய்யுமாறு ஆணையிடு வார். போர்க்களத்தில் மிகச் சிறந்த நிலையில் போரிட்ட வீரர் களுக்குத் தம்முடைய நேர்பார்வையிலேயே மருத்துவ உதவிகளைச் செய்யுமாறு கவனிப்பார். அவ்வாறு போர்வீரர்கள்பால், அவர் கொண்டுள்ள அன்பினை, கருணை உள்ளத்தை வீரர்கள் புரிந்து கொண்டு அவரது வெற்றிக்காகத் தத்தம் உயிரையே தர முன் வருவர். இந் நிகழ்ச்சிகள் அவர் போர்வீரர்க்குரிய குணங்களைப் பெற்றிருப்பதோடு சிறந்த தலைவராகவும் விளங்கினுர் என்னும் உண்மையை வலியுறுத்தும்.

ராயர் வீரர்களைப் பாராட்டும் பண்புடையவர்

ராயர் பெம்மசானித் திம்ம நாயுடுவைத் தம்முடைய அரசாங்கப் படையுடன் சேர்ந்துகொள்ளுமாறு ஒரு கடிதம் எழுதி ஞர். அதனேடு அவரைக் குணபூலிரங்கபதி ராஜுவையும், அவனுடைய படையையும் உடன் அழைத்து வருமாறு எழுதியிருந் தார். அவ் வுத்தரவுக்கு இணங்கத் திம்மநாயுடு ரங்கபதிராஜுவை அழைத்துக்கொண்டு விசயநகரம் வந்துசேர்ந்தார். ஒரு நாள் ராயர் சபையில் வீற்றிருக்கும்போது பட்டத்து யானை மதம் பிடித்து மிக்க வேகமாகச் சபைக்குள் நுழைந்துவிட்டது. சபையினர் அனைவரும் பயந்து ஓடினர். அச் சமயம் ரங்கபதி சபையிலுள்ள தூண் ஒன்றின் மறைவில் ஒளிந்துகொண்டு தம்முடைய கைவாளை யானையின்மீது எறிந்தார். அது வலிதாங்காமல் திரும்பி ஓடியது. அவரது வீரச் செயலைக் கண்ட ராயர் மனமகிழ்ந்து, ரங்கபதிக்கு அவருடைய சாதியரை முழு உரிமையுடன் யாதோர் இடையூறு மின்றி ஆட்சிபுரியும்படி ஆணையிட்டார்.

பிறிதொரு சமயம், ராயர் ரங்கபதிராஜுவைக் கஜபதியுடன் நடத்தும் போரில் கலந்து கொள்ளுமாறு எழுதியிருந்தார். அவ்வாறே ரங்கபதி தம்முடைய படையுடன் ராயருடன் சேர்ந்து கொண்டு, கஜபதியை எதிர்க்கப் புறப்பட்டார். ராயர் அவரை அழைத்து அப் போரில் சிறந்த முறையில் வெற்றி பெற்ருல் வெகு மதிகள் பல வழங்குவதாகக் கூறி அதற்கறிகுறியாக வழக்கமாகத் தரும் தாம்பூலம் தந்து அனுப்பினுர்.

உதயகிரிக் கோட்டையை முற்றுகையிடுமாறு உத்தரவிட்ட வுடன் வடக்குப் பக்கமுள்ள ரங்கபதி தம்முடைய படையுடன் தாக்கி அரசரின் படை வருவதற்கு முன்னுல் ராயர் தனக்களித்த ஐந்து

நிறமுள்ள கொடியைக் கோட்டை வாயில் மணிக் கதவுகளுக்கு மேல் பறக்கவிட்டார். ராயர், கொடி பறப்பதைக் கண்டு அக் கொடியைப் பறக்கவிட்டவர் யாரென அறிந்து ரங்கபதி ராஜுவை வரவழைத்து அவரது வீரத்தைப் பாராட்டி வேண்டிய அளவு வெகுமதிகளையும் வழங்கினர்.[1]

(ii) சிறந்த ஆட்சியாளர்

கிருட்டிணதேவராயர் போர்க்கள வீரராக இருந்ததோடன்றித் தம் பேரரசின் சிறந்த ஆட்சியாளராகவும் விளங்கினர். உள்ளாட்சித் துறையில் சிறந்த மேற்பார்வையையும், தவறு நிகழா வண்ணம் சோதனையிடுதலையும் ராயர் மேற்கொண்டொழுகினர். மாநில ஆளுநர்களும், அலுவலர்களும் தீயமுறைகளைப் பின்பற்ருத வாறு கண்காணித்து வந்தார். குடிமக்களது குறைகளைப் போக்கவும் தீச்செயல் புரிந்தோர்க்குத் தண்டனை வழங்கவும் தம் முன்னோர் களைப் போலவே பேரரசின் மூலைமுடுக்குகள் உட்படச் சுற்றிப் பார்வையிட்டார். நேரில் குடிமக்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு அவர்தம் வேண்டுகோளையும், புகார்களையும் அவ்வப் போது பரிசீலனை செய்தார். குடிமக்களுக்குத் தாளமுடியாத வரிச் சுமைகளை நீக்கினர். அவற்றுள் சிறப்பானது திருமணவரியை நீக்கியதாகும். நாட்டின் பல பாகங்களிலுள்ள காடுகளை வெட்டி யெடுத்து அவற்றை விளைநிலமாக மாற்றி மக்களுக்கு வழங்கினர்.

பேரரசு முழுமையும் அவரது நேர் ஆட்சிக்கு உட்பட்டிருப் பினும் அவை பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஓர் ஆளுநர் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டிருந்தது. அவர்கள் முழு உரிமையுடன் ஆட்சி செய்து வந்தனர். அவர்கள் ஆண்டு தோறும் மத்திய கருவூலத்திற்கு (Central Treasury) அளிக்க வேண்டிய தொகையைச் செலுத்திவிட்டு, தங்கள் தற்காப்புக்குத் தேவையான குறிப்பிட்ட அளவு யானைப்படை, குதிரைப்படை, காலாட்படைகளை வைத்துக்கொண்டு, சமயம் நேருங்கால் போருக்குத் தயாராக இருக்கவேண்டும். இவ்வாறு எத்தகைய குழப்பமும் ஏற்படாதவாறு ஆண்டு வந்தார். எதிரிகளிடத்தும் அன்பு காட்டுகின்ற அவருடைய கருணையும், கைப்பற்றப்பட்ட நாடுகளிலுள்ள மக்களுக்கு வேண்டிய தருமங்களை அவர் செய்ததும் அவரது மக்கள் அவரை வரவேற்று உபசரிக்கும் தன்மையும் வெளிநாட்டு அறிஞர்கள் பலரைக் கவர்ந்தன. மேலும், அவரது கம்பீரத் தோற்றமும், அறிவு ஒளி வீசும் பார்வையும், கண்ணிய மான உரையாடலும், இலக்கியத்திலும் சமயத்திலும் அவர்

1 Kaifiyat of Cinbakunta L. R. 7. pp. 321 ff

கொண்ட பற்றும், மக்கள் நலனுக்குப் பாடுபடும் எண்ணமும், கோயில்களுக்கும், பிராமணர்களுக்கும் அவர் அளித்த நன்கொடைகளும் அவரைத் தென்னிந்தியப் பேரரசர்களுள் தலைசிறந்தவராகக் கருத இடமளித்தன.

(iii) கட்டடப் பிரியர்

ராயர், தலைநகரத்தில் அழகும் வசதியும் கூடிய கட்டடங்கள் பலவற்றைக் கட்டினார். விருபாட்சரது கோவிலுக்கு அழகியதொரு கோபுரத்தைக் கட்டியுள்ளார். கி. பி. 1513-ல் கிருஷ்ணசாமி ஆலயத்தை ஏற்படுத்தி உதயகிரியிலிருந்து பாலகிருஷ்ண விக்கிரகத்தைக் கொண்டுவந்து அக் கோயிலில் எழுந்தருளச் செய்தார். தலைநகரத்திற்குப் புறநகராகத் தம் தாய் நாகலாதேவியின் நினைவாக 'நாகலாபுரம்' என்று ஒரு நகரத்தை அழகிய கட்டடங்களோடு அமைத்தார். அந் நகரத்திற்குத் தண்ணீர் வசதிக்கான புதிய நீர்நிலை ஒன்றை ஏற்படுத்தினார். விட்டலசுவாமி ஆலயத்தை ஆற்றின்கரையில் அழகுற அமைத்தார். கி. பி. 1528-ல் மிகப்பெரிய நரசிம்மருடைய சிலை ஒன்றைக் கிருஷ்ணசுவாமி கோயிலுக்குத் தென்மேற்கில் அழகுற நிறுவினார். ஆயிரக்கால் மண்டபங்களையும், ராய கோபுரங்களையும் தென்னிந்தியாவில் பல இடங்களில் கட்டிய பெருமை கிருட்டிணதேவராயருக்கு உண்டு. ஹசாரா என்னுமிடத்தில் ராமசுவாமி ஆலயத்தைச் சிறப்புற அமைத்தார். அக் கோயில் பேரரசரின் வழிபாட்டுக்காகவே கட்டப்பட்டது. அங்கே உள்ள தூண்களில் இராமாயணக் காட்சிகள் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள், இராமர் தாடகையைக் கொல்லுதல், இராமர் சீதையுடனும் இலக்குவனுடனும் கங்கையைக் கடத்தல், ஜடாயு வீரமரணம் எய்துதல், அனுமன் இராவணனிடம் பேசுதல், இராமர் தம் அம்பினால் இராவணனை எய்தல் போன்ற பல காட்சிகள் இன்றும் அழகுற அமைந்து காணப்படுகின்றன. நாட்டின் நீர்ப்பாசன வசதிக்காகப் பல குளங்களை அவர் வெட்டச் செய்தார்.

(iv) சிறந்த கல்விமான்

கிருட்டிணதேவராயருக்கு வடமொழியிலும், தெலுங்குமொழியிலும் நல்ல புலமை உண்டு. எனவே, அவர் தம் அவையில் புலவர்களையும் எழுத்தாளர்களையும் ஆதரித்தார். எப்பொழுதும் புலவர்களால் சூழப்பட்டே அவர் காணப்படுவார். அவர் அவையில் புலவர்களும், தத்துவஞானிகளும், சமய ஆராய்ச்சியாளர்களும் அவருடைய ஆதரவை எதிர்நோக்கிக் கூடிய வண்ணம்

இருப்பர். அவர் தரும் ஆதரவு உலகெங்கும் பரவலாயிற்று. அவரை 'ஆந்திரபோஜர்' என்று அழைத்தனர். அவர் எல்லா மொழிப் புலவர்களையும் ஆதரித்தார். வடமொழியோடு தென்மொழிகள் அனைத்தையும் ஆதரிப்பதில் அவருக்கு மகிழ்ச்சி உண்டு. என்றாலும், அவருக்குத் தெலுங்கு மொழியில் மிக்க ஈடுபாடு உண்டு. அதனால் அம் மொழியும், அதன் இலக்கியங்களும் நன்கு வளர்ச்சியடைய அரும்பாடுபட்டார். சாளுவ நரசிம்மர் காலத்தில் ஏற்பட்ட அத் தெலுங்கு மறுமலர்ச்சியானது, கிருட்டிணதேவ ராயர் காலத்தில் மிக உன்னத நிலையை அடைந்தது. அவர் எழுதிய தெலுங்கு நூலான 'ஆமுக்த மால்யதா'-அம் மொழி இலக்கியங்களுள் தலைசிறந்ததாக விளங்குகின்றது. 'ஆமுக்த மால்யதா' ஐம்பெரும் தெலுங்குக் காவியங்களில் ஒன்றாகும். அந் நூலில் வைணவ சமயத்தை வளர்க்க வந்த ஆழ்வார்கள் பன்னிருவருள் தலைசிறந்த விஷ்ணுசித்தரான பெரியாழ்வாரின் வாழ்க்கையைப் பற்றியும், அவருடைய வைணவத் தத்துவ விளக்கங்களையும் குறிப்பிட்டுள்ளார். அவற்றோடு பெரியாழ்வாரின வளர்ப்பு மகளான கோதை என்ற ஆண்டாள் அரங்கநாதப் பெருமானிடம் கொண்ட தெய்வீகக் காதலையும் சிறப்பித்துள்ளார். அவர் எழுதிய வடமொழி நூல்களுள் 'ஜாம்பவதி கல்யாணம்', 'உஷா பரிணயம்' ஆகிய இரு நாடகங்கள் இன்றும் பாராட்டப் பட்டு வருகின்றன.

அவரது அவையை எட்டுச் சிறந்த புலவர்கள் அழகுறச் செய் தனர். அத் தெலுங்குப் புலவர் எண்மரையும் 'அஷ்டதிக்கஜங்கள்' என்று அழைத்தனர். இலக்கிய உலகில் அவர்கள் எண்வகை நிலை களை அமைத்தனர் என்று கூறுவர். அவர்கள் அல்லசானி பெத் தண்ணா, நந்தி திம்மண்ணா, ராமபத்திரா, தூர்ஜடி, மல்லண்ணா, சூரண்ணா, ராமராஜபூஷணா, தெனாலிராமகிருஷ்ணா ஆகியோராவர். அவர்களில் தலைசிறந்தவர் அல்லசானி பெத்தண்ணா என்ற தெலுங்குப் புலவராவார். அவர் கிருட்டிணதேவராயர் காலத்தில் மிக்க பெருமையாகவும், மரியாதையாகவும் நடத்தப்பட்டார் என்பது அவர் எழுதிய நான்கு தெலுங்குப் பாடலிலிருந்து காணப் படுகிறது. (Chatu of Beddanna on Krishna Deva Raya).[1] அவர் அத்வைதக் கொள்கையினர். அவர் 'மனுசரிதம்' என்ற நூலை யும் எழுதியுள்ளார். அதில் குறிப்பிட்டுள்ள மனு இரண்டாவது மனுவாகும். அக் கதை மார்க்கண்டேய புராணத்தில் உள்ளது. ராயர் அவருக்கு ஆந்திரக் 'கவிதா பிதாமகர்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளார். அவர் கிருட்டிண தேவராயரிடம் பேரன்பு கொண் டிருந்தார். பேரரசர் இறந்த பின் தம்முடைய பாழும் உடம்பைத்

[1]Sources of Vijayanagar History, p. 152.

தாங்கி இவ் வுலகில் இருக்கவேண்டியுள்ளதே என்று வருந்திக் கவிதை எழுதியுள்ளார். நந்தி திம்மண்ணு என்பவர் சைவ மரபைச் சார்ந்தவர். அவர் 'பாரிஜாத பரிகரணமு' என்ற நூலை எழுதியுள்ளார். அந் நூலில் கண்ணபிரானின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஒரு பகுதியைச் சிறப்பித்துக் கூறுகின்றார். ராமபத்திரா என்பவர் புராணக் கதைகளைச் சுருக்கிச் 'சகல கதா சங்கிரகம்' என்ற நூலை எழுதியுள்ளார். தூர்ஜடி என்பவர் 'காளத்தி மகாத்மிய'த்தையும் மல்லண்ணு என்பவர் 'ராஜசேகர சரித்திர'த்தையும் எழுதியுள்ளார்கள். அவர்கள் இருவரும் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள்.

ராயர் நல்ல இசைப்புலமை பெற்றவர். எனவே, அவரது அவையில் நல்லிசைப் புலமை மெல்லியலார் இருவர் இருந்ததாக அறிகின்றோம். தெலுங்குப் புலவர்களுக்கு அவர் ஊக்கம் அளித்ததோடு எதிர்காலத்தில் அம் மொழி வளர்ச்சிக்கான நல்ல ஏற்பாடுகளைச் செய்தார். விசயநகர அரியணையில் எந்த அரசர் அமர்ந்தாலும், அவரது தலையாய கடன் தெலுங்கு மொழியைப் போற்றுவதும், அம் மொழிப் புலவர்களை ஆதரிப்பதுமே ஆகும் எனக் குறிப்பிட்டுள்ளார். அதனால்தான் அப் பேரரசில் எத்தனையோ அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும், அம் மொழி அழியாது இன்றும் சிறந்து விளங்குவதைக் காணலாம். எனவே, சிறந்த கல்விமான் ஆகிய ராயர் தெலுங்கு மொழிக்குச் செய்த சேவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

(v) தோற்றமும் குணநலன்களும்

பேயஸ் (Paes) என்பவர் ராயரின் தோற்றம்பற்றிக் குறிப்பிடுவதாவது, 'கிருட்டிணதேவராயர் நடுத்தரமான உயரமுடையவர். அழகான தோற்றத்தோடு நல்ல உடற்கட்டு உடையவர். சற்றுப் பருமனாகக் காணப்படுவார். அவருடைய முகத்தில் அம்மை வடுக்கள் காணப்பட்டன. கண்டோர் அஞ்சும்படியான தோற்றமுடையவர். நேர்மையானவர்; புன்முறுவல் பூத்த முகத்தினராய் மிக்க மகிழ்ச்சியோடு காணப்படுவார். அயல் நாட்டினரை அன்புடன் வரவேற்று, அவர்கள் எந் நிலையில் இருப்பினும் அவர்களை விசாரித்து ஏற்ற மரியாதை கொடுத்து ஆதரிப்பார். அவர் ஒரு பேரரசரும், நீதிமானும் ஆவார். அவரிடமுள்ள ஒரே ஒரு குறை, சில சமயங்களில் திடீரென ஆத்திரப்பட்டுக் கோபமடைவதாகும். 'அரசருக்கு அரசர்' (King of Kings), 'இந்தியத் தலைவர்களில் தலைசிறந்தவர்', 'முக்கடலால் சூழப்பட்ட நிலவுலகின் தலைவர்' என்று பல பட்டப் பெயர்கள் அவருக்கு வழங்கப்பட்டன.[1]

1 The Oxford History of India, p. 307

மேலும், அவரிடம் மிகச் சிறந்த பண்புகள் இருந்தன. அரசியலுக்குத் தொல்லை ஏற்படாத வகையில் அரசாங்க அலுவலர்களை அடக்கியாளும் ஆற்றலைப் பெற்றிருந்தார். தினந்தோறும் உடற்பயிற்சிகள் செய்வதன்மூலம் தம் உடல் நலத்தைக் காப்பாற்றி வந்தார். அவர் எப்பொழுதும் கருணை உள்ளம் படைத்தவர். எதிரிகளிடத்தும் அன்பு காட்டும் தன்மையுடையவர். பிரதாபருத்திரரை அவர் பெருந்தன்மையுடன் நடத்தியது அவரது நற்பண்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அதைப் போலவே ரெய்ச்சூர்க் கோட்டையைக் கைப்பற்றிய பின் அதைக் காவல் புரிந்திருந்த போர்வீரர்களிடம் அவர் காட்டிய அன்பு, அவ் வீரர்களுக்கே வியப்பைத் தந்தது. ஆனால் நூனிஸ், ராயரைப் பற்றிச் சில குறைபாடுகளைக் குறிப்பிடுகின்றார். அவற்றில் முதலாவதாக, அவரை அரசராக்கிச் சிறந்த உறுதுணையாயிருந்த அமைச்சர் சாளுவ திம்மரைக் கடைசிக் காலத்தில், கண்களைப் பிடுங்கிச் சிறையிலடைத்ததைப் பற்றியும், இரண்டாவதாகக் கஜபதி இளவரசருக்கு ஏற்பட்ட வருத்தமான முடிவுக்கு ராயர் காரணமாயிருந்தார் என்பது பற்றியும், மூன்றாவதாக, ரெய்ச்சூர்ப் போருக்குப் பின் சில நாடு நகரங்களை அழித்ததோடு அமையாது, அடில்கானைத் துன்புறுத்தியது பற்றியும் குறிப்பிடுகின்றார். அவரது குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து பார்க்குமிடத்து முதலாவதாகக் குறிப்பிட்ட சாளுவதிம்மருக்கு ஏற்பட்ட கொடுமைகளை உறுதிசெய்வதற்கு ஏற்ற ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இரண்டாவதாகக் கூறிய குறைபாடானது கஜபதியின் இளவரசரான வீரபத்திரரைப் பற்றியது. கொண்டவீடு என்னுமிடத்தில் சிறைப்பட்ட வீரபத்திரர் கி. பி. 1515-ல் விசயநகரத்தில் நடைபெற்ற வாட்போரில் அவரது திறமையைக் காட்டுமாறு அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அவ் விளவரசுடன் போட்டியிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரன் அரச குலத்தைச் சார்ந்தவனல்லன். அதனை அறிந்த இளவரசர் தம்மைவிடத் தாழ்ந்த குலத்தவனோடு வாட்போர் செய்யும்படியான இழிவுநிலை ஏற்பட்டமைக்கு வருந்தி மனம் நொந்து தற்கொலை செய்துகொண்டார் எனக் கூறப்படுகிறது. அத்தகைய அவல நிலையில் வீரபத்திரர் இறக்க நேர்ந்தது, பேரரசர் ஏற்படுத்திய வாட்போர்ப் போட்டியே ஆனதால், ராயர் குற்றம் புரிந்தவர் எனப் பலர் கருதுகின்றனர். ஆனால், வீரபத்திரரைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுச் சான்றுகளில் சரியான காரணம் தெரியாமல் குழப்பம் ஏற்படுவதால் அறிஞர்கள் பலர் அக் குற்றச்சாட்டை உண்மையென ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். மூன்றாவது குற்றச்சாட்டாகிய அடில்கானைத் துன்புறுத்தியதுபற்றி ஆராய்ந்து நோக்குமிடத்துப பல வகையான தொல்லைகளை விசயநகரத்துக்குக் கொடுத்துவந்த

அவரைத் துன்புறுத்துவது அரசியல் முறைப்படி கடுங் குற்றமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆகவே, ராயரைப்பற்றிப் பேயஸ் (Paes) கூறுவது போல, 'அவர் ஓர் உயர்ந்த பண்புடைய மகான் என்று நாம் முடிவு செய்வதே சிறந்ததாகும். அவரை வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்ற ஒரு பேரரசர் என்று கூறுவது பொருந்தும். அவர் இரண்டாம் தேவராயருக்குப் பிறகு மெலிவுற்று வந்த விசய நகரப் பேரரசை, மீண்டும் வலிமையடையச் செய்தார் என்று அவரைப் பெருமைப்படுத்திக் கூறுவதில் தவறில்லை. சாளுவ நரசிம்மரின் கொள்கைகளை அவர் ஒழுங்குபடுத்திச் சிறப்புற நிறை வேற்றி வைத்தார். அவரது சிறந்த பண்பு நலன்களினால் அவர் காலத்தில் விசயநகரப் பேரரசு மிக உன்னத நிலையை அடைந்தது. அவரது கருணைத் தன்மையும், அறச் செயல்களும் தென்னிந்திய வரலாற்றில், அவருக்கு மிகச் சிறப்பான இடத்தை அளித்துள்ளன. அவர் சிறந்த வைணவராய் இருந்தாலும், பிற சமயத்தவர் களையும் அன்புடன் பாராட்டினார். எல்லாச் சமயத்தவர்களையும் ஒரே சமத்துவ நிலையில் நடத்துவார். அவரது அவையிலிருந்த புலவர்கள் எண்மரில் மூவர் சைவர். அவர்களில் தலைசிறந்தவ ரான பெத்தண்ணா என்பவர் துவைத சமயத்தைச் சார்ந்தவர். ஆகவே, சமயப் பொறையை உடையவர் ராயர் எனக் கூறினால் மிகையாகாது.

(vi) சமயத்தொண்டு

ராயர் வைணவராயிருந்தும் பிற சமயத்தினரை ஆதரித்தார் அவர் திருவேங்கடமுடையாரிடம் மிக்க ஈடுபாடு உடையவர். அவருடைய குலதெய்வம் திருவேங்கடவனே என்று பல இடங் களில் குறிப்பிட்டுள்ளார். அப் பெருமாள் எழுந்தருளியுள்ள திருப்பதியில் வைதீக முறைப்படி, பதினாறு வகையான தானங் களைச் செய்தார். திருப்பதி ஆண்டவனின் வழிபாட்டுச் செலவுக் கான பொன்னும் பொருளும் வழங்கினார். தம்மைப்போலவும், தம் இரு பட்டத்தரசிகளான திருமலாதேவி, சின்னதேவி போலவுமான செப்புச்சிலைகளை அக் கடவுளின் எதிரில் அமைத்துள்ளார். அச் சிலைகள் இன்றும் அவர் இறைவன்பால் கொண்டுள்ள இடையறாப் பக்தியினை வெளிப்படுத்தி வருகின்றன. பின்னர், அவர் காளஹஸ்தி யிலுள்ள சீகாளத்தி அப்பருக்குப் பொன்னும், பொருளும் வழங் கினார். மேலும், அநேகச் சத்திரங்களை அங்குக் கட்டினார் அவர் புண்ணியத் தலங்களைத் தரிசிக்க விரும்பித் தெற்கு நோக்கிப் புறப்பட்டார். அவர் வழிபட்ட கோயில்களில் முக்கியமானவை பின்வருமாறு: அழகர்கோயில் (மதுரைக்கு அருகிலுள்ள திருமா லிரும்சோலை), மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், கருவநல்லூர்,

சங்கரநயினர் கோயில், தென்காசி, குற்ருலம், அகத்திய பர்வதம் (பொதியமலை), திருநெல்வேலி, தோத்தாத்திரி (வானமாமலை), திருக்குறுங்குடி, கன்னியாகுமரி. திருச்செந்தூர், நவ திருப்பதி (ஆழ்வார் திருநகரிக்கருகில்). அப் பயணத்தின் போது மதுரையில் எழுந்தருளியுள்ள சுந்தரேஸ்வரருக்கும், மீனுட்சி அம்மைக்கும் அவர் பொன்னும், பொருளும், நிலமும் வழங்கினுர். ஸ்ரீவில்லி புத்தூரில் எழுந்தருளியுள்ள ஆண்டாளுக்கும் விலைமதிப்பிட முடியாத பொன்னையும் பொருளையும் வழங்கியதோடு ஓர் இலட்ச ரூபாய் செலவில் ஒரு குளத்தை வெட்டி, மத்தியில் சிற்ப வேலைப் பாட்டுடன் கூடிய மண்டபம் ஒன்றையும் அமைத்தார். அகத்திய பர்வதத்தில் அழகமைந்த கோபுரம் ஒன்றைக் கட்டினுர். திருநெல் வேலியில் தாமிரசபை ஒன்றை நிறுவினுர். அது பெரிய கற்களால் அமைக்கப்பட்ட மண்டபம். அம் மண்டபம் தாமிரத் தகட்டினுல் (செப்புத்தகட்டினுல்) மூடப்பட்டுள்ளது. திருநெல்வேலிக்கருகில் தமது நினைவாகக் கிருஷ்ணராய சமுத்திரம் என்ற ஒரு கிராமத்தை ஏற்படுத்தினுர்.

மேலும், அவர் சேதுவுக்குச் (இராமேஸ்வரம்) சென்று அங்குள்ள பெருமானை வணங்கினுர். அதன்பின் தனுஷ்கோடிக்குச் சென்று அக் கடலில் போரினுல் தம் வாளில் ஏற்பட்ட இரத்தக் கறையைக் கழுவினுர். அங்கு மூன்று துலாபாரங்களை (தம் எடையளவுக்குப் பொன் வழங்குதல்) வழங்கினுர். அங்கு மூன்று நாள்கள் தங்கிவிட்டுப் பின்னர் மேற்குக் கடற்கரையிலுள்ள கோகர்ணம் சென்ருர். அங்குள்ள இறைவனை வணங்கிவிட்டுத் தம் தலைநகரான விசயநகரத்திற்கு ஸ்ரீரங்கப்பட்டணம் வழியாக நீண்ட நாள் பயணத்திற்குப் பின் திரும்பி வந்தார். அங்குள்ள விட்டலர், விருபாட்சர் கோயில்களுக்கு விலைமதிப்பற்ற தானங்களை வழங் கினுர்.

ராயர் சிவத்தலங்களையும், திருமால் தலங்களையும் எத்தகைய சமய வேறுபாடுமின்றி ஒரே நிலையில் மதித்து வழிப்பட்டு வந்தார் என்று மேலே குறிப்பிட்ட தலயாத்திரையிலிருந்து நன்கு புலனு கிறது. அவரிடமிருந்த சமயப் பொறையைப்பற்றி அறிஞர்கள் பலர் போற்றியுள்ளனர். அவர் காலத்தில் வைணவமும், சைவமும் இந்து சமயத்தின் இரு கண்களாகப் போற்றப்பட்டன. மேலும், அவர் இந்து சமயமல்லாத பிற சமயத்தவர்களையும் மிக நெருங்கிய நண்பர்களாகவே நடத்தி வந்தார். எனவே, அவர் காலத்தில் சமயப் பூசல்கள் ஏதும் எழுதுவதற்குரிய சூழ்நிலை இல்லை எனலாம்.

விசயநகரப் பேரரசர்கள் வைணவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் அரசாங்கச் சமயமாக வைணவத்தைக் கொண்டு வர வில்லை. அதற்குப் பதிலாக எல்லாச் சமயங்களையும் போற்றி ஆதரித்து வந்தனர். வீர சைவம், வீர வைணவம் என்று இந்து சமயப் போராட்டங்கள் நிகழும் காலத்தில், விசயநகர அரசை நிறுவ உதவிசெய்தவர், அத்வைதத் தத்துவ ஞானியாகிய மாதவாச் சாரிய வித்யாரணியர் ஆவர். அவர் சைவ, வைணவ பேதத்தை நீக்கினார். அதனால் அம் மரபில் வந்தவர்கள் சமயப் போராட்டத் தில் ஈடுபடவில்லை. விசயநகரப் பேரரசில் சிறந்த அரசரான கிருட்டிணதேவராயர் தம்முடைய குடிமக்கள் எந்தச் சமயத்திலும் சேர்ந்துகொள்ள அவர்களுக்கு உரிமையை அளித்தார். அவர் ஒரு வீர வைணவராயிருந்தும் வைணவக் கோயில்களுக்கு நன் கொடை அளிப்பது போலச் சிவன்கோயில்களுக்கும் அளித் துள்ளார். திருப்பதி, காஞ்சி, சிம்மாசலம், அகோபிலம் போன்ற வைணவக் கோயில்களுக்கும், திருவண்ணாமலை, சிதம்பரம், காளஹஸ்தி, ஸ்ரீசைலம் போன்ற சிவன் கோயில்களுக்கும் நில தானம் அளித்துள்ளார். அரசாங்க அலுவலில் வைஷ்ணவ, ஸ்மார்த்தப் பிராமணர்களை வேலைக்கு அமர்த்தினார். இவ்வாறு இந்துக்களை மட்டும் அவர் ஆதரித்தார் என்று கூறுவதற்கில்லை. ஏனெனில், அவர் காலத்தில் முகமதியர்கள், கிறித்தவர்கள், யூதர்கள் போன்றோர்களும் ஆதரிக்கப்பட்டனர்.

விசயநகர அரசரான சாளுவ நரசிம்மர் திருப்பதி வேங்கடவ னிடம் மிக்க ஈடுபாடு உடையவர். எனவே, வைணவர்களின் சிறந்த தலமாகத் திருப்பதி அவர் காலத்திலும், அவர் காலத்துக்குப் பின்னும் திகழலாயிற்று. கிருட்டிணதேவராயரும் தம் முன்னோர் களைப் போலவே திருப்பதி வேங்கடவனைக் குலதெய்வமாகக் கருதினார். அவர் காலத்தில் வைணவத்தினர் இரு பிரிவினராகக் காணப்பட்டனர். (1) ஸ்ரீ இராமானுஜரைப் பின்பற்றி வந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள். (2) துவைதத் தத்துவ ஞானியான மாத்து வரைப் பின்பற்றிவரும் மாத்துவர்கள். அவ்விரு பிரிவுகளுக்குள்ளும் கருத்துகளிலும், நம்பிக்கையிலும், நடைமுறையிலும் வேறுபாடுகள் பல உள்ளன. அவ்விரு பிரிவுகளில் ஸ்ரீவைஷ்ணவர்கள் தாராளமாகவும், கொள்கைகளில் அதிகப் பிடிவாதம் இன்றி விட்டுக் கொடுப்பவர்களாகவும் இருந்தனர். ஆகவே, மாத்வ சமயத்தைவிட ஸ்ரீ வைணவ சமயம் பொதுமக்களைக் கவர்ந்து மேலோங்கலாயிற்று.

பதினாறும் நூற்றாண்டு முதல் ஸ்ரீ வைஷ்ணவத் தலைவர்கள் கல்வி கேள்விகளில் தலைசிறந்தவர்களாய் விளங்கினர். அவர்கள் நல்ல திறமைசாலிகளாகச் சமயப் பிரச்சாரங்களைச் சிறந்த முறை யில் நடத்திச் சென்றனர். தெலுங்கு இலக்கியத்தில் இருந்து ஒரு

ஸ்ரீவைஷ்ணவ ஆச்சாரியாரான தாத்தாச்சாரியார் என்பவர் கிருட்டிணதேவராயரின் குருவாக விளங்கியதாகத் தெரிகிறது. இந்தத் தாத்தாச்சாரியார் யார் என்பது திட்டவட்டமாக அறிய முடியவில்லை. என்றாலும், அகோபிலமடத்து ஜீயர்கள் வைஷ்ணவத்தைப் பரப்புவதில் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தினர். வான்சடகோப ஜீயர் மடங்களை நிறுவியதோடு முறை மன்றங்களிலும் சமயத் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார். கிருட்டிணதேவராயரின் அவைகளப் புலவரான அல்லசானி பெத்தண்ணாவுக்கு வான்சடகோப ஜீயர் குருவாக விளங்கினர். அவர் கல்விக் களஞ்சியம் என்று அழைக்கப்பட்டார். ஆமுக்த மால்யதா அவர் ஆந்திர நாட்டில் வைணவ சமயக் கொள்கைகளைக் வேரூன்றச் செய்தார் என்று குறிப்பிட்டுள்ளது.[1]

வைஷ்ணவம் வளர்ந்த நிலைக்கு ஏற்ப மாத்துவர்களின் செல்வாக்கு இல்லையென்றாலும் அச் சமயம் கவனிக்கப்படாமலில்லை. மாத்துவ சமயத்தைச் சார்ந்த வியாசதீர்த்தா என்பவர் கிருட்டிணதேவராயரால் நன்கு மதிக்கப்பட்டார். அவருடைய சொல்லாற்றல், கல்விநிலை, திறமை ஆகியவற்றைக் கிருட்டிணதேவராயர் போற்றினர். ஒரு முறை பல தீக் கிரகங்களின் சந்திப்பினால் ஒரு குறிப்பிட்ட காலம் ராயர் அரசாட்சி செய்தால் அவற்றின் தீச்சக்தியினால் இறந்துபடக் கூடுமெனக் கூறினர். அத்தகைய துன்ப நிலையைப்போக்கக் கிருட்டிணதேவராயர் வியாசதீர்த்தரையே அத் தீக்கிரகங்களுக்கேற்ற காலம் வரை அரியணையேற்றிப் பேரரசராக நியமித்தார். அந் நிகழ்ச்சியை நினைவுபடுத்த வியாசதீர்த்தருக்கு ராயர் பட்டம் கொடுக்கப்பட்டு அன்றுமுதல் அவர் வியாசராயர் என அழைக்கப்பட்டார்.[2]

இதிலிருந்து ராயர் எல்லாச் சமயத்தவருக்கும் ஏற்ற மரியாதை கொடுத்துச் சமமாகப் பாவித்தார் எனும் உண்மை தெரிகிறது. அக்கால மடங்கள் மூன்று வகைகளாக இருந்தன. அவை முறையே சைவ மடங்கள், வைணவ மடங்கள், ஜைன மடங்கள் என்பனவாம். எல்லா மடங்களும் கல்விக் கூடங்களாகத் திகழ்ந்தன. அங்குள்ள ஆசிரியர்கள் சமய போதனையோடு இலக்கியங்களையும் கற்பித்தனர். சாதாரண மக்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுப்பதோடு கலை, இலக்கியம், வைத்தியம் ஆகியவற்றைச் சிறப்பாகக் கற்றுக் கொடுத்தனர். பொதுமக்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கும் பொறுப்பினை அம் மடங்கள் ஏற்றன. பேரரசர்

1 ஆமுக்தா, 6:66

2 B. Venkoba Rao-Vyasayogicaritam Introductior-p. 87

அத்தகைய மடங்களுக்கு வேண்டிய பொருளுதவியும் ஆதரவும் அளித்தார். எல்லாச் சமயத்தவரும் ஒரே நிலையில் மதிக்கப் பட்டனர்.

கோயில்கள்

மடங்களைப்போல் கோயில்களும் பொதுமக்களுக்குச் சில தொண்டுகளைச் செய்தன. கோயில்களில் உள்ள கடவுளைப்பற்றிப் பாடல்கள் பாட இசை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அதி காலையில் அவர்கள் இசைக் கருவிகளுடன் இசை வழிபாடு செய் வார்கள். மாலை நேரத்தில் இசை, நடனம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளினால் கோயில்களில் உள்ள பலவிதத் தொண்டுகளுக்கு மக்கள் அமர்த்தப்பட்டனர். நாதஸ்வரம் முக்கிய இடம் பெற்றிருந்தது. அதற்கென ஒரு தனி இனத்தவர்கள் அப் பொறுப்பினை ஏற்றுவந்தார்கள். அதைப்போலவே நடனமாதர்கள், அர்ச்சகர்கள், பூத்தொடுப்பவர்கள், சந்தனம் அரைப்போர், விளக்கு ஏற்றுவோர், குற்றேவல் புரிவோர் என்று பல வகையான வேலைகளில் மக்கள் பங்கு கொண்டனர். இவ்வாறே திங்கள் தோறும் நடைபெறும் விழாக்கள், ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள் எனப் பலவகை விழாக்கள் நடைபெற்றன. இவ்வளவு நிகழ்ச்சிகளுக்காகும் செலவுகளை ஈடுகட்ட ராயர் கோயில்களுக்கு நிலமானியங்களையும், ஆபரணங்களையும், பொருளையும் போதிய அளவு அளித்தார்.

கோயில் சொத்துகள் அனைத்தும் 'ஸ்தானியர்கள்' என்று சொல்லப்படுகின்ற தர்மகர்த்தாச் சபையினர்களால் நிர்வகிக்கப் பட்டு வந்தன. ஆமுக்த மால்யதாவில் ஆண்டாள் அவதார ஸ்தலமான ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோயிலை நிர்வகித்து வந்த ஸ்தானி யர்களைப் பற்றிக் குறிப்பிட்டு உள்ளது.[1] அவ்வாறே மர்க்காபூரில் உள்ள 'சென்னகேசவர்' ஆலயமும், புஷ்பகிரியில் உள்ள 'சிவ கிருஷ்ண' ஆலயமும், காஞ்சியில் உள்ள 'வரதராசர் ஆலயமும்' ஸ்தானிகர்களால் கண்காணிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

இந்த ஸ்தானிகர் சபையானது அமைக்கப்பட்ட விதம்பற்றிக் கருத்துவேறுபாடுகள் உள்ளன. ஒரு சாரார் கோயில்களுக்கு நன்கொடை அளித்தவர்கள், கோயிலைக் கட்டியவர்கள் ஆகியவர் களைக் கொண்டு சபை அமைக்கப்பட்டது என்று கருதுகிறார்கள். மற்றொரு சாரார் அது பரம்பரையாக ஒரு குடும்பத்தாராலேயே அமைக்கப்பட்ட சபை என்று கூறுகிறார்கள். அரசினரால்

1 ஆமுக்தா, 4 :35

நியமிக்கப்பட்டவர்களைக் கொண்டு அச் சபை அமைக்கப்பட்டது என்று கருதுவோர்களும் உண்டு. தேவகுடிச் சாசனப்படி, அந்த ஸ்தானிக சபையில் உள்ள ஆறு அங்கத்தினர்களும் சின்ன ஜீயர் என்பவரின் ஆறு குமாரர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஒரு குடும்பத்தாரே அச் சபையை அமைத்திருப்பதாக அறிகிறோம்.

(vii) அரசியல்

விசயநகரப் பேரரசில் அரசரே முழு அதிகாரத்தைப் பெற்றவராகக் காணப்பட்டார். ஆனால், அவர்கள் தங்கள் மனம்போல் ஆட்சியை நடத்தவில்லை. அவர்கள் மக்களின் உரிமைகளையும், வேண்டுகோள்களையும் ஏற்று, மதித்து நடந்து வந்தார்கள். சிறப்பாக, கிருட்டிணதேவராயர் மக்களின் நன்மதிப்பைப் பெற அவர்கள் நலனை நாடித் தம் அரசாட்சியை நடத்தினர். அவர் தாம் சிறப்புற எழுதிய 'ஆமுக்த மால்யதா' என்னும் நூலில் 'ஒரு முடிசூடிய மன்னன் ஆட்சி செய்யுங்கால் தருமத்தின் மீது ஒரு கண்ணுயிருக்க வேண்டும்,' என்று குறிப்பிட்டுள்ளார்.

பேரரசர்தம் அரசாட்சியை நடத்துவதற்கு அவரால் நியமிக்கப்பட்ட அமைச்சர் சபை ஒன்று உண்டு. ராயர் காலத்தில் பிராமணர்கள் நல்ல செல்வாக்கையும், உயர்ந்த பதவியையும் பெற்றிருந்தாலும் கூட, ராயர் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்ற முப்பாலரிடமிருந்து தேர்ந்தெடுத்தவர்களையே அமைச்சரவையில் சேர்த்தார். சில சமயங்களில் அமைச்சர் பதவி பரம்பரையாக அமைவது உண்டு என்றாலும், சில சமயங்களில் அமைச்சர் பதவிக்குரியவர்களைத் தேர்ந்தெடுப்பதும் உண்டு. அப்துல் ரஜாக்கும், நூனிஸ் என்பவரும் அமைச்சர் அவையோடு ஒரு தலைமைச் செயலகம் இருந்ததாகக் கருதினர். அமைச்சர்கள் தவிர அரசாட்சியில் பங்கு கொள்ளும் அலுவலர்கள் பலர் இருந்தனர். தலைமைப் பொருளாளர் (Chief Treasurer) என்ற அலுவலர் நாட்டின் நாணய மாற்றப் பொறுப்புகளையும், நாட்டின் வாணிகப் பொறுப்புகளையும் கவனிக்க வேண்டியவராவார். காவல் தலைவர் (Prefect of Police) என்னும் அலுவலர் குற்றங்களைத் தடுப்பதும், நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதுமான பொறுப்புகளை ஏற்பார். முக்கியக் குதிரைப்படைத் தலைவர் போன்ற உயர் அதிகாரிகளும், அரசனைப் பெருமைப்படுத்திப் பாடவல்ல புலவர்களும் (Bhats), அடைப்பைக்காரர்களும் (Betel bearers), மெய்க்காப்பாளர்களும், பஞ்சாங்கம் கணிப்போரும், உலோகங்களில் உருவங்களைச் செதுக்குவோரும், வெட்டெழுத்தினைச் செய்வோரும் (Inscription)

போன்ற ஏனைய இதர அலுவலர்களும் இருந்தனர். தலைநகரத்தில் ஓர் உயர்நீதிமன்றம் இருந்தது. மிக்க பொருட்செலவில் அது அமைக்கப்பட்டது. அந் நீதிமன்றத்தில் பிரபுக்களும், சமயத் தலைவர்களும், சோதிடர்களும், இசை வல்லுநர்களும், இலக்கியப் புலவர்களும் இருந்தார்கள்.

ராயரின் பேரரசு ஆட்சி நிர்வாக வசதிக்காகப் பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றை இராச்சியம், மண்டலம், சாவடி (Rajya, Mandala, Chavadi) என்று வழங்குவர். அவற்றின் உட்பிரிவுகளாக வந்தே (Vanthe) என்ற பெரும் பிரிவுகளும். அதன் உள்ளடங்கியதான நாடுகளும், அவற்றிற்கு உள்ளடங்கிய 'சீமை'களும் (Sima), அவற்றின் உட்பிரிவுகளாகக் கிராமங்களும், கிராமங்களுக்கு உள்ளடங்கிய ஸ்தலங்களும் (Sthalas) பேரரசின் கர்நாடகப் பகுதியில் இருந்தன. ஆனால், பேரரசுக்கு உட்பட்ட தமிழ்நாட்டுப் பகுதியில் முறையே கோட்டம், பாரு (Parru), நாடு, கிராமம் என்று பல பிரிவுகள் இருந்தன. ராயரின் பேரரசு ஆறு முக்கிய மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்று H. கிருஷ்ணசாஸ்திரி குறிப்பிடுகின்றார். ஒவ்வொரு மாநிலமும் ஒரு வைசிராய் (அ) அரசப் பிரதிநிதி என்பவரால் ஆளப்பட்டது. அவர்களை நாயக் (அ) நாயகா என்று அழைப்பர். அப் பதவியில் அமருவோர் அரசகுடும்பத்து அங்கத்தினராக இருக்கவேண்டும் (அ) பேரரசின் மிகச் செல்வாக்குப் படைத்த பிரபுவாக இருக்கவேண்டும். ஏதேனும் ஒருசில சமயங்களில் ஏற்கெனவே அப் பேரரசில் ஆட்சி செய்த அரசப் பரம்பரையினராக இருப்பவருக்கும், அப் பதவி அளிப்பதுண்டு. ஒவ்வொரு அரசப் பிரதிநிதியும் அவர் ஆட்சி எல்லைக்குட்பட்ட மாநிலத்தின் சிவில், இராணுவ, நீதி நிர்வாகத் துறைகளில் முக்கியப் பொறுப்பும், அதிகாரங்களும் பெற்றவராவார். தம் மாநில வருமானம், செலவு ஆகியவற்றின் கணக்குகளைப் பேரரசருக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும். மத்திய அரசு எவ்வெப்பொழுது படைத்துணை வேண்டுமென ஆணை பிறப்பிக்கிறதோ அப்பொழுதெல்லாம் ஏற்ற இராணுவப் படையினரை அனுப்பி உதவி செய்ய வேண்டும். மற்றும் அரசப் பிரதிநிதி பேரரசருக்கு எதிரியாக மாறி விட்டார் என்று அரசர் கருதினால் அவருக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்படும். பேரரசருக்குத் தம் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு வரியை அனுப்பத் தவறினால் அவரது ஆட்சி பறிமுதல் செய்யப்படுவதோடு பதவியினின்றும் நீக்கப்படுவார். எனவே, அவர்கள் மக்களிடமிருந்து வரியை எவ்வகையிலேனும் வற்புறுத்தி வாங்கிவிடுவார்கள். எனினும், மக்களுக்குத் தேவையான விவசாயத்திற்குரிய உதவிகளைச் செய்வதோடு அவர்களது

சமயநிலைகளைப் பாதுகாத்து மிக்க பொறுப்புடன் நடந்துகொள்வதால், அவர்களது வரிச்சுமைக்கு மனம் தளராது மக்கள் அவர்களோடு ஒத்துழைத்தார்கள்.

விசயநகரப் பேரரசர்கள் அரசினை முன்னோர்களிடமிருந்து பிறப்புரிமையினால் பெற்று ஆண்டு வந்தனர். அவர்களுடைய அரசாட்சி கிராமத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒவ்வொரு கிராமமும் சுய நிறைவு பெற்ற பகுதியாக அமைக்கப் பட்டது. கிராமத்து நிர்வாகம் பஞ்சாயத்தின் மூலமாக நடைபெற்றது. நீதி, நிர்வாகம், பாதுகாப்பு, வரிவசூல் போன்ற பொறுப்புகளைக் கிராமத்தவரே ஏற்று நடத்தினர். அதற்கென உள்ள அதிகாரிகள் பரம்பரையாக வந்தவர்கள். அவர்கள் முறையே கிராமக் கணக்கர் (Village Accountant), தலையாரி (Village Watchman) போன்றவர்களாவர். பேரரசர் கிராம நிர்வாகத்தில் மாகாண யாகாசார்யா (Mahanayakacharya) என்ற அலுவலரின் மூலம் தொடர்பு கொண்டிருந்தார். அவ் வதிகாரி எல்லாக் கிராமங்களையும் மேற்பார்வையிடுகின்ற பொறுப்பில் இருப்பதால் பேரரசருக்கும், கிராம அலுவலர்களுக்கும் தொடர்பாளராக விளங்கினர்.

அரசியல் நிர்வாகம்

மத்திய அரசு

1. **அரசர்:** விசயநகர அரசில் அவ் வரசாட்சிக்கு அரசரே தலைவர். அவரே மிக உயர்ந்த இடத்தில் வைக்கப்படுவார். இந்துக்கள் அரசாட்சியில் ஏழு அங்கங்கள் (Elements) உண்டு. அவற்றில் தலைசிறந்த அங்கம் வகிப்பவர் அரசரே. அவ் வேழு அங்கங்கள் (Seven Limbes) ஆவன.[1]

1. தலைவன் (Lord)
2. அமைச்சன் (Minister)
3. ஜனபதா (Territory)
4. துர்கம் (Fort)
5. கோசா (Treasury)
6. தண்டா (Army)
7. மித்ரா (Ally)

அரசரும் ஏனைய அங்கங்களும் இணைந்து செயல்பட்டால்தான் நாட்டில் நல்லாட்சி நடைபெறும். கிருட்டிணதேவராயர் எழுதிய ஆமுக்த மால்யதாவில் அரசியல் குழுவிலுள்ள ஏழு உறுப்பினர்களில் அரசரே மிக முக்கியமானவராகக் கருதப்படுவார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது அரசாங்கப் புலவர், பேரரசனைத்

1 See for instance, Matsya Pirana, ch. 220. V. 19

(சர்வபௌமா) தம் ஆணைகளைச் செலுத்தும் ஆற்றலைப் பெற்றிருந் தார் எனக் குறிப்பிடுகின்றார். எனவே, அரசரே மத்திய அரசின் தலைவரும் பொறுப்பாளரும் ஆவர்.

2. முடிசூட்டல்: எல்லா இந்து அரசர்களும் முடிசூட்டும் விழாவை நடத்தி வந்துள்ளனர். அதைப் போலவே விசயநகரப் பேரரசர்களும் நடத்தினர். அத்தகைய விழா சட்டப்படி அவர்களை அரசுக்கு உரியவராக்குகின்றது. அவ் விழாவை நடத்துவதற்கென ஒரு தனித் தர்பார் (Court) கூட்டப்படும். அக் கூட்டத்தில் அமைச்சர்கள், அலுவலர்கள், சிற்றரசர்கள், பல இனத்தவர்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள். குமார தூர்ஜடி என்பவர் 'கிருஷ்ணராய விஜயமு' என்ற பாடலில், கிருட்டிண தேவராயரது முடிசூட்டு விழாவுக்குப் பலவகைப்பட்ட தலைவர்கள் கலந்துகொண்டதாகவும், அவர்களில் அரவீடு, புக்கராஜு, நந்தேலா, வேல்கோடு தலைவர்கள் (Nandala and Velgodu) போன்றோரும் வந்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.[1]

அவ் விழாவை நடத்தும் முறை யாதெனில், அரசாங்கப் பிராம்மணப் புரோகிதர் பொன்னாலான நாடாவை (fillet) அரசரின் தலையின் முன்பக்கத்தில் வைப்பார். அதற்குப் பின் இறைவன் திருப்பாடல்களையும், ஏற்ற மந்திரங்களையும் ஓதுவார். புண்ணிய நதிகளிலிருந்து கொண்டுவந்துள்ள புனித நீரால் அரசரைத் தூய்மைப்படுத்துவார். இத்தகைய சடங்குகளுடன் முடிசூட்டுவிழா நடைபெறும்.

அரசரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் அமைச்சர்களுக்கு அதிகப் பங்கும், பொறுப்பும் இருந்தன. எனவே, விசயநகர அரசில் அமைச்சர் பதவி முக்கிய இடம் பெற்றிருந்தது. வீர நரசிம்மரின் மரணத்திற்குப் பின், சாளுவதிம்மர் முதலமைச்சராய் விளங்கியதால், தம் செல்வாக்கினைப் பயன்படுத்தி, நடுநிலைமை. தவறிக் கிருட்டிணதேவராயருக்கு முடிசூட்ட வழிவகுத்தார். எனவே, அமைச்சர்களே அரசரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பில் அதிகப் பங்கு பெற்றிருந்தனர் என்பது தெளிவு.

முடிசூட்டு விழாவின் போது அரசர் தம் நாட்டைச் சிறப்புற ஆட்சி செய்வதாக உறுதிமொழி எடுத்துக்கொள்வது மரபு. விழா நாளன்று அரசர் பொன்னும், பொருளும் கோயில்களுக்கும் பிராமணர்களுக்கும் வழங்குவது வழக்கம். கிருட்டிணதேவராயர் அம் மரபினையொட்டியே தம் விழாவினைச் சிறப்புடன் நடத்தினார்.

[1] S. K. Ayyangar, Sources of Vijayanagar History, p. 129

3. **யுவராஜா - இளவரசு :** பெரும்பாலும் அரசர்கள் தங்களின் மூத்த குமாரனுக்கு இளவரசு பட்டம் சூட்டுவது வழக்கம். விசய நகரப் பேரரசிலும் அத்தகைய முறை பின்பற்றப்பட்டு வந்துள்ளது. அரசர்கள் தம் வாழ்நாள்களில் அவர்களை இளவரசர்களாக்கிப் பின் தம்முடைய அரசையே அவர்கள் பெறும்படியாகச் செய்வார்கள். பொதுவாக இளவரசனுக முடிசூட்டும் விழா (யுவராஜா பட்டாபிஷேகம்) அரசரது குமாரன் அரசோச்சுதல்பற்றிய விவரங்களையும், கொள்கைகளையும் நன்கு அறிந்துகொண்ட பின்னரே நடத்துவது வழக்கம். ஆனால் சில சமயங்களில், அரச குமாரன் வயதில் இளையவனுக இருக்கும்போதே இளவரசு பட்டம் சூட்டுவதும் உண்டு. அதற்குக் காரணம் அரசு புரியும் அரசன், தனக்குப் பின்னுல் தன் மகனுக்கு அரசுரிமை தர மறுப்பார்களோ என்ற அச்சம் இருக்குமானுல், அவனைத் தன் ஆட்சிக் காலத்திலேயே இளவரசாக்கிவிட்டால், அடுத்தபடி தனக்குப் பின்னுல் யாதொரு இடையூறுமின்றி அவன் அரியணையேறலா மென்னும் கருத்தேயாகும். இதற்கு எடுத்துக்காட்டாக, கிருட்டிணதேவராயரையே குறிப்பிடலாம். ராயர் தம் குமாரன் திருமலாவைக் கி. பி. 1524-ல் இளவரசராக்கினுர்.[1] அப்பொழுது அவன் ஆறு வயதான சிறுவனுகவே இருந்தான்.

4. **அரசுதுறத்தல் (Abdication):** அரசர்கள் தம் கடைசிக் காலங்களில் அரியணையைத் தம் சந்ததியினருக்குத் தந்துவிட்டு எஞ்சியுள்ள வாழ்நாளில் இறைவன்பால் பக்தி கொண்டு, அந்தச் சிந்தனையிலேயே காலத்தைக் கழிப்பதுண்டு. அத்தகைய வழியில் கிருட்டிணதேவராயர் சென்றதாக நூனிஸ் என்ற போர்ச்சுகீசிய அறிஞர் கூறுகின்ருர். கிருட்டிணதேவராயர் தம் வயது முதிர்வினை உணர்ந்து, எஞ்சியுள்ள வாழ்நாள்களை மன அமைதியுடன் கழிக்க விரும்பி, தம் குமாரனுக்குத் தாம் உயிருடன் இருக்கும்போது முடிசூட்ட நினைத்தார். அப்போது அவரது மகனுக்கு வயது ஆறு தான் என்ருலும் தம் இறப்புக்குப் பின் அரசு வேறு யாருக்காவது மாறக்கூடுமோ என்ற ஐயத்தால் தம் அரசைத் துறந்து தம் மகனுக்கு அதை அளித்ததோடு, தாமே அவனது அமைச்சராக அமர்ந்தார்.[2]

[1]According to Nuniz Krishnadeva Raya abdicated and enthroned his son Thirumala as the king of Vijayanagar (not as Yuvaraja) and himself became his son's Prime Minister. But it appears as we shall see subsequently that Thirumala was made as Yuvaraja. And Nuniz says that Krishnadeva Raya appointed his half brother Achutadeva Raya his successor which is borne out by a copper plate of Achuta (Epigraphia Carnastaca IX. 30)

[2] Sewell, p. 359.

ஆனால், கிருட்ணதேவராயர் தம் குமாரனை அரசனுக்கு வதற்காகத் தாம் அரசு துறந்ததாகச் சில சான்றுகளிலோ, செப்பேட்டுச் சாதனங்களிலோ குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிய வில்லை. அநேகமாய்த் திருமலாவிற்கு இளவரசு பட்டமளித்ததை, அரசனாக முடிசூட்டிக் கொண்டதாக நூனிஸ் கருதியிருக்கக் கூடுமோ என்ற ஐயம் எழுகின்றது. நூனிஸின் கருத்துகள் நம்பக் கூடியவையாக இல்லை. எடுத்துக்காட்டாக அவர், கிருட்டிணதேவ ராயர் கி.பி. 1509-ல் 20ஆவது வயது நிரம்பியவராகக் காணப் பட்டார் என்று ஓர் இடத்திலும், மற்றோர் இடத்தில் கி. பி. 1524-ல் வயது முதிர்ந்தவராகக் (an old man) காணப்பட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், மகனுக்கு அரசைத் தந்துவிட்டு ஓய்வு கொள்ள விரும்பும் அரசர் மீண்டும் அமைச்சராகப் பணிபுரிந்தார் என்று அவர் குறிப்பிடுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. எனவே, கிருட்டிணதேவராயர் அரசு துறந்தார் என்ற கூற்று ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

5. **அரசரது அலுவல்கள்** (Royal functions): விசயநகர அரசர்கள் தங்களுக்கெனச் சில முக்கியக் கடமைகளையும் பொறுப்புகளையும் ஏற்று வந்தனர். பேரரசரது தலையாய கடமை யாதெனில், தம் ஆட்சிக்குட்பட்ட குடிமக்களுக்குப் பாதுகாப் பளித்தலும், அவரது தேவைகளைப் பூர்த்தி செய்வதுமாகும். அதனை ரக்ஷணம் (Rakshanam) என்பர். அதன்படி அந்நியர் களின் படையெடுப்பினின்றும் தம் குடிமக்களைக் காக்கவேண்டும். கிருட்டிணதேவராயர் காலத்தில் இஸ்லாமியரின் படையெடுப் பின் தொல்லை குறைந்ததெனலாம். மற்றும், நாட்டில் சட்டத்தை யும், ஒழுங்கையும் நிலைநாட்டி, மக்களுக்கு அமைதியான வாழ்வை அளித்தலாகும். கிருட்டிணதேவராயர் எப்பொழுதும் தம் மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதிலும், அவர்களது குறை களைப் போக்குவதிலுமே மிக்க விருப்பமாயிருந்தார்.[1]

கிருட்டிணதேவராயர் காலத்தில் மக்களின் அத்தகைய குறை கள் பல நீக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, சேலம் மாவட்டத்தில் உள்ள ஆரகலூர் (Aragalur) கல்வெட்டில் அரசாங்க அலுவலர் களால் (Rajagarana) கொடுமைப்படுத்தப்பட்டவர்கள், அரசரிடம் முறையிட்டுத் தம் குறைகளைப் போக்கிக் கொண்டிருப்பதாகக் காணப்படுகிறது. தேவியாகுறிச்சியில் (Devia: Kuricci) தங்கி யிருந்த அரசாங்க அலுவலர்கள் 'பெருமாள் கரியவர்' கோயிலின் மூன்று ஸ்தானிகர்களுக்கு (Sthanikas) இழைத்த தீங்கினை

1 Amuctamalyada-Canto IV. V. 205.

அரசரிடம் தெரிவிக்கச் சென்றுர்கள். அவர்களை அமைச்சர் திம்மரசர் அரசரிடம் அறிமுகப்படுத்தி, அவர்களுக்கு நேர்ந்த துன்பங்களை விளக்கி அவர்களது குறைகளைப் போக்கினுர். மேலும், அவர்களுக்கு மாலைகளை அணிவித்துத் தலைப்பாகை தந்து ஒரு குதிரையும், ஒரு குடையும் கொடுத்துப் பொன்பரப்பியிலும், தேவகுறிச்சியிலும் சர்வமான்யமாக (Sarvamanya) 900 குழி நன்செய் நிலத்தையும் வழங்கி அனுப்பினுர் என்று காணப்படுகிறது.[1]

இரண்டாவதாக, அரசன் கடமை யாதெனில் தன் அரசாட்சியில் அறத்தை (Dharma) நிலைநாட்டலாகும். அவ் வறமானது தொன்றுதொட்டு வரும் பழக்கவழக்கங்களையும் வேதத்தையும் அடிப்படையாகக் கொண்டது. விசயநகரப் பேரரசை நிறுவியதே இந்து தர்மம் அழியாமல் பாதுகாக்கப்படுவதற்கே ஆகும். கிருட்டிணதேவராயர் அரசர்களால் தர்மம் (அறம்) பாதுகாக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறியுள்ளார். அவரது நூலில் 'முடிசூட்டப்பட்ட அரசரின் ஒரு கண் தர்மத்தைப் பாதுகாப்பதில் இருக்கவேண்டும். இந்திரன், வருணன், வாயு, அக்கினி போன்ற தெய்வங்களின் வாழ்வே அவ் வறத்தின் பயனில்தான் உள்ளது. பலவகைப்பட்ட புவனங்களும் அறத்திற்குக் கட்டுப்பட்டுள்ளன[2] என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கிருட்டிணதேவராயர் ஞானிகளுக்கும், கற்றுணர்ந்த பெரியோர்கட்கும் வேண்டிய பொருளையும், நிலங்களையும் தானமாக அளித்து வந்தார். மேலும், அரசர்கள் அத்தகையோர்களிடம் பக்தியும் மரியாதையும் காட்ட வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். எனவே, அரசரது சிறந்த கடமையாக அறம் வளர்த்தல் அக் காலத்தில் இருந்தது என்பது புலனுகிறது.

மூன்றுவதாக, அரசனின் கடமை யாதெனில் நீதியைப் பரிபாலிப்பதாகும். நீதியை நிலைநாட்ட, அநீதி இழைத்தோரைத் தண்டிக்க வேண்டும். அரசனே மிக உயர்ந்த நீதிமன்றமாக அக் காலத்தில் விளங்கினுன். கீழ் மன்றங்களில் நீதி வழங்குவதில் தவறு ஏற்பட்டால் அதனுல் பாதிக்கப்பட்டவர் அரசரிடம் நேரில் முறையீடு செய்யலாம். அவர் நீதியை வழங்குவார். கொடூரமான தண்டனைகள் அக் காலத்தில் கொடுக்கப்பட்டன. கிருட்டிண தேவராயர் சிறந்த நீதிமானுக விளங்கினுர் என்று ஆமுக்த மால்யதாவின் மூலம் அறிகிறோம்.

1 Madras Epigraphical Report, 449 of 1913

2 Amucta malyada Canto IV, V. 285.

6. **அரசாங்க அதிகாரங்களைக் கண்காணித்தல்** (Checks on Royal Authority) அரசியலாகிய உடலுக்கு முக்கிய உறுப்பாக அரசர் திகழ்ந்தாலும், தம்மிச்சையாக எச் செயலிலும் ஈடுபடாத வாறு, அவர் கண்காணிக்கப்பட்டு வந்தார். அவரது அதிகாரங்கள் பொதுவாகச் சில சட்டதிட்டங்களுக்கு (Codes and Institutions) உட்பட்டே இயங்கி வந்தன. அரசியல் நிர்ணயச் சட்டங்கள் தோன்றி அக்காலத்தில் அரசரது அதிகாரங்களை அவை அடக்கியது கிடையாது. ஆனால், அவரது அரசாங்க நிர்வாகம் பாரம்பரிய வழக்கத்திற்கும் (Conventions) அனுபவத்திற்கும் உட் பட்டு இருந்தது. எனவே, அரசரது அதிகாரங்கள் பல்வேறு ஏதுக்களால் கட்டுப்படுத்தப்பட்டன.

விசயநகர அரசர்கள், ஏற்கெனவே நாட்டில் நிலவிவந்த சட்ட திட்டங்களை மதித்தனர். அச் சட்டங்கள் வேதங்கள், ஸ்மிருதி கள், தர்ம சாஸ்திரங்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப் பெற்ற வையாகும். அரசரை ஆண்டவனின் மறுபிறவியாக அக் காலத் தில் எண்ணினர். கிருட்டிணதேவராயர், 'மனு முதலியோர் அறத்தைக் கடைப்பிடித்தவர்'களென்றும், 'அவர்கள் குற்றம் செய்தோரைத் தண்டித்து நீதியை நிலைநாட்டினர்' என்றும், 'கடவுளுக்குச் சமமாகக் கருதப்படும் அரசன் மக்களின் துன்பத்தை நீக்கி அவர்களைக் காக்க வேண்டும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.[1]

அரசரது அதிகாரங்களைக் கட்டுப்படுத்த உதவுவது அரசாங்கச் சபை (Royal Council) ஆகும். அரசர்கள் அத்தகைய சபையைக் கலக்காமல் அரசாங்கக் கொள்கைகள் எவற்றையும் செயல் படுத்தமாட்டார்கள். அச் சபை அரசருக்கு முடிசூட்டுவது, அரசாங்க நிர்வாகத்தினை அரசருக்கு உதவியாக இருந்து ஆற்றுவது ஆகியவற்றைக் கவனித்து வந்தது. கிருட்டிணதேவ ராயர் அவர் காலத்திய அரசாங்க சபையைக் கலந்து ஆலோசித்து முடிவெடுக்காமல் எந்தச் செயலிலும் ஈடுபடுவது கிடையாது. இதைப் பற்றிக் கிருட்டிணராய விஜயமு பின்வரும் கருத்தினை வெளிப்படுத்துகிறது.

'ராயர் முடிசூட்டிக் கொண்டவுடன் தம் அமைச்சர்களை அரசாங்கக் கருவூலத்தில் உள்ள பொருளின் அளவினையும், படை பலத்தினையும் கேட்டார். அமைச்சர்கள் அவர்கள் கேட்ட வற்றிற்கு ஏற்ற விவரங்களைத் தந்தனர்.[2] அதைப் போலவே முஸ்லிம்களை வென்றபின், ராயர் சாளுவ திம்மாவை மேற்கொண்டு

1 Amucta-Canto IV. V. 285
2 S. K. Iyangar Sources, p. 130

முகம்மதியரது ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் படையெடுத்துச் செல்லலாமா என்று கேட்க, அவர் அத் தருணத்தில் படையெடுப்பு ஏற்றதன்று என்று ஆலோசனை கூறியவுடன் அவர் ஆலோசனையை ஏற்றுப் போரை நிறுத்தினர்.[1]

எனவே, ராயர் பலவிதக் கட்டுப்பாடுகளுடன் ஆட்சியைத் திறம்பட நடத்தினர் என்பது வெளிப்படை. ஆட்சிபற்றிக் கிருட்டிண தேவராயரது கருத்து ஆமுக்த மால்யதாவில் சிறப்பாகக் கொடுக்கப் பட்டுள்ளது. 'உன் ஆட்சிக்குட்பட்ட மக்களை எப்பாழுதும் காப்பாயாக. எந்த அரசன் தன் மக்களின் முன்னேற்றத்திற்கும் வளமான வாழ்வுக்கும் பாடுபடுகின்ருனே, அம் மக்கள், அவ் வரசனின் நலத்தினைப் போற்றிக் காப்பார்கள்'[2] ராயரின் அவைக் களப் புலவர் அல்லசானி பெத்தண்ணவும் கிருட்டிணதேவ ராயரை மனுவுக்கு ஒப்பிடுவது போல் அரசரது ஆட்சிச் சிறப்பைப் பின்வருமாறு விளக்குகின்ருர். 'மனு தம் குடிமக்களை அன்போடு தம் குழந்தைகளாகப் பாவித்து ஆட்சி நடத்தினர்.'[3]

(அ) பேரரசின் சபை

(The Imperial Council)

அமைச்சர்கள் குழுவுடன் அரசியல் பொறுப்பினைக் கவனிக்க உறுப்பினர் அதிகம் கொண்ட ஒரு சபை இருந்தது. 'மனு சரிதமு' என்ற நூலில் கிருட்டிணதேவராயர் இத்தகைய ஒரு சபையைத் தமக்கு ஆலோசனைகூற வைத்திருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அச் சபையில் அமரநாயகர்கள், அவர்களது பிரதிநிதிகள், சிற்றரசர் கள், இளவரசர்கள், தளவாய்கள், வியாபாரிகள், அந்நிய நாட்டு அரசதூதர்கள் ஆகியோர் கலந்துகொண்டதாகத் தெரிகிறது. கிருட்டிணதேவராயர் தாம் எழுதிய நூலில் இத்தகைய சபை[4] ஒன்றினைத் தாம் அமைத்ததாகவும் அதற்கு அந்நிய நாட்டுத் தூதர்களையும் கலந்து கொள்ளுமாறு செய்ததாகவும் குறிப்பிட் டுள்ளார்.[5] அச் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை மிக அதிக மாயிருந்தது. அரசர்களின் விருப்பப்படி அவரவர்கள் காலத்தில் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை மட்டும் எட்டு முதல் பத்து வரை தான் இருந்தது.

1 S. K. Iyangar Sources, p. 181
2 Amucta. Canto IV. V. 205, 206.
3 Manucaritam. Canto VI. V. 117
4 Manucaritam. Canto. I. V. 12-13.
5 Amucta. Canto I.

ஒவ்வோர் அமைச்சர்க்கும், ஒரு பொறுப்பு வழங்கப் பட்டிருந்தது. அப் பொறுப்பின் பெயராலே அவர் அழைக்கப் படுவார். சில இலாக்காக்களின் முதன்மை அரசாங்க அலுவலர், அமைச்சர் சபையில் இடம் பெற்றனர். அமைச்சர் அவை இரண்டு பிரிவினர்களைக் கொண்டதாக இருந்தது. முதற் பிரிவில் பிரதம அமைச்சர், அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், பல்வேறு இலாக்காக்களின் முதன்மை அரசாங்க அலுவலர்கள் ஆகியோர் இடம் பெற்றனர். இரண்டாம் பிரிவில் அரசரது இரத்தத் தொடர் புடைய உறவினர்கள் இடம் பெற்றனர். எனவே, நூனிஸ் குறிப் பிட்டபடி இத்தகைய இரு பிரிவினர்கள் இடம் பெற்றிருப்பராயின், அமைச்சர் அவையில் 20 அமைச்சர்கள் இருந்தனர் என்று கொள்வது தவறன்று.

அமைச்சர் அவையில் புரோகிதர் முக்கியமான இடம் பெற்றிருந்தார். அவருக்கு அரசர்கள் சிறந்த மதிப்பும் அளித்தனர். அவர்கள் பின்னர் அரசியல் நிர்வாகத்தில் கவனம் செலுத்தாமல் சமயச் சார்பில் குருவாக விளங்கி வந்தனர்.

அமைச்சர் அவைக்கு ஒரு தலைவர் உண்டு. அவர் தலைமை யில் அச் சபை கூட்டப்பெறும். பிரதம அமைச்சரே அதற்குத் தலைவராக இருப்பது வழக்கம். கிருட்டிணதேவராயர் கஜபதியுடன் போர் நிகழ்த்தவேண்டிய நேரத்தில் தம்முடைய அமைச்சர் அவை யைக் கலந்துகொண்டு அப் போரில் ஈடுபட்டதாகத் தெரிகின்றது.[1] மிக முக்கியமான சிக்கலான தலைப்புப்பற்றி ஆலோசனை செய்ய வேண்டியிருப்பின் அத் தருணத்தில் அரசரே தலைமை தாங்கி அமைச்சர் அவையைக் கூட்டி விவாதிப்பதும் உண்டு. அமைச்சர் அவையில் ஆலோசித்து முடிவெடுத்த கருத்துகள் இரகசியமாகக் காக்கப்பட வேண்டுமேயன்றி, எந்த உறுப்பினரும் வெளிப்படுத்தக் கூடாது. கிருட்டிணதேவராயர் இத்தகைய கோட்பாட்டினை மிக வற்புறுத்திச் சபையின் இரகசியத்தைப் பாதுகாத்தார் என்று தெரிகின்றது.[2]

அமைச்சர் பதவிக்கு நியமிக்க வேண்டியவர்களுக்குச் சில தகுதிகள் வற்புறுத்தப்பட்டன. அவை கல்வியறிவு, அதர்மத்துக்கு அஞ்சுதல், ராஜநீதிகளை நன்கு அறிந்திருத்தல், வயது 50-70-க்குள் இருத்தல், உடல் நலத்துடன் காணப்படல், பரம்பரை யாக அரசத் தொடர்புடையவராயிருத்தல், அரசருக்கு நம்பிக்கை

1 Sewell, p. 324—325

2 Amucta-Canto IV. V. 252

யுள்ளவராக இருத்தல் போன்றவையாகும். கிருட்டிணதேவராயர் அத்தகைய பண்புடைய அமைச்சர் கிடைப்பின் ஒரே நாளில் அரசரது அங்கங்கள் நன்கு வளர்ந்து பூர்த்தியாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.[1] அமைச்சர்கள் பதவியும், பாரம்பரியமாக இருத்தல் நல்லது என்று அக் கால அரசர்கள் கருதினர். அக் கருத்தைக் கிருட்டிணதேவராயர் மிகவும் வலியுறுத்துவதோடு அதனைப் பின்பற்றினர். ஆனால், எப்பொழுதும் அமைச்சரும் அரசரும் நட்புறவிலேயே இருந்திருப்பார்கள் என்று கூறவும் முடியாது. சிறந்த அரசரான கிருட்டிணதேவராயரே தம் மகன் இறந்த ஆத்திரத்தில் தம் அரச வாழ்வுக்கு வழிகோலிய அமைச்சர் சாளுவ திம்மரின் கண்களைக் குருடாக்கிச் சிறையில் அடைத்துள்ளார். அது மட்டுமன்றித் திம்மரது குமாரனை திம்மண்ணையையும் அவரது சகோதரர் கோவிந்த ராயரையும், தம் குமாரன் கொலைக்குக் காரணமென்று எண்ணி, கண்களைப் பிடுங்கிச் சிறையில் அடைத்தார் என்றால் அரசரும் அமைச்சரும் என்றும் நட்புறவு உடையவர்கள் என்று கூறுவதற்கில்லை.

அமைச்சர் அவை, மிக்க அதிகாரமுடைய ஓர் அமைப்பாக உள்ளதால் அரசர்கள் அச் சபையினைக் கலந்தே எந்த முடிவுக்கும் வருவர். கிருட்டிணதேவராயர் அமைச்சர் அவையில் உறுப்பினர்களுக்குள் கருத்துவேறுபாடுகள் வருமாயின், சபையை ஒத்திப் போட்டுவிட்டு, மாற்றுக் கருத்துடையோரிடம் தனியே கலந்து பேசி முடிவுக்கு வருவது வழக்கம்.[2] மேலும், அரசியல் நிர்வாக நிலைகளுள் எல்லாவற்றையும் ராயர் தம் அமைச்சர் அவையில் கலப்பதில்லை. மிக இன்றியமையாத, சிக்கலான அரசாங்கச் செய்திகளையே கலந்து ஆலோசிப்பார். அதனோடு பொறுப்பின்றிப் பேசும் அமைச்சர்களை அவர் அதிகமாகக் கலப்பதே கிடையாது. ஏனெனில், அத்தகையோர் தொல்லை யேற்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்கிவிடுவார்கள் என்று அவருக்கு நன்கு தெரியும்.[3] கௌடில்யரைப் போலக் கிருட்டிணதேவராயர், அமைச்சர்களுடைய செயல்களையெல்லாம் கவனித்து, தமக்குத் தெரிவிக்குமாறு ஒற்றர்கள் பலரை நியமித்தார். இல்லையென்றால் அமைச்சர்கள் அரசரது நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவசியமற்ற வேலைகளில் ஈடுபடுவார்கள் என்ற கருத்து அவர்பால் இருந்தது.[4] மிக்க வலிமையுடைய அரசர்கள், அமைச்சர் அவைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. என்றாலும், அரசருக்கு

1 Ibid Canto IV V. 211
2 Amucta-Canto IV. V. 227.
3 Ibid-VV 212, 213.
4 Ibid, V. 266.

முடி சூட்டும் பொறுப்பினை அமைச்சர் அவையே வைத்துக் கொண்டிருந்தது. கிருட்டிணதேவராயர் போன்ற சிறந்த பேரரசர்களே அமைச்சர் அவைக்குச் சில சமயங்களில் கைப்பொம்மையாக ஆக வேண்டியிருந்தது. கிருட்டிணதேவராயர் ஒரு சமயம் தாம் தனிமொழியாக 'நான் அரண்மனையில் அமர்ந்திருக்கின்றேன். ஆனால், இவ் வுலகம் அமைச்சர்களால் ஆளப்படுகிறது. யார் என் சொல்லை ஏற்பார்கள்?' எனக் கூறியுள்ளார்.[1]

இனி அமைச்சர் அவையின் ஆலோசனையை (அ) முடிவினை எந்த அளவு பேரரசர் ஏற்றுக்கொண்டனர் என்று பார்ப்போம். நூனிஸ் குறிப்பிட்டுள்ளபடி பார்த்தால் கிருட்டிணதேவராயர் சபையின் ஆலோசனைகளை ஏற்க மறுத்ததாகத் தெரிகின்றது. சபையின் உறுப்பினர்கள் பீஜப்பூரின்மீது படையெடுப்பதற்கான காரணம் மிகவும் அற்பமானது (petty) என்று கூறி அரசர் அத்தகைய படையெடுப்புப்பற்றி உலகம் என்ன நினைக்கும் என எண்ணிப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். ராயரோ அவர்களது ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார். எனவே, சபையினர் தங்களது ஆலோசனையைக் கேளாது அவர் போருக்குச் செல்வதைத் தடுக்க முடியாமல் அவரது போக்கிலேயே விட்டுவிட்டனர். என்றாலும், தாங்கள் கூறிய போருக்குச் செல்லும் வழி (route) யினையாவது ஏற்றுக்கொண்டாரே, அது போதும் என்று வாளாவிருந்தனர்.[2] எனவே, கிருட்டிணதேவராயர் தாம் செய்யும் செயல் அவசியமானது எனக் கருதினால், அமைச்சர் அவையைத் தம்முடைய கருத்துக்குப் பணியுமாறு செய்யும் வல்லமையைப் பெற்றிருந்தார். அமைச்சர்களுக்கு அக் காலத்தில் வழங்கப்பட்ட பெயர்கள் அதிகார வரிசையில் பின்வருமாறு உள்ளன.

உப பிரதானி (U Pradani), பிரதானி, மஹா பிரதானி, சிர பிரதானி, சர்வ பிரதானி என்பதாம்.

(ஆ) மாநில ஆளுநர்கள்

அரச பரம்பரையைச் சார்ந்தவர்களையே பெரும்பாலும் ஆளுநர்களாக நியமிப்பது வழக்கம். இளவரசர்களாயிருப்பவர்கள் மாநில ஆளுநராகச் சென்றதும் 'உடையார்' என்ற பட்டத்தைப் பெற்றனர். என்றாலும், நல்ல அரசியல் நிர்வாகத் திறமையுடைய சிறந்த மத்திய அரசில் உள்ள அலுவலர்களையும், கவர்னர்களாக நியமிப்பதுண்டு. அவர்களைத் 'தண்ட நாயகர்கள்' என்றழைப்பர்.

1 Rayavachakam Journel of the Telugu Academy, III p. 30.

2 Sewell, p. 324-25.

அவர்கள் ஆட்சி எல்லைகுட்பட்ட இடத்தில், ஆளுநர்கள் முழுச் சுதந்திரத்துடன் ஆண்டு வந்தனர். தாங்களே சபைகளை அமைத்துக்கொள்ளவும் அரசாங்க அலுவலர்களை நியமிக்கவும், படை திரட்டிப் பாதுகாப்புக்கு வைத்துக் கொள்ளவுமான சலுகைகளைப் பெற்றிருந்தனர். மேலும், மத்திய அரசின் ஆணையின்றித் தாங்களே நாணயங்கள் அச்சிடவும் உரிமை பெற்றிருந்தனர். அரச பரம்பரையினர் பதவிக்கு வந்தால் அவர்கள் தங்கள் மரபின் பெயரை முன் வைத்துக்கொண்டு, தங்கள் பெயரை அழைப்பதும் வழக்கமாயிருந்தது.

ராயர் காலத்தில், ஆளுநர் நியமனம் அமைச்சர் சபையைக் கலந்தே நடைபெற்றது. அத்தகைய நியமனங்கள் பேரரசரது இலச்சினை (முத்திரை) பொறித்த ஆணையின் பேரில் நடைபெறும்.

எவ்வெப்பொழுது மக்கள் மூலம் மாநில ஆளுநர்கள் தங்களை அடக்குமுறையினால் துன்புறுத்துகிறார்களென்று பேரரசருக்குச் செய்தி கிடைக்கிறதோ, அப்பொழுதுதான் பேரரசர், மக்கள் நலனுக்காக மாநில ஆட்சியில் தலையிட்டு ஆவன செய்வார். மாநில ஆளுநர்கள் அரசரால் நிர்ணயிக்கப்பட்ட வரிகளை ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் முதல் ஒன்பது நாள்களுக்குள் வசூலித்து அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திவிடவேண்டும். அத் தேதிக்கு முன்னரும் அவர்கள் செலுத்தலாம்.[1] அவர்கள் ஆட்சிக்குட்பட்ட இடத்தில், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டும். பேரரசர் தம் அமைச்சர்களில் சிலரை ஆளுநர்களாக நியமிப்பதும் உண்டு. எடுத்துக்காட்டாகப் பிரதம மந்திரியான சாளுவ திம்மரை, ராயர், கொண்டவீடு வெற்றிக்குப்பின், அதன் ஆளுநராக நியமித்துள்ளதைக் கூறலாம்.[2]

(இ) செயலகம்

(The Secretariat)

விசயநகரப் பேரரசு மிகப் பரந்திருந்தமையால் அதனை ஓர் அரசர் தம் அமைச்சர் அவை துணைகொண்டு மட்டும் ஆட்சிபுரிதல் கடினம். எனவே, அரசாங்கத்தைப் பல துறைகளாக, இலாக்காக்களாகப் பிரித்து ஒவ்வொன்றும் ஓர் அரசாங்க அலுவலர் பொறுப்பில் விடப்பட்டது. அத்தகைய பலவகைத் துறைகளுக்கான அலுவலகங்களைச் செயலகம் என அழைத்தனர்.

1 Sewell, p. 389.
2 E. I. VI p. 110.

கிருட்டிணதேவராயர் இத்தகைய செயலகத்தின் அவசியத்தை உணர்ந்து ஆமுக்த மால்யதாவில் பின்வருமாறு குறிப்பிடுகின்ருர். 'ஒரு தனி அலுவலரிடம் ஒப்படைக்கும் வேலைப் பொறுப்பினை அவர் தலைமையின்கீழ் அவரது நண்பர்கள் பலரிடம் பிரித்து ஒப்படைக்கும் போது, அவ் வேலை எளிதிலேயும் விரைவிலேயும் முடிக்கப் பெறும். அவ்வாறு பல்வேறு துறையில் உள்ள எல்லா அலுவலகப் பணியாளர்களின் ஒத்துழைப்பின்றி எந்தச் செயலையும் வெற்றிகரமாக முடிக்க முடியாது. அலுவலர்களின் உண்மையான உழைப்பும், கீழ்ப்படிந்து செல்லும் ஒழுக்கமும், சோம்பலும் கொடூரமும் அற்ற தன்மையும்தாம் பெரிதும் உதவியாக இருக்க முடியும்' என்பதாம்.[1]

கல்வெட்டுகளில் 'இராயசம்' என்று ஓர் அலுவலகம், அரசருக்கு உதவியாக இருந்ததாகக் காணப்படுகிறது. இராயசம் என்பதன் பொருள் எழுதும் தொழிலைப்பற்றியது என்பதாகத் தெரிகின்றது. எனவே, அரசரது ஆணைகளை எழுத்து மூலமாக வெளியிடுவது அவ் வலுவலகத்தவர் பணியாக இருந்திருக்கக்கூடும் என அறிகின்ருேம். பேரரசர்கள் தங்கள் ஆணைகளைத் தாங்களே எழுத்தின் மூலம் தெரிவித்ததாகத் தெரியவில்லை. இதுபற்றி நூனிஸ் 'அரசர் யாருக்காவது நன்மை செய்ய விரும்பினல் அவரது விருப்பத்தை அரசாங்கம் சம்பந்தப்பட்ட செயலர் தங்கள் பதிவேடுகளில் (Registers) அவற்றைக் குறித்துவைப்பார். என்ருலும் பேரரசர் அந் நன்மையைப் பெறுகின்றவருக்கு அரக்கில் (wax) தம் அரசாங்க மோதிரத்தின் அடையாளத்தைப் பதித்து எழுத்துமூல உத்தரவுக்குப் பதிலாகக் கொடுப்பது வழக்கம்,' என்று கூறுகிருர்.[2]

அடுத்துக் 'காரணீகம்', என்ற ஓர் அலுவலகம் இருந்ததாகவும் கல்வெட்டின் மூலம் தெரிகின்றது. காரணீகர் என்று கணக்கு வைப்போரை (Accountant) அழைத்திருக்கலாமென்று தோன்றுகிறது. கிருட்டிணதேவராயர் காலத்தில் மனகாரசய்யா (Managarasayya) என்பவர் வாசல் காரணீகராக இருந்தார் என்று வட ஆர்க்காடு மாவட்டக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.[3]

அதனுடன் பேரரசர் தம் அரண்மனைப் பொறுப்புகளைக் கவனிக்கப் பல அலுவலர்களை (Establishment) நியமித்திருந்தார். அவர்களில் முக்கியமானவர் சர்வநாயகர் (Sarva Nayaka) என்பவராவார். அவரை அரண்மனை அமைச்சர் (House Minister) என்றும்

1 Canto IV. V. 214-15.
2 Sewell, p. 35.
3 South Indian Inscriptions-No. 52 in Vol. V. p. 1515-16.

அழைப்பதுண்டு.[1] அவர் அரசரது அரண்மனைக் காரியங்களையும், அரசருக்குத் தேவையான வசதிகளையும் கவனித்துக் கொள்ளும் பொறுப்புடன், அரண்மனை வேலையாள்களைக் கண்காணித்தும் வந்தார். அவருக்குக் கீழ்ப் பல வேலையாள்கள் இருந்தனர். அவர்களில் அடைப்பக்காரர்கள் (betel bearers), பஞ்சாங்கத்தார் (Calender), சாசனுச்சாரியர் (Person in charge of inscriptions), புலவர்கள் ஆகியோர் முக்கியமானவர்கள். முகப்பாவாடை என்ற ஓர் அலுவலர் இருந்ததாகக் கல்வெட்டில் காணப்படுகிறது. அவர் கம்பளங்கள், திரைச் சீலைகள் மற்றும் அரண்மனை விழாக்களுக்குத் தேவையான பொருள்கள் ஆகியவற்றினைக் கவனித்துக் கொள்வார்.

அரசரது அரசாங்க முத்திரைப் பொறுப்பினைக் கவனிக்க ஒரு தனி அலுவலர் உண்டு. அவருக்கு நாட்டில் மதிப்பு அதிகம். அரசர் யாரிடம் தமக்கு அதிக நம்பிக்கை உண்டோ, அவரைத் தாம் அந்தப் பதவியில் நியமிப்பார். அவரை முத்திரக் கர்த்தா (Mudra Karta) என்றழைப்பர். அவருக்கு உதவியாக மேற்கொண்டு இருவர் இருந்தனர். அவர்களை முறையே ஆக்ஞாதாரகா (Ajnadaraka), ஆக்ஞாபரிபாலகா (Ajna Paripalaka) என்று அழைப்பர். அவர்கள் அரசரது ஆணையை நிறைவேற்றும் பொறுப்பினை உடையவர்களாவர்.[2]

வாசல் காரியம் (Vasal Kariyam) என்ற ஓர் அலுவலர் உண்டு. அவர் பதவி முக்கியமானதும், பெருமை வாய்ந்ததும் ஆகும். அவர் அரண்மனை வாசல்களைக் காக்க ஆள்களை நியமித்துப் பராமரித்து வருவார். யாராவது அரசரைக் காண விரும்பினால் வாசல் காரியத்தாரது அனுமதி பெற்றுத்தான் உள்ளே வர வேண்டும். பயஸ், நூனிஸ் ஆகிய இரு அறிஞர்களும் இவரைப் பாதுகாவலரின் தலைவன் (Chief of the Guard) என்று அழைக்கின்றனர். போர்க்களத்தில் ஒரு பகுதிப் படைக்கு இவர் தலைவராக விளங்குவார்.[3] கிருட்டிணதேவராயர் ரெய்ச்சூரை முற்றுகையிட்ட போது காமநாயகா என்ற பேரரசரின் பாதுகாப்புத் தலைவர் 30 ஆயிரம் பேர்கொண்ட வில்வீரர்கள், கேடயம் தாங்கியோர், ஈட்டி வீரர்கள் ஆகிய படையையும், ஆயிரம் குதிரைப் படையையும், ஆறு யானைப் படையையும் அணி வகுத்துத் தலைமை தாங்கி நடத்திச் சென்றார்.[4] எனவே, அக்காலத்தில் வாசல் காரியம் என்ற அலுவலர் மிக்க பொறுப்புடையவராக விளங்கினர்.

1 E. C. IV 59
2 E. C. IV CN 145.
3 Sewell, 263, 326.
4 Sewell, 326. 329.

(ஈ) அரசாங்கக் கோட்பாடுகள்

ராயர் முடிசூட்டிக் கொண்டதும் அப்பாஜி, அய்யமராஜு, கொண்டமராஜு, பாச்சாரர்ஜு ஆகிய நான்கு அமைச்சர்களையும் தனியாக அழைத்து, அரசியல் நிர்வாகத்தில் கைக்கொள்ள வேண்டியவை, நீக்க வேண்டியவை யாவையெனக் கேட்டார். அதற்கு அவர்கள் நாட்டின் தலைவனுக்கு இருக்கவேண்டிய சில நற்பண்புகளை விளக்கினர்கள். அவை: (1) அரசாங்க அங்கங்களாக விளங்கும் அரசர், அமைச்சர், நண்பர் (Ally), கருவூலம் (Treasury), நாடு, கோட்டை, படை ஆகிய ஏழினையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். (2) தானம் செய்வதற்கான ஏழு வகைகளான சிவிகை, ஆடை, அணிகலன், ஊர்திகள், அரசாங்கப் பதவி அளித்தல், வாசனைத் திரவியம், தாம்பூலம் முதலியவற்றைத் தகுதிக்கு ஏற்ப அறிந்து செய்யவேண்டும். (3) அதே சமயம் ஏழு வகைத் தீய வழிகளான பிற மாதர், சூதாட்டம், குடி, வேட்டை, அகங்காரப் பேச்சு, பொதுநீதியை அழித்தல் போன்றவற்றில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். (4) ஏழு வகையான சந்தானங்களைப் பெறவேண்டும். அவை நீர் நிலைத்தோடல், அக்ரஹாரம் அமைத்தல், கோயில் எழுப்புதல், பூந்தோட்டம் போடல், தன்னைப்பற்றிப் பாடல் பாடச் செய்தல், ஆண்மகனை ஈன்றெடுத்தல், பொருள்தேடல் முதலியவை ஆகும். (5) மேலும் அரசரைச் சுற்றி எழுவர் இருத்தல்வேண்டும். அவர்கள் முறையே புலவர்கள், அறிவாளிகள் (Scholars), புராணம் கூறுவோர், இதிகாசம் கூறுவோர், கட்டியம் கூறுவோர், விகடகவிகள், நடன மாதுகள் ஆவர். (6) தீயவற்றை நீக்கி நல்லவற்றைப் போற்றுதல் வேண்டும் என்பதாம்.

அவற்றைக் கேட்ட ராயர், பொருளை அதிகரிக்க யாது செய்யலாம் என அமைச்சர்களைக் கேட்க, அவர்கள் கூறிய மொழி, 'அறவழியில் ஆட்சி செய்தால் மாதம் மும்மாரி பெய்யும்; நிலவளம் கொழிக்கும்; பொருளாதாரம் மக்களிடம் மிகுதியாக வரும்; ஏற்ற வரிகளை மக்களுக்குத் தீமையின்றி விதித்தால் கருவூலம் நிரம்பி விடும்'[1] என்பதாம்.

(உ) நிர்வாகம் சரிவர நடைபெறக் கையாண்ட முறைகள்

அரசர் தம்மாட்சிக்குட்பட்ட கோட்டைகள், மண்டலங்கள், கோயில்கள், புனித இடங்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரை

[1] O, Krishna Devaraya, Justice is the means of increasing the prosperity of the people and the prosperity of the people is the source of wealth, justice, therefore, is the treasure house of kings. Rayavachakam, 17-28.

நேரில் காணத் தம் படையுடன் புறப்படுவார். அதனுல் மாற்ருர் களுக்கும், சிற்றரசர்களுக்கும் அவரைப் பற்றி அச்சம் எழும். அமைச்சர்கள் முன்கூட்டி ஆங்காங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்ள விரைவாகவும், புத்தி சாதுர்யமாகவும் நடந்துகொள்ளும் ஒற்றர்களைப் பல இடங்களுக்கும் போக்குவர்.

நகரங்களில் உள்ளவருக்கு, சட்டத்துக்கு விரோதமாக நடப்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்ற ஆணையைப் பிறப்பிப்பார். பகலில் தம் அலுவல்கள் முடிந்த பிறகு இரவு அமைச்சர்களைக் கலந்து ஆலோசிப்பார். அமைச்சர்கள் சென்றபின் நகரைச் சுற்றி வருவார். நகரத்தில் நடைபெறும் செயல்கள் அனைத்தையும் புரிந்துகொண்டு விடியற்காலை அரண் மனைக்குத் திரும்புவார். சற்று ஓய்வு எடுத்துக்கொள்வார். காலை எழுந்ததும் தம் கடன்களை முடித்துக்கொண்டு ஒரு சிறிய தர்பார் நடத்துவார். பிறகு பெரிய சபா மண்டபத்தில் வீற்றிருந்து ஜங்க மய்யா என்ற தலையாரியை அழைத்து அன்றைய முன்னிரவு என்ன நிகழ்ச்சி நடந்தது என விசாரிப்பார். அவர் கூறுகின்றவை தாம் நேரில் கண்டும், கேட்டும் வந்தவைக்கு ஒத்திருந்தால் அமைதியாகக் கேட்டுக்கொள்வார். அவ்வாறில்லையேல் அவன் மீது கோபித்துக் கொண்டு ஆத்திரத்துடன் பேசுவார். ‘உனக்கு இன்ன பிரிவில், இன்ன தெருவில், இன்ன வரிசையில், இன்ன வீட்டில் நடந்த செய்தி தெரியாதா? உன்மீது குற்றம் சுமத்துவதில் என்ன பயன்? உன் தலையாரிகமும் என் அரசாட்சியும் மிகவும் அழகாய்த்தான் நடைபெறுகிறது’ என்பார். தலையாரி மிக்க பயத்துடன், தன்கீழ்ப் பணிபுரிபவர்களை இரவு பகலாக அவ்வப் போது நகரில் நடைபெறுவனவற்றை ஒழுங்காகவும் விரைவாகவும் சொல்ல ஏற்பாடு செய்வான். இவ்வாறு நிர்வாகம் சிறப்புடன் நடைபெறப் பேரரசரே பெருமுயற்சி எடுத்துக்கொள்வார்.

(viii) வருமானமும் செலவினங்களும்

வருமானம்

விசயநகரப் பேரரசின் வருமானத்தில் பெரும் பங்கு நிலவரி மூலமே ஆகும். வருவாய்த்துறை நிர்வாகம் சிறந்த முறையில் ஓர் இலாக்காவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கு ‘அதவானே’ (Athavane) என்று பெயர். பேரரசர் காலத்தில் நிலங்களை மூன்று தரங்களாகப் பிரித்திருந்தனர். அவை முறையே நன்செய், புன்செய், தோட்டங்கள் என்பனவாகும். அந் நிலத் தரங்களை ஒட்டியே அவற்றிற்கான வரி நிர்ணயிக்கப்பட்டது. அந் நில உரிமையாளர்கள் அரசாங்கத்திற்கு நிலவரி செலுத்த

வேண்டும். நில வருமானத்தில் ஆறில் ஒரு பங்கு நிலவரியாக விதிக்கப்பட்டது என்ருலும் போர்க்காலங்களிலும், வேறு இன்றியமையாத செலவுகள் அரசாங்கத்திற்கு எழுகின்ற போதும் நில வரியை ஒரு சிறிது உயர்த்துவது வழக்கம். ஆனல், நூனிஸ் (Nuniz) என்ற அறிஞர், நிலச்சொந்தக்காரர் தம் வருமானத்தில் பத்தில் ஒரு பாகம் அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அவர் தரும் குறிப்புப் பொருத்தமானதாகப் படவில்லே.

நிலவரி தவிர ஆடுமாடு மேய்த்தல்வரி, திருமணவரி போன்ற வரிகளே மக்கள் செலுத்தவேண்டியிருந்தது. கிருட்டிணதேவராயர் பேரரசரான பின், சாளுவ திம்மரின் ஆலோசனேயின் பேரில் திருமண வரியை நீக்கினர். மேலும், சுங்கவரி (Customs duty), சாலேகளில் உள்ள எல்லேச் சுங்கவரி (Tolls), தோட்டப் பயிர்களுக்கான வரி, வாணிக வரி, தொழில் வரி போன்ற வரிகளின் மூலம், ராயர் தம் ஆட்சியின் வருமானத்தை அதிகப்படுத்தினர். வரிகளேப் பணமாகவோ, பொருளாகவோ அரசாங்கத்திற்கு அளிக்கும் வழக்கம் இருந்தது.

வரிச்சுமை சற்று அதிகமாய் இருப்பதால் பொதுமக்களிடம் வரி வசூல் செய்வது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மிக்க சிரமமாயிருந்ததென்ருலும், பொதுமக்களின் குறைகளே அரசாங்கம் கேட்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகளேச் செய்து கொடுத்தது. அதனுடன் வரிச்சுமை அதிகமென மக்கள் சொல்லுங்கால் வரியின் விகிதாச்சாரத்தைப் பேரரசர் குறைத்துள்ளார். பருவமழை தவறி, விவசாயம் சரியில்லாத போது நிலவரியைத் தள்ளுபடி செய்துள்ளார். மக்கள் நேரிடையாக அரசரைச் சந்தித்து வேண்டிய சலுகைகளேப் பெற்றிருந்ததால் யாரும் அரசரைப்பற்றிக் குறை கூறியதில்லே. பேரரசர் தம் வருமானத்திலிருந்து அரண்மனேயைப் பழுது பார்க்கவும், படைகளேத் திறம்பட அமைக்கவும், அறச்செயல்கள் புரியவுமே முக்கியச் செலவு செய்ததாக அறிகிருேம். கிருட்டிணதேவராயர் முக்கியச் செலவினத்திற்கென்று ஒரு கொள்கையை வகுத்தார். அதன்படி அவர் தம் வருவாயை நான்கு சமபாகங்களாகப் பிரித்தார். ஒரு பாகத்தை அரண்மனே நிர்வாகத்திற்கும், அறச் செயல்களுக்கும் செலவிட்டார். இரு பாகங்களேப் படைப் பராமரிப்புச் செலவுக்கென ஒதுக்கி வைத்தார். எஞ்சியுள்ள ஒரு பாகத்தைக் கருவூலச் சேமிப்புக் கணக்கில் சேர்த்தார். அக் கருவூலத்தில் சேர்ந்துவரும் அத் தொகை அவசரகாலத் தேவைக்குப் பயன் படுத்தப்பட்டது.

வரிகள்

அப்துர் ரஸாக் (Abdur Razzak), நூனிஸ் (Nuniz), பயஸ் (Paes) போன்றோர், எழுத்துமூலமான ஆதாரங்களைக் கொண்டும், கல்வெட்டுகளின் ஆதாரங்களைக் கொண்டும் பார்க்குமிடத்து விசய நகரப் பேரரசர்கள் தங்கள் அரசாங்கத்தின் வருமானத்திற்காகப் பல வரிகள் விதித்துள்ளனர் என்று கூறுகின்றனர். அவற்றைப் பின்வரும் தலைப்புகளில் பிரித்து அறியலாம்.

1. நில வரி (Land tax)
2. சொத்து வரி (Tax on Property)
3. வாணிக வரி (Commercial taxes)
4. உத்தியோக வரி (Professional taxes)
5. தொழில் வரி (Taxes on Industries)
6. இராணுவ வரி (Military constitutions)
7. சமூக வரி (Social & Communal taxes)
8. அபராதங்கள் (Fines)
9. பிறவகை வரிகள் (Miscellaneous)

1. **நிலவரி :** அரசாங்க வருமானத்திற்கான வரி வசூலில் அதிகப் பங்கு உடையது இந் நிலவரிதான். இந் நிலவரியும் நிலத்தின் தரத்திற்கும், விளையும் பயிருக்கும் ஏற்பத் திட்டமிட்டுவிதிக்கப் பட்டிருக்கிறது. அதனுடன் அந் நிலம் நன்செய் நிலமா.(Wet land), புன்செய் நிலமா (Dry land) எனக் கவனித்து அதற்குப்பின் அந் நிலம் தேவதானமா (Land belonging to Temple), பிரமதேயமா (Land belonging to Brahmans), தளவாய் அக்ரகாரமா (Village granted for Military Service) என்று பார்த்து வரி விலக்கு உள்ள நிலங்களை நீக்கி ஏனைய நிலங்களைத் தரவாரியாகப் பிரித்து வரி விதிப்பது வழக்கம். மேலும், பாசன வசதிகளுக்கு ஏற்ப வரி விதிப்பதில் மாற்றம் காணப்படும்.

எனவே, கிருட்டிணதேவராயர் இவற்றையெல்லாம் மனத்துட் கொண்டு தம் ஆட்சி எல்லைக்குட்பட்ட நிலங்களை அளவுசெய்து இடத்திற்கும், சூழ்நிலைக்கும் தக்கவாறு, வரியை நிர்ணயிக்கும்படி ஆணையிட்டார் என்று அவர்கள் கல்வெட்டில் காணப்படுகிறது. ரைஸ் (Rice) என்பார், கிருட்டிணதேவராயர் காலத்தில் நில வரி வசூலிப்பது ஓர் ஒழுங்கான நிலைக்குக் கொண்டுவரப்பட்டது என்றும், அரசாங்கச் சட்டதிட்டங்களால் அது சரிபார்க்கப்பட்டது

என்றும், நிலவரிக் கணக்கு வைக்கும் முறையும், அதனை நிர்வகிக்கும் தன்மையும் முதன் முதலாகக் கையாளப்பட்டது என்றும், குடிகளுக்குத் துன்பம் தராத வகையில் ஆண்டுதோறும் சிறுகச் சிறுக அரசாங்க வருமானத்தை நிலவரி மூலம் அதிகப்படுத்த முயன்றார் என்றும் பாராட்டிக் கூறியுள்ளார்.[1]

வீதம் (Rate of Assesment): விசயநகரப் பேரரசரான கிருட்டிணதேவராயர் தம் முன்னோர்கள் கையாண்டுவந்த முறையில் தாமும் நிலவரி விதிக்கலானார். வித்யாரணியர் எழுதிய குறிப்புப் புத்தகத்தில் (Manual) குறிப்பிட்டுள்ள வீதாச்சார வழிகளை மீறாமல் தம் ஆட்சியில் நிலவரியை நிர்ணயம் செய்தார். எடுத்துக்காட்டாக, ஒரு நிலத்தில் 30 கலம் நெல் விளைவு ஏற்பட்டதென்றால் அது பின் வருமாறு பங்கிடப்படும் :

1.	நிலத்தலைவனுக்கு (To the lord)	...	$\frac{1}{4}$ பாகம்-$7\frac{1}{2}$ கலம்
2.	பயிரிடுபவனுக்கு (To the cultivator)	...	$\frac{1}{2}$ பாகம்-15 கலம்
3.	அரசுக்கு (Sarkar)	...	1/6 பாகம்-5 கலம்
4.	கோயிலுக்கு (To the temple)	...	1/30 பாகம்-1 கலம்
5.	பிராமணர்களுக்கு (To the Brahmans)	...	1/20 பாகம்-$1\frac{1}{2}$ கலம்
			30 கலம்

கோயில்களுக்கும் பிராமணர்களுக்குமான பாகத்தை அரசே வசூலித்து அவர்களுக்கு அளித்துவிடும். எனவே, ஒரு குடியானவன் தன் விளைவில் அரசு, கோயில், பிராமணர் ஆகிய மூன்றுக்குமாகச் சேர்த்து $\frac{1}{4}$ பாகம் அரசாங்கத்துக்கு நிலவரியாகச் செலுத்த வேண்டியிருந்தது.[2] இத்தகைய வருமானத்தின் மூலம் கிருட்டிண தேவராயர் தம் அரண்மனைச் செலவுக்கும், 12000 மனைவிமார்கள் செலவுக்கும் போக, ஒவ்வோர் ஆண்டும் 10 மில்லியன் பர்தாக்கள் (Pardaos) அரசாங்கக் கருவூலத்தில் போட்டுவந்ததாகப் பயஸ் (Paes) என்பவர் நேரில் கண்டதாகக் குறிப்பிடுகின்றார்.[3]

2. சொத்துவரி: வீடுகள், தோட்டங்கள், ஆடுமாடுகள் ஆகியவற்றின் பேரிலும் வரி வசூலிக்கப்பட்டது. கல்வெட்டுகளில் எத்தகைய விகிதத்தில் இவ் வரி வசூலிக்கப்பட்டதென்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. மேலும், இடத்துக்கு இடம் இவ் வரி

1 Rice. Mys. Gaz. I. J. 578.

2 Historical Sketches of Mysore, I. p. 95

3 Sewell, p. 282.

மாறுபட்டிருப்பதாகவும் தெரிகிறது. கீழ்க்கண்ட முறையில் சொத்து வரி வசூலிக்கப்பட்டதாகச் சில இடங்களின் கல்வெட்டின் மூலமாக அறிகின்றோம்.

மெத்தை வீடு (Storied house)	...	2 பணம் (Panams)
உள் வராந்தா உள்ள வீடு (House with inside Varandha)		1 ,,
(Little Conjeevaram Cpt. Dt. 589 or 1919)		
கிராம நாட்டார் வீடு (House of Village Nattar)	...	3 ,,
தந்திரிமார் வீடு (House of Tantrimar)	...	1½ ,,
மக்கள் வீடு (House of a Makkal)	...	1½ ,,
ஓட்டுக் கூரைவீடு (Varanda with sloping roofs)		
(Thiruvaigavur, Tanjure Dt. 59 or 1914)		
வைசியர் வீடு (House of Vaisya) (Bangalore E. C. IV B. 96)	...	1 பணம்
வெட்டியான் வீட்டுக் கொட்டில் (House kottil of the vettis)	...	1½ பணம்
(Vriddhachalam S.A.Dt. 91 or 1921)		
பண்ணையாள் வீடு (Each Vasal) (Tirukoyilur S. A. Dt. 335 or 1921)	...	1 பணம்
வீட்டு மனை (House Site) (Serkad N.A.Dt. 203 or 1921)	...	1 பணம்
பசு முதலிய பிராணிகள் (Cow etc.) (C. Nagar Mysore Dt. E. C. IV cm 97)	...	½ Gadyana

3. வாணிக வரி : ரைஸ் (Rice) என்பார் வாணிக வரியை மூன்று வகையாகப் பிரித்துப் பேரரசர் வசூலித்ததாகக் குறிப்பிடுகின்றார். அவை, முறையே ஸ்தலதாயம், மார்கதாயம், மாமூல தாயம் என்பன. ஸ்தலதாயம் என்பது ஓரிடத்திலிருந்து இறக்குமதியாகும் பொருள்களை விற்கும்போது விதிக்கும் வரியாகும். மார்க தாயம் என்பது மாவட்டத்தில் பல இடங்களில் செல்லும் பொருளுக்கு விதிக்கும் வரியாகும். மாமூல தாயம் என்பது வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பொருளுக்கு விதிக்கும் வரியாகும்.

விறகு, வைக்கோல் உள்பட எல்லாப் பொருள்களுக்கும் வாணிக வரி விதிக்கப்பட்டது.[1] விற்பனை வரியும் இதனுள் அடங்கியதாகும். அரசாங்கத்துக்கு இவ் வரிகள் நேரிடையாகச் செலுத்தப்படுவதில்லை. உள்ளூர்க் குத்தகைக்காரர்கள் இதனை வசூலிப்பர். அவர்கள் அரசாங்கத்துக்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ஏலம் எடுப்பார்கள் என்று ஷிமோகா மாவட்டத்திலுள்ள கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே, குத்தகைப் பணத்திற்கு ஏற்ப இடத்துக்கு இடம் இவ் வரிகள் மாறுபடுவதுண்டு. கலால் வரியும் (Excise duties) அக் காலத்தில் மது, உப்பு முதலிய பொருள்களுக்கு விதித்திருப்பதாகத் தெரிகின்றது.[2]

4. **தொழில் வரி :** தொழில் வரி சம்பள அடிப்படையில் விதிக்கப்படவில்லை. ஆனால், பரம்பரையாகக் கையாளும் தொழிலுக்கேற்ப வெவ்வேறு அடிப்படையில் வரிகள் விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அவற்றுள் ஒரு சில பின்வருமாறு.[3]

மணக்கடையர்	—	3 பணம்
புறக்குடி (Farm servant)	—	1 பணம்
கைக்கோளர், செம்படவர், இடையர்.	—	½ பணம்

ஆண்டுக்கு ஒரு முறை இவ் வரி வசூலிக்கப்பட்டது. பணமாகக் கருவூலத்தில் செலுத்தப்பட்டது. உத்தியோகத்திலிருப்பவர்களிடமிருந்தும் ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டவரிடமிருந்தும் இவ் வரி வசூலிக்கப்பட்டது.

5. **தொழிற்சாலை வரி :** இவ் வரி தொழிற்சாலைகளின் மீது விதிக்கப்பட்டது. தொழிற்சாலையின் உரிமையாளரிடமிருந்து அவருடைய ஆண்டு நிகர இலாபத்திலிருந்து இவ் வரி வசூலிக்கப் பட்டது. எந்த விகிதத்தில் இவ் வரி விதிக்கப்பட்டது என்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. நூற்பாலை, நெசவாலை, எண்ணெய் ஆலை, பட்டு நூல் நெசவாலை, படகு கட்டும் தொழிற்சாலை ஆகிய பல ஆலைகளின்மீது இவ் வரி விதிக்கப் பட்டிருந்தது.[4] வைரத் தொழிற்சாலையும் இவ் வரிவிதிப்பில் சேர்க்கப்பட்டிருந்தது.

1 Rice, Mys. Gaz. 1. p. 583.
2 Rice, Mys. 1. 583-84
3 I. P. S. 687
4 Mys. Gaz. 1. p. 548

6. இராணுவச் செலவுக்கான வரி : இராணுவப் பராமரிப்புச் செலவுக்காகச் சில வரிகள் மக்கள்மீது விதிக்கப்பட்டன. கோட்டை நிர்வாகத்திற்காகக் கோட்டை மகமை (Kottai Magamai) என்ற வரியும் வசூலிக்கப்பட்டது. நெல்லூர்ப்பேட்டைக் கல்வெட்டின் மூலம் பீரங்கி வரியும் (a tax for cannan) வசூலிக்கப்பட்டது எனத் தெரிகிறது. இவை தவிரப் பட்டயக்காணிக்கை, வில் வரி, சூல வரி போன்ற வேறு மூன்று வரிகளும் மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டன. முதல் வரி கத்தி (sword) வைத்துக்கொள் வதற்கான அனுமதிக் (லைசன்ஸ்) கட்டணம்;[1] இரண்டாவது வரி வில் வைத்துக்கொள்வதற்கான அனுமதிக் கட்டணம்; மூன்றாவது கோயிலுக்கு விடப்பட்ட கால்நடைகள் சூலமான முத்திரையிட்டுப் பதிவு செய்யப்படுவதால் அதற்கான அனுமதிக் கட்டணமாகும்.

7. சமூக வரிகள் : சில குறிப்பிட்ட கட்டணங்கள் சமூகத்தில் நடைபெறும் கோயில் விழாக்கள், திருமணங்கள், சமய நிலையங்கள் ஆகியவற்றிற்காக வசூலித்ததாகத் தெரிகிறது. கிருட்டிணதேவ ராயர் திருமணத்திற்காகப் பெண் வீட்டினரும், பிள்ளை வீட்டினரும் தரவேண்டிய கட்டணங்களை அவர் காலத்தில் பின்வரும் மாநிலங் களில் நீக்கியதாகக் கல்வெட்டுகளின் மூலம் தெரிகிறது. அவை சாணகிரி (Shanagiri) இராச்சியம், கண்டனவோலு (Kandanavolu), சாந்திகோட்டா ஸ்தலா (Shandikota Sthala), சித்தவட்டா (Siddhavatta), சித்தாபுரம் (Siddapuram), சந்திரகிரி இராச்சியம் (Chandragiri Rajya), நாகமங்கலம் (Nagamangala Sime), முலா இராச்சியம் (Mula Rajya), இராய துர்கா (Rayadurga Rajya).

இத்தகைய கட்டணங்களை நீக்க அவரது அமைச்சர்கள் பெரிதும் உதவினர்.[2]

8. அபராதங்கள் : குற்றம் செய்தல், உணவுப் பொருள்களில் கலப்படம் செய்தல், அநீதி இழைத்தல் ஆகியவற்றில் சம்பந்தப் பட்டவர்களுக்கு அபராதம் விதித்தல் உண்டு. கட்டுப்பாடின்றி விளைபொருள்களை அழிக்கும் கால்நடைகளை மடக்கி அவற்றை உரியவருக்கு அபராதம் விதித்தலும் உண்டு. தண்டனைகளுள் அபராதம் விதித்தலும் ஒன்று.

பிறவகை வரிகள் : அரசகுமாரன் பிறந்தால் மக்கள் அளிக்கும் வெகுமதிகள் போன்றவை இவற்றில் சேர்ந்தது. அரசாங்கத்தில் முக்கியமான ஒரு திட்டத்தை நாட்டின் நலன் கருதி நடத்த

1 E. I. VIII p. 304

2 E. C. XII MK-64

முற்படும்போது நிதி நிலைமை குறைவாக இருக்குமானுல் அதனை ஈடுகட்ட வசூலிப்பதும் உண்டு. இதனைக் கிருட்டிணதேவராயர் வலியுறுத்துகிருர்.[1]

(2) செலவினங்கள்

அரசாங்க நிர்வாகத்திற்கான செலவினங்கள் அதிகமில்லை. மாநில அலுவலர்களுக்குச் சர்வமானியங்கள் வரிவிலக்காக வழங்கப்பட்டிருந்ததாலும், வேலையாள்களுக்கு அவரவர் தகுதி களுக்கேற்ப இனும், மானியம் முதலியவை அளிக்கப்பட்டிருந்த தாலும், நிர்வாகத்திற்கான செலவுத் தொகை அதிகம் கிடையாது. பாதுகாவல் உரிமை உள்ளூர் அலுவலர்களுக்கே குத்தகையாய் விடப்பட்டிருந்தது. அதனுல் அரசுக்கு நாட்டின் அமைதிக்காக வும், பாதுகாப்புக்காகவும் செய்கின்ற செலவு குறைக்கப்பட்டது. அதைப்போலவே கல்விசம்பந்தமாகவும் அரசு பொறுப்பு எடுத்துக் கொள்வது கிடையாது. தனிப்பட்டோர் பொறுப்பிலேயே விடப் பட்டிருந்தது. எனவே, கல்வி வளர்ச்சிக்கான செலவும் அரசுக்குக் கிடையாது.

என்ருலும், அரசாங்க வருவாயில் அதிகப் பங்கு இராணுவப் பராமரிப்புக்கும், போர்ச்செலவுக்குமே ஆயிற்று.[2] ஆமுக்த மால்யதா வில் கிருட்டிணதேவராயர், 'யானை குதிரைகளை வாங்கும் செலவும், அவற்றிற்கான தீனிச் செலவும், சிப்பாய்களுக்கான செலவும், கடவுள் பூசனைக்கும், பிராமணர்களுக்குமான செலவும், அரசரின் மனமகிழ்ச்சிக்காகும் செலவும் ஆகிய இவற்றைச் செலவாக அழைப்பது தவறு' என்று கூறியுள்ளார்.

நூனிஸ், ராயரது ஆண்டு வருமானமாகிய *60* இலட்சத்தில் 25 இலட்சத்துக்கு மேல் தம் சொந்தச் செலவுக்கு வைத்துக் கொள்வது கிடையாது எனக் குறிப்பிடுகின்ருர்.[3] மற்றவற்றை அராபியரிடமிருந்து குதிரைகளை வாங்கி நிரந்தரப்படை ஒன்றை அமைக்கச் செலவு செய்ததாகத் தெரிகின்றது.

அடுத்த பெரிய செலவுகளாகக் கருத வேண்டியவை நன்கொடைகளும் (Charities), அறக்கட்டளைகளும் (Endowments) ஆகும். ராயரது ஆட்சியில் எந்தக் கோயிலும் அறக்கட்டளை பெருதிருந்தது கிடையாது. புதிய கோயில்களைக் கட்டுவதிலும்,

1 Amucta, Canto IV V. 236
2 Amucta, Canto IV V. 262
3 Sewell. p. 373-4

பழைய கோயில்களைப் புதுப்பித்தலிலும், விழாக்களை நடத்துவதிலும் பொருட்செலவு அதிகம் செய்யப்பட்டது. அதனுடன் கற்றறிந்த புலவர் பெருமக்களுக்கும், தத்துவ ஞானிகளுக்கும் பொன்னும் பொருளும் தந்து அரசவையில் வீற்றிருக்கச்செய்தார்.

நீர்ப்பாசன வசதிக்கும், பொதுமராமத்துக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை செலவிடப்பட்டது. ராயர் காலத்தில் குளங்கள், ஏரிகள் விவசாயத்திற்கான நீர்ப்பாசனத்திட்டங்கள் ஆகியவற்றிற்குப் பெருந்தொகை வழங்கப்பட்டது. அதைப்போலவே கலை, சிற்பம், கட்டடம், வண்ணம் தீட்டுதல் போன்ற அழகுணர் செயல்களுக்கும் செலவிடப்பட்டது.

அரசாங்க வருமானத்தில் பேரரசரது மனைவிமார்களுக்கும் (Rasems), அவர்களது குடும்பத்தினருக்கும் அதிகப் பொருள் செலவிடப்பட்டதாகத் தெரிகிறது. அந்நியர் யாரும் இச் செலவினைக் குறிப்பிடாமல் இல்லை. ஆடம்பரச் செலவுகள் அதிகம் இருந்தன. அதிகப் பொருள், அணிமணிகள், குடி வகைகள், பெண்களுடன் பழகல் போன்ற தேவையற்ற செயல்களுக்குச் செலவிடப்பட்டதாகத் தெரிகிறது. ராயர் எழுதிய ஆமுக்த மால்யதாவில் அரசருடைய வருமானம் நான்கு வகையில் செலவழிக்கப் பட்டதாகக் குறிப்பிடுகின்றார். ஒரு பகுதி அரண்மனைக்கு வெளியில் உள்ள அரசு அபிமானிகளுக்கும், அரசரது மனமகிழ் செயல்களுக்கும் செலவிடப்பட்டது. இரு பகுதிகள் சிறந்த படை நிர்வாகத்திற்கும், எஞ்சியுள்ள ஒரு பாகத்தைக் கருவூலத்தில் வைப்புநிதிக்கும் ஒதுக்கியுள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.[1] ராயர் 12000 பெண்களோடு இருந்ததாகவும், அதற்கான செலவுகள் அதிகமாவதாகவும் சீவல் (Sewell) குறிப்பிடுகின்றார்[2].

(ix) நீதி நிர்வாகம்

பேரரசரே நீதி நிர்வாகத் துறைக்கு உயர் நீதிபதியாக விளங்கினர் என்றாலும் நீதியை நிர்வகிக்க ஏனைய நீதிமன்றங்களும், அலுவலர்களும் இருந்தனர். சில சமயங்களில் உள்ளூர் அரசாங்க அலுவலர்களின் துணைகொண்டே மாநில அலுவலர்கள் வழக்குகளைத் தீர்ப்பார்கள். நீதிக்கான சட்டதிட்டங்கள் வழிவழியாக வழக்கத்தில் கையாளப்பட்டவை மட்டுமன்றி, நாட்டின் அரசியல் அமைப்புக்கு ஏற்றவாறும் இயற்றப்பட்டன. குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். தண்டனைகள்

1 Canto-IV V. 238

2 Sewell p. 282

நான்கு வகைகளில் தரப்பட்டன. அவை அபராதம் விதித்தல், சொத்தைப் பறிமுதல் செய்தல், சிறைத்தண்டனை விதித்தல், மரணதண்டனை அளித்தல் ஆகியன. மரண தண்டனை திருடுதல், ஆட்சிக்கு விரோதமாய் நடத்தல் போன்றவற்றிற்குக் கொடுக்கப் பட்டது. சில சமயங்களில் குற்றவாளிகளை யானையின் காலால் இடறச் செய்வதும் உண்டு.

1. சட்டமும் ஒழுங்கும்: ஆட்சித் தலைவராக அரசர் இருந்தாலும் அவர் சட்டத்தை இயற்றுபவர் அல்லர். அவர் சட்டத்தை ஒழுங்காக அமலாக்க வேண்டியவர். மனுதர்ம சாஸ்திர அடிப் படையில் தண்டனைகள் வழங்கப்பட்டன. தண்டனையைப்பற்றி மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். ராயர் தம் நூலில் அரசனது தண்டனைக்குப் பயந்துதான், கணவனோடு மனைவி அன்பாயிருப்ப தாகவும், ஆண்கள், பெண்கள் ஒழுங்காக நடப்பதாகவும், சன்னியாசிகள் தங்கள் இந்திரியங்களை அடக்கி இருப்பதாகவும், உயர் வருணத்தவரிடம் தாழ்ந்தவர் பணிவுடன் நடப்பதாகவும், தலைவனுடைய நன்மையைக் கோரி வேலையாள் நடந்து கொள்வ தாகவும் குறிப்பிடுகின்றார்.[1] மேலும், சட்டங்களை அமலாக்க வேண்டுமெனில் அரசருக்கு அதிகாரங்கள் இருக்கவேண்டுமென ராயர் கருதுகின்றார்.

சில குற்றங்களுக்குத் திட்டவட்டமாகச் சட்டங்கள் வகுக்கப் பட்டிருந்தன. ராஜத்துரோகச் செயல்கள், நில அனுபவ காலம், இனம் நிலங்கள் ஆகியவைபற்றிச் சட்டங்கள் தனியாக வகுக்கப் பட்டிருந்தன.

முதலாவதாக நாட்டுக்கோ, அரசருக்கோ எதிராக நடப்பதை மிகவும் துரோகச் செயலாகக் கருதினர். மேலும், பலவகைச் சங்கங்களுக்கோ, சமுதாயத்திற்கோ எதிரிடையாக நடப்பதையும் அக் குற்றத்தின்பால் சேர்த்தனர். அவர்களுக்கு மரண தண்டனை உடனடியாகக் கொடுக்கப்பட்டது. ராயர் இத்தகைய ராஜத் துரோக நிலையில் எத்தகைய செயல் செய்தாலும் உடனே மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்தினர்.[2]

இரண்டாவதாக, ஒருவர் பன்னிரண்டு ஆண்டுக் காலத்திற்குப் பின், பிறிதொருவரது அனுபோகத்தில் உள்ள நிலத்தைத் தம்முடையது என்று உரிமை கொண்டாடினால், அது காலவரம்புச் சட்டபடி (Law of Limitation) செல்லாது. மூன்றாவதாகத் திருப்புக்குழிக் கல்வெட்டின்படி ஊழியர்களுக்கென வழங்கப்பட்ட

[1] Canto-IV V. 277

[2] Amucta, Canto IV. V. 243

இனும் நிலங்களை அவர்கள் விற்கவோ, அடகுவைக்கவோ அருகதை அற்றவர்கள். ஆனால், அவர்கள் அச் சட்டத்தை மீறி விற்கவோ அடகுவைக்கவோ முயன்ருல் அரசருக்கும், சமுதாயத் திற்கும் துரோகிகளாகக் கருதப்பெற்று அதற்குரிய தண்டனையைப் பெறுவர்.

அரசரே முதன்மை நீதிபதி (Chief Justice) என்ருலும் அவரே தம் விருப்பப்படி தம்மிடம் வரும் வழக்குகளுக்கு முடிவான தீர்ப்புக் கூறுதல் கூடாது. அரசருக்காகப் பிறிதொரு நீதிபதி நியமிக்கப் படுவார். அவரே தீர்ப்புச் சொல்லவேண்டும். நீதி நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பினைப் பேரரசர் இராணுவப்படை அலுவல ரிடமோ, தளகர்த்தரிடமோ விடுவது வழக்கம். அப்துர் ரஸாக் (Abdur Razzak), பிரதானி (Pradhani) என்பவர்தாம் பொதுவாகத் தலைமை நீதிபதியாக இருந்தார் எனவும், அவர் அமைச்சர் அவை யிலும் இடம் பெற்றிருந்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார். ராயர் காலத்தில் அவரது பிரதம அமைச்சராயிருந்த சாளுவ திம்மருக்கு 'தர்ம பிரதிபாலகர்' என்ற பெயர் தரப்பட்டிருந்தது. அப் பெயரின் மூலம் அவர் சில நீதி சம்பந்தமான விஷயங்களில் கலந்துகொண்டு தலைநகரில் முதன்மை நீதிபதியாக இருந்தார் என்று கூறலாம்.[1]

இவ்வாறு நீதிபதிகளைக்கொண்டு நீதிமன்றங்களில் நீதி வழங்கு வதோடு நின்றுவிடாமல், அரசரிடமும் வழக்குகள் வருவது உண்டு. அரசரது கடமைகளைப்பற்றிக் கிருஷ்ணதேவராயர் ஆமுக்த மால்யதாவில் குறிப்பிடும்போது நீதிநிர்வாகம்பற்றி விளக்குகின்ருர். 'உன் குடிமக்களைப் பாதுகாப்பதில் கவனமாய் இரு. மக்களிட மிருந்து அவர்கள்படும் அல்லல்பற்றிப் புகார்கள் வருமாயின் கேட்டு, அவ் வல்லல்களைப் போக்கி அவர்கள் துன்பத்தைத் துடைப் பாயாக. உன்னுடைய பொறுப்புகளைச் சாதாரணமானவர்களிடம் ஒப்படைக்காதே[2]' என்று அரசர்களுக்கு அறிவுரை கூறுமாறு எழுதியுள்ளார். அரசாங்க நிர்வாகத்தில் உள்ள அலுவலர் மீது வரும் புகார்களை ராயர் தாமே கவனித்து ஏற்ற தண்டனை கொடுப்பது வழக்கம். ஆனாலும், அரசர் கீழ் நீதிமன்றங்களுக்கு மேல், மேல்முறையீடு செய்யும் அதிகாரியாகக் கருதப்பட்டார்.

தலைநகரத்தில் உள்ள இத்தகைய நீதிமன்றம் தவிர, அரசாட்சியில் பல்வேறு முக்கிய நகரங்களில் நீதிமன்றங்கள் உண்டு. அங்கும் நீதி வழங்கப்பட்டது. இத்தகைய நீதிமன்றங் களின்றிப் பிறவகை நிலையங்களும் நியாயத்தை வழங்கிவந்தன.

1 E. C. IX Ma. 11
1 Amucta-Canto IV, V. 205

அவை முறையே கிராமச்சபை (Village Assemblies), கோயில் தர்மகத்தா சபை (Temple Trustees), சாதித் தலைவர்கள் குழு (Caste Elders) ஆகியவை. சமயத் தலைவர்களைக்கூடச் சில வழக்குகளை விசாரிக்கச் செய்வதும் உண்டு. கிருட்டிணதேவராயர் சடமர்ஸன கோத்திரத்தைச் சேர்ந்த வெங்கடதாதய்யா ராஜாவை ராமாநுஜருடன் தொடர்பு கொண்டுள்ள எல்லாச் சாதியினரின் நடத்தையைப் பற்றி ஆராயவும், சமய, சமுதாய நெறி பிறழ்ந்தவர் களைத் தண்டிக்குமாறும் ஆணையிட்டார்.

இதிலிருந்து சமயத்தலைவர்களும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்கியதாகத் தெரிகிறது.

2. தண்டனைகள்: பொதுவாகத் தண்டனைகள் கடுமையாக இருந்தன. உதாரணமாக, ஒரு திருடன் எத்தகைய சிறிய குற்றம் செய்திருந்தாலும் அவனுடைய கை, கால்கள் வெட்டிவிடப்படும். திருட்டுக்குற்றம் பெரியதாக இருப்பின் அவன் தூக்கிலிடப்படுவான். சில குற்றங்களுக்கு யானைக்காலால் இடறச்செய்வதுமுண்டு என அப்துர் ரஸாக் கூறுகின்றார்.

ஆனால், கிருட்டிணதேவராயர் தம் ஆட்சியில் மரண தண்டனை பெற வேண்டிய அளவு குற்றம் செய்தவனையும் கருணைகாட்டக் கருதி மூன்று முறை மேல்முறையீடு செய்துகொள்ள அனுமதி வழங்கியுள்ளார். ஆனால், அவ்வாறு மேல்முறையீட்டு மூலம் தப்பும் ஒருவனால் அரசுக்கே ஆபத்துவரும் நிலை ஏற்படுமானால் அவனுக்கு மரண தண்டனை அளிப்பது நிச்சயம்.[2]

நரபலி கொடுக்கும் வழக்கம் அக் காலத்திலிருந்தது. அவசிய மாக நரபலி கொடுக்க நேரிடுமானால் சிறையில் உள்ள கைதியில் மரணதண்டனைக்குரிய தவறு செய்தவர்களை நரபலிக்கு அனுப்புவது வழக்கம். கிருட்டிணதேவராயர் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தை வெற்றிகரமாக முடிக்க நரபலியை ஆண்டவன் கேட்பதாகப் பிறர் கூறக்கேட்ட போது, தம்முடைய சிறைக்கைதிகளைக் கொண்டு வரச் செய்து, அவர்களில் மரணதண்டனைக்குரிய குற்றம் செய்தவர் களின் தலைகளை அக் கோயில்முன் வெட்டித் தள்ளுமாறு ஆணை யிட்டார்.[3] ஆனால், பேரரசரை மிக அவசியான நிலைமையில் வற்புறுத்தி அவ்வாறு அதற்கு இணங்கி அவர் நரபலிக்கு அனுமதி

[1] MAR 1918 para 110
[2] Amucta, Canto-IV, V. 243
[3] Sewell, p. 365

அளித்திருக்கலாமேயொழிய, அவர் குற்றவாளிகளைச் சிறையிலடைப் பதே போதும் எனக் கருதும் குணமுடையவர் என ஆமுக்த மால்யதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தண்டனைகளை வழங்கும்போது குற்றவாளிகளின் தகுதி, பதவி முதலியவற்றைக் கவனிப்பதில்லை. நூனிஸ் குறிப்பின்படி, கிருட்டிணதேவராயர் குமாரனை திருமலையின் கொலைக்குச் சாளுவ திம்மரும், அவருடைய குமாரர்களும் காரணமானவர்கள் எனச் சந்தேகப்பட்ட கிருட்டிணதேவராயர் அவர்களது தகுதி, பதவி முதலியவற்றை நோக்காது, அவர்கள் புரிந்த குற்றத்தையே முதன்மையாகக்கொண்டு அவர்களுக்குச் சிறைவாசமும் கொடுத்து, கண்களைக் குருடாக்கித் தண்டித்தார் என்றால் அவர் எவ்வளவு தூரம் குற்றத்திற்குரியவர் தண்டனையிலிருந்து தப்பக்கூடாது என்ற கொள்கையுடையவர் என்பதை அறியலாம்.

இவற்றிலிருந்து கிருட்டிணதேவராயர், நீதி எல்லாருக்கும் சமமாக வழங்கப்படவேண்டும் என்ற எண்ணம் உடையவராக இருந்தார் என்று தெரிகிறது. சில சமயங்களில் அத் தண்டனைகள் கொடூரமாயும் வேதனையுடையதாகவும் இருந்திருக்கக் கூடும். அத்தகைய கொடூரமான தண்டனைக்கு அஞ்சிய மக்கள் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இருந்தார்கள் எனக் கூறலாம்.

(x) இராணுவம்

கிருட்டிணதேவராயர் காலத்தில் இராணுவத் துறை நன்கு பராமரிக்கப்பட்டு வந்தது. அத் துறையினைக் காந்தசாரா (Kanda-chara) என்று அழைத்தனர். அதன் தலைவராகத் தண்டநாயகர் (Dandanayaka) என்பவர் நியமிக்கப்பட்டார். அவருக்கு உறுதுணை யாகப் பல அலுவலர்கள் இருந்தனர். பேரரசில் மிகப்பெரிய இராணுவப்படை இருந்தது. அதனுடைய எண்ணிக்கை காலத்துக் கேற்ப மாறுபட்டது. பயஸ் (Paes) என்பவர் கிருட்டிணதேவராயர் காலத்தில் (கி. பி. 1520) ரெய்ச்சூர்ப் படையெடுப்பின் மீது 7,03,000 காலாட்படையும், 32600 குதிரைப்படையும், 351 யானைப்படையும் இருந்ததாக குறிப்பிடுகின்றார். அதிலிருந்து ஒரு பெரும் படை ராயர் காலத்தில் இருந்ததாகப் புலனாகிறது. அரண்களை அமைத்து அவற்றை நன்கு காப்பாற்றுதல் இராணுவக் காவல் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். விசயநகரம் ஏழு சுவர்களால் காக்கப் பட்டு வந்தது என்பதிலிருந்து அக் கால அரண்காவல் முறையினை அறியலாம். பேரரசர் நேர்முறையில் பலரைப் படையில் சேர்த்து அவர்களுக்கு ஊதியம் வழங்கிவரும் வழக்கமும் அக்காலத்தில்

இருந்தது. எனவே தான் முகமதியர்களும் அவர்களது பெரும் படையில் சேர்ந்தனர். காலாட்படையினரைவிடக் குதிரைப் படையினருக்கே மிகுந்த சிறப்பு அளிக்கப்பட்டிருந்தது. போரில் யானைகள், ஒட்டகங்கள் பயன்படுத்தப்பட்டன. ராயரிடம் இருந்த பீரங்கிப் படை பாமினி சுல்தான்களின் பீரங்கிப்படையுடன் ஒப்பிடும்போது குறைபாடு உள்ளனவாக இருந்தது. ஏனெனில், சுல்தான்கள் அயல்நாட்டுத் தொழில் அறிஞர்கள் உதவி கொண்டு பீரங்கிப் படையை உருவாக்கினார்கள்.

(அ) படைவீரர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை : இராணுவத்திற்கு வீரர்களைத் தேர்ந்தெடுக்க இரு முறைகளைக் கையாண்டனர். ஒன்று அரசரே நேர்முகமாக இருந்து ஆள்களைத் தேர்ந்தெடுப்பது. மற்றொன்று, தம் கீழுள்ள மானியதாரர்கள் அரசருக்குத் தேவையென்று கேட்டபோது மறைமுகமாகத் தேர்ந்தெடுத்தனுப்புவது ஆகும். முதல் பிரிவுப் படையினர் என்றும் நிரந்தரமாக இருக்க வேண்டியவர். இரண்டாம் பிரிவினர் தேவையான போது குறுகிய கால நேரத்தில் அழைக்கப்படுபவர்களாவர்.

அரசரது நிரந்தர இராணுவத்துக்கு ஆள்களை மிக்க கவனத்துடன் தேர்ந்தெடுப்பர். அவரது உயரம், பெயர், பிறந்த நாடு, பெற்றோர்களின் பெயர்கள் முதலியவற்றைப்பற்றி நன்கு அறிந்து கொண்ட பின்னரே தேர்ந்தெடுக்கப்படுவர். விடுமுறை பெறாமல் அவர்தம் சொந்த நாட்டுக்குப் போகக் கூடாது. அவ்வாறு அனுமதியின்றிச் செல்வாராயின் அவரை மிகவும் கடுமையாக நடத்துவர்.

நூனிஸ், கிருட்டிணதேவராயருடைய இராணுவம் ரெய்ச்சூரை நோக்கிப் படையெடுத்துச் செல்வதைப்பற்றிக் குறிப்பிடும்போது இராணுவ வீரர்கள் தக்கஆயுதங்களுடன், அவர்களின் விருப்பப்படி அணிவகுத்துச் சென்றனர் எனக் கூறுகிறார். இதனால், கிருட்டிண தேவராயர் இராணுவத்தினருக்கு அவர்கள் விருப்பம்போல் படை அணிவகுத்துச்செல்வதற்கு அனுமதித்துள்ளார் எனத்தெரிகிறது.[1] அவ்வாறு அவர்கள் விருப்பத்திற்கு விடுவதன்மூலம் பேரரசரால் தீர்வுகாணமுடியாத எத்தனையோ அசௌகரியங்கள் சரியாகிவிடுகின்றன. ஆனால், நாளடைவில் அவர்களுக்குள் இன்பாகுபாடு எழுந்து பேரரசரது படை பல பிரிவுகளாகப் பிரிந்துவிடுவதற்கும் வாய்ப்பு உண்டாகிறது. என்றாலும் குறிப்பிட்ட சாதியினர் திறம்படப் பணியாற்றினர் என்ற புகழுரையையே அவர்கள் பெரும்பாலும் விரும்பியதால் சாதிப்பிரிவினால் அதிகத் தீமை ஏதும் அவர் காலத்தில் நடக்கவில்லை.

1 Sewell, p. 327

பேரரசருக்கு நிலமானியதாரர்களும், பிரபுக்களும் அனுப்பிய படைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகவே இருந்தன. கிருட்டிணதேவராயர் ரெய்ச்சூர்மீது படையெடுத்தபோது, பிரபுக்கள் அனுப்பிய படைகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

பெயர்	காலாட் படை	குதிரை	யானை
1. மெய்க்காப்பாளரின் தலைவன் (The Chief of the Guard)	50,000	1000	6
2. திரும்பிகாரா (Trimbicara)	50,000	2000	20
3. திம்ப நாயக் (Timapanayque)	60,000	3500	30
4. அதபநாயக் (Adapanayque)	100,000	5000	40
5. கொண்டமரா (Condamara)	120,00	6000	60
6. கோமரா (Comara)	80,000	2500	40
7. பிசுநாக நகர ஆளுநர் (The Governor of the City Bisnaga.)	30,000	1000	10
8. மூன்று குனுசர் (Three Cunucha)	40,000	1000	15
9. அடைகாப்பாளர் (The betel page)	15,000	200	NIL
10. கோமர்பெர்கா (Comarberca)	8 000	400	20

எனவே, நிலமானியதாரர்களுக்கும் பேரரசருக்கும் இராணுவத்தால் ஒரு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர்கள் அரசருக்குரிய நிலங்களில் ஒரு பகுதியை இராணுவப் பராமரிப்புக்காகப் பெற்றிருந்தனர். அதனை 'அமரம்' என்றழைத்தனர். 'அமரம்' என்ற இராணுவப் பராமரிப்புக்கான நிலங்களை வைத்திருந்த நிலமானியதாரர்களை 'அமரநாயகம்' என அழைக்கலாயினர். அமரத்தை வைத்திருப்போர் அரசரது ஆணைக்கேற்பப் போதிய இராணுவப் படையினரை வழங்கவில்லையேல், அமரங்கள் திரும்பப் பேரரசரால் பெற்றுக்கொள்ளப்படும். அமரநாயகர்கள் எவ்வளவு காலாள், குதிரை, யானைப்படைகளை அரசருக்கு வழங்க வேண்டுமென்று எண்ணிக்கையில் திட்டவட்டமாகக் கூற முடியாவிட்டாலும் அமரநாயகர் என்பவர் *1000* காலாட்படைகளுக்குத் தலைவர் என்பது மட்டும் உறுதி என வில்ஸன் குறிப்பிடுகின்றார்.[1]

1 Indian Glossary, p. 21

மேலும், இராணுவ உதவியைப் பேரரசுக்குட்பட்ட சிற்றரசர்களும் செய்துவந்தனர். பேரரசின் மேற்குப் பகுதியிலுள்ள பங்கபூர் (Bankapur), கெரசொப்பா (Gerasope) முதலிய சிற்றரசர்கள், பேரரசருக்கு உதவியாக இராணுவப்படையினரை அனுப்பி வந்தனர். அவர்கள் பேரரசர்களால் அழைக்கப்பட்டபோது மட்டும் தலைநகருக்கு வந்தால் போதும். ஏனைய காலங்களில் அவர்கள் வருவதுமில்லை; அப்படி வந்தாலும் போதிய கௌரவத்துடன் அவர்கள் வரவேற்கப்படுவதுமில்லையென நூனிஸ் குறிப்பிடுகின்றார்.[1]

தலைநகரில், பேரரசரின் மெய்க்காவலுக்காக ஒரு படை நிரந்தரமாக உண்டு. அதில் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை அடங்கியிருந்தன. அதன் எண்ணிக்கைபற்றி விவரம் ஏதும் தெரியவில்லை. என்றாலும், கிருட்டிணதேவராயர், ரெய்ச்சூர்ப் போருக்குத் தம் மெய்க்காவல் படையிலிருந்து 40.000 காலாட்படையையும், 6000 குதிரைப்படைகளையும் 3.000 யானைப் படைகளையம் அழைத்துச் சென்றதாக நூனிஸ் குறிப்பிடுகின்றார். மேலும்,ராயர் 2,000 குதிரை வீரர்களைத் தம்முடன் எப்பொழுதும் வைத்துக் கொண்டிருப்பார். அவர் வெளியில் செல்ல நேர்ந்தால், அந்த இரண்டாயிரம் வீரரும் அவருடன் செல்லவேண்டும். மீண்டும் அரண்மனைக்குத் திரும்பி வந்தபின், அந்த 2,000 வீரரையும் எண்ணிப்பார்ப்பார். எவரேனும் அப் படையிலிருந்து தவறியிருந்தால், அவருக்குக் கடுமையான தண்டனை கொடுப்பதோடு, அவரது சொத்துகள் யாவும் பறிமுதல் செய்யப்படும். இத்தகைய மெய்க்காவலருக்கு அரசரே சம்பளம் வழங்குவார். அவர்களுக்கு நிலமானியம் ஏதும் கிடையாது.[2]

ராயர் காலத்தில் பிராமணர்கள்தாம் கோட்டைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். அதைப்பற்றி ராயர், ‘ தன்பால் மிக்க அன்பும் தொடர்பும்கொண்ட பிராமணர் கோட்டைத் தலைவராக நியமிக்கப்படவேண்டும். அவர்கள் உதவி தமக்கு என்றும் தேவை. எனவே, மிக்க வசதிகளோடும், தளவாடங்களோடும் உள்ள கோட்டைகளுக்குப் பிராமணர்களைத் தலைவர்களாக நியமித்தல் பொருத்தம் ’ என்று குறிப்பிடுகின்றார்.[3] அவர் சாளுவ திம்மரை உயர்ந்த நிலையில் அமர்த்தினர். மற்றும் தஞ்சை மாவட்டத் திருக்கடையூர்க் கல்வெட்டில் (1521-22) குறிப்பிட்டுள்ளபடி கிருட்டிண தேவராயர், பீஜப்பூரில் உள்ள ரெய்ச்சூரின்மீது படையெடுத்த

[1] Sewell, p. 374.
[2] Sewell, 371-72
[3] Amucta, Canto IV, VV 255 & 261

போது திருக்கடையூரைச் சேர்ந்த ஆபத்சகாயன் என்ற பிராமணர் மிக்க தீரத்துடன் போரிட்டுப் பேரரசரை மகிழ்வித்தார் என்று தெரிகின்றது. எனவே, பேரரசர் பிராமணர்களிடம் மிக்க நம்பிக்கையும், ஈடுபாடும் கொண்டிருந்தார் என அறிகிறோம்.

(ஆ) படைப் பிரிவுகள்

1. காலாட்படைகள் : படைகளுள் அதிக எண்ணிக்கை உடையது இதுவே. போர்க்களத்தில் அவர்கள் ஆடைகளைக் குறைத்துக் கொண்டு உடலில் எண்ணெயைப் பூசிக் கொள்வர். ஏனெனில், எதிரிகள் அவர்களை எளிதில் பற்றி இழுக்க முடியாது. அவர்கள் கையாண்ட போர்க்கருவிகள் வாள், வில், அம்பு, கேடயம், சிறு கத்தி (Daggers), போர்க் கோடரிகள், ஈட்டிகள், துருக்கிய வில்,[1] பீரங்கிகள் முதலியவை ஆகும்.

2. குதிரைப் படை : மிக்க வலிமை வாய்ந்த படை இதுவே. கிருட்டிணதேவராயர் தாம் பீடார்ச் சுல்தானை வெற்றிபெற்றதற்கு இக் குதிரைப் படையே காரணம் எனக் கூறுகிறார்.[2] அவரது வெளி நாட்டுக் கொள்கையே குதிரை வியாபாரத்தின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது. கிருட்டிணதேவராயர் ஆண்டுதோறும் 13 ஆயிரம் அராபியக் குதிரைகளை வாங்கி அவற்றுள் சிறந்தவற்றைத் தம் மேற்பார்வையிலேயே வைத்துக்கொண்டதாக அறிகிறோம்.[3] மேலும், அவர் குதிரை, யானை போன்றவைகளைப் படைவலிமைக்காக வாங்குவதற்கும், அவற்றைப் பாதுகாப்பதற்கும் ஆகிற செலவினை அரசாங்கச் செலவாக எண்ணுவது தவறு என்றும், அவை அவசியம் செலவு செய்து பராமரிக்க வேண்டியவை என்றும் வலியுறுத்தியுள்ளார். மற்றும் அரசர் தம்முடைய அரசாங்க வருமானத்திலிருந்து பாதிப்பாகம் இராணுவப் பராமரிப்புக்குச் செலவிட வேண்டும் என்றும், அதிலும் சிறப்பாகக் குதிரைப்படைப் பிரிவுக்கு அதிகப் பொருள் ஒதுக்கவேண்டும் என்றும் கூறுகிறார்.[4]

குதிரைகளுக்கு அரச முத்திரை குத்தப்படும். அதன் பின்னர்க் குதிரைகளைப் பராமரிப்பவரிடம் அவை அளிக்கப்படும். குதிரை இறக்குமானால் அரச முத்திரையிட்ட அதன் பாகத்தின் தோலைக் குதிரைப் பராமரிப்போர் தம் தலைமை அலுவலருக்குக் காட்டிய

1 Sewell, 201, 277.
2 Amucta, Canto-1, V. 42
3 Sewell, p. 381-382
4 Amucta, canto-IV. V. 262.

பின்னரே வேறொரு குதிரை அதற்கு ஈடாக அளிக்கப்படும்.[1] கிருட்டிணதேவராயர் தம் ஆட்சியில் குதிரைகளைக் கவனித்துக் கொள்வதற்காக 1600 ஆள்களை நியமித்ததாகவும், 300 குதிரைப் பயிற்சியாளர்களை வைத்திருந்ததாகவும் சீவெல் (Sewell) குறிப்பிட்டுள்ளார்.[2] குதிரைகளின் முகபடாத்தை அழகுறவும், மின்னும் படியாகவும் அமைத்திருந்தனர்.

3. **யானைப்படை :** பெரும்பாலும், யானைப்படைகளே போர்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு யானையும் பாகனைத் தவிர அறுவரை ஏற்றிச் செல்லும். அதன் துதிக்கையில் நீண்ட ஈட்டிகள் பொருத்தப்பட்டிருக்கும். போருக்குச் செல்லும் யானைகள் வெல்வெட்டுத் துணியினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். முகபடாம் மிக அழகுற மிருகங்கள், இராக்கதர்கள் உருவங்களைத் தாங்கி விளங்கும். இருமருங்கிலும் மணிகள் கட்டப்பட்டிருக்கும்[3] எனச் சீவெல் குறிப்பிடுகிறார்.

4. **பீரங்கிப்படை :** பேரரசர் பீரங்கிப்படை ஒன்றை வைத்திருந்தார். கிருட்டிணதேவராயர் ரெய்ச்சூர்ப் போரில் பீரங்கிப் படையைப் பயன்படுத்தியதாக நூனிஸ் குறிப்பிடுகின்றார்.[4] ஆமுக்த மால்யதாவில் பேரரசரே எந்தெந்தக் கோட்டைகளில் வெடிமருந்துகளும் போர் இயந்திரங்களும் இருந்தனவோ அங்கெல்லாம் பீரங்கிகளையும் சேர்க்க வேண்டும் எனக் கூறியுள்ளார். இவற்றிலிருந்து ராயர் பீரங்கிப்படை ஒன்றைத் தம் காலத்தில் சிறப்புற வைத்திருந்தார் என அறிகிறோம்.

(இ) போர் முறை

கிருட்டிணதேவராயர் தம்முடைய படையில் ஒரு பகுதியை எதிரியின் ஆட்சிக்குட்பட்ட எல்லையில் *30* மைல் தூரம் ஊடுருவிச் செல்ல ஆணையிடுவார். பின், அப் படையினர் அந்த 30 மைல் இடைவெளித் தூரத்தில் உள்ள இடங்களில் வாழும் ஆண்கள், கால் நடைகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் ஆகியவற்றை எதிரிகளிடம் சிக்காதவாறு கவர்ந்துசென்று ஓரிடத்தில் சேகரித்து வைப்பர். இந் நிகழ்ச்சிக்குச் சில நாள்களுக்குப் பின் பேரரசர் இறைவழிபாட்டோடு பலிகளைக் கொடுத்து முடித்துக்கொண்டு தாமே போர்க்கோலம் பூண்டு புறப்படுவார். பட்டத்து யானைமீது அம்பாரி கட்டி அதில் பேரரசர் வீற்றிருக்க அவருக்குப் பின்

1 Sewell, p 381
2 Sewell, p. 381
3 Sewell, p. 277
4 Sewell, p. 328

குதிரைப் படையும், காலாட்படையும் தொடர்ந்துவரப் புறப் படுவார். யானைப்படை அழகுற அணிவகுத்துச் செல்லும். பின்னர், பேரரசர் பட்டத்துக் குதிரைமீது ஏறி எதிரிகள் உள்ள திசைநோக்கி ஓர் அம்பு எய்வார். ஒரு குறிப்பிட்ட இடத்தில் படைகள் தங்கும். அதன்பின் போர் தொடங்கவேண்டிய நாளை அனைவருக்கும் அறிவிப்பார்.

தாற்காலிகமாகக் கூடாரமிட்டுப் பேரரசரும், படைகளும் தங்கி யிருப்பது இராணுவ நிலையில் போர் வெறியாகக் காணப்படாமல் விழாக்கோலம் பூண்டதாகவே காட்சியளிக்கும். அரசருக்கெனத் தனிக்கூடாரம் அழகுற அமைக்கப்பட்டிருக்கும். அரசர் தம்முடைய ஒற்றர்களை அனுப்பி எதிரிகளின் படைபலத்தை அறிந்து கொள்வார். அரசர்கள் தங்கள் வசதிப்படி படையினைப் பல பிரிவு களாகப் பிரித்துக்கொள்வர். பேரரசர் தம்முடைய படையை ரெய்ச்சூர்ப் போரில் ஏழு பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு போரில் ஈடுபட்டார் என நூனிஸ் குறிப்பிடுகிறார்.[1]

ராயர் 'எதிரியின் நாட்டுக்குள் பேரரசர் தாமே செல்லவேண்டு மென்ற நியதியில்லை. ஆனால், அவர் தம்மால் நியமிக்கப்பட்ட பிரபு சென்றால் போதும்' எனக் குறிப்பிடுகிறார்.[2] என்றாலும் அவரே இத் தீர்மானத்துக்கு விதிவிலக்காகச் சிறிய புரட்சி நாட்டில் எழுந்தபோதிலும் உடனே நேரில் சென்று அதனைத் தாமே அடக்கு வார். ராயர், ஒற்றர்கள்மூலம் பாமினி சுல்தான்கள் தம் அரசுக்குட் பட்ட இடங்களில் செய்யும் கொடூரச் செயல்களை அறிந்து கோப முற்று அமரநாயகர்களை வரவழைத்து நேரில் கலந்து ஆலோசித் தார். அப்பொழுது அமரநாயகர்களின் தலைவரான பெம்மசானி ராமலிங்கர்" என்பவரை நோக்கி அவரது கருத்தைக் கேட்க, அதற்கவர் தம்முடன் பெரும்படை ஒன்று அனுப்பினால் தாமே தலைமைதாங்கிச் சென்று எதிரிகளை முறியடிப்பதாக வாக்குறுதி தந்தார். அதைக் கேட்ட ராயர் மகிழ்ந்து அவர் விருப்பப்படியே செய்யுமாறு ஆணையிட்டு, அவரிடம் தலைமைப் பதவி தந்ததற்கு அடையாளமாகத் தாம்பூலம் (வெற்றிலை பாக்கு) வழங்கிப் போருக்கு அனுப்பினார்.[3]

அரசரே போர்க்கோலம் பூண்டு செல்லும்போது அவரே தம் படைகளை ஊக்குவிப்பார். அவரின்றித் தலைவர்களை அனுப்பினால் அவர்கள் அரசரைப் போலவே படைகளை ஊக்குவிப்பார்கள். ராயர்

1 Sewell, p. 336
2 Amucta-Canto, IV V. 255
3 S. K. Iyangar Sources, p. 112

ரெய்ச்சூர்ப் போரில் எதிரிகள் முன்னேறுவதைக் கண்டதும் தம் படையினரது கோழைத்தனத்தைச் சுட்டிக்காட்டிக் கோபமாகப் பேசலானார். 'எல்லாரும் என்றைக்காவது ஒரு நாள் இறக்க வேண்டியவர்கள்தாம். அதைவிடப் பாரம்பரியமாகப் போர்க் களத்தில் வீரமரணம் பெறுவதே சிறப்புடையது. எனவே, மான உணர்ச்சியுடன் போரில் ஈடுபடுங்கள்'[1] எனக் கூறினார். அது கேட்ட படைகள் வீராவேசத்துடன் போரிட்டு எதிரிகளை முறியடித்தன.

(ஈ) போர்ப் பண்புகள்

கிருட்டிணதேவராயர், போர் புரியும்போதும் அரசர்கள் உயர்ந்த பண்புடன் நடந்துகொள்ள வேண்டும் எனக் கூறியதோடு அதைச் செயல்முறையில் நடத்தியும் காட்டினார். எதிரி அரசரது அந்தப்புரப் பெண்கள் தமது படையினரால் கைப்பற்றப்படுவார்களானால், அவர்களைக் கௌரவமாக நடத்துவதோடு, அவர்தம் பெற்றோரிடம் அவர்களை ஒப்படைக்க வேண்டுமென்று படைகளுக்கு ஆணையிட்டுள்ளார். தம் படைகள் எதிரிகளின் நாட்டையும், கோட்டையையும்தாம் கைப்பற்ற வேண்டுமேயொழிய அவர் தம் அந்தப்புர மகளிரை அல்ல என்று வற்புறுத்தியுள்ளார்.[2] பேரரசர் ஒரிஸ்ஸா அரசர் கஜபதியுடன் போரிட்டபோது அரசரின் மனைவியார் சிறை செய்யப்பட்டார். பின்னர் அவ்விரு அரசர்களும் உடன்படிக்கை செய்துகொண்டதன்பேரில், கஜபதியின் மனைவியாரை அவரிடம் ஒப்படைத்தார்.[3]

கிருட்டிணதேவராயருக்குப் போரில் கலந்துகொண்ட பொது மக்களின்பால் கருணை உண்டு. எனவே, ரெய்ச்சூர்ப் போரில் பலர் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டதை அறிந்த ராயர் மிக்க மனவேதனை அடைந்தார். உடனே, படைத்தலைவர்களை நோக்கித் தங்கள் படைகளைப் பின்வாங்கிச் செல்லுமாறும், குற்றமற்ற நிரபராதிகள் பலரைக் கொன்றது தமக்கு விருப்பமில்லை என்றும் உடனே தம் ஆணைக்குக் கீழ்ப்படியுமாறும் உத்தரவிட, எல்லாப் படைத்தலைவர்களும் பின்வாங்கிச் செல்லலாயினர்.[4] இவ்வாறு போர்நிறுத்தத்திற்குப் பின் அவரிடம் கைதிகளாகக் கொண்டுவரப்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரையும் விடுதலை செய்து அவர்களை அவரவர்

1 Sewell, p. 338—39.
2 Amucta, Canto-IV V. 267
3 Sewell, p. 320
4 Sewell, p. 339-40

இருப்பிடத்தில் தங்கவோ, வெளியிடங்களுக்குச் செல்லவோ அனுமதியும் அளித்தார். அதனுடன் தம் படையினர் பிறர் பொருளைக் கொள்ளையடித்ததை அறிந்து அவர்களுக்குத் தக்க தண்டனையளித்தார்.

போரில் இறந்த வீரமிக்க போர் வீரரின் குடும்பத்திற்கு நிலதானம் செய்து அவ் வீரரது இழப்புக்கு ஈடுசெய்தார்.

கிருட்டிணதேவராயர் உம்மத்தூர்த் தலைவரான கங்கராஜுவை வெற்றிகொண்ட பின் அம் மாநிலத்தைப் புரட்சி ஆளுநர் குடும்பத்தினருக்கு மீட்டுக் கொடுத்தார் என்றாலும், கங்கராஜு மாநிலத்தில் அடங்கிய தெரகனும்பியைத் (Terakanambi) தம்பால் வைத்துக்கொண்டு அதன் தலைவராகச் சாளுவ திம்மாவின் சகோதரரான கோவிந்தராஜுவை ஆளுநராக நியமித்தார்.[1]

(xi) அயல்நாட்டுக் கொள்கை

கிருட்டிணதேவராயர் முஸ்லிம்களின் படையெடுப்பு அடிக்கடி நிகழ்வதால் தம் நாட்டின் எல்லைப்புறங்களுக்கு ஏற்ற காவல்களை அமைக்க முனைந்தார். எனவே, தம் ஆட்சிக்கு அருகிலுள்ள அண்டை நாடுகளின் அலுவலர்களுக்கு நட்புமுறையில் இணைந்து வாழ்வது நல்லது என்பதைத் தெரிவித்தார். அதனை மறுப்பவர்களுடன் போரிடத் துணிந்தார். அருகில் உள்ள காடுகளில் வசிக்கும் காட்டுவாசிகள் அனைவரையும் அடிபணியச் செய்தார்.[2] மேலும், மிக்க மூடத்தனமும் முரட்டுச் சுபாவமும்உடைய சில மலைவாசிகளை, அவர்தம் மனோநிலை அறிந்து அவர்களோடு பழகி, அவர்களைத் தம் வழிக்குக் கொண்டுவந்தார். ஆங்காங்கு முக்கிய இடங்களில் இராணுவ நிலையங்களையும் படையினர் குடியிருப்புகளையும் நிறுவித் தம் ஆட்சியில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டினார்.

கிருட்டிணதேவராயர் ஒற்றர்களை நியமித்து அவர்கள் மூலம் வெளிநாட்டு நிலைகளை அறிந்துகொள்வார். 'கிருஷ்ணராஜ விஜயமு' வில் ஒற்றர்களை அவர் வடபால் உள்ள அண்டை நாட்டின் நிலைகளை அறிந்துவரச் செய்தார் என்றும், ஒற்றர்களும் முக்கியமான செய்திகள் பலவற்றை அரசரிடம் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[3] இராய வாசகமுவின்மூலம் ராயர்

1 E. C. III S.r. 6
2 Amucta-Canto, IV V. 286
3 S. K. Iyangar Sources, p. 130

அனுப்பிய ஒற்றர்கள் எதிரிகளின் படைபலத்தையும் அவர்கள் கிருஷ்ணு மாநிலத்தில் செய்துவரும் அட்டூழியங்களையும் அரசரிடம் தெரிவித்ததாக அறிகிறோம்.[1]

ராயர் பிற நாட்டுடன் போர் தொடுக்க வேண்டியிருப்பின், தமக்கோ தம் எதிரிக்கோ யாதொரு உதவியும் செய்யாது விலகி யுள்ள (தலையிடா) நாடுகளுக்கும் தாம் போருக்குப் புறப்பட இருப்பதை அறிவிப்பது வழக்கம். நூனிஸ் தம் குறிப்பில் கூறுவது 'ராயர் பீஜப்பூர்ச் சுல்தானுடன் போரிட நேரிட்டதை விசயநகரப் பேரரசுக்கு வடபால் உள்ள ஏனைய சுல்தான்களுக்கும் தெரிவித் தார். அவர் எதிர்பார்த்தபடி அவர்களிடமிருந்து பதில் கிடைத்தது. அவர்கள் ராயருடைய கருத்தை ஏற்றுக்கொண்டு அவருக்கு இயன்ற உதவியைச் செய்வதாகவும் பதிலில் குறிப் பிட்டிருந்தனர்.'[2]

சாமர்த்தியமான பிரதிநிதிகள் அந்நியர் சபைகளுக்கு அனுப்பப்பட்டனர். அரசு தூதர்களாகச் சென்ற அவர்கள் போர் எழுவதுபற்றியோ சமாதானம் செய்துகொள்வது பற்றியோ அந்நிய நாட்டினரிடம் கலந்துபேசி முடிவெடுப்பர். அவர் களுக்குத் தக்க மரியாதை எங்கும் தரப்பட்டது. ராயர் அத்தகைய அரசு தூதர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'எதிரிகளின் அரசு தூதருக்கும் நாம் கௌரவமும், வெகுமதியும் தருவதன் மூலம் அவர்தம் அரசரது நட்புறவைப் பெறமுடியும். அவரை அவ மரியாதை செய்தால் அச் செயல் போருக்கு அடிப்படை யாகும்' என்று கூறியுள்ளார்.[3] மேலும் தம் சபையை நாடிவந்த சாதாரணத் தூதர்களுக்குக்கூட வெகுமதி அளிப்பது வழக்கம். அதன்படியே அவர் பீகார், பீடார், கோல்கொண்டாச் சுல்தான் களிடமிருந்து கடிதங்களைக் கொண்டுவந்த தூதர்களுக்கு வேண்டிய வெகுமதிகளை அளித்தார். அக் கடிதத்தில் சுல்தான்கள் மூவருந் தங்களுடைய இடங்களைத் தங்களுக்கு ராயரே முன்னின்று மீட்டுத் தர வேண்டுமென்றும், அவ்வாறு இல்லையெனில் தாங்கள் பீஜப்பூர்ச் சுல்தானை அடில்ஷாவுக்கு அவன் நாட்டை மீட்க உதவி செய் வோம் எனவும் பேரரசரை மிரட்டுவதுபோல் எழுதியிருந்தனர். அக் கடிதச் செய்திக்குக் கோபப்படாமல், அச் செய்தி கொண்டு வந்த வீரர்களுக்குப் பரிசளித்தார்.[4] எனவே, ராயர் எப்பொழுதும் அரசத் தூதர்களாயினும் (Ambassador) சரி, சாதாரணச் செய்தி கொண்டுவரும் வீரனாயினும் சரி அவர்களை அன்புடன் வரவேற்று

1 S. K. Iyangar Sources, p. 112
2 Sewell, 325-26
3 Amucta, Canto-IV, V. 225
4 Sewell, p. 349

வெகுமதி தந்து வெளிப்படையாகச் சபையில் பேசுவது வழக்கம். கி. பி. 1511-ல் கிருட்டிணதேவராயர் போர்ச்சுகீசியரது சபைக்கு ஓர் அரசாங்கத் தூதரை அனுப்பி, அதன்மூலம் போர்த்துகல் நாட்டவருடன் நட்புக்கொண்டார். அதற்குப் பதிலாகப் போர்த்துகல் அரசினரும் ஒரு தூதரை ராயர் சபைக்கு அனுப்பி அவர்தம் நட்புரிமையை வலுப்படுத்திக் கொண்டனர்.

(xii) ஆட்சிப் பரப்பு

தென்னிந்தியாவிலிருந்த இந்து அரசுகளில் விசயநகர அரசு மிகப் பெரியதொன்றாக விளங்கியது. கிருட்டிணதேவராயர் காலத்தில் ஆட்சி எல்லை அதிகமாகப் பரவியிருந்தது. வடமேற்கு எல்லையாகக் கோவாவும், வட கிழக்கில் ஒரியாவும் திகழ்ந்தன (படம் பின் பக்கம்). வடக்கு எல்லையாகக் கிருஷ்ணா நதியும், தெற்கு எல்லையாக மதுரையும் குறிப்பிடப்பட்டுள்ளன என்றாலும், கிருட்டிண தேவராயர் சிங்களம்(இலங்கை) வரை படையெடுத்து வெற்றிபெற்று வந்ததாகத் தெரிகிறது.


(அ) பேரரசின் பிரிவுகள் : ராயர் தம் அரசினைப் பல இராச்சியங் களாக (அ) மண்டலங்களாகப் பிரித்திருந்தார். அந்த மண்டலங் கள் மாவட்டங்களாகவும், தாலுக்காக்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டன.

மண்டலங்களில் சில: ஜெயங்கொண்ட சோழமண்டலம், நிகரிலி சோழமண்டலம் போன்றவை. (ஒரு சாரார் இராச்சியத்தை விட மண்டலம் பெரிதென்று கருதுகின்றனர்.) இராச்சியத்தை ஆளக் கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால், மண்டலங்களைப் பற்றி ஏதும் குறிப்பில்லை. எனவே, நிர்வாக வசதிக்கான இராச்சியப் பிரிவுகள் அக் காலத்தில் இருந்திருக்கவேண்டுமென்று தெரிகிறது.

இராச்சியங்களில் சில : படைவீடு இராச்சியம், மதுரை இராச் சியம், திருவாடி இராச்சியம் என்பனவாம். அரசாங்க வெற்றி அடிப்படையில் இந்த இராச்சியங்கள் நிறுவப்பட்டிருப்பதால் இவை ஒரே பரப்பளவு உள்ளவையாக இருந்திருக்க முடியாது. சில அர சாங்க முக்கியத்துவத்துக்காகச் சில இராச்சியங்களை மகா இராச்சி யங்கள் என்று கூறுவதுமுண்டு. உதாரணமாகச் சந்திரகிரி, படைவீடு, ஆரகா (Araga) ஆகியவை மகா இராச்சியங்கள் என்று அழைக்கப்பட்டுள்ளன.[1] இராச்சியங்களின் எண்ணிக்கை ஆட்சிக்கு ஆட்சி மாறுபட்டிருந்தது. கிருட்டிணதேவராயரது ஆட்சியின் முற்பகுதியில் குத்தி (Gutti) ஓர் இராச்சியமாகக் கருதப் பட்டது. ஆனால், அதுவே கி. பி. 1529-ல் பெனுகொண்டா இராச்சியத்தின் உட் பிரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1 E. I. III p. 119.

விசயநகரப் பேரரசின் ஆட்சிப் பரப்பு



5. கிருட்டிணதேவராயருக்குப் பின்

அச்சுதராயர் (*1529—1542*-கிருட்டிணதேவராயரின் ஒன்று விட்ட சகோதரர்)

முதலாம் வெங்கடா (1542—அச்சுதரின் குமாரர்—கொல்லப் பட்டார்)

சதாசிவராயர் (*1542*—அச்சுதரின் சகோதரர் குமாரர்—ராம ராயரின் அதிகாரம்)

ராமராயர் இறத்தல் (1565-தலைக்கோட்டைப் போர்க் குழப்பம்)

(அ) அச்சுதராயர் (1529–42)

கிருட்டிணதேவராயருக்குப் பின், அவரது ஒன்றுவிட்ட உடன் பிறப்பாளரான அச்சுதராயர் பதவியேற்றார். கிருட்டிணதேவ ராயரே, தம் பதினெட்டு மாத வயதுடைய மகனைவிட அச்சுத ராயரே தமக்குப்பின் அரசராக்கப்படவேண்டுமென விரும்பினார். ஆனால், அவர் இறந்தபின் அவரது சிறுவனை ராமராயர் அரசர் எனப் பிரகடனப்படுத்தினார் என்றாலும், அவரது முயற்சி வெற்றி யளிக்கவில்லை. ஏனெனில், தலைநகரில் உள்ள சாளுவ வீரநரசிம்மர், சந்திரகிரிச் சிறையிலிருந்த அச்சுதராயர் தலைநகர் வந்துசேரும் வரை அரியணையைப் பாதுகாத்துக் கொண்டிருந்தார். அச்சுத ராயர் அவ்வாறு சந்திரகிரியிலிருந்து விசயநகரை நோக்கிச் செல்லும்போதே வழியில், முறையே திருப்பதியிலும், காளஹஸ்தி யிலும் அவருக்கு முடிசூட்டி மக்கள் மகிழ்ந்தனர். எனவே, ராம ராயரது முயற்சி பலிக்கவில்லை.

அவர் பதவியேற்ற ஆண்டிலேயே அவரிடமிருந்து ரெய்ச்சூர்த் தோ-ஆப்பைக் கைப்பற்ற எண்ணி, இஸ்மெயில் அடில்ஷா திடீரெனப் படையெடுத்து ரெய்ச்சூரையும் முட்கல்லையும் கைப்

பற்றிக் கொண்டார். பதவிக்கு வந்தவுடன் நடைபெற்ற இப் போரை அச்சுதராயர் தடுப்பதற்கான முயற்சி ஏதும் செய்ய அவருக்கு அவகாசமில்லாமல் போயிற்று.

அறிஞர் நூனிஸ், அச்சுதராயரை ஒரு கோழை என்றும், குணக்கேடர் என்றும், நேர்மையற்றவர் என்றும் குறிப்பிடுகின்றார். அவர் அச்சுதராயரின் ஆட்சிக் காலத்தில் விசயநகரம் வந்திருந் தார். என்றாலும், அவர் கூறும் கருத்துகள் சில இடங்களில் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாயில்லை. ஏனெனில், அச்சுதராயர் கஜபதி படையெடுப்பை முறியடித்துள்ளார். அதனுடன் கோல்கொண்டாச் சுல்தான் குலி குத்ஷா (Quli Quitb Shah) கொண்டவீட்டைத் தாக்க எடுத்த முயற்சியைத் தடுத்துள்ளார்.

மேலும், அச்சுதராயர் தம்முடன் விரோதமாயுள்ள ராம ராயருடன் சமாதானம் செய்துகொண்டு விசயநகர அரசில் அவருக்கும் பங்கு தருவதாக வாக்களித்தார். இச் செய்தியை ஓய்வுபெற்ற சாளுவ வீரநரசிம்மர் அறிந்து, உம்மத்தூர், திருவாங் கூர்த் தலைவர்களுடன் கலந்து கலகம் விளைவித்தார், அச்சுதராயர் தம் மைத்துனரான சலக்கராசு திருமலை தலைமையில் ஒரு படையை அனுப்பி அக் கலகத்தை அடக்கித் தாமிரபரணி வரை வெற்றி பெற்றுத் திரும்பினார். அந் நதிக்கரையில் ஒரு வெற்றித்தூணையும் நாட்டியுள்ளார். பாண்டிய அரசர், கலகத்தாரிடம் பட்ட தொல்லை களை நீக்கியதால் அவ் வரசர் தம் மகளைப் பேரரசருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். சாளுவ வீரநரசிம்மரும் அவருடைய துணைவர் களும் தோற்றதோடன்றிச் சிறைபிடிக்கப்பட்டுத் திருவரங்கத்தில் முகாம் செய்துள்ள அரசரிடம் கைதிகளாகக் கொண்டுவரப்பட்டு நிறுத்தப்பட்டனர். பின்னர், அச்சுதராயர் உம்மத்தூர் வழியாகத் தலைநகரம் நோக்கிப் புறப்பட்டார். வழியில் ஆங்காங்குள்ள உள்ளூர்த் தலைவர்கள் பணிந்து அவரை வரவேற்றனர்.

கிருட்டிணதேவராயரின் குழந்தை இறந்தவுடன் இராமராய ருடைய செல்வாக்குக் குறைய ஆரம்பித்தது. அச் சூழ்நிலை, இராம ராயரின் போக்கில் மாறுதலை உண்டாக்கியது. எனவே, அச்சுத ராயர் துணிவுடன் ரெய்ச்சூர்த் தோ-ஆப் வரை தம்மாட்சியைப் பரப்பினார். கி. பி. 1534-ல் அடில்கான் இறந்ததும், அவரது குமாரர் மல்லு அடில்கான் பதவியேற்றார். அவர் திறமையற்றவராயிருந்த தால், அச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அச்சுதராயர் பீஜப்பூரைத் தம் ஆட்சிக்கு அடிவணங்குமாறு செய்தார்.

எனினும், ராமராயர் தம் நிலையை வலுப்படுத்த வேண்டிப் பழைய ஊழியர்களை நீக்கி, அவர்களுக்குப் பதிலாக அப் பதவி களில் தம் உறவினர்களையும், நெருங்கிய நண்பர்களையும் நியமித்தார். 1535-ல் இப்ராஹிம் அடில்கான், பீஜப்பூர்ச் சுல்தானகப் பதவியேற்றதும், பதவிநீக்கம் செய்யப்பட்ட 3000 முஸ்லிம் சிப்பாய் களை இராமராயர் தம் படையில் சேர்த்துக்கொண்டார். இதற் கிடையில் குத்தியில் ஏற்பட்ட கலகத்தை அடக்க அச்சுதராயர் சென்றார். 1536-37-ல் அதனை அடக்கி ஒடுக்கியபின் தம் அலுவலர்களுடன் திருப்பதி சென்று தலைநகரம் நோக்கித் திரும்பி வரும்போது தைரியமாக இராமராயர் அவரைக் கைப்பற்றிச் சிறையில் இட்டார். பின் தாமே விசயநகரப் பேரரசர் எனப் பிரகடனப்படுத்தினார். ஆனால், பிரபுக்கள் அவரது செயலை எதிர்க் கவே வேறு வழியின்றி இராமராயர், அச்சுதராயரின் ஒன்றுவிட்ட உடன்பிறப்பான சதாசிவராயரை அரியணையில் அமர்த்தினார். அவர் பெயரால் ஆட்சியைத் தாமே அரசப் பிரதிநிதியாகவிருந்து நடத்தலானார். அவ்வாறு ஆட்சி நடைபெற்று வருகையில், தெற்கே கலவரம் ஏற்பட்டது. உடனே இராமராயர் அச்சுத ராயரைத் தம் நம்பிக்கைக்குரிய ஊழியரிடம், பாதுகாவலாக வைத் திருக்கும்படி ஒப்படைத்துவிட்டுத் தெற்கு நோக்கிப் படை யெடுத்தார். அவர் எதிர்பார்த்ததைவிட நீண்ட நாள்கள் அங்கே தங்கவேண்டியதாயிற்று. அதற்குள் பாதுகாவலில் வைக்கப்பட்ட அச்சுதராயரை அவ் ஊழியர் விடுதலை செய்து, அச் செயலுக்கு ஈடாகத் தாம் முதல் அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டார். இச் செய்தியை அறிந்த இராமராயர் கலகக்காரர்களுடன் உடன் படிக்கை செய்துகொண்டு உடனே தலைநகரம் நோக்கித் திரும்பினார்.

விசயநகர ஆட்சியில் உள்ள உள்நாட்டுக் குழப்பங்களைப் பயன் படுத்திக் கொண்டு தக்க சமயம் பார்த்து, பீஜப்பூர்ச் சுல்தானாகிய இப்ராஹிம் அடில்கான் திடீரெனப் பெரும் படையுடன் விசய நகரத்தைத் தாக்கினார். நாகலாபுரத்தை நோக்கிவந்த அவரது படை அந் நகரை இடித்துத் தரைமட்டமாக்கியது. அச்சுதராயரும் இராமராயரும் இப்ராஹிமை எதிர்ப்பது குறித்து அச்சமுற்ற நேரத்தில் அகமதுநகர்ச் சுல்தான், பீஜப்பூர்மீது படையெடுப்பைத் தொடங்குவதாக அறிந்த இப்ராஹிம், அவ் விருவருடனும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அச்சுதராயரை அரசராக அங்கீ கரித்து, இராமராயரை அவருடைய இடத்தைச் சுயேச்சையாக ஆளுமாறும் ஓர் உடன்பாட்டை இப்ராஹிம் செய்துவைத்தார். 1542-ல் அச்சுதராயர் இறக்கும்வரை அவர்கள் ஒப்பந்தப்படி நடந்துகொண்டனர்.

அச்சுதராயரின் ஆட்சிக்காலம் குழப்பமானதாக இருந்தது. உள்நாட்டுக் கலகங்களும், அந்நியர் படையெடுப்பும், இராம ராயரின் பேராசையும் அக் குழப்பங்களுக்குக் காரணமாக இருந்தன. எனினும், அக் குழப்பங்களுக்கிடையில் அச்சுத ராயர் தம் ஆட்சியை நடத்தினர் என்றே சொல்லலாம். நூனிஸ் போன்ற அறிஞர்கள், அவரைப் பற்றித் தாழ்ந்த கருத்துகளை வெளியிட்டாலும், அவரது பெருமையை அவரது அவைக்களப் புலவர் ' இராஜநாத திண்டிம'ரின் (Rajanatha Dindima) ' அச்சுதராயா ப்யூதயம் ' (Achyutaraya Bhyudaya) என்ற கவிதையில் மிகச் சிறப்பாக எழுதியுள்ளார். 1530-ல் அவரிட மிருந்து இஸ்மாயில் அடில் ஷா ரெய்ச்சூர்த் தோ-ஆப்பைக் கைப் பற்றிக்கொண்டார். மேலும், சோழநாட்டு ஆட்சித்தலைவர், திருவாங்கூர் அரசருடைய உதவிபெற்றுக் கலகம் செய்தார். அச்சுத ராயரின் மைத்துனர் அவ் விரு பகைவர்களையும் முறியடித்து வெற்றிகொண்டார் என்று அந் நூலில் கூறப்பட்டுள்ளது. எனவே அவரைக் கோழை எனக் கொள்ளல் தக்கதன்று.

மதுரை நாயக்க மரபினைத் தோற்றுவித்த நாகமநாயக்கர் குமாரர் விஸ்வநாத நாயக்கர் அச்சுதராயரின் தென்னக வெற்றிக்குக் காரணமாயிருந்தார். சாளுவ வீரநரசிம்மரையும் ஏனைய தென்னகத் தலைவர்களையும் எதிர்த்து வெற்றிபெற்ற விஸ்வநாத நாயக்கரை அச்சுதராயர் மதுரையில் *1533* முதல் தாம் இறக்கும் வரை ஆளுநராக இருக்க ஆணையிட்டார். பின்னர், அவரே மதுரை நாயக்க மரபினைத் தோற்றுவித்தார் என்பதற்குப் போதிய சான்றில்லை. ஆயினும், அவரது குமாரன் கிருஷ்ணப்பா என்பவரின் முயற்சியாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

(ஆ) முதலாம் வெங்கடா

அச்சுதராயருக்குப் பின் அவருடைய குமாரர் முதலாம் வெங்கடா என்பவர் அரியணை ஏறினர். ஆனல், அவர் சிறுவரா யிருந்ததால் அவருடைய தாய்மாமன் சலக்கராசு திருமலா என்பவர் பிரபுக்களின் எதிர்ப்புக்கிடையில் ஆட்சியை நடத்த லானர். அவர்மீது ஐயம் கொண்ட அவரது சகோதரியும் அரசியு மான வரதாதேவி என்பவர், அடில்கானது உதவியை நாடினர். சுல்தான் அடில்கான் விசயநகரம் நோக்கிப் படையெடுக்கத் தயாரான சமயம் பார்த்து, சலக்கராசு திருமலா, சுல்தானுக்குப் பணம் தந்து அவர் போக்கைத் தடுத்தார். இதற்கிடையில் இராம ராயர் குத்திச் சிறையிலிருந்த சதாசிவராயரை விடுதலைசெய்து பேரரசராகப் பிரகடனம் செய்தார். மேலும், பீஜப்பூர்ச் சுல்தான்

உதவியை நாடினூர். அடில்கான் விசயநகரத்தின்மீது படையெடுத்தார். தலைநகரத்திலுள்ள குடிமக்கள் சார்பில் தாமே விசயநகரப் பேரரசர் எனக் கூறிக்கொண்டு, திருமலா அடில்கான்மீது படையெடுத்து, அவரைத் தோற்கடித்தார். பின்னர்த் தமக்கு இடையூருக உள்ள முதலாம் வெங்கடாவையும் அவரது உறவினர்களையும் கொன்றொழிப்பதாகத் தீர்மானித்தார். இத்தகைய கொடூர ஆட்சியை அடக்க வேண்டுமெனத் தலைநகரத்திலுள்ள பிரபுக்கள், மீண்டும் பீஜப்பூர்ச் சுல்தானைத் துணைக்கழைத்தார்கள். அவர் மிக்க இறுமாப்புடன் காணப்பட்டதால் மக்கள் அவரை வெறுக்கவே, தம்மைக் காத்துக்கொண்டால் போதும் எனச் சுல்தான் திரும்பிப் போய்விட்டார். கடைசியாக இராமராயர், சதாசிவராயரின் பெயரால் தலைநகரைப் பிடிக்கத் திட்டமிட்டார். அதன்படி பெனு-கொண்டாவைக் கைப்பற்றித் திருமலாவைப் பல இடங்களில் தோற்கடித்துத் துங்கபத்திரை நதிக்கரையில் அவரைக் கொன்றொழித்தார். பின்னர், விசயநகரம் சென்று கி. பி. 1543-ல் சதாசிவராயருக்கு முடிசூட்டினூர்.

(இ) சதாசிவராயர்

முதல் ஏழெட்டு ஆண்டுகள் சதாசிவராயர் பெயருக்கு மட்டுமே பேரரசராக விளங்கினூரேயன்றி உண்மையில் அரசாங்க அதிகாரங்களை நடத்திவந்தவர் இராமராயரே ஆவார். இராமராயருக்கு அரசாங்க விருதுகள் பல வழங்கப்பட்டன. சதாசிவராயர் தக்க பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தார். இராமராயர் தம் உடன் பிறப்புகளாகிய திருமலை, வேங்கடாத்திரியோடு ஆண்டுக்கு ஒரு நாள் அரசரைச் சந்திப்பதோடு பொதுமக்கள் சந்திக்கவும் அனுமதித்திருந்தார்.

ஆனூல், சிறைப்பட்ட மன்னரைப் பேரரசர்க்குரிய மரியாதையுடன் ராமராயர் நடத்திவந்தார். அதனுடன் தம்முடைய உறவினர்கள் பலரைச் சிறந்த பதவிகளில் அமர்த்தித் தம்முடைய ஆட்சி வலிமையைச் சரிசெய்து கொண்டார். இராமராயர் கி. பி. 1563-ல் பேரரசரை மக்களுக்குக் காட்டிவந்த பழக்கத்தை நிறுத்திவிட்டதாகத் தெரிகிறது. இராமராயர் அரசருக்குரிய பல சிறப்புப் பெயர்களையும் பட்டங்களையும் சூட்டிக்கொண்டதாகச் செய்திகள் நிலவின என்றாலும், அவர் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார் என்ற முடிவிற்கு வருவதற்கான போதிய சான்றுகள் ஏதும் இல்லை.

இராமராயர் 1543-ல் அகமதுநகர், கோல்கொண்டாச் சுல்தான்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி பீஜப்பூரைத் தாக்கி அந்தச் சுல்தானை அடிபணியச் செய்யவேண்டும் என்பது

அவரது எண்ணம். ஆனால், ஆஸாத்கான் என்ற திறமைமிக்க பீஜப்பூர் அமைச்சர் இவரது படையெடுப்பால் பீஜப்பூர் அழியாத வாறு அதனைக் காப்பாற்றினர். ஆஸாத்கானின் திறமையை உணர்ந்த இராமராயர் பீஜப்பூரைத் தமக்குத் துணையாகக் கொண்டு மற்றைய சுல்தான்களை அடக்கத் திட்டம் வகுத்தார். அதன்படி கி. பி. 1558-ல் பீஜப்பூர்ப் படைகளும் விசயநகரப் படைகளும் அகமது நகரைத் தாக்கின. விசயநகரப் படைகள் அகமது நகரை மிக்க கொடூரமாகத் தாக்கி அழித்தன. அப் போரின் விளைவாக முஸ்லிம்கள் இராமராயரின் இஸ்லாமிய மத வெறுப்புணர்ச்சியைக் கண்டார்கள். அப் போர்பற்றி அறிஞர் பெரிஷ்டா பின்வருமாறு கூறுகிறார். 'விசயநகரப் படைகள் பகைவர் நாட்டில் செய்த அடாத செயல்களுக்கு அளவே இல்லை. அவர்கள் முகமதியப் பெண்மணிகளை மானக்கேடடையச் செய்ததோடன்றி, மசூதிகளை இடித்து, குரான்களையும் இழிவுபடுத்தினர்.'

முஸ்லிம் சுல்தான்கள் தங்களுக்குள் இருக்கும் ஒற்றுமை யின்மையே இராமராயர் வெற்றிக்குக் காரணம் எனப் புரிந்து கொண்டனர். எனவே, இப்ராஹிம் குதுப்ஷா, உசேன்ஷா, ஆகிய இருவரும் தாங்கள் அனுபவித்த துயரங்களை எண்ணி ஏனைய பாமினி சுல்தான்களை ஒன்றுசேர்த்து இந்து இராச்சி யத்தை அழிக்க வேண்டுமென முடிவு செய்தனர். அவர்கள் ஒரு சமஷ்டியை ஏற்படுத்திக் கொண்டனர். அச் சமஷ்டியில் அகமதுநகர், கோல்கொண்டா, பீஜப்பூர், பீரார் ஆகிய நான்கு நாடுகளும் கலந்து கொண்டன. பீரார் அதில் சேரவில்லை. சுல்தான்கள் தங்களுக்குள் இருக்கும் உட்பகையை ஒழிக்கச் சில வழிவகைகளைக் கையாண்டனர். அவற்றுள் திருமணத்தின் மூலம் அந் நாடுகளுக்குள் ஒற்றுமை ஏற்பட்டதைக் குறிப்பிட வேண்டும். உசேன் நிஜாம்ஷாவின் மகளான சாந்த்பீபியை, அலி அடில்ஷா திருமணம் புரிந்து கொண்டார். அவரது சகோதரி களில் ஒருவரை உசேனின் மூத்த மகனுக்கு அலி திருமணம் செய்து கொடுத்தார். இவ்வாறு ஒன்றுபட்ட நான்கு சுல்தான் களும் விசயநகரத்தின்மீது போரிட ஆயத்தம் செய்யலானார்கள். அவர்களது கூட்டுறவிற்கு மூலகாரணமாக இருந்த நாடு அகமது நகரா, பீஜப்பூரா, கோல்கொண்டாவா என்று திட்டமிட்டு வரலாற்று அறிஞர்களால் குறிப்பிட முடியவில்லை என்றாலும், அகமது நகரின் முதலாம் உசேன்ஷா தலைக்கோட்டைப் போரில் சிறந்த பங்கு பெற்றிருந்தார் என்று அறிகிறோம். பீஜப்பூர்ச் சுல்தான், ரெய்ச்சூர்த் தோ-ஆப் பகுதிகளைத் தமக்குக் கொடுக்க வேண்டும் என்று இராமராயருக்கு அறிவித்தார். அதனை அவர் மறுக்கவே, சமஷ்டி நாடுகளின் படைகள் பீஜப்பூர் மாவட்டத்தில்

உள்ள தலைக்கோட்டை என்னுமிடத்தில் 1564 டிசம்பர் 26ஆம் நாள் ஒன்றுகூடின. தலைக்கோட்டை என்பது கிருஷ்ணா ஆற்றின் வடபால் அமைந்துள்ள ஒரு சிறிய கோட்டையாகும். செய்தியை அறிந்த இராமராயர் தம்முடைய படைகளைத் திரட்டிக்கொண்டு கிருஷ்ணா ஆற்றிற்குத் தெற்கில் உள்ள ராக்கசி, தங்கடி என்ற இரு கிராமங்களிலும் தங்கினார். இரு சாரார்களுக்குமிடையே 1565ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 23 ஆம் நாள் போர் மூண்டது. தலைக் கோட்டை என்னுமிடத்தில் முகம்மதியர் படைதங்கிப் போரைத் தொடங்கியதால் அப் போருக்குத் 'தலைக்கோட்டைப் போர்' என்ற பெயர் வழங்கலாயிற்று. இராமராயரது பெரும்படை 70 ஆயிரம் குதிரைகளையும், 90 ஆயிரம் காலாள்களையும் மேலும் யானை, பீரங்கிப்படைகளையும் பெற்றிருந்தது. ஆனால், முகம்மதியப் படையோ 50 ஆயிரம் குதிரைகளையும், 30 ஆயிரம் காலாள் களையும் கொண்டதாயிருந்தது என்றாலும், மராட்டியக் குதிரை வீரர்கள் 6 ஆயிரம் பேர் முகமதியப்படைக்கு உதவி செய்ய முன் வந்தனர். திருமலை, வேங்கடாத்திரி, இராமராயர் ஆகிய மூவரும் இந்துப் படைக்குத் தலைமை தாங்கிப் போரை நடத்தினர். முகம்மதியப் படையினை இப்ராஹிம் குதுப்ஷா, முதலாம் உசேன்ஷா, முதலாம் அலி அடில்ஷா ஆகிய மூவரும் தலைவர் களாக அமர்ந்து நடத்தினர். இராமராயர் வயதில் முதியவரா யிருந்தும் போர் வீரர்களை உற்சாகப்படுத்திக்கொண்டு தாமும் முன்னணியில் நின்றார். தம் போர்ப்படையினை மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் படைத்தலைவர்களை நியமித்தார். தாமே நடுவில் உள்ள படைக்குத் தலைவராக அமர்ந்தார். உசேன்ஷா அவரை எதிர்த்தார். தம் வலப்புறத்தில் வேங்கடாத்ரி தலைமையில் ஒரு படையினை அமைத்தார். அப் படையினை அகமது நகர், கோல்கொண்டாச் சுல்தான்களின் படைகள் எதிர்த்தன. தம் இடப்புறத்தில் தம் உடன்பிறப்பான திருமலையின் தலைமையில் ஒரு படையினை அமைத் தார். அதனை அலி அடில்ஷாவின் தலைமையில் பீஜப்பூர்ப் படை கள் எதிர்த்தன. முதலில் இந்துக்களின் படை முன்னேறி வந்த தோடு விரைவில் வெற்றிபெறும் நிலையிலிருந்தது. ஆனால், இராம ராயர் பக்கமிருந்த இரு முஸ்லிம்கள், 70 முதல் 80 ஆயிரம் காலாட் படைக்குத் தலைமை வகித்தவர்கள், அரசருக்குத் துரோகம் செய்ய லாயினர். திடீரென எதிரிகளின் பக்கம் சேர்ந்துகொண்டு தம் அரசரான ராமராயரை எதிர்க்க முன்வந்தனர். அதனால் இந்துப் படைகளில் குழப்பம் ஏற்பட்டது. அந்தச் சமயத்தைப் பயன் படுத்திக்கொண்டு நைஸாம்ஷா, இராமராயரைச் சிறை செய்தார். முடிவில் ஹுசேனால் கொல்லப்பட்டு, அவர்தலை ஈட்டியில் கோக்கப் பட்டுப் போர்க்களத்தில் காட்டப்பட்டது. அத் தலையில் வைக் கோலைத் திணித்து ஆண்டுதோறும் மக்களுக்குக் காட்டி வந்ததாகக்

கூறப்படுகிறது. அத் தலைபோலவே கல்லினால் உருவம் செய்து, அதைப் பீஜப்பூரில் சுல்தானியர் வைத்துள்ளனர். இன்றும் அங்கு அதனைக் காணலாம். இராமராயரது நிலைமை இவ்வாறானதும் வேங்கடாத்ரி போர்க்களத்தை விட்டு ஓடிவிட்டார். அவர் எந் நிலை அடைந்தார் என்பதே தெரியவில்லை. ஆனால், திருமலை ஒரு கண்ணை இழந்துவிட்டு விசயநகரத்துக்கு ஓடி அங்குச் சிறைப் படுத்தப்பட்டிருந்த பேரரசர் சதாசிவராயரையும், அரசாங்கக் குடும்பப் பெண்களையும் இயன்றஅளவு பொருள்களையும் 1,550 யானை களின் மீதேற்றி எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்ததாகத் தெரிகிறது. அவர் சென்ற இடம்பற்றித் திட்டவட்டமாகக் கூற முடியாதெனினும் அவர் பெரும்பாலும் திருப்பதிக்குச் சென்றிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. வெற்றி பெற்ற முஸ்லிம் வீரர்கள் விசயநகரைக் கொள்ளையிடலாயினர்.

அதனைப்பற்றி அறிஞர் பெரிஷ்டா என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'கொள்ளை மிக்க அதிகமான நிலையில் இருந்தது. படையில் சேர்ந்த ஒவ்வொருவரும் பொன்னும், ஆபரணங்களும், கூடாரங்களும், போர்க் கருவிகளும், குதிரைகளும், அடிமைகளு மாகக் கொள்ளையிட்டுத் தனவந்தர்களாக ஆனார்கள். அவரவர்கள் சூறையாடிய பொருள்களை அவரவர்களே வைத்துக் கொள்ளலாம் என அரசர்கள் அனுமதியளித்தார்கள். தங்கள் உபயோகத்திற் கென்று அரசர்கள் யானைகளைத் தாங்களே வைத்துக்கொண் டனர்.'[1]

விசயநகர அழிவுபற்றிச் சீவெல் (Sewell) என்பார் சிறிதளவு மிகைபடக் கூறியிருப்பினும், பெரும்பாலும் உண்மையானதாய் இருக்கும் எனக் கருதலாம். அவரது குறிப்புகள் யாவையெனில், 'வெற்றிபெற்ற வீரர்கள் விசயநகரத்தைத் தீயினாலும், கத்தி களாலும், கடப்பாரைகளாலும் கோடரிகளாலும், அழிக்கும் செயலில் நாள்தோறும் ஈடுபட்டனர். மிக்க சீரும் சிறப்பும், தொழில் வளமும் பெற்றுப் பெருமிதத்தோடு காட்சியளித்த மகத்தான அம் மாபெரும் நகர் ஒரே நாளில் கைப்பற்றப்பட்டு, சூறையாடி ஒரே நாளில் அழிக்கப்பட்ட அக்கொடும் நிகழ்ச்சியை உலக வரலாற்றிலே வேறெங்கும் காண இயலாது.'[2]

1 'The plunder was so great' notes Ferista 'that every privateman in the allied army became rich in gold, jewels, tents, arms, horses and slaves, the kings permitting every person to retain what he acquired reserving the elephants only for their own use'

2 Sewell, p. 208

தலைக்கோட்டைப் போரின் விளைவுகள் : தலைக்கோட்டைப் போர் இந்துக்களின் ஆதிக்கத்தை இந்தியாவிலேயே அழித்து விட்டது என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், பேரறிஞர் R. சத்தியநாத ஐயர், தலைக்கோட்டைப் போருக்குப்பின் ஐம்பது ஆண்டுகள், ஓரளவு அவ் வரசு சிறப்புற்று இருந்ததாகக் கூறுகிறார். என்றாலும், விசயநகரப் பேரரசு அதனுடைய பழைய பெருமையினை இழந்து ஒருபெரிய நெருக்கடியைத் தோற்றுவித்தது என்று கூறலாம். மேலும், பதினேழாம் நூற்றாண்டில் மராட்டியர் எழுச்சி தோன்றும் வரை துருக்கிய நாட்டினரும் பிறரும் படை எடுக்க வழிவகுத்து விட்டது எனலாம். அதனுடன் விசயநகரின் தோல்வி, போர்ச்சு கீசியரின் வாணிகச் சிறப்புக் குன்றுவதற்குக் காரணமாயிற்று. பொதுவாக, இப் போருக்குப் பின் முகம்மதியரது ஆதிக்கம் தக்காணத்தில் உறுதியாக்கப்பட்டது என்பது உண்மையாகும்.

6. பொருளாதார நிலை

விசயநகரப் பேரரசைக் கண்டு மகிழ்ந்த வெளிநாட்டு அறிஞர்கள் மிகச் சிறப்பாகக் கூறியுள்ளனர். அப்துல் ரஸாக் என்பவர் அரசரின் கருவூலம் பல உள் அறைகளைக் கொண்டதாகவும், அவ் வறைகள் முழுவதும் உருக்கிய தங்கம் நிரப்பப் பட்டிருப்பதாகவும் குறிப்பிடுவதோடு அந் நகரத்திலுள்ள மக்கள் ஏழையாயினும் சரி, பணக்காரராயினும் சரி எல்லோரும் அழகான ஆபரணங்களைக் காதுகளிலும், கழுத்துகளிலும், புஜங்களிலும், மணிக்கட்டுகளிலும், விரல்களிலும் அணிந்திருந்தனர், என எழுதியுள்ளார். பயஸ் (Paes) என்பவர் விசயநகரத்திலுள்ள மக்கள் பல நாட்டவர்களோடு விலைமதிக்க முடியாத வைரக் கற்கள் போன்ற பலவற்றை வியாபாரம் செய்தனர் என்றும், மற்றும் அரிசி, கோதுமை, நவதானியங்கள், பார்லி, பருப்பு வகைகள் முதலிய பொருள்கள் மலிந்து கிடந்தன என்றும் குறிப்பிட்டுள்ளார். பார்போசா (Barbosa) என்பவர் மிகப்பரந்த நிலப்பரப்பு உடைய விசய நகரம் மக்கள் நெருக்கம் உடையதென்றும் வைரம், இரத்தினம் போன்றவற்றைப் பெகு (Pegu) நாட்டிலிருந்தும், பட்டினைச் சைனாவிடமிருந்தும், கற்பூரம், மிளகு, சந்தனம் ஆகிய வற்றை மலபாரிலிருந்தும் பெற்றுச் சிறந்த வாணிகம் நடைபெற்ற தென்றும் குறிப்பிடுகின்றார்.

அந்நிய நாட்டவருடைய கருத்தின்படி கிருட்டிணதேவ ராயர் ஆட்சியில் மக்கள் நல்ல பொருள் வளத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள் என்பது தெரிகின்றது. அவர் காலத்தில் நடைபெற்ற முக்கியத் தொழில்கள் நெசவும், கனிச்சுரங்கம் தோண்டுதலும் ஆகும். நறுமணப் பொடிகள் தயாரித்தல் சிறுதொழிலாக இருந்தது. தொழிலாளிகளும், வியாபாரிகளும் பல சங்கங்களை நிறுவி அவற்றின் மூலம் சிறந்த பயன்களைப் பெற்றனர். அப்துல் ரஸாக் என்பவர், தொழிலாளர் சங்கங்கள் மூலம் பல கடைகளை நிறுவி வாணிகம் நடத்தியதாகக் குறிப்பிடுகின்றார்.

கிருட்டிண தேவராயர் காலத்திய மக்கள் பொருளாதார நிலையில் மிக்க உன்னத நிலையை அடைந்திருந்தனர். வாணிகம் ஒன்றே அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குக் காரண மாகும். வாணிகம் உள் நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும், கடல் கடந்து நடைபெற்றது. கள்ளிக்கோட்டை முக்கிய மேலைத் துறைமுகமாக அமைந்திருந்தது. அப்துல் ரஸாக், சுமார் முந்நூறு கடலோரத் துறைமுகங்கள் இருந்தனவாகக் குறிப்பிடுகின்ருர். அவை இந்து மகாக்கடலிலுள்ள தீவுகளோடும், மலேயா, ஆர்ச்சி பிலாகோ, பர்மா, சைனு, அரேபியா, இரஷ்யா, தென்னுப்பிரிக்கா, அபிசீனியா, போர்ச்சுகல் போன்ற நாடுகளோடும் வாணிகம் செய்தன. அவர்கள் ஏற்றுமதி செய்த பொருள்கள் துணி, அரிசி, உப்பு, சர்க்கரை, வாசனைத் திரவியங்களாகும். இறக்குமதியான பொருள்கள் குதிரைகள், யானைகள், முத்துகள், செம்பு, பவழம், பட்டு, வெல்வெட்டு முதலியனவாம். வாணிகத்திற்கான போக்கு வரவு உள்நாட்டில் காவடிகளின் மூலமாகவும் நடைபெற்றது. அயல்நாடுகளுக்குக் கப்பல்களின் மூலம் போக்குவரவு நடை பெற்றது.

கிருட்டிணதேவராயர் காலத்திய நாணயங்கள் பலவகைப் பொருள்களில் தயாரிக்கப்பட்டன. அவை பொன் நாணயங்களும், செப்பு நாணயங்களும் ஆகும். அந்த நாணயங்களின்மேல் கடவுளர்களின் உருவங்களும் பிராணிகளின் உருவங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. பொருள்களின் விலைவாசிகள் மிகக் குறை வாயிருந்தன.

7. சமூக வாழ்க்கை

கிருட்டிணதேவராயர் காலத்திய சமூக வாழ்க்கை நிலையினை அறிந்துகொள்ள வெளிநாட்டவரின் குறிப்புகளும், கல்வெட்டுகளும், இலக்கியங்களும் பெரிதும் உதவுகின்றன. சிறப்பாகப் பெண்கள் அக் காலத்தில் உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அரசியல், சமூக, இலக்கிய வாழ்க்கைகளில் பெரும் பங்கு ஏற்றுள்ளனர். அவர்களுள் சிலர் வாள் வீச்சிலும், மற்போரிலும், இசையிலும், பிறகலைகளிலும் சிறந்து விளங்கினர். அக் காலப் பெண்களின் நிலையைப்பற்றி நூனிஸ் தரும் குறிப்புப் பின்வருமாறு: 'அரசர் தம் அவையில் பெண்களுக்கு மற்போர் புரிதல், சோதிடம் கூறல், வரவுசெலவுக் கணக்குகளை எழுதல், இசை பாடல், இசைக் கருவிகளை இயக்கல் போன்ற பல வேலைகளைத் தந்துள்ளார். மற்றும் நீதிபதிகள், வழக்குரைப்போர், அரண்மனைக் காவல் புரிவோர் போன்ற பணிகளிலும் பெண்கள் நியமிக்கப்பட்டனர்.' பலதார மணம் அக் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பெரும் பாலும் செல்வந்தர்கள் பல மனைவியரை ஏற்கும் வழக்கம் இருந்தது. பெண்களுக்கு இளமையிலேயே திருமணம் செய்யும் வழக்கமும் இருந்தது. உயர்ந்த பதவியில் உள்ள ஆண்களிடம், கொடிய வரதட்சணை வாங்கும் வழக்கம் இருந்தது. கணவருடன் உடன்கட்டை ஏறும் வழக்கம் அக் காலத்தில் இருந்தது. கைம் பெண்டிரின் கடுந்துயரைப் போக்குவதற்கான சீர்திருத்தம் எதுவும் ஏற்படவில்லை. விலைமகளிர் வீடுகளுக்கு உயர்குடிப் பிறந்தோர் செல்வதை அக் காலச் சமூகம் மறுக்கவில்லை. கற்புநெறியைப் பற்றி யாரும் கவலைப்பட்டதாகக் கூறமுடியவில்லை. என்றாலும் அதைக் கொண்டு ஆடல் அணங்குகள் மிக்க ஆதிக்கம் செலுத்திய தாக முடிவு கொள்ளலாகாது. அரசவையில் அழகும், ஆற்றலும் அமையப்பெற்ற ஓர் ஆடலணங்கு சிறந்த வாய்ப்புக் கிடைத்தால்

அரசியாகவும் அமர முடியும் என்பதனை எடுத்துக்காட்டும் நிலையில் கிருட்டிணதேவராயர் சின்னதேவி என்ற ஆடலணங்கினை மணந்து கொண்டதிலிருந்து அறியலாம்.

சமூகத்தில் அந்தணர்கள் மிக உயர்ந்த நிலையில் இருந்ததாக நூனிஸ் குறிப்பிடுகின்றார். 'அவர்கள் நேர்மையானவர்கள்; ஆற்றலும் ஊக்கமும் நிரம்பியவர்கள்; கணக்குகள் அமைப்பதில் மிக்க திறமை வாய்ந்தவர்கள். உடல் மெலிந்து காணப்படுவதால் அவர்களால் கடினமான உழைப்பை மேற்கொள்ள முடியாது. அரசியல் அலுவல்களில் அவர்கள் பெரிதும் உதவியாய் இருந்தனர். அந்தணக் குருமார்கள் செல்வச் செருக்கு இன்றி நற்குணங்களைப் பெற்றிருந்தனர்'.

அக் கால மக்களின் உணவு வகைகளில் எத்தகைய கட்டுப்பாடும் இருந்ததாகத் தெரியவில்லை. காய்கறிகள், பழவகைகள் ஆகியவற்றுடன் பசு, எருது இறைச்சி தவிர ஏனைய இறைச்சிகளை மக்கள் உண்டனர். பசுவும், எருதும் அவர்களால் போற்றப்பட்ட பிராணிகளாகும். பிராமணர்களிடம் உயிருடன் உள்ள எந்தப் பிராணிகளையும் கொன்று உண்கின்ற பழக்கம் கிடையாது. வின்சென்ட் ஸ்மித் என்பார், 'தினசரி கொல்லப்படும் ஆடுகளின் எண்ணிக்கை கணக்கிலடங்கா. ஒவ்வொரு தெருவிலும் மாமிசக் கடைகள் உண்டு. பறவைகளும், வேட்டைப் பிராணிகளும் மிகக் குறைந்த விலையில் கிடைத்தன. கோழி, முயல்களுடன் நாட்டிலுள்ள ஏனைய பறவைகளையும் உண்டனர்'. எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறிய கருத்துகள் அறிஞர் நூனிஸ் குறிப்புகளுக்கு ஒத்திருக்கின்றன. மக்கள் அணிகலன்களையும், வாசனைப் பொருள்களையும் விரும்பினர். பெரும் செல்வர்கள் வெறியூட்டும் குடிவகைகளை விரும்பினர்.

அக்கால மக்கள் வேட்டையாடுதல், சூதாட்டம், குதிரைச் சவாரி செய்தல், சேவல்களைச் சண்டையிடச் செய்தல், நாடகங்கள் பார்த்தல் போன்ற பொழுதுபோக்குகளில் ஈடுபட்டனர். நூனிஸ் என்பவர் வலிமைப் போட்டியில் கலந்துகொண்டு போரிடுவதை மக்கள் மிக உயர்வாகக் கருதினார்கள் என்றும், அதில் இறந்தோருடைய சொத்துகள் வெற்றி வீரர்க்குப் பரிசாக அளிக்கப்படும் என்றும் கூறியுள்ளார். அக் காலத்தில் இந்து சமயப் பற்று அதிகமுள்ளோர் கடவுளர்க்கு உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் இருந்தது. கிருட்டிணதேவராயர் காலத்தில் இவ் வழக்கம் அதிகமாக இருந்தது. வெளிநாட்டு அறிஞர் ஒருவர் கணக்கற்ற, இத்தகைய குருதி சொரியும் விழாக்கள் பல நடைபெற்றனவாகக்

கூறுகிருர். பயஸ் என்பவர் 'பேரரசர் இருபத்து நான்கு எருமைகளையும் நூற்றைம்பது ஆடுகளையும் ஒரே வீச்சால் வெட்டி வீழ்த்தும் விழாவைக் காணச் செல்வார். நவராத்திரி என்ற விழாவின் கடைசி நாளன்று 250 எருமைகளும், 4,500 ஆடுகளும் பலியிடப் படும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

வேளாண்மை, பருத்தி நெசவு, உப்புக் காய்ச்சல், வைரம் எடுத்தல், பழச்செடி பயிரிடல் போன்றவை மக்களின் முக்கியத் தொழில்களாகும்.

ராயரது ஆட்சிக் காலத்தில் பெருவாரியான குடிமக்கள் இந்துக்களாகக் காணப்பட்டனர். வியாபார நிமித்தமாக வந்த முகமதியர்கள், கிறித்துவர்கள், யூதர்கள் ஆகியோர் பல இடங்களில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் சிறுபான்மையினராய் இருந்தாலும் சுயேச்சையாகவும், சிறப்பாகவும் வாழ்ந்து வந்தனர். இந்து சமுதாயம் நான்கு இனப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவை முறையே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்பனவாம். நான்கு பெரும் பிரிவு என்ருலும் உட்பிரிவுகள் அநேகம் இருந்தன. பெருவாரியான மக்கள் நான்காம் நிலையில் உள்ள ஏதேனும் ஓர் உட்பிரிவுக்குள் அடங்கியுள்ளனர். அவர்களைத் தவிரச் சாந்தலர்கள் என்பவர்கள் தங்களுக்குள்ளே ஓர் இனத்தை ஏற்படுத்திக்கொண்டு பொதுமக்கள் வாழும் இடத்திற்கு வெளிப் புறத்திலே தனி இருப்பிடங்கள் அமைத்து வாழ்ந்து வந்தனர்.

பிராமணர்கள் : சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட ஆறு கர்மாக்களைச் செய்வதைத் தவிர வேறு எதிலும் அதிக நாட்டம் கொண்டதாகத் தெரியவில்லை. அவர்களுக்குள்ளே பல வகையான வகுப்பினர்கள் இருந்தார்கள். போர்ச்சுகீசிய யாத்திரிகர் விசயநகர அரசில் அவர்களோடு பழகி அவர்களைப் பற்றிய கருத்தினைக் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகின்ருர்.

'பிராமணர்களுக்குள் கோயில் பூசை செய்யும் குருக்கள் ஒரு தனி வகுப்பினராக இருந்தார்கள். அவர்களுக்கு உயர்ந்த சலுகைகளும் உரிமைகளும் வழங்கப்பட்டிருந்தன. அவர்கள் எத்தகைய தவறு செய்தாலும் அவர்களுக்கு மரண தண்டனை கிடையாது. அரசரும் பிரபுக்களும் அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருளை வழங்கி வந்தனர். அவர்களில் பலர் நிலச்சுவான்தார்களாகவும், மடத்துத் தலைவர்களாகவும், சிறந்த வருவாய் உடையவர்களாகவும் காணப்பட்டனர். அவர்கள் நன்கு உண்பவர்களாகவும், அவர்களது உணவுக்காக வெளி இடங்களுக்குப் பிரயாணம் செய்வதாகவும், வயிறு நிரம்பினுல் போதுமென்ற

எண்ணம் உடையவர்களாகவும் காணப்பட்டார்கள் என்பது தெரிகிறது. தேன், வெண்ணெய், சர்க்கரை, பருப்பு, பால், அரிசி ஆகியவற்றைப் பெரிதும் விரும்பி உண்டனர்.[1]

பயஸ் (Paes) பின்வருமாறு கூறுகிறார். 'அப் பிராமணர்கள் புனிதத் தன்மை உடைய மனிதர்களாகவும், சமயத் தலைவர்களாகவும் கருதப்பட்டனர்.' ராயர் தம்முடன் பல பிராமணர்களை வைத்துக்கொண்டிருந்தார் என்றும் நகரங்களிலும், மாநகரங்களிலும், அவர்களுக்கு அலுவலர் வேலை கொடுக்கப்பட்டதென்றும், அரசாங்கத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப்பட்டவர்கள் என்றும் குறிப்பிடுகின்றார். ஒரு சிலர் வியாபாரிகளாகவும், சொந்த நிலத்தில் வேளாண்மை செய்பவர்களாகவும் இருந்தார்கள். கோயில் பொறுப் பேற்றவர்களைச் சிறந்த கல்வி அறிஞர்களாகக் கருதினர்.

நூனிஸ் (Nuniz), பிராமணர்கள் பிராணிகளைக் கொன்று தின்பது கிடையாது என்றும், அவ்வாறு இருக்கின்ற பிராமணர்கள் சிறந்தவர்களாகக் கருதப்பட்டார்கள் என்றும் தெரிகிறது. அவர்கள் நேர்மையானவர்கள் என்றும், திறமையும் புத்திக் கூர்மையும் உடையவர்கள் என்றும், கணக்கு வழக்குகளில் நிபுணர்கள் என்றும் விளக்குகின்றார். அவர்கள் ஒல்லியாகவும் நல்ல தோற்றத்தோடும் காணப்பட்டார்கள் என்றும், ஆனால் கடின உழைப்பிற்கு ஏற்றவர்கள் அல்லர் என்றும் குறிப்பிடுகிறார். அவர்களுடைய பொறுப்பின் துணைகொண்டு அரசாங்கம் நடைபெற்றதாகச் சிறப்பிக்கிறார்.

மேற்கண்ட வெளிநாட்டார் குறிப்பின்படி பிராமணர்கள் ஆறு வகுப்பினராகப் பிரிந்துள்ளதாகத் தெரிகின்றது. அவை முறையே (1) குருக்கள், (2) கோயில் பூசை செய்வோர்கள், (3) நிலச் சுவான்தார்கள், (4) அரசாங்க ஊழியர்கள், (5) வியாபாரிகள், (6) யாசித்து உண்பவர்கள்.

1. கோயிலில் உள்ள விக்கிரகங்களைப் பூசிக்கும் நிலையானது ஒரு சிறந்த பிராமணன் பின்பற்றக் கூடிய செயல் அன்று என்று அன்று கருதப்பட்டது. உயர்ந்த பிராமணன் ஒருவன் அவர்களோடு சமமாக உட்கார்ந்து உணவுகொள்ள விரும்பமாட்டான். சிவன் கோயிலில் உள்ள குருக்களாக விளங்கும் தம்பலகாரர்கள் சூத்திர இனத்தோடு சேர்க்கப்பட்டனர். இராமானுஜர் தோன்றிய பிறகு அவரது சமயக் கொள்கையின்படி ஒவ்வொரு வைஷ்ணவனும் இறைவனைப் பூசிப்பது இன்றியமையாத கடமை என்று ஏற்பட்டது. எனவே, அது முதற்கொண்டு வைஷ்ணவ ஆலயங்களில் தென்

1 Barbosa, i-p-217

இந்தியா முழுவதிலும் நன்கு கற்றறிந்த பிராமணர்கள் அப் பொறுப்பினை ஏற்று நடத்தினர். ஆதலால், அப் பெரிய ஆச்சாரி யார்கள் ஒரு தனி இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர்.

2. மடங்கள் அவ்வளவு முக்கிய இடத்தைப் பெறுவிட்டாலும், இந்துசமயம் மடங்களின் அவசியத்தை வேண்டி இருந்தது. மடங் களில் பிராமணர்களே இருக்கவேண்டும் என்ற நீதியில்லை. வீர சைவர்களாக யார் இருந்தாலும் அவர்கள் மடத்தில் சேர்க்கப் பட்டனர். மடத்தின் பொறுப்பினை ஏற்றுள்ள பலர் திருமணம் ஆனவர்கள்; சன்னியாசிகள் அல்லர். மடத்தின் மூலமாகக் கல்வி பரப்பப்பட்டு வந்ததால் அங்கு வந்து சேரும் மாணுக்கர்கள் மடத்தின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படவேண்டும் என்ப தில்லை. ராயர் காலத்தில் மடத்தில் பிராமணர்கள் அதிக அளவில் தங்கி இருந்ததாகத் தெரியவில்லை.

3. நிலச்சுவான்தார்களாக இருந்தவர்கள் தங்கள் காலத் திலோ தங்களின் முன்னோர் காலத்திலோ நிலவரி இன்றி, அரசராலோ பிரபுக்களாலோ தானமாக வழங்கப்பட்ட நிலத்தை உடையவர்கள் ஆவர். இப் பிரிவில் சேர்ந்தவர்கள் அறுவடைக் கால் நிலங்களையும் பசு மந்தைகளையும் பெற்றிருந்தனர். அவர்கள் தம் வீடுகளில் திருமணங்களையும் உபநயனங்களையும் அவ்வப் போது செய்து வந்தனர்; ஏழைகளுக்குப் பிச்சை அளித்தனர். அவர்களின் செயலைக் கொண்டு அக் கிராமத்து மக்கள் உண்மைக் கும் அறத்திற்கும் அவர்கள் தலைசிறந்தவர்கள் என்று கருதி வந்தனர். அவருக்குப் பணியாள்கள் பலர் இருந்தனர். அவர்கள் வீட்டில் எப்போதும் உறவினர்கள் கூட்டமாக இருப்பர். நித்திய கர்மங்களையும் நைமித்திய கர்மங்களையும் ஒழுங்காகச் செய்து வந்தனர். தம் மனைவி தயாரித்த உணவை விஷ்ணுவுக்கு ஆராதனை செய்த பின்பே அதனை உண்பர். நன்கு படித்தவ ராக இருப்பின் மாணவர்களின் கூட்டம் ஒன்றை வைத்துக்கொண்டு வேதங்களையும் சாஸ்திரங்களையும், தமக்குத் தெரிந்த இலக்கியங் களையும் கற்றுக் கொடுப்பர். அவர்கள் யாரிடம் இருந்தும் வெகு மதியை ஏற்றுக்கொள்வதில்லை; அதனைப் பாவம் எனக் கருதினர். அவர்கள் உள்ள கிராமத்திற்கே தங்கள் நேரத்தைச் செலவு செய்வார்களேயன்றி, நகரத்தைப்பற்றி அக்கறை கொள்வதில்லை. சேமித்த பணத்தை வட்டிக்குக் கடனுகக் கொடுப்பர்; தம் வீட்டிற்கு வந்த அனைவருக்கும் உணவு வழங்குவர். அத்தகைய சுரோத்திரிய (Srotriya) பிராமணரது வாழ்க்கை ஏற்புடையதாகக் கருதப்பட்டது. ராயர் காலத்திய புலவர்கள் பலர் இத்தகைய பிராமணர்களைப்பற்றிப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

மகா ஜனங்கள் என்று அழைக்கப்பட்டவர்களில் இவர்கள் இடம்பெறுவர். நீதி நிர்வாகத்தில் இவர்கள் அரசாங்கத்திற்குப் பெரிதும் உதவினர்.

4. பெருவாரியான கற்றறிந்த பிராமணர்கள் ராயர் காலத்தில் அரசாங்கப் பதவியில் சேர்ந்தனர். அவர்களுக்கு நல்ல கணக்காயராகவும், சிறந்த நிர்வாகியாகவும் விளங்குவதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அரசாங்கத்தின் செயலகத்தில் முழுதும் அவர்களே பணிபுரிந்ததாகத் தெரிகின்றது. பிராமணர்களில் பலர் அமைச்சர்களாகவும், தானைத் தலைவர்களாகவும், மாநில ஆளுநர்களாகவும் விளங்கினர். ஒவ்வொரு பிராமணத் தாயும் தன் மகன் ஒரு கோட்டைத் தலைவனாக வரவேண்டும் என்று விரும்பினள். ராயர் காலத்திய முக்கியப் பதவிகளில் இருந்த பிராமணர்கள் பின் வருமாறு: (1) சாளுவ திம்மர், (2) கொண்டமராஜு, (3) ஐயப்ப ராசா, (4) சந்திரகிரி சோமராசா போன்றவர்கள். அவர்கள் நேர்மை, புத்திக் கூர்மை, உழைப்பு ஆகிய பண்புகளைக் கொண்டிருந்ததே அவர்கள் வெற்றிக்குக் காரணம் ஆகும்.

5. பயஸ் (Paes), நூனிஸ் (Nuniz) ஆகிய இருவரும் வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்ட பிராமணர்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், பார்போசா (Barbosa) என்பவர் அதைப்பற்றிக் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. பிராமணர்கள் கடை வைத்துக்கொள்ளவோ, அந்நிய நாட்டுடன் வியாபாரத் தொடர்பு வைத்துக்கொள்ளவோ மறுக்கப்படவில்லை என்றாலும் பிராமண வியாபாரிகள் இருந்ததாக அக்கால இலக்கியங்களிலோ, கல்வெட்டுகளிலோ எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. ஒருசிலர் தங்கள் வாழ்நாளை வியாபாரத் துறையில் கழிக்க முயற்சி எடுத்து இருக்கலாம் என்று கூறமுடியும் என்றாலும், அத்தகையோரும் ஒரு சிலரே என்பது உறுதி.

6. பிராமணர்களில் மிக்க ஏழ்மையானவர்கள் யாசித்து உண்பதையே தம் தொழிலாகக் கொண்டிருந்தனர். ராயர் ஆட்சியில் இருந்த மொத்தப் பிராமணர் எண்ணிக்கையில் இவர்களே அதிகம் எனத் தெரிகிறது. போர்ச்சுகீசிய அறிஞர்கள் குறிப்பிடுவது போல அவர்கள் சோம்பேறிகள் அல்லர் என்றும், பொருளை ஈட்டக் கடின உழைப்புச்செய்தார்கள் என்றும் தெரிகிறது. ராயர் காலத்தில்ஏழைப் பிராமணருக்கு உணவு அளித்துப் பெரும் பொருள் வழங்குவதைப் பெருமைக்குரிய செயலாகக் கருதினர். ஆனால், அப் பழக்கத்தின் மூலம் அவர்களிடம் ஒழுக்கக் குறைவும் பேராசையும் ஏற்பட்டது. அவர்களுடைய போக்குகளை நன்கு ஆய்ந்து அறிந்த கிருட்டிண தேவராயர் அவர்களைப் பற்றி நன்கு விவரித்து எழுதி உள்ளார்.

'பணத்திற்காக எத்தகைய செயலிலும் ஈடுபடுவார்கள். புரோகிதர்களுடனும் மற்றவர்களுடனும் தங்களுக்கு ஒரு பங்கு தரவேண்டும் எனப் பூஜா காலங்களில் சண்டை பிடிப்பார்கள். பிரபுக்களின் வாயிலில் காத்துக் கிடப்பார்கள். சமயச் சார்புடைய கருத்துகளை கூறிச் சூரிய சந்திர கிரகணங்களின் போது மந்திரங்களைக் கூறிப் பிரபுக்களிடம் நன்கொடைகளைப் பெறுவார்கள். எருமை, ஆடு, பசுத்தோல்களால் ஆன காலணிகளைக்கூட ஏற்றுக்கொள்வர். சிரார்த்தங்களில் உண்பதற்கு ஏற்பாடுகள் செய்துகொள்வர். அவ்வாறு இடம் கிடைக்கவில்லையானால் சிரார்த்தத்தை நடத்திச் செல்லும் பிராமணர்களுடன் பின் செல்வர். போதிய உணவு கிடைக்கவில்லையானால், தெருவில் உள்ள சமையல்காரியிடம் அரை வயிற்று உணவைப் பணம் கொடுத்து வாங்குவர்.'[1]

மேலே ராயர் குறிப்பிட்ட கருத்துகள் சற்று மிகைபடக் கூறியதாகக் கருதினாலும், அவ் வகுப்பினைச் சேர்ந்த பலர் அப் பண்புகளைப் பெற்று இருந்தனர்.

அறுவகை வகுப்பினராக அவர்கள் இருந்தாலும் அவர்களது உணவு எளிமையானது. அவ் வுணவு அரிசி, பருப்பு, காய்கறிகள், பால், தயிர், நெய் இவைகளைக் கொண்டதாகும். ஆடை அணிகலன்களும் எளிமையாக இருந்தன. அவர்களின் தேவைகள் மிகக் குறைவு. பிராமணர்கள் பலதார மணம் செய்துகொள்ளலாம் என்று சமுதாயத்தில் அனுமதி இருந்தபோதும் கூட அவர்கள் ஒரு தார மணத்தையே ஆதரித்தனர். ஒரு சாதாரணக் குடும்பத்துப் பிராமணன் பலதார மணத்தைக் கொண்டால் பொருளாதார நெருக்கடி வரும் என்று எண்ணி ஒருதார மணத்தைப் பின்பற்றினன்.

நல்ல வசதியும் பதவியும் உள்ள சாளுவதிம்மர், கொண்டமராசா போன்றவர்கள்கூடப் பலதார மணத்தைச் செய்யும் வாய்ப்பு இருந்தபோதிலும் ஒருதார மணத்தையே ஆதரித்தனர். எனவே, அக் காலப் பிராமணர்கள் ஒருதார மணவாழ்க்கையை நடத்தினார்கள் என்று அறிகிறோம்.

க்ஷத்திரியர்கள் : க்ஷத்திரியர்கள் மிக்க செல்வாக்கு உடைய மரபினராய் இருந்தனர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலேயே பெரும்பாலும் வாழ்ந்து வந்தனர். சூரிய சந்திர வமிசக் குடும்பங்களாகத் தொன்றுதொட்டு வந்துள்ளனர். இரு தரத்தாரும் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்தனர். சந்திர வமிசத்தினர் சூரிய வமிசத்தினரைவிட எண்ணிக்கையில் அதிகம் உள்ளனர். சங்கமர், சாளுவர், துளுவர், அரவீடு பாண்டிய மரபினர் அனைவரும் சந்திர

1 Amucta, 7: 5, 6

குலத்தைச் சார்ந்தவர். அக்கினி குல க்ஷத்திரியர்களைப்பற்றி ராயர் காலத்தில் எத்தகைய கல்வெட்டுகளோ இலக்கியங்களோ இல்லை.

வைசியர்கள் : வைசியர்களுக்கு வேளாண்மையும், கால்நடை போற்றலும், வியாபாரமும் முக்கியமான தொழிலாகக் காணப் பட்டாலும், அவர்களுக்கு வியாபாரம் தவிர மற்றவற்றில் கவனம் செல்லவில்லை. வாணிகத்தை நடத்துவதையே தங்கள் முக்கியத் தொழிலாகக் கொண்டனர். எல்லாப் பிரபந்தங்களிலும் வைசியர் களைப் பற்றிக் குறிப்பிடும் போது அவர்களை வணிகப் பெருமக்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. (தெலுங்கு மாநிலங்களில் கோமட்டி கள் (Komatis) என்பார் வைசியர்களாகவும். தமிழ்நாட்டில் பேரி கள் (Beris) என்பவர்கள் வைசியர்களாகவும் கருதப்பட்டனர்) என்ருலும் இவ்விரு இனத்தவருக்கும் பூசல்கள் அடிக்கடி ஏற்பட்டன. இதற்கிடையில் முகமதியர்களும் லிங்காயத்துகளும் வியாபாரம் நடத்தலாயினர். பலிஜா என்ற ஓர் இனத்தினர் ராயர் காலத்தில் வாணிகத்தைச் செழிப்புடன் நடத்தியதாகத் தெரிகிறது.

சூத்திரர்கள் : உயர்ந்ததும், தாழ்ந்ததுமான பலதரப்பட்ட குணங்களை உட்கொண்ட பெரும் பிரிவாக இது விளங்குகிறது. அவர் களது முக்கியத் தொழில் வேளாண்மையாகும். ரெட்டிமார்கள், வேளாளர்கள் பயிர்த்தொழில் செய்தனர். நாட்டிற்கு அவர்கள் முதுகெலும்பாக இருந்தனர். நாட்டின் செழிப்பிற்கு மிக்க அதிக அளவில் பயன்பட்டனர். அவர்களுள் பலர் படையில் சேர்ந்து நாட்டைக் காத்தனர். எனவே, சூத்திரர்களில் ஒருசில வகுப் பினரை இராணுவக் குடும்பத்தினர் என்றே அழைப்பர். தெலுங்குப் பிரதேசத்தில் கம்மார்கள் (Kammas), வேலமார்கள் (Velamas) இராணுவக் குடும்பத்தினராகக் கருதப்பட்டனர் என்ருலும் அவர் கள் வேளாண்மையும் செய்தனர். அதைப்போலவே பலிஜா இனத் தவர்களுக்கு வாணிகம் முக்கியத் தொழிலாய் இருந்தும் வேளாண்மைத் தொழிலையும் செய்தனர். இராணுவ வகுப்பினரில் சிலர்க்கு ராயர் 'அமர நாயக்கர்' என்ற தலைமைப் பதவிகளை அளித் தார். நாளடைவில் அவர்கள் குறுநில மன்னர்களாயினர்.

சூத்திரர் இனத்தில் பல்வேறு தொழில் செய்பவரும் சேர்க்கப் பட்டனர். கொல்லர்கள் (Gollas), இடையர்கள், ஆடுமாடு மேய்க்கும் தொழிலை உடையவர்கள், துணிமணி வெளுப்போர் (Washerman), முடி திருத்துவோர் (Barbar), குற்றவேல் புரிவோர் போன்ற அனைவரும் அதில் அடங்குவர். ஒவ்வொர் இனத்திலும் அவ் வினத்திற்குட்பட்டவரிடையே திருமணங்கள் நடைபெற்றன.

இவ்வாறு நான்கு வகைப் பிரிவுகளோடு சமுதாயத்தில் மக்கள் பிரிக்கப்பட்டிருந்தாலும் ஐந்தாவது இனத்தவராகச், 'சாந்தலர்கள்' என்ற இனத்தவர் கருதப்பட்டனர். அவர்கள் 1. மால (Mala) அல்லது பறையர் (Pariah), 2. மாதிக (Madiga) அல்லது சக்கிலி (Cekkili) என்போர் ஆவர்.

1. மால (அ) பறையர்: தென்னிந்தியாவில் பயிர்த்தொழிலுக்கு உதவி செய்யும் தொழிலாளர் கூட்டம் இவ் வினத்தைச் சார்ந்தது. அவர்களின் துணைத்தொழில் நூற்றலும், நெசவுமாகும். அவர்கள் பிறப்பினாலே சிவில் இராணுவ ஊழியர்களாகச் சேர்த்துக்கொள்ளப் படாமல் நீக்கப்பட்டிருந்தனர். எனவே, அவர்களுள் சிலர் பகற் கொள்ளையைத் தம் தொழிலாக மேற்கொண்டனர். உணர்ச்சி வயப்பட்ட ஒரு தலைவனின்கீழ் ஒரு கூட்டம் கூடித் திடீர் எனத் தாக்கிக் கொள்ளையடித்தனர். ராயர் அக் கூட்டங்களை அடக்கிக் குற்றவாளியினர் பட்டியலில் அவர்களைச் சேர்த்தார்.

2. மாதிக (அ) சக்கிலி : இவர்கள் திறமை மிக்க தொழிலாளிகளாக ஒதுக்கப்பட்ட தொழிலாளராவர். விவசாயிகளுக்குத் தோல் வாரும், தொண்டான் முதலிய பொருள்களும் செய்து தருவார்கள். தம் வருவாயை அதிகரிக்க நெசவுத் தொழிலில் ஈடுபடுவதுண்டு.

சமூக வாழ்க்கை

உறைவிடம் : மக்கள் மூவகையான வீடுகளில் வாழ்க்கையை நடத்தினர். போர்ச்சுகீசிய ஆசிரியர்கள் அவர்கள் நகரத்திலும் தலைநகரத்திலும் அமைத்து வாழ்ந்த இல்லங்களைப்பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளனர். பேரரசர், பிரபுக்கள், வணிகர்கள், செல்வந்தர்கள் ஆகியோர் கற்களினால் கட்டப்பட்ட அழகான வீடுகளில் வாழ்ந்தனர். ஒரு மாடியையும், தட்டையான மேற்கூரையையும் கொண்டு மாடங்களை உடையதாக அவை விளங்கின. கம்பங்களை வைத்துக் கட்டடங்களைக் கட்டியுள்ளனர். தாழ்வாரங்கள், உள்ளேயும் வெளியேயும் அமைக்கப்பட்டிருந்தன. அரசாங்க அரண்மனையும் கவர்னர்கள் மாளிகைகளும் சிறந்த தோட்டங்களோடு விளங்கின. பலவகை அழகுகள் செய்யப்பட்டிருந்தன. அவை கல்லிலோ மரத்திலோ செதுக்கப்பட்டும், பல வண்ணங்களில் வர்ணம் பூசப்பட்டதாகவும் இருந்தன. போர்ச்சுகீசியப் பார்வையாளர்கள் சுவர்களில் உள்ள அழகு ஓவியங்களையும், செதுக்கப்பட்ட உருவங்களையும் பொன்னால் செய்யப்பட்டனவோ என்று அதிசயிக்கும் வண்ணம் அவைகள் சிறப்பாக விளங்கின என்று குறிப்பிடுகின்றனர். வாயில் கதவு நிலைகளில் மயில்கள், புறாக்கள் ஆகியவற்றின் உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அநேகச் சுவர்களில் தீட்டப்பட்ட உருவங்கள் புராண வரலாறுகளை நினைவூட்டு

வனவாக விளங்கின. அரண்மனையில் சித்திரசாலை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அங்கு எல்லாவகையான ஓவியங்களும், பல இனத்தவரைப்பற்றிய வண்ணப்படங்களும் காணப்பட்டன. அதில் குறிப்பிடத் தக்கவை திருப்பாற் கடலில் விஷ்ணுவும் லட்சுமியும் திருமணம் புரிந்து கொண்டது, சிவன் காமதகனம் செய்தது, சிவன் பார்வதி திருமணம், நளதமயந்தி திருமணம் போன்ற பல வாகும்.[1] அவற்றைப் போலவே காதல் காட்சிகளும் வரையப் பட்டிருந்தன. ரதி - மன்மதன் ; ரம்பா - நளகூபுரன், ஊர்வசி-புரூரவன், மேனகை-விஸ்வாமித்திரன், கோபிகைகள்-கிருஷ்ணன் நிர்வாண நிலைகளிலும் பல படங்கள் காணப்பட்டன. ராயரது அரண்மனையைச் சுற்றிலும் மிக உயர்ந்த மதில் சுவர் அமைக்கப் பட்டிருந்தது. அவற்றுக்குள் பல தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அரண்மனை, கலசங்களைப் பொருத்தி அழகுபடுத்தப்பட்டிருந்தது. கொடிமரங்கள் நிறுத்தப்பட்டு அவற்றில் பல வண்ணக் கொடிகள் பறந்தன. முதல் வாயில்நிலையில் ஒரு கோபுரம் கட்டப்பட்டிருக்கும். அதனை மணிக்கூண்டு (Clock Tower) என்பர். அம் மணியை அறிந்து அங்குள்ள காவலர் மக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டுக் கடிகை, யாமங்கள் நேரத்தில் மணி அடிப்பர்.[2]

இரண்டாவது வாயிலில் சபை கூடி ஆலோசனை செய்ய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இவையன்றிச் சித்திரக் கூடம் (Picture hall), நடன மண்டபம் (Dancing hall), குளியலறைகள் (Ba ths), உணவருந்தும் மண்டபம் (Dining hall), தந்த அறைகள் (Ivory chamber), திறந்தவெளித் திடல்கள், குடிக்கும் அறைகள் (Drinking hall) முதலியவையும் அமைக்கப்பட்டிருந்தன.

மூத்திய வகுப்பினர் ஓட்டு வீடுகளில் (அ) மொட்டை மாடி வீடுகளில் வாழ்ந்தனர். அவை பெரும்பாலும் மண்ணினால் கட்டப்பட்டவையாகும். மழைக் காலங்களில் வீட்டின் சொந்தக்காரர்கள் மண் வீடுகளில் துன்பப்பட்டனர்.[3] ஏனைய மக்கள் குடிசை வீடுகளில் வாழ்ந்து வரலாயினர். தொழில் சம்பந்தப்பட்ட மக்கள், தொழிலாளர்களுக்கெனத் தனியாக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

ஆடை ஆபரணங்கள் : வெளிநாட்டு அறிஞர்கள் உயர் வகுப்பினர்கள் உபயோகித்த ஆடைகளைப்பற்றி விவரமாக எழுதியுள்ளனர். தாழ்ந்த இனத்தவர்களைப் பற்றிய குறிப்புகள் அதிகமாகக் கொடுக்கப்படவில்லை. நூனிஸ் என்பவர் ராயரது ஆடை

1 Radhamadavam, Canto-IV. p. 198

2 Parijata paharanam, 2-3.

3 Amucta, 4:123

களைப் பற்றிப் பின்வருமாறு விவரித்துள்ளார். 'அவர் பட்டினால் ஆன ஆடையை அணிந்திருந்தார். இடையிடையே பொன் சரிகைகளினால் சிறந்த வேலைப்பாட்டுடன் அவரது ஆடைகள் நெய்யப்பட்டிருந்தன. அதைப் போலவே சட்டைகளும், அங்கிகளும் அணிந்திருந்தார். தலைக்குச் சிறந்த வேலைப்பாடு அமைந்த குல்லாய் அணிந்திருந்தார்.'[1] பயஸ் என்பவர் மக்கள் அணிந்திருந்த காலணிகளைப்பற்றி விவரிக்கிறார். அவைகளின் முனைகள் கூர்மையாக இருந்தன. காலுக்குக் கீழ் ஒரு தோல் அட்டையும் அதன் மேல் பாதத்தைப் பிணிக்கும் தோல் வார்களும் பொருத்தப் பட்டிருந்தன. பண்டைக்கால ரோமானியர்கள் பயன்படுத்தியவை போல் அவை இருந்தன. கோர்ட்டுக்கு வரும் அலுவலர்கள் கீழே வேட்டியும், மேலே அங்கியும், தலைக்குக் குல்லாய் அல்லது தலைப்பாகையும் அணிந்திருந்தனர்.

பெருவாரியான மக்கள் காலணி அணிந்திருந்தனர். அவை செருப்புகளாகவும், ஷூக்களாகவும் இருந்தன. அந்த ஷூக்கள் ஒருவிதக் கீச்சொலியை எழுப்புமாறு தைக்கப்பட்டிருந்தன. ராசிகாவில் (Rasika) ஆடை வேறு விதமாக அமைந்திருந்தது. முழங்காலுக்குக் கீழ் இறுக்கமாகச் சுற்றப்பட்டும் அதற்குமேல் இடுப்பிலே கட்டப்பட்டதுமான ஒருவித ஆடையை அணிந்திருந்தனர். மஸ்லின் துணியினால் அந்த ஆடை சுற்றப்பட்டு அதில் ஒரு குறுவாள் செருகப்பட்டிருந்தது. தோல்பட்டியிலும் அழகான மஸ்லின் துணி பொருத்தப்பட்டிருந்தது. தலையில் தலைப்பாகை காணப்பட்டது. வைதீகப் பிராமணனது உடை மிக்க எளிமையானதாக இருந்தது. அவருக்கு இரண்டே உடைகள் உண்டு. கீழே அணிந்துகொள்ள ஒன்றும், மேலே அணிந்துகொள்ள ஒன்றுமாக இரண்டு உடைகளே அவர்களால் பயன்படுத்தப்பட்டன. சிறந்த கல்விமானாக இருக்கும் பிராமணனுக்கு மேலாடைக்குப் பதிலாகச் சால்வை உண்டு. பயிர்த்தொழில் செய்பவர்கள் இடையில் ஒருமுழத் துண்டு அணிவதே போதுமென இருந்தனர். அவர்களில் சற்றுப் பணவசதியுள்ளவர்கள் வீட்டிலே நெய்த துணிகளில் கீழுக்கு ஒன்றும் மேலுக்கொன்றுமாக அணிந்திருந்தனர். நெசவாளிகள், பொன் வேலை செய்பவர்கள், எண்ணெய் ஆட்டுபவர்கள் போன்ற தொழிலாளர்கள் வெண்மையான துணிகளை அணிந்துகொண்டிருந்தனர். இடையர்கள் இடையில் ஒருமுழத் துண்டையும், கம்பளத்தால் ஆன ஒரு போர்வையையும் பயன் படுத்தினர்.

அரச சபைக்கு வரும் பெண்கள் அணிந்திருந்த உடைகளைப் பற்றிப் பல அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் உடை

1 Sewell, p. 383

ஒரு சிறிய கோட்டும், பைதா (Paita) என்னும் உடையும், ரவிக்கையும் கொண்டதாகும். காவி நிறமுள்ள சிறிய கோட்டையும், மஸ்லினுலான பைதாவையும் (Paita) அதிகமாகப் பயன்படுத்தினர். அணியும் ரவிக்கைகள் உடலை ஒட்டியதாக இருந்தன. காலுக்கு வெல்வெட்டினுல் ஆன மேலுறையோடு ஷூக்கள் (Shoes) அணியப்பெற்றன. அரசிமார்களும் அத்தகைய உடைகளை அணிந்திருந்தனர். ஆனுல், சாதாரணப் பெண்கள் அதிக நீளமுள்ள ஒரு சேலையையும் ரவிக்கையையுமே அணிந்திருந்தனர். பயிர்த்தொழில் செய்யும் பெண்கள் பிரகாசமான நிறங்களில் கட்டம் (Design) போடப்பட்ட சேலைகளை அணிந்திருந்தனர். போயா (Boya) இனத்துப் பெண்கள் ஒரு சேலையை இடுப்பில் பாதி சுட்டி, எஞ்சியுள்ள பாதிப்பாகத்தை மார்பின் வழியே தோள்களைச் சுற்றித் தலையை மூடுமாறு அணிந்திருந்தனர். பொதுவாக, மக்கள் பல நிறமுள்ள ஆடைகளை விரும்பினர். சாதாரண மக்கள் பருத்தி ஆடையே போதுமென்றிருந்தனர். பணக்காரர்கள் பொன்சரிகைகளையுடைய பட்டாடைகளை அணிந்திருந்தனர்.

அணிகலன்கள்: அட்டிகை (Necklace), காப்பு (Anklet), கடகம் (Armlet) ஆகிய நகைகளை ஆண் பெண் இருபாலாரும் அணிந்திருந்தனர். அவற்றைப் போலவே மணிகள் பதித்த கச்சையும், மோதிரங்களும் இருபாலாராலும் பயன்படுத்தப்பட்டன. பெண்கள் மூக்குத்திகளும் கம்மல்களும் தனிப்பட அணிந்திருந்தனர். இனத்திற்கேற்ப அணிகலன்களின் அமைப்புகள் மாறுபட்டிருந்தன. வீரர்களுக்கு வீரக்கழலும், வீரப்பதக்கங்களும் அணிந்து கொள்ளும் வழக்கம் இருந்தது. ஆபரணங்களுக்கு அடுத்தபடியாக வாசனைப் பொருள்களில் மக்கள் நாட்டம் கொண்டிருந்தனர். பருவத்திற்கேற்ப வாசனைப் பொருள்கள் மாறுபட்டிருந்தன. கோடைக் காலங்களில் ஆண்கள் தங்கள் உடலில் சந்தனம், ஜவ்வாது போன்ற பொருள்களைப் பூசினர். அகில் (aloe) கட்டையைக் குளிர்காலத்தில் பயன்படுத்தினர். அதனுடைய புகையை வீடெங்கும் பரப்பினர். கோடைக்காலத்தில் பன்னீரை அதிக அளவில் பயன்படுத்தினர். தோல் பைகளின் மூலமாக உடலெங்கும் பன்னீரைத் தெளித்தனர். நறுமணப் பொருள் கலவை செய்வதில் ஆந்திர நாட்டினர் சிறந்து விளங்கினர். செல்வந்தர்கள் குளிக்கும் நீரிலும், அணிந்துகொள்ளும் உடையிலும் நறுமணம் திகழ, அதன்மேல் வாசனைப் பொருள்களைத் தெளித்தனர். இனிய நறுமணமுள்ள பூக்களை விரும்பினர். ரோஜா, மல்லிகை, முல்லை, தாமரை போன்ற மலர்களைப் பெரிதும் விரும்பினர். ஆண்கள் பூக்களால் ஆன மாலைகளைக் கழுத்திலும் தலையிலும் அணிந்தனர். ஆண்களும் பெண்களும் நறுமணமுள்ள

எண்ணெயைத் தலைமுடியில் தடவிச் சுத்தப்படுத்துவர். பெண்கள் பூக்களைத் தலையில் வைத்துக்கொள்வது வழக்கம். வீட்டு வாயில் நிலைகளிலும் நறுமணமுள்ள பூக்களைத் தொங்கவிடுவார்கள். கோடைக்காலத்தில் படுக்கைக்குமேல் பூக்களை விரித்து இரவு படுத்து உறங்குவர், செல்வந்தர்களும், உயர்ந்த இனத்தைச் சார்ந்தவர்களும் தங்கள் வீட்டிற்கருகில் பூத்தோட்டங்களை வைத்திருந்தனர். அவற்றைக் கவனிக்கப் பயிற்சிபெற்ற தோட்டக்காரர்களை நியமித்திருந்தார்கள்.[1] பூக்களைப் பெரும்பாலும் தாழ்ந்த குலப் பெண்கள் கேலியாகப் பேசி விற்பனை செய்வார்கள்.[2]

உணவு: பயஸின் (Paes) கூற்றுப்படி நெல், கோதுமை, தானியங்கள், பார்லி, மொச்சை, பருப்புகள் ஆகியவை மக்களுக்கு உணவாக இருந்தன. மக்களின் முக்கிய உணவுப் பொருள் நெல், துளுநாட்டில் நெல் அதிகமாகப் பயிரிடப்பட்டது. அவற்றில் பல வகைகள் இருந்தன. அவை இரண்டு முக்கியப் பிரிவில் அடங்கும். 1. வெண்ணெல், 2. கறுப்பு (அ) செந்நெல். நூனிஸின் குறிப்பின்படி ராயர் அசைவ உணவான மாமிசத்தைப் பலவகையான பிராணிகள், பறவைகள் ஆகியவற்றிலிருந்து தயாரித்து உண்டதாகத் தெரிகிறது.[3] தயார் செய்யப்படும் கறிகள் அனைத்திலும் மிளகையே பயன்படுத்தினர்களேயன்றி மிளகாயைப் பயன்படுத்தவில்லை. மிளகாய் மக்களுக்குத் தெரியாததனாலோ, பிரசித்தி பெறாததனாலோ அது தவிர்க்கப்பட்டிருந்தது.[4] பழவகைகளில் சிறப்பாக மாங்கனி, திராட்சை, வாழை ஆகியவை பயன்படுத்தப்பட்டன.

பான வகைகள்: மக்கள் கோடைக்காலத்தில் பானகம் (வெல்லம் + தண்ணீர்), நீர்மோர் பருகினர். கருப்பஞ்சாறும், இளநீரும் பயன்படுத்தப்பட்டன. எல்லாமே இலவசமாக வழங்கப்பட்டன. மாலை நேரங்களில் மக்கள் கூட்டமாகச் சென்று ஆங்காங்கு வாங்கிப் பருகுவர். ஒருசில சமயங்களில் குறைந்த விலைக்கு அவற்றைக் கொடுப்பதும் உண்டு. இப் பானங்களால் மக்களுக்கு எத்தகைய தீமையும் ஏற்படாது.

அவர்கள் உபயோகப்படுத்திய மதுபான வகைகள் செல்வந்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் வெவ்வேறாக விளங்கின. தென்னம் பாளையிலிருந்து எடுத்த கள்,, பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டது. பொதுமக்களைவிட அதிகமாகச் செல்வந்தர்கள் மது

1 Amucta, 2:55
2 Amucta, 2:21 (Vulcar conversation)
3 Sewell, p. 375
4 Amk, 1:82

பானங்களை உபயோகப்படுத்தினர். உயர்ந்தவகை மதுபானங்களை அவர்கள் அருந்துவது வழக்கம். முக்கிய விருந்துகளில் மயக்கந்தரும் மதுவகைகளைப் பயன்படுத்தினர். நிலவொளியில் இத்தகைய விருந்துகள் கேளிக்கைகள் நடைபெறுவதுண்டு.

பெண்களின் நிலை

1. குடும்பப் பெண்கள் : பெண்களை அக் காலத்தில் மகிழ்ச்சிக்குரிய பொருளாகக் கருதினர். அவர்களுக்கு உரிமை கிடையாது. அவர்களின் படைப்பே ஆண்களுக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அவர்களை மகிழ்விக்கவுமே எனக் கருதப்பட்டது. செல்வந்தர் வீட்டுப் பெண்கள் பெரும்பாலும் மாளிகைக்குள்ளேயே தங்கியிருந்தனர். எந்தப் பொது விழாக்களிலும் அவர்கள் கலந்து கொள்வதில்லை. இந்துப் பெண்கள் பர்தா (purdah) அணியாமல் ஆண்களுடன் பழகி வந்தனர்.

பெண்கள் அனைவரும் இளம் வயதில் பெற்றோர்களின் கட்டுப்பாட்டிற்கு அடங்கியிருந்தனர். செல்வந்தர் வீட்டுப் பெண்கள் கல்வி கற்றனர். அவர்கள் தாய்மொழியில் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்வதோடு,. சமஸ்கிருத மொழியிலும் தேர்ச்சி பெற்றனர். அவர்களது பாடத்திட்டத்தில் இசையும், நாட்டியமும் முக்கிய இடம் பெற்றன. நாகரிகப் பெண்ணுக்கு வாய்ப்பாட்டும், இசைக்கருவிகளைக் கையாளுவதும் அவசியமாயின. கிருட்டிண தேவராயர் தம் அரண்மனையில் உள்ள பெண்களுக்கு இசையும் நாட்டியமும் கற்றுக்கொடுக்கச் சிறந்த இசை ஆசிரியரான 'இலட்சுமி நாராயணன்' என்பவரை நியமித்தார். அதைப்போலப் பிரபுக்களும் தங்கள் பெண்களுக்குச் சிறந்த ஆசிரியரை இசையும், நாட்டியமும் கற்பிக்க நியமித்தனர். ராயர் அதற்கென ஒரு தனி மண்டபம் கட்டி வைத்து நடனக் கலையை வளர்த்தார்.

பிரபுக்கள் போன்ற செல்வந்தர்கள் தங்களது பூந்தோட்டங்களில் பெண்களை உலாவ அனுப்புதல் உண்டு. மரநிழலில் அவர்கள் ஊஞ்சல் ஆடுவதும், பாடுவதுமாய் இருந்தார்கள். பூக்களைப் பறித்து மலர் வளையங்களும், மாலைகளும் செய்தனர். பெற்றோர்கள் பெண்களைத் தமக்குச் சுமையாக எண்ணினர். எனவே, எவ்வளவு விரைவாக அவர்களுக்குத் திருமணம் செய்ய வேண்டுமோ அவ்வளவு விரைவாகச் செய்தனர். பிராமணர்களிடையே பெண்கள் பருவமடைவதற்கு முன்பே திருமணம் செய்யும் பழக்கம் இருந்தது. ஏனைய இனத்தவர்கள் பூப்பெய்திய பின்னரே திருமணம்

நடத்தினர். பெண்களுக்குத் தங்கள் கணவன்மார்களைத் தேர்ந்தெடுக்க வாய்ப்புத் தரப்படவில்லை. பெற்றோர்களோ, வயதானவர்களோ தேர்ந்தெடுத்த கணவரையே மணந்துகொள்ளும் பழக்கமிருந்தது. பலாத்கார மணம் அக் காலத்தில் இருந்ததால் தலைவன், தலைவி காதல் திருமணம் செய்கின்ற வாய்ப்பு இல்லை. பெண்கள் தங்கள் முற்பிறவிக்கு ஏற்ப இப் பிறவியில் இக் கணவன் அமைந்ததாகக் கருதினர்.[1] உயர்வகுப்பினரில் தமக்கு அன்புடைய கணவன் கிடைப்பது தம்முடைய அதிர்ஷ்டம் என்றே பெண்கள் கருதினர். எனவே, அக் காலப் பெண்களின் வாழ்க்கை அவ்வளவு மகிழ்ச்சியுடையதாகத் தோன்றவில்லை. ஆண்களின் துன்பத்திற்கு உள்ளாகிய பெண்களின் குரலை இலக்கியங்களில் காணலாம்.[2]

திருமணங்கள் மிக்க ஆடம்பரமாகச் செய்யப்பட்டன. அதிகப் பொருட்செலவும் பல விருந்தினர்கள் பல நாள்கள் தங்குவதும் அக்கால வழக்கம். திருமணங்கள் பெண்ணின் பெற்றோர்களின் வீட்டிலே நடைபெற வேண்டுமென்பது அக்கால நியதி.

அரசரோ பிரபுவோ பெண்ணின் தந்தையாக இருந்தால் தம்முடைய மாப்பிள்ளைக்கு ஆபரணங்கள், குதிரைகள், யானைகள், கிராமங்கள் மற்றும் பல தோழிப் பெண்களை வரிசைப் பொருளாக அனுப்புவார்கள்.[3]

பிரபுக்கள் வீட்டுப் பெண்கள் வேலையின்றி ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட்டனர். நடுத்தரக் குடும்ப வீட்டுப் பெண்களைப்பற்றிய குறிப்பு அதிகம் கிடைக்கவில்லை. ஆனால், தாழ்ந்த குலத்துப் பெண்கள் ஆண்டு முழுவதும் வேலை செய்தனர். அவர்கள் வீட்டு வேலைகளோடு கணவனுடன் வயலிலும் வேலை செய்தனர். பொதுவாக, ஒரு குடும்பப்பெண் தன் கணவனைத் தலைவனாக எண்ணவேண்டும். எல்லாச் சூழ்நிலைகளிலும் கணவனோடு, அவன் கொடூரமாக நடந்துகொண்டாலும் நம்பிக்கையுள்ளவளாக நடந்துகொள்ள வேண்டும். கணவனையே தன் உயிராகப் பெண்கள் எண்ணினர். கணவர் இறந்தபின் அவருடன் உடன்கட்டை ஏறும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. மனப்பூர்வமாகப் பெண்கள் அவ் வழக்கத்தை ஆதரித்ததாகத் தெரிகிறது. விதவைகள் மனிதத் தன்மையற்ற முறையில் நடத்தப்பட்டனர். அதனால் பெரும்பாலான விதவைகள் இறத்தலையே பெரிதும் விரும்பினர்.

1 Parijata paharanam, 1:93
2 Parijata paharanam, 1:96
3 Manucarita by Pethenna, 5:98-102

2. ஆடல் மகளிர் : சமுதாயத்தில் முக்கிய இடம் பெற்றவர்கள் இவர்கள்தாம். இவர்கள் இருவகைப்பட்டனர். ஒரு வகையினர் கோயிலைச் சார்ந்தவர்; மற்றொரு வகையினர் சுதந்திரமாக வாழ்பவர்கள். எத்தகைய இனத்தவருடனும் அவர்கள் பழகுவதைச் சமுதாயம் குறை சொல்வதில்லை.[1] இந்த இனத்தைச் சேர்ந்த பெண்கள், நன்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்தனர். நன்கு பாடவும், ஆடவும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நாட்டியக் கலைகளான பரதம், மாதங்கம், ஆஞ்சநேயம் போன்றவை அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன.

கோயிலைச் சார்ந்த பெண்கள் சில முக்கியக் கடமைகளை ஆற்ற வேண்டியிருந்தது. தினசரி இறைவனுக்குமுன் பாடவும் ஆடவும் வேண்டும். ஊர்வலத்தின்போது இறைவனுக்கு முன் ஆடிச்செல்ல வேண்டும். அவர்களுக்குப் பிறக்கும் பெண்கள் கோயிலுக்குச் சொந்தமானவர்கள் ஆவர். தாய் செய்த வேலையை அவர்களும் செய்ய வேண்டும்.[2] இவர்கள் தலைநகரத்தில் இருப்பதாய் இருந்தால் ஒவ்வொரு சனிக்கிழமையும் ராயர் வணங்கும் தெய்வத்தின் முன் நடனமாட வேண்டும். மகாநவமியின்போது தலைநகரத்தில் நடைபெறும் விழாக்களில் அவ் வினத்தைச் சார்ந்த அனைவரும் நடனமாடுவது அவசியம்.

அக் காலத்தில் பரத்தையருடன் வாழ்க்கை நடத்துவது சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சமுதாயத்தில் அவர்களுக்கு அதனால் எத்தகைய இழிவும் கிடையாது. அரச சபையைச் சார்ந்த பிரபுக்களும், படைத்தலைவர்களும் அவர்களது தொடர்பை நாடினர். அரசர்களும், இளவரசர்களும் அவர்கள் வீட்டிற்குச் சென்று வருவதும் உண்டு.

அவர்கள் பல உரிமைகளையும் அனுபவித்தார்கள். நகரத்தில் உள்ள சிறந்த தெருக்களில் அழகிய வீடுகளில் வசித்தனர். பேரரசருடைய மாளிகையினுள் கட்டுப்பாடின்றிச் சென்று வந்தனர். அரசிகளுடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு அவர்கள் எதிரிலேயே தாம்பூலம் தரித்தனர்.[3] சில சமயங்களில் அரசருக்கு எதிரிலேயும் தாம்பூலம் தரித்தனர். போர்க் காலங்களில் அரசரது கூடாரங்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் கூடியிருப்பார்கள். இவ்வாறு ஆடல் மகளிர் மிக்க சிறப்புடன் அக் காலத்தில் வாழ்ந்திருந்தனர்.

1 Sewell, Fe. p. 242
2 Sewell, Fe. p. 241
3 Sewell, Fe. p. 241-42

8. வாணிகம்

ராயர் காலத்தில் அயல் நாட்டு வாணிகம் நன்முறையில் நடை பெற்றது. முக்கியமாக அராபியர்களுடனும் போர்ச்சுகீசியர் களுடனும் அதிகமாக வியாபாரம் நடைபெற்றது.

அராபியருடன் வியாபாரம்

அராபியர்களுக்குப் பண்டைக்கால முதல் தென்னிந்தியாவுடன் தொடர்பு உண்டு. அராபியர்கள் மிளகு, இஞ்சி, வாசனைத் திரவியங் கள், துணி முதலியவற்றை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய் தனர். இந்திய மண்ணில் குதிரைகள் நன்கு வளர முடியாததால் அராபியர்கள் போர்க் குதிரைகளைப் பாரசீகத்திலிருந்தும், அராபியா விலிருந்தும் இறக்குமதி செய்தனர். குதிரை வியாபாரத்தினல், அராபியர்கள் அரசர்களுக்குத் தேவையான சிறந்த குதிரைகளை வழங்கி அதிக லாபம் அடைந்தனர். முகமதிய அரசர்களுக்குக் குதிரைகளை அனுப்பிய அராபியர்கள் அந்த அளவில் குதிரைகளை விசயநகரப் பேரரசுக்கு அனுப்ப மறுத்தனர். அதனுடன் அவர்கள் குதிரை வியாபாரத்தில் தங்களுக்குப் போட்டியாக ஒருவரும் இல்லாததால் மிக்க இறுமாப்புடன் காணப்பட்டனர். சாளுவ நர சிம்மர் காலத்திலேயே அவர்களது வேகம் குறையலாயிற்று. ஏனெனில், போர்ச்சுகீசியர் 15ஆம் நூற்றாண்டில் இந்தியாவுடன் வியாபாரம் செய்வதற்கு வரலாயினர். அவர்கள் தென்னிந்தியாவில் கோவாவில் தங்கி வியாபாரத்தைத் தொடங்கியதும் அராபியரது வியாபாரம் மங்கத் தொடங்கியது.

போர்ச்சுகீசிய வியாபாரம்

கிருட்டிணதேவராயர் பட்டத்திற்கு வந்ததும் விசயநகர வியா பாரத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. தம் முன்னேர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்த அண்டைநாடுகளை அவர் வெற்றி கொண் டார். அரியணையேறியதும் அவர் போர்க்குரிய படைபலத்தை அதி

கரிக்கலானுர். சிறந்த குதிரைப்படையும், யானைப் படையும் போர்க்களத்தில் எவ்வளவுதூரம் தமக்கு வெற்றியைத் தரும் என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். விசயநகர அரசுக்குக் குதிரைகள், யானைகள் வியாபாரம் செய்ய ஒப்பந்தம் செய்துகொள்ளும் வணிகர்களுக்குத் தனிச் சலுகைகள் பல வழங்கினுர். அதனுல் அவ் வணிகர்கள் விசயநகர அரசுக்கு எதிரியாக உள்ளவர்களுக்குக் குதிரை, யானைகளை விற்க மறுத்தனர். போர்ச்சுகீசியர், கிருட்டிண தேவராயருடன் நெருங்கிய தொடர்புகொண்டு, அராபியர்களின் வியாபாரத்தை அழிக்கலாயினர். அதன் மூலம் குதிரை வியாபாரத்தில் போர்ச்சுகீசியரே விசயநகரப் பேரரசில் முதல் இடம் பெற்றனர். கிருட்டிண தேவராயரும் வெளிநாடுகளிலிருந்து அவர்கள் கொண்டுவரும் சிறந்த குதிரைகளைத் தமக்கே விற்குமாறு ஒப்பந்தம் செய்துகொண்டார். போர்ச்சுகீசியக் கவனர்ரும், கோவாவுக்கு வரும் எல்லாக் குதிரைகளையும் கிருட்டிணதேவராயருக்கு விற்பதாக உறுதிகூறியதோடு, பீஜப்பூர்ச் சுல்தானுக்குக் குதிரைகளை விற்பதில்லை என்றும் முடிவு எடுத்துக்கொண்டார்.

ஆனுல், யானைகளை எந்நாட்டவர்கள் ராயருக்கு அனுப்பினுர்கள் என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. அநேகமாய் இலங்கைத் தீவிலிருந்து இறக்குமதி செய்ததாக அறிகின்ருேம். அவை பெரும்பாலும் இந்திய வியாபாரிகளாலேயே விற்கப்பட்டன.

போர்ச்சுகீசியர் குதிரை வியாபாரத்துடன் நிற்கவில்லை. அவர்கள் மேலும் வெல்வெட்டுகள், சைனுத் துணிகள், ஆபரணங்கள், நவரத்தினங்கள், சந்தனம், முத்துகள் ஆகியவற்றை விசயநகர அங்காடிகளில் வியாபாரம் செய்து வந்தனர்.[1]

கிருட்டிணதேவராயர் துறைமுகங்களை எண்ணிக்கையில் அதிகமாக்க முயற்சி எடுத்துக்கொண்டார். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வற்கு ஏற்ற வசதியுடன் அவற்றை அமைத்தார். வெளிநாட்டவர்கள், அவர்கள் நாட்டில் பஞ்சம், தொற்றுநோய்கள் வந்த காரணத்தால், அங்கிருந்து வியாபார நிமித்தம் வந்தவர்கள் தம் நாட்டிலே தங்கிப் பிற மக்களுடன் கலந்து வாழ ராயர் அவர்களுக்கு ஆதரவு அளித்தார்.

1. கோவா : இது மேற்குப்பக்கத்தில் மிகச் சிறந்த துறைமுகமாக விளங்கியது. என்ருலும் அது விசயநகர ஆட்சிக்குட்பட்டதாகச் சேர்க்கப்படவில்லை. கிருட்டிணதேவராயர் காலத்தில் அது முகமதியரிடமிருந்து போர்ச்சுகீசியர்களால் கைப்பற்றப்

1 Amucta, 4:245

பட்டு அவர்களது தலைநகரமாக விளங்கியது. விசயநகர அரசின் முக்கியத் துறைமுகமாக மேற்கில் ஹோனுவர் (Honavar) அமைந்திருந்தது. அத் துறைமுகத்தின் வழியே மலபாரைச் சார்ந்த வியாபாரிகள் அரிசியை ஏற்றிச் செல்வதோடு அவர்கள் நாட்டில் கிடைக்கும் தேங்காய் எண்ணெய், பனை வெல்லம், பனஞ்சாறு ஆகியவற்றை இறக்குமதி செய்தார்கள். கி. பி. 1540 வரை அத் துறைமுகமானது ராயருக்குக் கீழ்ப்பட்ட அரசரால் கண்காணிக்கப் பட்டு வந்தது.

2. **பதக்கால் (Bhatakal):** இத் துறைமுகம் கடற்கரை ஓரத்தில் தென்பகுதியில் உள்ளது. அது போக்குவரவு அதிகமாய் உள்ள துறைமுகம். வியாபார நிமித்தமாக அங்கு மூர்கள் (Moors), ஹீதன்ஸ் (Heathens) ஆகியோர் குடியிருந்தனர். அத் துறைமுகத்தின் வழியாக அரிசியும் சர்க்கரையும் ஏற்றுமதி ஆயின. மேலும், மலபாரிலிருந்து மிளகும், வாசனைத் திரவியங்களும் அரேபிய, பாரசீக நாடுகளுக்கு அதன்மூலம் அனுப்பப்பட்டன.

3. **மங்களூர்:** இத் துறைமுகத்தின் வழியாகப் பொருள்கள் அரேபியாவிற்கும் மலபாருக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. அக் காலத்தில் சிறந்த துறைமுகமாக அது விளங்கியது.

5. **கொல்லம்:** இது பெரிய நகரமாயும், துறைமுகமாயும் விளங்கியது. அந் நகர அரசர் நரசிங்கா (Narsyngha) கிருட்டிணதேவ ராயரால் தோற்கடிக்கப்பட்டதால் கொல்லம் விசயநகரப் பேரரசில் இணைக்கப்பட்டது. சிறந்த வியாபாரஸ்தலமாக விளங்கியது. இங்கு மூர்களும் (Moors), ஹீதன்களும் (Heateens), கிறித்தவர்களும் (Xians) அதிக அளவில் வியாபாரம் செய்ய வந்தனர். இங்கு மிளகு கிடங்குகள் பல இருந்தனவாகவும் அப்பொருள் மலாக்கா சுமத்திரா, பெகு முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் தெரிகிறது.

5. **காயல்:** இது கி.பி. 1514 வரை கொல்லம் அரசருக்குக் கீழ்ப்பட்டிருந்தது. பின்னர் விசயநகரப் பேரரசில் சேர்க்கப்பட்டது. வெளிநாடுகள் பலவற்றிலிருந்து மக்கள் வியாபார நிமித்தமாக அங்கு வந்து தங்கியுள்ளனர். அங்கு நவரத்தினங்களும், முத்துகளும் சிறந்த வியாபாரப் பொருள்களாக விளங்கின.

6. **நாகை:** இது சோழமண்டலக் கரையில் சிறந்த துறைமுகமாய் விளங்கியது. வாசனைத் திரவியங்கள், மருந்து வகைகள் ஆகியவை மலாக்கா, சைனு, அரேபியா நாடுகளிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்டன.

7. மைலாப்பூர் : புதிதாக அமைக்கப்பட்ட துறைமுகம் இது. யாத்திரிகர்கள் வருகைக்கு இத் துறைமுகம் வசதியாய் இருந்தது.

8. புலிகட் (Pulicat) : இது விசயநகரப் பேரரசில் கீழைத் துறைமுகங்களில் சிறந்தது. மணிகள், கல் பொதித்த ஆபரணங்கள் சிறந்த வியாபாரப் பொருள்களாக விளங்கின. இங்கிருந்து அனுப்பப்படுகின்ற அச்சிடப்பட்ட துணிகள் (Printed clothes) மலாக்கா, பெகு, மலபார், முதலிய இடங்களுக்குச் சிறந்த பொருள் களாக ஏற்றுமதி செய்யப்பட்டன.

வியாபாரத்தில் அதிகப் பங்குகொண்ட வணிகர்களை மூன்று பிரிவுகளில் அடக்கிவிடலாம். அவர்கள் முறையே போர்ச்சுகீசியர், அராபியர், இந்தியர் ஆவர். பெரும்பாலும் மேலைநாடுகளுக்கு வியாபார பொறுப்பை ஏற்றவர்கள் போர்ச்சுகீசியரும் அராபியர் களும் ஆவர். ஆனால், இந்தியர்கள் கீழைநாடுகளுடன் வியாபாரம் செய்தனர். அவர்கள் பெகு, மலேயா, ஆர்ச் பிலாக்கோ முதலிய நாடுகளோடு தொடர்புகொண்டன. மலபாரில் கிறித்துவர்களும் யூதர்களும் வியாபாரம் நடத்தினர்.

தொழில்கள் : விசயநகரப் பேரரசின் முக்கியமான தொழில் விவசாயம். மக்களுக்கு நெல் முக்கிய உணவுப்பொருளாய் இருப்பதால் அது, எல்லா இடங்களிலும் பயிரிடப்பட்டது. நெல்லை நிறத்தை ஒட்டி மூன்று பிரிவுகளாகப் பிரித்திருந் தனர். 1. கறுப்பு நெல், 2. செந்நெல், 3. வெண்ணெல். வெண்ணெல்லைப் பணக்காரக் குடும்பத்தினர் பயன்படுத்தினர். பெருவாரி மக்களால் பயன்படுத்தப்படுகின்ற அக் கறுப்பு நெல்லே ஏற்றுமதிக்கும் வீட்டு உபயோகத்திற்கும் தேவைப்பட்டதால் அது அதிகமாகப் பயிரிடப்பட்டது. கிருட்டிணதேவராயர் காலத்தில் காடுகளும், தரிசு நிலங்களும் விளைநிலங்களாக மாற்றப்பட்டன. விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்பட்டன. குளங்கள், கிணறுகள் ஆகியவற்றை வெட்டியும், நீர்ப்பாசனக் கால்வாய்களைத் தோண்டியும், தக்காவி (Takavi) என்ற கடன்களைத் தந்தும் விவசாயிகளுக்கு உதவிகள் பல செய்யப்பட்டன. நெல்லைத் தவிர உள்நாட்டில் கேழ்வரகும் சோளமும் பயிரிடப்பட்டன. ஆனால் இவற்றிற்கு அரசாங்கம், ராயர் காலத்தில் உதவி செய்ததாகத் தெரியவில்லை. அதே நிலை, பருப்பு வகைகளுக்கும் இருந்ததாகத் தெரிகிறது. கரும்பு நீர் வசதி உள்ள இடங்களில் அதிகமாகப் பயிரிடப்பட்டது. கோடைக் காலத்தில் அவை வெட்டப்பட்டு இயந்திரசாதனத்தில் சாறு எடுக்கப்பட்டது.[1] கரும்பின் மூலம்

[1] Amucta, 2:70

வெல்லம், சர்க்கரைத் தொழிற்சாலைகள் ஏற்பட்டன, எல்லா இனத்து மக்களாலும் வெல்லம் பயன்படுத்தப்பட்டது. ஆனால், சர்க்கரை உயர் இனத்தவர்களாலேயே பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

விசயநகரப் பேரரசு பழத்தோப்புகளை அதிகம் கொண்டதெனப் போர்ச்சுகீசிய எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றனர். மாம்பழங்கள், பலாப்பழங்கள், திராட்சை, வாழை போன்ற பலவகைப்பட்ட பழங்கள் தலைநகரத்திலும் முக்கிய நகரங்களிலும் கிடைத்தன என்று குறிப்பிட்டுள்ளார்கள். துங்கபத்திரா நதிக்கரையில் ஆனை குந்தியில் அநேகப் பழத்தோட்டங்கள் இருந்தனவாகவும் அவற்றில் மா, பலா, ஆரஞ்சு, எலுமிச்சை, வெள்ளைத் திராட்சை அதிகமாக இருந்தனவாகவும் குறிப்பிடுகின்றார்கள்.[1]

தோட்டங்களில் உணவுக்கான காய்கறிகள் பயிரிடப்பட்டன. வெற்றிலைத் தோட்டங்கள் அதிகமாகப் பயிரிடப்பட்டதாகக் கல்வெட்டுகளின் மூலம் தெரிகிறது. விசயநகரப் பேரரசில் ரோஜாப் பூக்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டதாக அறிகிறோம். அப் பூக்களை மாலையாகவும், தலையில் அணிந்துகொள்ளவும் பயன் படுத்தியதாகத் தெரிகிறது. ஒவ்வொரு பிரபுவின் வீட்டிலும், கோயில்களிலும் ரோஜாப்பூத் தோட்டங்கள் இருந்தன.

துணி நெசவுத் தொழில் முக்கியத் தொழிலாகக் கருதப்பட்டது. நெசவாளர்கள் பல பிரிவினராக இருந்தனர் என்பதாகத் தெரிகிறது. பருத்திநெசவு தர்மாவரம், அத்வாணி, குத்தி (Gutti), பெல்லாரி முதலிய இடங்களிலும், கம்பளி நெசவு சித்திர துர்கா, ஜாரிமேலா முதலிய இடங்களிலும், பட்டு நெசவு பெங்களூர், குத்தி, பெல்லாரி, ராயதுர்க்கம் ஆகிய இடங்களிலும் நடைபெற்றதாக அறிகிறோம்.

விசயநகர அரசுக்குத் தேவையான இரும்பு, அந் நாட்டிற்குள்ளேயே கிடைத்துப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. நாட்டில் கிடைத்த இரும்பைத் தேவைக்குமேல் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். சித்திரதுர்காவிலிருந்து இரும்பு ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். அவ் விரும்பு, இரும்புத்தாது கலந்துள்ள கல்லிலிருந்து தூளாக்கி உலையில் இட்டு எடுக்கப்பட்டாகத் தெரிகிறது.

முக்கிய உலோகப் பொருள், வைரம் வெட்டி எடுத்தல் ஆகும். கர்நூல், அனந்தப்பூர் மாவட்டங்களில் வைரம் வெட்டி எடுக்கப் பட்டது. நூனிஸ் குறிப்பின்படி குத்தியிலிருந்து வைரம் கிடைத்த தாகத் தெரிகிறது. குத்தி அரசர் ஆண்டுதோறும் நாற்பதாயிரம்

[1] Sewell—Forgotten Empire, p. 255-70

யர்தாஸ் (Pardaos) அரசருக்கு அளித்ததாகவும், அரசாங்கக் கருவூலத்திற்குக் கிடைத்த எல்லாவற்றையும் அனுப்பியதாகவும் சீவெல் (Sewell) குறிப்பிலிருந்து தெரிகிறது.[1]

வியாபாரிகளின் சங்கங்கள்

வியாபாரத்தில் இச் சங்கங்கள் பெரிதும் பங்கு கொண்டுள்ளன. ஒவ்வொரு நகரத்திலும் உள்ள சங்கத்தின் தலைவரைப் பட்டணசாமி அல்லது செட்டிப் பட்டணசாமி என்று அழைப்பர். அச் சங்க உறுப்பினர்கள் அந் நகரத்தின் முக்கியக் கோயிலின் எதிரிலுள்ள மண்டபத்தில் கூடி விவாதிப்பர். ஒவ்வொரு சங்கமும் அரசாங்க வரிகள் கட்டும் பொறுப்பினை ஏற்றுள்ளது. எனவே, தமது உறுப்பினர்களிடமிருந்து, சங்கத் தலைவர் வரிகளை வசூலித்து ராயரிடமோ அவர்களுடைய அலுவலர்களிடமோ அப் பணத்தைக் கட்டிவிடுவார். ராயரும் அவருடைய அலுவலர்களும் சங்கத்தின் வாயிலாக வரும் வரிப் பணத்தைக் கோவில் செலவுகளுக்கோ சமய நிலையங்களுக்கோ செலவிட விரும்பினால், அந்த வியாபாரச் சங்கங்களின் அனுமதி பெறவேண்டும். வரிப்பணம் அதிகமாகத் தேவையாயிருந்தால்தான், உறுப்பினர்களிடம் அதிக வரி விதிக்க அதற்கு உரிமை உண்டு. மடத்திற்கோ, கோயிலுக்கோ பண உதவி செய்ய வேண்டுமானால்தான், உறுப்பினர்கள் விற்கும் பொருள்களின்மீது வரி விதிப்பது வழக்கம். அதற்கான நன்கொடை பற்றிய விளக்கம் எழுதிய பட்டா ஒன்றை உறுப்பினர்களுக்கு வழங்குவார்கள்.

இச் சங்கங்களுக்குள் நீதி விசாரணையும் உண்டு. பொருள்களின் உரிமையைப்பற்றித் தகராறுகள் எழும்போது இச் சங்கங்கள் அவற்றைத் தீர்த்து வைப்பதும் உண்டு. சட்ட திட்டங்களை அறிந்தவரைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டுமென்ற இடத்தில் மட்டும், அம் மாநிலக் கவர்னரைக் கலந்து, அவரைத் தீர்வுகாணுமாறு கேட்டுக்கொள்வர். இவ்வாறு வியாபாரிகளின் சங்கங்கள் சிறந்த முறையில் அக் காலத்தில் நடைபெற்று வந்தன.

1 Local Records 18, Vamanur, p. 63-64

9. கல்வியும் பொழுதுபோக்கும்

(அ) கல்வி : பொதுமக்களுக்குக் கல்வி - கற்பிக்கும் பணியினை அரசு சிறந்த அக்கறையோடு கவனிக்கவில்லை. பல்லவர், சாளுக்கியர், மற்றும் சோழப் பேரரசர்கள் பள்ளிகள், கல்லூரிகளை நிறுவித் தம் குடிமக்களுக்குக் கல்வி கற்பித்து வந்த நிலையினை விசயநகர ராயர்கள் தொடர்ந்து காத்து வரவில்லை. ராயர்களால் பேணப்பட்ட சில மடங்கள், கல்விச் சாலைகளை அமைத்து விருப்பமுள்ள அனைவருக்கும் மதசம்பந்தமான விஷயங்களைக் கற்பித்து வந்தன. ராயர்கள் கல்விக்கூடங்களைக் அமைத்துக் கல்வியினைப் பரப்பினார்கள் என்பதற்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. என்றாலும், அவர்கள் குடிமக்கள் கற்பதற்கு மறைமுகமாக உதவினர் என்பது தெரிகின்றது. அவர்களால் அமைக்கப்பட்ட 'அக்ரஹாரங்கள்' (Agraharas) கற்றலுக்குப் பெரிதும் உதவின. சில நேரங்களில் 'அக்ரஹாரம்' அமைக்கப்படுகின்ற போது சேர்ந்தாற்போல் ஒரு பள்ளியை நிர்வகிக்கவும் வழி செய்யப்பட்டது. அப் பாடசாலையில் பிராமண இளைஞர்களுக்கு மட்டும் வேதங்கள் கற்பிக்கப்பட்டதாகவும், மற்றவர்கள் பள்ளியில் சேர்க்கப்படவில்லை யென்றும் தெரிகின்றது. ஒவ்வோர் அக்ரஹாரத்திலும் சில துறைகளில் சிறந்த அறிஞர்கள் சிலர் இருந்தனர். சுற்றுப்புறத்திலுள்ள மணமாகாத இளைஞர்கள் இவர்களை நாடி வந்து இவர்களுடனே உறைந்திருந்து, பணி செய்து கல்வி கற்றனர். பெரும்பாலும் பிராமணர்களே கற்பிக்கப் பட்டார்களெனினும், பிற்காலத்தில் மற்ற இனத்தவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. வைஷ்ணவ மதத்தைச் சார்ந்த அறிஞர்களே பிற மதத்தவர்களுக்குக் கற்பித்தனர் என்றும், சமஸ்கிருத மொழியிலுள்ள பெரு நூல்களைப் படித்தறிய உதவியுள்ளனர் என்றும் அறிகிறோம்.

ஓர் அக்ரஹாரத்திலுள்ள பாடசாலையில் கற்பிக்கப்பட்டவை வேதங்களும், அவற்றைச் சார்ந்த இலக்கியங்களுமேயாகும். மேலும், எட்டுக் கிளைகளைக்கொண்ட ஆயுர்வேத வைத்திய சாத்திரமும் கற்பிக்கப்பட்டது.

கற்று முடித்தபின், மாணவர்கள் மணம் செய்துகொண்டு தங்கள் கிராமங்களில் வாழ்ந்தனர். சிலர் பிரபுக்கள், அரசர் முதலானோரிடம் சென்று தங்களின் திறமையைக் காட்டிப் பொருளீட்டுவதும் உண்டு. சாளுவ, துளுவப் பேரரசர்கள் தங்கள் ராஜ சபைகளில் கற்றறிந்த கலைஞர்களைப் போற்றிக் காத்து வந்ததாகத் தெரிகின்றது.

அரசுதுறையில் பணிபுரிய ஏற்ற படிப்பினைப் போதிக்கப் பெரும்பாலும் எல்லாக் கிராமங்களிலும் பள்ளிகள் இருந்தனவாகத் தெரிகின்றது. இளையுதிர் காலத்தில் இப் பள்ளிகளில் பிள்ளைகள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவர்கள் கருமையான மரப்பலகைகள், பனை ஓலைகள் இவற்றில் எழுதிக் கற்றனர். கர்ணம் அல்லது கணக்காயராக வருவதற்கு எண் கணிதம், எழுத்தறிவு, காலண்டர் பற்றிய விவரங்கள், முன்னர் ஆண்ட அரசர்களைப் பற்றிய சரிதம் இவைகளைக் கற்றனர். கிராமங்களின் கணக்கர்களாகவும் அரசு துறை இலாகாக்களில் பணிபுரிபவர்களாகவும் ஆக இரு பிரிவினராகக் கர்ணம்கள் இருந்தனர்.

(ஆ) பொழுதுபோக்குச் செயல்கள்

பொழுதுபோக்குச் செயல்களில் முக்கிய இடம்பெற்றது நாடகக் கொட்டகையாகும். நாடகக்கலை பற்றிய விவரங்கள் கற்சாசனங்களிலும், மனு சரித்திரம், வசு சரித்திரம் போன்றவற்றிலும் காணக் கிடக்கின்றன. மக்கள் நாடகங்களைப் பார்த்து மகிழ்தலையே மிகவும் முக்கியப் பொழுதுபோக்குக் கலையாகக் கொண்டிருந்தனர். நாடகங்களில் முக்கியமாக இரண்டு வகைகள் இருந்தன. சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டு முக்கிய அரசு நிகழ்ச்சிகள் நடைபெறும் போது நடத்தப்பெறுகின்ற நாடகங்கள் ஒருவகை. தாய்மொழியில் புராண சம்பந்தமான கதையைத் தழுவி எழுதப்பட்டு இடம்விட்டு இடம் செல்லும் நாடகக் குழுவினரால் நடிக்கப்பட்ட நாடகங்கள் இரண்டாம் வகையாகும். வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் முதலிய இசைக் கருவிகளும் நாடகத்தில் பயன்படுத்தப்பட்டன. இந் நாடகங்கள் முக்கிய விழா நாள்களில் நடைபெற்றன.

பொம்மலாட்டம் அக்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இதற்கென அமைக்கப்பட்ட திறந்தவெளிக் கொட்டகைகளில் பொழுது புலரும்வரை பொம்மலாட்டம் நடைபெறுவது வழக்கமாக இருந்தது.

தொம்மர்கள் (Dommars) என்பவர்கள் நகரங்களிலும், கிராமங்களிலும் சென்று திறந்தவெளியில் கயிற்றின்மீது நடத்தல் போன்ற வித்தைகளைச் செய்து பணம் பெறுவது வழக்கமாக இருந்திருந்தது.

இவர்கள் சில நேரங்களில் ராயரின் அரச சபை அங்கத்தினர்களின் முன்னிலையிலும் வித்தைகளைக் காட்டிச் சிறப்பான பரிசுகளைப் பெறுவர். விப்ர விநோதிகள் (Vipra Vinodis) என்ற ஒருவகை வித்தைக்காரர்களும் இதே போன்று நகரங்களிலும் கிராமங்களிலும் சென்று வித்தைகளைக் காட்டுவதும், ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட வெகுமதியைப் பெறுவதும் வழக்கமாக இருந்திருக்கின்றது.

உல்லாசப் பூங்காக்களில் உலவி வருதல், நீர்த் தேக்கங்களில் விளையாடுதல் போன்ற பொழுதுபோக்குச் செயல்கள் பணக்காரர்களால் மேற்கொள்ளப்பட்டன.

மக்கள் வீட்டிற்குள் மேற்கொள்பவை, வெளியில் மேற்கொள்பவை என இருவிதமான விளையாட்டுகளில் ஈடுபட்டனர். வீட்டிற்கு வெளியில் நடைபெறும் விளையாட்டுகளில் கோழிச் சண்டை மிக விருப்பமான ஒன்றாக இருந்தது.[1] விசயநகரப் பேரரசர்களால் நியமிக்கப்பட்ட முகமதிய வீரர்களின் வழியாகப் போலோ (Polo) என்ற ஒருவித இராணுவ விளையாட்டும் வழக்கத்தில் இருந்திருக்கிறது. துரத்திப் பிடித்தல் (chase) என்ற விளையாட்டில் பேரரசரும், அவரின் அவை அங்கத்தினர்களும் மிகவும் விருப்பம் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது.[2]

காடுகளில் வேட்டைப்பறவை, வேட்டை நாய் இவைகளின் உதவி கொண்டும் வலைகளின் உதவி கொண்டும் பறவைகள், விலங்குகள் முதலியன வேட்டையாடிப் பிடிக்கப்பட்டன. புலி, யானை, மான், ஓநாய், கரடி, சிறுத்தை, பன்றி முதலிய மிருகங்கள் வேட்டையாடப்பட்டு அவற்றின் மாமிசம் உணவாகக் கொள்ளப்பட்டது.

பணக்காரர்கள் சதுரங்க விளையாட்டு, தாயம் (Dice) இவற்றில் மிகவும் விருப்பம் கொண்டிருந்தனர். அரசர், சதுரங்க விளையாட்டு வீரருக்குக் கலைஞர், தத்துவ மேதை ஆகியோர்க்குரிய சிறப்பினைக் கொடுத்தலும் உண்டு. பெண்களும் ஆண்களைப் போன்றே சூதாடுவதில் பிரியமுள்ளவர்களாய் இருந்தார்கள்.

1 Am., 4 : 187
2 Rbm, 2 : 29

10. சாளுவ திம்மர்

சாளுவ திம்மர் கிருட்டிண தேவராயரிடம் பலவகைப் பொறுப்புகளை ஏற்று நடத்தும் முதல் அமைச்சராக இருந்தார். அவர் சாளுவ குலத்தைச் சார்ந்தவர் அல்லர். அவர் கௌண்டில்ய கோத்திரத்தைச் சார்ந்த ஓர் அந்தணர் ஆவார். வீர நரசிம்மரின்கீழ் உயர்ந்த பதவியிலிருந்த சாளுவதிம்மர் கிருட்டிணதேவராயர் அரியணையேறுவதற்குப் பெரிதும் உதவினார். நன்றி மறவாத கிருட்டிண தேவராயர் அவரை அப்பாஜி என்று அழைத்தார். மேலும், அவரைத் தலைசிறந்த ஆலோசகராகவும், அமைச்சராகவும் அமர்த்தி அவரைப் பெருமைப்படுத்தினார். சாளுவ திம்மரைப்பற்றிய கல்வெட்டுகள் வடக்கில் கிருஷ்ணா நதி முதல் தெற்கில் காவேரிக் கரையிலுள்ள ஸ்ரீரங்கம் வரையிலும் காணப்படுகின்றன. அரசரது உள்நாட்டு வெளிநாட்டு வியவகாரங்களிலும், அரண்மனையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளிலும் சாளுவ திம்மையாவைக் கலந்தே முடிவெடுப்பது வழக்கம். திம்மரின் சொற்படியே யாவும் நடைபெறுகின்றன என்றும், அவருடைய ஆணை அரசரின் ஆணையைப்போல் சிறப்புடையது என்றும், ராயர் அவரைத் தம் தந்தையைப் போலச் சிறப்பிக்கிறார் என்றும் பயஸ் (Paes) என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். அரசியல் துறையோடன்றிப் போர்த்துறையிலும் திம்மர் சிறந்து விளங்கினார். ராயரின் போர்த்துறையிலும் அவர் சிறந்த பங்கு ஏற்றார். கொண்டவீடு கைப்பற்றப்பட்டபின் கஜபதியுடன் போரை முடித்துக்கொள்வது நல்லது என்று சாளுவ திம்மர் அரசருக்கு அறிவுரை கூறினார். அதனைக் கேளாது அரசர் சிம்மாசலத்தின்மீது படையெடுத்தபோது அரசர் தம் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லையே என்று ஒதுங்கியிராமல் பேரரசருடன் ஒத்துழைத்து அவரது படை வெற்றிபெறுவதற்கு முழு மனத்துடன் உதவினார். திம்மர் பல பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருந்தாலும் கொண்டவீடு மாநிலத்தின் அரசியல் பொறுப்பு அவரிடமே இருந்தது. கிருட்டிண தேவராயர் செய்த சீர்திருத்தங்களில் முக்கியமான திருமண வரி நீக்கப்பட்டமைக்குத் திம்மரே முக்கியக் காரணமாவார். கல்வெட்டுகளில் அவருடைய பெயரின்

பின்னால் 'அப்பகாலு', 'ஐயங்காலு' என்ற சொற்கள் சேர்க்கப் பட்டிருப்பதைக் காணலாம். அத்தகைய பெருமை வாய்ந்த அவருக்கு அவரது வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் பேரரசர் தீங்கிழைத்ததாகச் செய்திகள் காணப்படுகின்றன. அவை உண்மையா என்பதுபற்றி உறுதியாக ஏதும் கூறுவதற்கில்லை. என்றாலும் அவருடைய கடைசிக்கால வாழ்க்கை துன்பமாய் இருந்தது என்று தெரிகின்றது.

சாளுவ திம்மரைப்பற்றிப் 'பிரபோத சந்திரோதய வியாக்யா' என்ற கவிதையில் அதன் ஆசிரியரான நாதிந்ல கோபா (Nadinla Gopa) சாளுவ திம்மருடைய பெருமையையும், வம்சா வளியையும் விளக்குகின்றார். அவர் ராயருக்கு உறுதுணையா யிருந்ததும் அரசாட்சியில் அவர் பெற்றிருந்த செல்வாக்குப் பற்றியும் அக் கவிதையில் சிறப்பித்துக் கூறுகிறார். மேலும், சாளுவ திம்மர் அளித்த நன்கொடைகளைப்பற்றிய விவரங்களும் அதில் தரப் பட்டுள்ளன. 'ராஜசேகர சரிதம்' என்ற தெலுங்குச் செய்யுள்களில் சாளுவதிம்மருடைய பரம்பரையைப் பற்றியும், அவரது திருமண உறவுகளைப்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. 'கிருஷ்ணார்ஜுன சம்வரதம்' என்ற தெலுங்குக் கவிதையில், சாளுவ திம்மர் சாம் ராஜ்ய துரந்தரர் (Samrajva Durandhara) என்று அழைக்கப் பட்டுள்ளார். அதன் பொருள் கிருட்டிணதேவராயரின் பேரரசின் பொறுப்பைத் தாங்கவல்லவர் என்பது ஆகும். ஆகவே, மேற்கூறிய பலரது கருத்துகளிலிருந்து சாளுவ திம்மர் சிறந்த நிலையில் கிருட்டிணதேவராயருக்கு உறுதுணையாக இருந்தார் என்று தெரி கின்றது.

சாளுவ திம்மரைப்பற்றி இரு செய்யுள்கள் ராயரது அஷ்டதிக் கஜங்களில் ஒருவரான ராமராஜ பூஷணத்திற்கு விவரித்ததாகக் கூறப்படுகிறது. அவற்றில் முதல் செய்யுள், சாளுவ திம்மரது ஆரம்ப வாழ்வைப்பற்றி விளக்குகிறது. அவர் குத்தியில் இலை தைத்துப் பொருளீட்டியதாகவும், பின் சந்திரகிரியில் யாசகத்தின் வழி வாழ்க்கை நடத்தியதாகவும் கூறப்படுகிறது. பிறகு பெனு கொண்டாவில் உள்ள சத்திரத்தில் அவருக்கு இலவச உணவு வழங்கப்பட்டதாகவும் தெரிகிறது. பல கோட்டைத் தலைவர் களுக்கு வெற்றிலைபாக்குப் பை தூக்கிச் செல்லும் பணியில் அவர் இருந்தார் என்றும், அத்தகைய தாழ்ந்த நிலையிலிருந்து ராயரின் பிரதம மந்திரியாக உயர்த்தப்பட்டார் என்றும் அறிகிறோம். இரண்டாவது செய்யுளில் சாளுவதிம்மரது திறமைக்கு ஈடாக ஒரு வரையும் ஒப்பிட முடியாது. பேரரசரே அன்போடு அவரை அப்பா என்றழைக்கும் பேறு அவர் ஒருவரே பெற்றவர் ஆவார் எனக் கூறப்பட்டுள்ளது.

11. அல்லசானி பெத்தண்ணு

அல்லசானி சொக்கராஜுவின் குமாரர் இவர். மனுசரித்திரம், விஷ்ணுசித்தியம் என்ற இரு கவிதைகளை இயற்றியுள்ளார். அவருடைய புலமையைக் கண்டு ராயர் அவருக்குக் 'கோகடா' என்ற ஊரை நன்கொடையாக அளித்தார். புலவரோ அவ் ஊரை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அக்ரஹாரமாய்ச் சடகோபுரம் என்று பெயரிட்டு வழங்கினுர். பிராமணர்களுக்கு அவர் அவ்வாறு வழங்கியதாகக் கல்வெட்டுச் சாசனங்கள் ஏதும் இல்லை என்ருலும், அவர் எழுதிய கவிதையில் ராயரால் வழங்கப்பட்ட 'கோகடா' என்ற அக்ரஹாரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அக் கிராம ஸ்தல புராணத்தில் வரியில்லா நிலங்கள் சிலவற்றைப் பெத்தண்ணு சிவ-விஷ்ணு ஆலயங்களுக்கு வழங்கியதாகத் தெரிகிறது.

12. கிருட்டிணதேவராயரைப் பற்றி அறிய உதவும் இலக்கியச் சான்றுகள்

(மொழிபெயர்ப்பு)

1. ஆமுக்த மால்யதா

(ஆக்கியோர் : கிருட்டிணதேவராயர்)

நரசாவிற்குப் பின், தம் குடும்பக் குலக்கொடி மரபில் திப்பம்பாள், நாகம்பாள் எனும் மனைவியர் இருவரையும் மணந்து அவர்கள் வழியே வீரநரசிம்மா, கிருட்டிணராயா என்னும் குமாரர்கள் இருவரையும் நரசா பெற்றிருந்ததாக இந் நூலில் கிருட்டிணதேவராயர் கூறுகின்றார். நரசா எல்லா நாடுகளையும் வெற்றிகொண்டார். மற்றும் அந் நாட்டு அரசர்களைத் தோற்க டித்துச் சிறந்து விளங்கினார். அவர் புலவரைக் காக்கும் புரவல ராகத் திகழ்ந்தார். அவர் குமாரர் வீரநரசிம்மாவும் தம் பகைவரை அடக்கியொடுக்கி முழுஅரசையும் தம் வெண்கொற்றக் குடையின் கீழ்க் கொண்டு வந்ததாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஆமுக்த மால்யதாவின் முன்னுரையில், கிருட்டிணதேவராயர் கலிங்க நாட்டை நோக்கித் தாம் படையெடுத்த போது, சில நாள்கள் விசயவாடியில் (விஜயவாடா) தங்கியிருந்ததாகவும், பின் அங்கிருந்து ஸ்ரீகாகுளம் சென்று அங்குள்ள ஆந்திர மதுசூதன (ஆந்திர விஷ்ணு) என்ற திருநாமமுள்ள இறைவனை வழிபட்டதாகவும், ஏகாதசி (அமாவாசை (அ) பௌர்ணமியி லிருந்து பதினோராவது நாள்) அன்று உண்ணா நோன்பினை அவ் விடத்தில் நடத்தியதாகவும் கூறுகின்றார். அன்றிரவு நான்காம் யாமத்தில் கடவுள் அவர்முன் தோன்றி ராயர் வடமொழியில் (சமஸ்கிருதம்) எழுதியுள்ள மாதலாச சரிதம் (Madalasa Charitta), சகல கலா சார சங்கிரகம் (Sakala Kala Sara Sangraham),

ராசமஞ்சரி (Rasa Manjari) போன்ற நூல்களைப் பாராட்டிப் பின், தெலுங்கு மொழியில் கோதையின் (பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வார் என்று கூறப்படும் விஷ்ணுசித்தரின் குமாரியான ஆண்டாள்) வரலாற்றினை எழுதுமாறு வழிகாட்டினார். இறைவனது அருளின்படி, எல்லா நாட்டு மொழிகளிலும் (Desa bashas) தெலுங்கு மொழி மிகவும் சிறந்தது என்றும், ராயருடைய சபையில் உள்ளோர் அனைவரும் அம் மொழியைப் புரிந்துகொள்வர் என்றும் எடுத்துக் கூறப்பட்டது. மேலும், இறைவன் அக் கோதையின் வரலாற்று நூலை வேங்கடேஸ்வரருக்குக் காணிக்கை யாக அளிக்கவேண்டும் என்று ராயருக்குக் கூறினார்.

ஆமுக்த மால்யதாவில் கிருட்டிணதேவராயர், தம் மரபைப் பற்றிய விளக்கத்தைச் சந்திரனிலிருந்து வரிசைப்படுத்திக் குறிப் பிட்டுள்ளார். அவரது வெற்றிகளைப் பற்றி அவரது அவைக்களப் புலவர்களின் மூலம் நமக்கு விளக்குகின்றார். அவர் வீரத்தின் கனல் அவரது வாளின் மூலம் வெளிப்பட்டு, உதயகிரிப் பாறைகளைப் பிளந்தது; கொண்டவீடு வரை முன்னேறிச் சென்றது; பின் காசவபத்திராவைத் (Kasava Patra) தோற்கடித்து, வெங்கி மாவட்டத்தை வெற்றிகொண்டது. கோதாவரியின் மும்முகப் பூமி யான கோனவையும் (Kona), கோட்டமு, கனககிரி, பொட்னூரு, ஒட்டடி முதலிய இடங்களையும் கைப்பற்றிக்கொண்டு, கட்டாக் கைத் தாக்க இருப்பதாக அச்சுறுத்தினார். அதனை அறிந்த கஜபதி ஓட்டம் பிடித்தார்.

பிறிதொரு பாடலில், ஒரியா பேசும் கஜபதிப் படையிலுள்ள பாத்திரர்கள், கொண்டவீட்டை விட்டு அநேகர் ராயரால் தோற்கடிக்கப்பட்டு வானுலகம் சேர்ந்தனர். கஜபதியை வெற்றி கொண்டதன் நினைவாக ஒரு வெற்றித்தூணைப் போத்தனூரு எனும் இடத்தில் கல்வெட்டுச் சாசனமாக நிலைநாட்டினார்.

அடுத்த பாடலில் குல்பர்க்கா, சாகர் முதலிய இடங்களில் நடைபெற்ற போரில் ராயரால் கொல்லப்பட்ட முகம்மதியப் படை யினர் வானுலகில் சேர்ந்து அங்குள்ள இறைவர்களுக்குப் பெரும் துன்பம் விளைவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். 42 ஆம் பாடலில் அடில்கான் படையுடன் போரிட்டதாகவும், அப் போரில் அடில் கானைக் கொன்று அவர் வெற்றிக்குறிகுறியாக, அவன் தலையினை அனைவரும் காணுமாறு அமைத்தார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த 43 ஆம் பாடல் அவரது தரும சிந்தனையைப் பாராட்டிக் கூறுகிறது. அடுத்த ஐந்தும் கஜபதியின் உறவினரை உதயகிரி யிலும், கஜபதியின் குமாரரான வீரபத்திரனைக் கொண்டவீட்டிலும்

பிரகரேஸ்வரனைக் கொண்டபல்லியிலும் சிறைப்பிடித்ததும், சிம்மாசலத்தில் இறைவனை வழிபட்டதும், போத்தனூரில் வெற்றித்தூண், கல்வெட்டுச் சாசனத்துடன் நிலைநாட்டியதும்பற்றி விவரிக்கப்பட்டுள்ளன.

கடைசிப் பாடலில், முகம்மதியர்களுக்கு எதிராக, குருதி தோய்ந்த போரைக் கேம்பவி எனும் இடத்தில் நடத்தியது பற்றியும் அதன் கோட்டை கொத்தளங்களை அழித்ததுபற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது.

2. ராயவாசகம்

கிருட்டிண தேவராயரின் படையெடுப்பு

இது விசயநகரை அரசாண்ட கிருட்டிணதேவராயரின் ஆட்சியைப்பற்றிக் குறிப்பிடும் வரலாறு ஆகும். இது கிராமியத் தெலுங்கு உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. பேரரசின் ஒரு மாநிலத்தைச் சார்ந்த கிருட்டிணதேவராயரின் ஆளுநர், விஸ்வநாத நாராயணய்யா அவர்களின் நோக்கமுறுதலுக்காக, அன்னூரின் மேலாண்மையாளரால் (ஸ்தானபதியால்) இது எழுதப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. தம் தந்தையை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்தவரும், அதன் விளைவாகப் பாண்டிய நாட்டின் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவருமான படைத் தலைவர், நாகம நாயகரின் குமாரர் விஸ்வநாத நாயகரே இதில் குறிப்பிட்ட தலைவராவார் என்று அறிகின்றோம்.

இளவரசர் சின்ன வெங்கடராயருக்குக் காணிக்கையாகக் 'குமார துர்ஜடி' எழுதிய 'கிருட்டிணராய விஜயம்' எனும் காவியத்தில் காணப்படுவனவற்றிற்கும், இந் நூலிற் கொடுக்கப் பட்டுள்ள சான்றுக்கும் கிருட்டிணதேவராயரின் வரலாறு ஒத்துச் செல்கின்றது. பிற் குறிப்பிட்ட நரசா எனும் வீர நரசிம்மனே கிருட்டிணதேவராயரின் தந்தையாவார். இவருக்குப்பின் இவர் குமாரர் கிருட்டிணதேவராயர் அரியணை ஏறினார். வீர நரசிம்மாவின் குறிப்புகளும் அக் குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்ட கதைகளிலிருந்தும் அல்லது வேறு சான்றுகளிலிருந்தும் மாற்றியமைக்கப் பட்ட சில ஆதாரங்கள் இவ்வாறு கூறுகின்றன. ஆனால், தற்போது நம்மால் இதைப்பற்றி முடிவாக எதுவும் கூறவியலாமலுள்ளது.

கிருட்டிணதேவராயர் கருவூலம், படைத் திறன் வாய்ந்த அமைச்சர் அப்பாஜி (சாளுவ திம்மண்ணா) அவர்களின் உறுதுணையுடன் தம் பகைவர்களின் செல்வாக்கையொடுக்குவதிலும், படை

திரட்டச் செலவு செய்வதிலும் பயன்படுத்தப்பட்டது. காட்டிய திறன்களை ஆய்வதிலும், பிறகு விருந்தில் தம் அரண்மனை அலுவலர் களிடமும் கப்பணங்களிலிருந்து வந்த மக்களிடமும் விகடம் பேசி மனமகிழ்வதிலும் இனிதே பொழுதுபோக்கினர். தம் பகைவரின் எல்லைக்குள் சற்றேறக் குறைய 30 மைல் தூரம்வரை சென்று ஆங்குள்ள ஆள்கள், கால்நடைகள் ஆகியவை அப் பகைவர் களுக்குக் கிட்டாதவாறு தம் நாட்டிற்குக் கவர்ந்து வரும்படி தம் படைவீரர்களுக்கு ஆணை பிறப்பித்தார். நகரைச் சூழ்ந்து குதிரைப் படை, யானைப்படை, காலாட்படை ஆகிய படைகளையும் காவல் புரியும்படி ஆணையிட்டார். அவர்களுக் குதவிபுரிய 'விநியோகர்' எனும் பங்கீட்டாளர்களும் அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்களைக் கண்காணிக்கக் குதிரைப்படை அலுவலர்கள் அமர்த்தப்பட்டிருந் தனர். இவர்கள் எல்லோரையும் முதலமைச்சர் சாளுவ திம்மண்ணு நேரிடையாக மேற்பார்வையிட்டு வந்தார். போர்க்காலங்களில் முரசு ஒலிக்கும்; வீரர் வீறுகொண்டு கொதித்தெழுவர்; அரசர் முன்னின்று தம் படையை நடத்திச் செல்வார்.

அவர் உம்மத்தூர்த் தளபதிக்கு உரித்தான சிவசமுத்திரம் கோட்டையை முற்றுகையிட்டு, அக் கோட்டைத் தலைவனை கங்க ராசாவுடன் போர் புரிந்தார். அக் கோட்டை ஒருநாள் போரிலேயே தரைமட்டமாக்கப்பட்டது. தம் பணியாள்களை அவ் விடத்தில் காவல் காக்கச் செய்துவிட்டுச் சீரங்கப்பட்டணம் நோக்கி முன்னேறிச் சென்ருர். அங்குள்ள கோட்டையின் சிறப்பினை ஆய்ந்தும், வியந்தும், ஆதி ரங்கநாதப் பெருமாளை வணங்கியும் இக்கேரி அரங்கம் நோக்கிச் சென்ருர். அங்கு அவர் சுக்குல நாயகரின் படையினை ஆய்வுசெய்து விஜயபுரம் எல்லையை நோக்கிப் புறப்பட ஆணையிட்டார். இச் செய்தியைக் கேட்ட கோட்டைக் காவற்படையினர் பயந்து, தங்கள் நிலையங்களைத் தாங்களே அழித்துவிட்டுப் பயந்தோடினர். எனவே ரெய்ச்சூர், முத்கல், அத்தங்கி, அதவாணி ஆகிய கோட்டைகள் ஒன்றன்பின் ஒன்ருக வீழ்ந்தன. இவரது படை கோல்கொண்டா எல்லைவரை சூழ்ந்து சென்றது.

பீஜப்பூர் அடில்ஷா, கோல்கொண்டா குத்பஷா, பீடார் பரித்ஷா ஆகிய மூன்று முகமதியச் சுல்தான்களும் *1,00,000* குதிரைகளையும், *1,000* யானைகளையும் கொண்ட பெரும்படை ஒன்றைத் திரட்டி விசயநகரை எதிர்க்கக் கருதிக் கிருஷ்ணு நதியின் தென்கரையில் பாசறை அமைத்தனர். கிருட்டிணதேவராயர், ஒற்றர்களின்மூலம் அவர்களுடைய படையின் வலிமையையும், தம் குறுநில மன்னர் கள் செய்யும் சூழ்ச்சியினையும் அறிந்துகொண்டு மனம் கொதிப் படைந்தார். தளபதிகளில் முதன்மையானவரான பெம்மசானி

ராமலிங்கத்திற்கு உடனே ஓலை ஒன்றை அனுப்பி, கிருஷ்ணு நதியின் தென்பகுதியிலிருக்கும் முகமதியரின் படையின் முன்னேற்றத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்குமாறு கூறினர். அதற்கு அத் தளபதி ராயருக்குத் தம்மீது நம்பிக்கையிருக்குமானல் முகமதியப் படைகளின் பாசறைகளைத் தாக்கி, வாகை சூடத் தம்மால் இயலுமென்று உறுதிகூறிப் பதில் தெரிவித்தார். ஏனெனில், குளிர்ந்த பிரதேசத்திலிருந்து வரும் முகமதிய வீரர்களால் வெப்பமான கோடையில் நம் வீரர்களுடன் போரிட இயலாது என்பதே அவருடைய துணிவாகும். தளபதியின் மறுமொழியால் உவகை கொண்ட பேரரசர் அதன் அடையாளமாக அவருக்குத் தாம்பூல மரியாதை (வெற்றிலை பாக்கு) வழங்கினர்; பகைவரின் பாசறைகளைத் தாக்கவும் ஆணையிட்டார். ராமலிங்கம் தம் படைகளுக்குப் பேரரசரின் ஆணையினை அறிவித்தார். அவர்களிடத்தில் தமக்கொரு சந்தர்ப்பம் கிட்டியுள்ளதையும், அதன் வாயிலாக ராயரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காண்பிக்கவும் வாய்ப்புக் கிட்டியுள்ளதென்று கூறிப் போர்வெறியினைத் தூண்டினர். 'தன் நாட்டின்மீதும், தன் அரசர் மீதும், தன் சமயத்தின் மீதும் அன்பு கொண்டோரே! அதற்காகத் தன்னைத் தியாகம் செய்யத் துடிக்கும் வீரர்களே! என்னைத் தொடர்ந்து வாருங்கள்! அஞ்சும் கோழைகளே விலகி நில்லுங்கள்!' என்று சூளுரைத்துப் பகைவரின் பாசறையை நோக்கிப் புறப்பட்டார். இவரைச் சார்ந்து எண்ணுயிரம் போர்வீரர்களும் உருவிய வாளுடன், திருமணக் கோலம் காணச் செல்லும் கூட்டத்தைப் போன்று யானையின் மணியோசையும், குதிரைகளின் கனைப்பும், போர்வீரர்களின் சூளுரையும் ஒலிக்கச் சென்றனர். இப் போர் வீரர்களை எதிர்த்திடப் பகைவர் ஆயிரம் யானைகளையும், பத்தாயிரம் குதிரைகளையும், அறுபதாயிரம் வீரர்களையும் தயார்ப்படுத்தினர். முதன் முறையாக யானைப்படை குதிரைப்படைச் சண்டையில் நாலாயிரம் போர்வீரர்களைக் கொன்று குவித்தார்கள். ராமலிங்கம் தடைகளைக் கடந்து கூடாரங்களை நெருங்கி, கிருட்டிணதேவராயரின் முதன்மைப் படைக்குச் சமிக்ஞை கொடுத்தார். பேரரசர் கிருட்டிண தேவராயர் பட்டத்து யானையின்மீதமர்ந்து அனைத்தரசு பரிவாரங்களுடன் 120 கோட்டம் கொண்ட யானைகளும், 60,000 குதிரைகளும், 5,00,000 காலாட்படை வீரர்களும் சூழப் புறப்பட்டார். படைகள் பெருகப் பெருகக் கிருஷ்ணு நதியில் வெள்ளம் பெருகிக் கரை புரண்டோடியது. யானைப் படைகளை நோக்கித் தாக்குதல் தொடங்கியபோது, யானைகள் தாக்குதலின் வன்மையைத் தாங்காமலும், முதிர்வேனிலின் வெப்பம் தாங்காமலும், கிருஷ்ணு நதியின் வெள்ளத்தாலும், தழுவி வந்த குளிர் தென்றலாலும் உந்தப்பட்டு நதியை நோக்கி ஓடி வெள்ளத்தில் வீழ்ந்தன. எஞ்சியுள்ள

படையினர் தாக்குதலை எதிர்த்து நிற்க இயலாது நதியை நீந்திக் கடந்து தப்பினர். இவ்வாறு தப்பிக்க முயன்றோரில் பெரும் பாலோர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுத் தங்கள் உயிரை விட்டனர்.

நதியின் தென்கரையோரம், மூன்றில் ஒரு பங்கு எதிரிப் படையினர் மிஞ்சினர். யானைகளைக் குளிர்ந்த நீரிலிருந்து வெளி யேற்ற முடியாமையை யுணர்ந்து, அங்கிருத்தல் அறிவுள்ள செயலாகாதென வெண்ணி அவர்களும் தப்பிச் சென்றனர். மூன்று நாட்டு முகமதிய வீரர்களும், யானைகளின் மீதும், படகுகளிலும் ஏறி நதியைக் கடந்து, தங்கள் தலைநகர்களான பீஜப்பூர், கோல் கொண்டா, அகமது நகர் ஆகிய நகரங்களுக்குப் பின்வாங்கிச் சென்றனர்.

கிருட்டிணதேவராயர், நதிக்கரை வரை வந்து எதிரிகள் விட்டுச்சென்ற யானைகளையும், குதிரைகளையும் பிடித்துவரக் கட்டளை யிட்டார். மற்றும், பகைவரின் பாசறையிலுள்ள பொருள்களைப் பறிமுதல் செய்ய ஆணை பிறப்பித்தார். அமைச்சர் அப்பாஜி, தளபதிகள் ஐயமராசு, கொண்டமராசு, மற்றும் புலவர்களான அல்லசானி பெத்தண்ணு, மதயாகிரி மல்லண்ணு ஆகியவர்கள் சூழ வந்தார். கிருட்டிணதேவராயர் தமது ஒருநாள் வெற்றியைப் பற்றிக் குறிப்பிடுமாறு கூற முக்குதிம்மண்ணு கீழ்க்காணும் பொருள் படக் கவிதை யொன்று பாடினூர். 'ஓ! கிருட்டிணராயா! உன் பெயரைச் சொன்ன மாத்திரத்தில் முகமதியர்கள் மனமொடிந்து புறமுதுகு காட்டி ஓடி ஒளிந்தனர்; அவர்களின் யானைகளோ தங்களின் கருணைக் கடவுளான திருமாலை உன் முகத்தில் கண்டு தங்கள் முன்னோனைக் காத்த கடவுளென எண்ணித் திரும்பி ஓடி விட்டன.' மாரிக்காலம் சென்ற பிறகும் நதியில் வெள்ளம் குறைந்த பின்னரே நதியைக் கடத்தல் சாலச் சிறந்தது என அமைச்சர்கள் அறிவுரை கூறினர். மேலும், அவர்கள் எதிரியின் உள்நாட்டு எல்லையைத் தாக்கும்போது கீழ்க் குறிப்பிட்ட கோட்டை கள் தாக்கப்படக்கூடும் என்றும், எனவே உதயகிரி, காண்டூர், காண்டவாடி, பெல்லகொண்டா, நாகார்ச்சுனகொண்டா ஆகிய எதிரிகளின் கோட்டைகளைத் தாக்கும்படியும், அவற்றின் வலிமை யினைக் குறைக்கும்படியும் ஆணையிடுமாறு ஆலோசனை கூறினுர்கள். பேரரசர் அவர்களின் ஆலோசனையையேற்றுத் தாக்குதலை அனுமதித்தார். இவரது படையெடுப்பை இவர்களது புலவர்களின் 'போர்ப்பரணி' தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. இவர் அர்மதி (Hurmatti) கோட்டையைக் கூட்டி, காண்டிகொட்டா வழியாகச் சென்று கைப்பற்றினூர். பிறகு அவரே தமது படையை முன்னின்று

நடத்திச் சென்றார். பேரரசரின் வருகையைக் கேட்டதும், அவர்கள் கோட்டைக்குக் காவற்படையை அமர்த்துவதையும் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்வதையும் விட்டுவிட்டனர். பேரரசர், கொண்டவீடு நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவருடைய மேலாண்மையாளர் கிருட்டிணதேவராயர் அவர்களை நோக்கி, தங்கள் வருகையால் அநேகக் கோட்டைகளில் காவற்படையின் பணிகள் பயத்தின் காரணமாகத் தடைப்படுத்தப் பட்டுள்ளன என்பதைக் கூறினார். மற்றும், வேட்டுவ வகுப்பைச் சார்ந்த போர்வீரன் போயாவும், பதினெட்டுக் கப்பணங்களின் தலைவர்களும் சேர்ந்து நாட்டைக் கொள்ளையிட்டும், மக்களுக்கு அநேக இன்னல்களை விளைவித்தும் வந்தனர் என்பதும் தெரிவிக்கப் பட்டது.

கிருட்டிணதேவராயர் கொண்டவீடு நோக்கிப் புறப்பட்டுச் சென்று கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டார். கோட்டைக் காவற்படையினர் இவர்களையெதிர்த்துப் போரிடவியலாது கோட்டையை இழந்தனர். கைப்பற்றிய கோட்டையைக் காவல் காக்கும் பொறுப்பைத் தளபதி கொண்டய்யாவிடம் கொடுத்துவிட்டு வினுகொண்டாவை நோக்கிப் படைகள் திருப்பப்பட்டன. அவ் விடமும் விரைவில் ராயர் வசம் வீழ்ந்தது. ஒரு காவற்படையுடன் அவ் விடத்தைக் கண்காணிக்கத் தளபதி பாஸ்கரய்யா என்பவர் அமர்த்தப்பட்டார். பேரரசர், பெல்லகொண்டா நாகார்ச்சுன கொண்டா ஆகியகோட்டைகளின் வலிமையை யொடுக்குவதற்குத் தளபதி வீரபத்திரய்யா, ஐயலய்யா ஆகியோரின் தலைமையின் கீழ்க் கோட்டைக் காவற் சேனையை அங்கு அமைத்தார். பிறகு கிருட்டிணதேவராயர் பகைவரின் எல்லைக்குட்புகுந்து அகமதுநகரை நோக்கிச் சென்றார். நகரின் வெளியில் நிறுத்தப்பட்ட குதிரைப் படையினருடன் அமர்செய்து அகமதுநகரின் வெளிப்புறங்களைக் கைப்பற்றினார். அச் சண்டையிலேயே பகைவரின் குதிரைப் படையினரில் சுமார் 2,800 பேர்களைக் கொன்று குவித்து முழு வெற்றியைப் பெற்றார். கோட்டைக் காவற்படையினர் கிருட்டிண தேவராயரின் முற்றுகையை யெதிர்த்து நிற்க வியலாது ஓடி ஒளிந்தனர். இவ்வாறாக, கிருட்டிணதேவராயர் எளிதாகக் கோட்டையைப் புதுப்பிக்குமாறு ஆணையிட்டார். கஜபதியின் அரசை நோக்கிப் புறப்படவும், கோட்டை கொத்தளங்களைப் புதுப்பிக்கவும் உத்தரவு இட்டார். ஏற்கெனவே பகைவர்களைத் தோற்கடித்து அவர்களின் பெரும் பகுதியைத் தம் அரசோடு இணைத்து அவற்றை நிர்வாகம் செய்ய ஏற்பாடு உடனடியாகத் தேவையென அமைச்சர் அப்பாஜியும் ஏனைய அரசு அலுவலர் களும் ராயருக்கு எடுத்துக் கூறினார்கள். மற்றும், கஜபதி நாட்டின்

மீது படையெடுப்பது அந்தத் தருணத்தில் விரும்பத் தக்கதன்று என்றும் கூறினர். ஆனால், கிருட்டிணதேவராயர் அவர்களின் ஆலோசனையை யேற்காது தாக்குதலைத் தொடர்ந்தார்.

அவருடைய படையினர் கணவாய்களின் வழியாகச் சென்று கொண்டிருக்கும் போது சிட்டப்கான் தலைமையில் 60,000 விற்போர் வீரர்களால் அவர்கள் தாக்கப்பட்டனர். இரு படைகளுக்கு மிடையில் கடும்போர் நிகழ்ந்தது. ஆனால், சிட்டப்கான் படையை ராயரது படையினர், மலைகளையும் கணவாய்களையும் சூழ்ந்து கொண்டு சிதறியோடுமாறு தோற்கடித்தனர். சிட்டப்கான் படை தோற்கடிக்கப்பட்டதோடன்றி அப் படைகளில் உள்ள 23,000 வீரர் களும், 4000 குதிரைகளும் கொல்லப்பட்டன. ஏனையோர் புறமுது கிட்டு ஓடினர். கிருட்டிணதேவராயர் தம் படைவீரர்களில் 30,000 வீரர்களைக் கணவாய்களைக் காவல் காக்கும்படி உத்தரவிட்டார். மற்றும் கஜபதியின் நாட்டில் புகுந்து பல மாவட்டங்களைப் பிடித்து, பின் சிம்மாத்ரி, பொட்டுனூரில் (Pottunur) முகாமிட்டார்.

இவ்வாறாக, முன்னேக்கிச் சென்ற பிறகு, கஜபதி மற்றும் அவருடைய பதினாறு மஹாபத்திரர்களும் ஒருங்கிணைந்து தம் படை களை ராயருக்கெதிராக எதிர்த்தெழ, அவர்கள் செய்த பெரு முயற்சி களைக் கிருட்டிணதேவராயர் அறிந்தார்.

தாம் இதுகாறும் சாதித்தவைகளைக் காட்டிலும் அவர்களின் எதிர்ப்புப் பலம் வாய்ந்ததாக இருக்குமென அஞ்சித் தமது அமைச்சர் அப்பாஜி அவர்களைத் தனியே சந்தித்து ஆலோசனை கேட்டார். அவ் வாலோசனையின் போது, அமைச்சர் ராயரிடம் சூழ்ச்சியால்தான் பகைவர்களைத் தோற்கடிக்க வியலும் என்று கூறினர். பேரரசரின் விருப்பப்படி அமைச்சர் பதினாறு பத்திரர் களுக்கும் தங்கக்கட்டிகளையும் விலைமதிப்பிடவியலாத மணிகளும் பொருள்களும் நிறைந்த பெட்டிகளையும், அதனுள்ளே 'ரகசிய ஓலை களையும்' வைத்து அனுப்பினர். அவ் வோலைகளில் கிருட்டிண தேவராயருடன் பத்திரர்கள் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டுமெனவும், அதன் மூலம் போர் நிகழும்போது, கஜபதி யைச் சூழ்ச்சியின்மூலம் ஒழித்துக்கட்டத் தமக்கு உதவவேண்டு மெனவும் எழுதப்பட்டிருந்தது. இவ்வாறு அனுப்பப்பட்ட பெட்டிகள் சிலவற்றைக் கஜபதியின் தூதுவர்கள் கைப்பற்றி அவரிடம் ஒப்படைத்தார்கள். அவர் பெட்டியைத் திறந்து, அதனுள் இருந்த பொருள்களையும் ஓலையையும் கண்டு, தம்முடைய தற்காப்பிற்கு ஆபத்து வருமென அஞ்சி, யாரும் கண்ணுறாத நேரம் பார்த்துத், தம் பாசறையை விட்டு வடக்கே வெகுதூரம் சென்றுவிட்டார்.

மறுநாள் பதினறு பத்திரர்களும் அரண்மனை சென்று, தங்கள் தலைவர் தலைமறைவாகிச் சென்றதையறிந்து, அவர்களும் கலகலத்துத் தங்கள் கோட்டைகளினின்று பின்வாங்கினர். இதையறிந்ததும் கிருட்டிணதேவராயர் கஜபதியின் கோட்டையையும், நகரையும் காவல் காக்கத் தம் உறவினரை நியமித்தார். இவ்வெற்றியைக் குறித்துப், 'பொட்டுனூரி சிம்மாத்ரி' என்னுமிடத்தில் 'வெற்றித்தூண்' ஒன்று நாட்டினர். பிறகு அவர் கஜபதியின் அமைச்சர்களுக்குத் தம் முன்பாக வருகை தரும்படி கட்டளை பிறப்பித்தார். தாம் படையெடுத்து வந்தது புகழுக்கே அல்லாது நிலையான வெற்றிக்கு அன்று என்றும், கஜபதிக்கே அவருடைய நாட்டைத் திருப்பித்தரத் தாம் ஆயத்தமாக விருப்பதாகவும் அவர்களுக்கு எடுத்துக் கூறினர். அமைச்சர்கள் பேரரசரின் பெருந்தன்மையை யெண்ணிப் பெரிதும் வியந்தனர். தங்கள் தலைவரான கஜபதிக்கு அச் செய்தியை அனுப்பினர். கஜபதி செய்தியறிந்து தாம் கிருட்டிணதேவராயரின் நல்லியல்பையறியாது அவருடன் போரிட்டமைக்கு வருந்தித் தம் நண்பர்கள் பதினறு பேர்களுடன் ராயர் சபைக்கு வந்து, அவர்முன் மண்டியிட்டு மன்னிப்புக் கோரினர்.

கிருட்டிணதேவராயர், அவர்களின் வேண்டுகோளை யேற்று, உள்ளம் உவகை கொள்ள, அவர்களுக்குப் பொன்னும், மணியும், பொருளும் பரிசளித்தார். கஜபதி தம் மகள் ஜெகன்மோகினியைக் கிருட்டிணதேவராயருக்கு மணம் செய்து கொடுத்தார். அதனுடன் விலைமதிப்பிடமுடியாத மணிகளும், ஆபரணங்களும், யானைகளும், குதிரைகளும் பரிசாக அளித்தார். அவர் அளித்த பெட்டிகளையும் அவருக்கே பரிசளித்தார். கிருஷ்ணு நதியின் தென்கரையோரமுள்ள நாடு முழுவதையும் தம் மகளின் வரதட்சணையாகக் கொடுத்தார்.

திருமண வைபவங்கள் முடிந்தபின் கிருட்டிணதேவராயர் கஜபதியின் அமைச்சர்களும் அலுவலர்களும் உடன்வரத், தம் சொந்த எல்லைக்குத் திரும்ப ஆரம்பித்தார். இதையறிந்த கோல்கொண்டா, பீஜப்பூர், அகமதுநகர் சுல்தான்கள் இனிக் கிருட்டிணதேவராயரைத் தோற்கடிக்க வியலாது, அவருடன் சமாதானம் செய்துகொள்ளவேண்டுமெனக் கருதி அவரைச் சந்தித்து, மன்னிப்புக் கேட்டுச் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டனர்.

அதன்பின், பேரரசர் திருப்பதியை நோக்கிச் செல்ல விரும்பினர். அப்போது, கல்யாணி, குல்பர்க்கா முகமதியர்கள் பகைமையைக் காண்பித்தனர். அதையறிந்த கிருட்டிணதேவ

ராயர் உடனே குல்பர்க்காவை நோக்கிச் சென்று குல்பர்க்காவின் கோட்டை கொத்தளங்களை மண்மேடாக்கி, 6,000 குதிரைப்படைகளைக் கைப்பற்றினார். மற்றும் அவர் குஜ்ஜாரி கல்யாணராவ் என்பவரை அவ் விடத்திற்கு ஆளுநராக்கித் திருப்பதிக்குச் சென்றார்.

அவர் திருப்பதியில், வேதங்களில் கூறப்பட்டுள்ள பதினாறு வகைத் தானதருமங்களையும் செய்து, பொன்னும் மணியும் வாரி வழங்கினார். இறைவனின் முன்பாகச் செப்பால் வடிக்கப்பட்ட தமது ராணியர் இருவர்களுடைய சிலைகளையும் (திருமலா தேவி, சின்னதேவி) தமது சிலையையும் சிறந்த இறைவழிபாட்டிற்குச் சான்றாக அமையுமென நிறுவினார். ஸ்ரீமுக வாண்டு அசுவணி நல்லோரையில் வளர்பிறை பன்னிரண்டாம் நாள் பிரகாசமான நிலவொளியில் காளஹஸ்திக்குச் சென்று இறைவனை வணங்கினார். மிகுந்த மதிப்புடைய வெகுமதியை வாரி வழங்கினார். அவர் பல தருமசத்திரங்களையும், அன்னசாலைகளையும் கட்டினார். அதன் பின்னர் அவர் தெற்கே புறப்பட்டு, வழியிலுள்ள பெரிய கோவில்களையெல்லாம் கண்டு வழிபட்டுச் சென்றார். அவர் பார்வையிட்ட இடங்களில் கீழ்க்கண்ட இடங்கள் முக்கியமாகக் குறிப்பிடத் தகுந்தவையாகும். அழகர் குடி (அழகர் கோயில்), மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், கருவனல்லூர், சங்கர நாராயணர் கோவில், தென்காசி, திருக்குற்றாலம், அகஸ்தியர் பர்வதம் (பொதியமலை), கஜேந்திரங்குடி, கன்யாகுமரி, திருச்செந்தூர், புதிய திருப்பதி (ஆழ்வார் திருநகர் அருகில்) முதலியன. அவர் வழங்கிய மானியங்களில் மதுரையில் எழுந்தருளிய சுந்தரேஸ்வரர் - மீனாட்சிக்கும், ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஆண்டாள் அம்மைக்கும் வழங்கியவை மிகவும் சிறப்பு வாய்ந்தவைகளாகும். ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரிய குளம் ஒன்றை வெட்டினார்; மண்டபத்தின் நடுநாயகமாகச் சிற்ப வேலைப்பாடு கொண்ட ஒரு லட்ச மாடங்களைக் கட்டினார். அகஸ்திய பர்வதத்தில் ஒரு புதிய கோபுரத்தையும், திருநெல்வேலியில் செப்புத் தகடுகளில் பொறிக்கப்பட்ட கற்சுவரையும் கட்டினார். திருநெல்வேலிக்கு அருகில் 'கிருட்டிணதேவராய சமுத்திரம்' என்னும் கிராமத்தையும் அமைத்தார். பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சேதுநாட்டிற்குச் (ராமேஸ்வரம்) சென்று இறைவனை வழிபட்டார். கல்ங்களிலேறித் தனுஷ்கோடிக்குச் சென்று தம் வீர வாளிலிருந்த இரத்தக் கறையைக் கழுவி, தங்கத்தால் மூன்று துலாபாரங்களைச் செய்தார். மூன்று நாள்கள் தங்கிக் கோகர்ணம் சென்று, நீண்ட இடைவெளிக்குப்பின் தம் தலைநகரான விசய நகரை நோக்கிப் புறப்பட்டார். அவர் ஸ்ரீரங்கப்பட்டணத்தின் வழியே திரும்பிச் சென்றார். தலைநகரில் எழுந்தருளியுள்ள

இறைவன் விட்டலா, விருபாக்ஷருக்கு விலையுயர்ந்த பொருள் களைப் பரிசளித்தார். மற்றும் தம் உற்றூர், உறவினர், அமைச்சர்கள், அரசு அலுவலர்கள், படை சூழப் பெருவிழா ஒன்றெடுத்தார். அவர் அமைச்சர் அப்பாஜி அவர்களை விலையுயர்ந்த இரத்தினக் கம்பளத் தில் அமரச்செய்து 'ஸ்வர்ணுபிஷேகம், ரத்தனுபிஷேகம்' முதலிய வற்றைச் செய்து அன்னுருக்குப் பொன்னும், மணியும், விலை மதிப்பிடவியலாத ஆபரணங்களையும், வாசனைப் பொருள்களையும் வாரி வழங்கினுர்; மற்றவர்களுக்கும் அவரவர்களின் தகுதிக் கேற்பச் சன்மானங்கள் வழங்கப்பட்டன.

(3) கிருட்டிணராய விஜயம்

(ஆக்கியோர் : குமார துர்ஜடி)

கிருட்டிணதேவராயரின் அரண்மனையில் வாழ்ந்து வந்த கவி துர்ஜடியின் ஐந்தாம் தலைமுறையில் வந்தவரும், விசயநகரை அரசாண்ட நான்காம் வம்சத்து இளவரசன் சின்ன வெங்கடாவின் அரச சபையி லிருந்தவருமான வெங்கடராயரால் இக் காவியம் எழுதப்பட்டதாகும். இவர் எல்லாராலும் குமார துர்ஜடி என்று சிறப்பாக அழைக்கப்பட்டார். தமது புரவலர் சின்ன வெங்கடாவின் வேண்டுகோளுக்கிணங்கி, பேரரசர் கிருட்டிணதேவராயரின் வெற்றிகளைக் குறித்து இவர் இக் காவியத்தை இயற்றினுர். கிருட்டிணதேவராயருக்கு முன் அரசாண்ட அவரது தந்தையான வீர நரசிம்மரைப் பற்றி இக் காவியம் குறிக்கிறதே யொழிய, அவருக்கு அடுத்து ஆருண்டுகள் அரசாண்ட அவருடைய மூத்த சகோதரனைபற்றிக் குறிப்பிடவில்லை. வீர நரசிம்மர் தமக்கு வயதாகி விட்டமையால் அரியணையில், தம் மகனை கிருட்டிணதேவ ராயரை அமர்த்தி, தாம் ஓய்வு பெற்றூர் என்று கவியில் கூறுவது, இலக்கியச் சுவை குன்ருது, காவியத்தைப் படைக்கலா மென எண்ணி, மூத்த சகோதரனைப்பற்றி வலியுறுத்தாது சென்றிருக்கலாமென ஊகிக்கப்படுகிறது. கிருட்டிணதேவராயரின் 'முடிசூட்டு விழா'விற்கு வந்த நிலமானியத் தலைவர்களில் முக்கிய மானவர்கள் அரவீடு புக்கராசு, நந்தேவர்களின் தலைவர்கள், வேல்கோட்டுத் தலைவர்கள் ஆகியோர் ஆவர்.

கிருட்டிணதேவராயர் அமைச்சர் சாளுவ திம்மாவைப் பார்த்து 'அப்பா, நமது அரசாங்க வருவாய்த் தொகை எவ்வளவு? நமது படைகளின் பலம் எவ்வளவு?' என வினவி அறிந்தார். யானை, குதிரை மற்றும் காலாட்படையின் விவரங்களையும், வருட வருவாயி னின்று அவற்றை நிர்வகிக்கும் நடைமுறைச் செலவினையும்

கேட்டறிந்தார். பின் ஒவ்வோர் ஆண்டும் வசூலிக்கும் மொத்த வருவாயினையும், அதனின்று பிராமணர்களுக்கும் கோவில்களுக்கும் வழங்கப்படும் தேவதானங்களையும், இதற்கு முன் அரசாண்ட மன்னர்கள் வருவாயினின்று சேமித்து வைத்துள்ள தொகையினையும் அடங்கிய முழு விவரத்தைக் கேட்க, திம்மண்ணு அரசருக்கு அவ் விவரங்களை எடுத்துக் கூறினர். வரி வசூலில் கவனம் செலுத்தாது உதாசீனமாக நடந்துகொண்ட ஆளுநர்களைக் கட்டாயப்படுத்தும்படியும், அவ்வாறு தம் கடமையைச் செய்யாது வாளாவிருப்போருக்கு அதிக அபராதம் விதிக்க வேண்டுமெனவும் ஆணை பிறப்பித்தார்.

விசயநகரிலிருந்து அண்டை நாடுகளுக்கனுப்பப்பட்ட ஒற்றர்கள் திரும்பி வந்து கோல்கொண்டா, அகமது நகர் ஆகிய நாடுகளில் உள்ள முகமதிய அரசர்கள், விசயநகரப் பேரரசருக்கு எதிராக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்றறியப் பீஜப்பூருக்குத் தங்கள் அரசப் பிரதிநிதிகளை அனுப்பியுள்ளார்கள் என்ற செய்தியினை ராயரிடம் கூறினர். மேலும், அவர்களின் பிரதிநிதிகளான வெங்கோஜி, தாதோஜி ஆகிய இருவரும் இரவும் பகலுமாக ஒருவருக்கொருவர் ஆலோசித்து, ஒரிஸ்ஸா அரசர் கஜபதியோடு கலந்து தொடர்புகொண்டிருக்கின்றனர் என்பதையும் ராயரிடம் கூறினர். மூன்று முகமதிய அரசர்களும் தங்களின் எல்லைகளிலுள்ள கோட்டைகளைப் புதுப்பித்துக் காவற் படையினை அமைத்து வருகின்றனர் என்றும், மற்றும் காவற் படையினருக்கு வேண்டிய உணவுப் பொருள்களும், ஆயுதங்களும் வேண்டிய அளவு சேமித்து வைத்துள்ளார்கள் என்றும் கூறினர். எல்லாவற்றிற்கும் மேலாக அந்நியர்கள் தங்கள் எல்லையில் ராயர் படை நுழையாவண்ணம், கடுமையான நடைமுறைகளைக் கையாண்டுள்ளனர் என்றும் முத்திரையிட்ட பயணச் சீட்டு முறை, நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் எடுத்துரைத்தனர். இதற்கிடையில் கிருட்டிணதேவராயர் அகமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய மூன்று முகமதிய அரசர்கள் மீது கிருஷ்ணு நதியைக் கடந்து அவர்கள் எல்லைக்குட் புகுந்து போர்தொடுக்க ஆயத்தமாக இருக்கின்ருர் என்பதை நிஜாம்ஷாவின் தூதுவர்கள், ஒரிஸ்ஸா நாட்டுக் கஜபதிக்குத் தெரிவித்தார்கள். மேலும், ராயர் வாய்ப்புக் கிடைத்தால் அகமதாபுரம் வரையில் கூட முன்னேறக் கூடுமென எண்ணிக் கஜபதிக்கு அவரது கோட்டைக் காவற்படையினை ஆயத்தமாகவும், தயார் நிலையிலும் வைத்திருக்க வேண்டுமாறு முகமதிய அரசர்கள் எச்சரிக்கை செய்தனர். கஜபதியும் அவ்வாறே இருப்பதாகத் தம் இசைவினை அவர்களுக்குத் தெரிவித்தார். கிருட்டிணதேவராயர்

அவசியமான முன்னேற்பாடுகளைச் செய்த பின்னர், முக்கியத் தளபதிகளை அரண்மனைக்கு வரும்படி உத்தரவுகள் பிறப்பித்து, அவர்களுக்குச் சிறப்பான விருந்து ஒன்று நடத்தினார். அரசாங்கத் தலைநகர் அலுவலர்களுக்குத் தேவையான வழிமுறைகளையும் அறிவுரைகளையும் கூறித் தம் படையுடன் புறப்பட்டார்.

அவர் தம்மை எதிர்த்த குறுநில மன்னர்களைத் தோற்கடித்தார். அவர்களின் கோட்டைகளையும், காவற்படையினரையும் வெற்றி கொண்டு, பின்னர்த் தம் படையுடன் உம்மத்தூரின் தலைவரான கங்காதரன் தலைநகரான சிவன சமுத்திரம் நோக்கிப் புறப்பட்டார். கடும்போரில் அவனைத் தோற்கடித்து அவர் அவனது அரண்மனை, கருவூலம் ஆகியவற்றைக் கைப்பற்றிய பின்னர் ஸ்ரீரங்கப் பட்டணத்தை அடைந்தார். அவ் விடத்தைவிட்டுப் புறப்பட்ட சிறிது நேரத்திற்குள் சங்குல நாயக்கரின் படைகளோடு சந்திக்க நேரிட்டது. பிறகு பீஜப்பூர்க் கோட்டைகளை நோக்கிப் புறப் பட்டார். இக் கோட்டைகளின் பெரும்பாலான காவற்படையினர் ராயரிடம் தோல்வியுற்றுச் சரணடைந்தனர். கிருட்டிணதேவ ராயர் அவர்களில் அநேக ஆளுநர்களுக்கு உயிர்ப்பிச்சை வழங்கினார். அதவாணி, முத்கல், ரெய்ச்சூர் ஆகிய கோட்டை களில் புதிய காவற்படையினரை அமர்த்தினார். பின்னர் அவரது படையெடுப்பு, கோல்கொண்டாவை நோக்கி அமைந்தது.

இதைக் கேள்வியுற்ற பீஜப்பூர், அகமதுநகர், கோல்கொண்டா முகமதிய அரசர்கள், ராயர் ஆற்றைக் கடந்து வராமல் அவர் போக்கைத் தடுக்கக் கிருஷ்ணா நதியின் தென்கரையில், தங்கள் படைகளைத் திரட்டி நிறுத்தினர். இதனை அறிந்த கிருட்டிணதேவ ராயர் தம் போரைப்பற்றி ஆலோசனை செய்ய ஒரு குழுவினைக் கூட்டினார். அப்போது அவரது முக்கியத் தளபதியான பெம்ம சானி ராமலிங்கா, ராயரின்முன் வந்து பகைவர்களை எதிர்த்து வாகை சூடவும் அவர்களைத் துரத்தி அவர்களின் பாசறைகளைக் கைப்பற்றவும் தமக்கு வாய்ப்பு அளிக்கும்படியும் அப் பணியில் தம் மீது நம்பிக்கை கொள்ளுமாறும் வேண்டிக்கொண்டார்.

முகமதியப் படையில் 1000 யானைகளும், 1,00,000 போந்தலர் களும் (Bondelas), 1,00,000 பெண்டார்களும், மற்றும் 1,00,000 முகமதியர்களும் இருந்ததாகக் கணக்கிடப்பட்டது. ஆனால், விசய நகரப் படையில் 6,00,000 காலாட்படையினரும், 6,600 குதிரைகளும், 2000 யானைகளும் இருந்தனவாகக் கணக்கிடப் பட்டது. கிருட்டிணதேவராயர் அப்பொழுது ஏற்பட்ட போரில் முழுவெற்றி பெற்றார். அப் பாசறையில் அவருடன் வந்திருந்த

கவிஞர்களான மதயாகிரி மல்லண்ணு, அல்லசானி பெத்தண்ணு, முக்குதிம்மண்ணு ஆகியவர்கள் பேரரசர் அவர்களின் வெற்றியைக் குறித்துப் பாடல்கள் பல பாடினர்.

பிறகு கிருட்டிணதேவராயர் அப்பாஜியிடம் மேற்கொண்டு முகமதியர்களின் எல்லையில் முன்னேறுவது எங்ஙனம் என்பதைக் குறித்து ஆலோசனை நடத்தினுர். அதற்கு அப்பாஜி, கிழக்கேயுள்ள கஜபதியைத் தாக்காமல் விட்டுவிட்டு, மேற்கொண்டு முகமதியர்களின் ஆட்சிக்குள் நுழைந்து போர் தொடுப்பது முற்றிலும் விரும்பத்தக்கதன்று என்று ஆலோசனை கூறினுர். பேரரசர் அப்பாஜியின் மதிப்பிற்குரிய ஆலோசனையையேற்றுக் கஜபதியைத் தாக்கும்படி தம் படைகளைக் கிழக்கு நோக்கிப் புறப்பட ஆணையிட்டார்.

கிருட்டிணதேவராயர் கலிங்கநாட்டு எல்லையை நோக்கிப் போர் தொடுத்தபோது அரவிட்டிவாரு, ராவலவாரு ஆகிய குடும்பத்தைச் சேர்ந்த முக்கிய அலுவலர்கள் அவருடன் சென்றனர். அவர்கள் உதயகிரிக் கோட்டையைத் தாக்கித் தரை மட்டமாக்கினர். கொண்டுகூர், கொண்டவீடு, கொண்டபல்லி, விணுகொண்டா ஆகிய கோட்டைகளை முற்றுகையிட்டு ஒன்றன் பின் ஒன்ருகக் கைப்பற்றினுர்கள். அக் கோட்டைகளின் காவற் படையினர் சிதறுண்டு அழிந்தொழிந்தனர்.

அதற்குப்பின், கிருட்டிணதேவராயர் அகமதுநகர் நோக்கிப் புறப்பட்டார். இவ் அகமது நகர் என்பது அகமதாபாத் - பீடார் என்பதாகும்; நிஜாம்ஷாவின் தலைநகரான அகமதுநகர் அன்று. சாளுவ திம்மண்ணுவின் இணக்கமில்லாமலிருந்தும், அவர் அவ்விடத்தைச் சின்னுபின்னமாக்கினுர். தம் பெருமையை நிலை நாட்டிய பின்னர்க் கஜபதியின் எல்லைக்குட்பட்ட மாநிலங்களின் உட்பகுதியில் தாக்குமாறு படையைத் திருப்பினுர். கிருட்டிண தேவராயரின் படைகள் கஜபதியின் எல்லைக்குள் சென்று கொண்டிருக்கும்போது 'சிட்டப்கான்' எனும் தலைவன் தன்னுடைய வில்வீரர்களைக் கொண்டு அவருடைய படைகளை வளைத்துத் தாக்கினுன். ஆனுல், அவர் சிட்டப்கானை எளிதில் தோற்கடித்தார். மற்றும் அவனுடைய படைகளைப் புறமுதுகிடச் செய்து கலிங்க நாட்டின் மீது படையெடுத்துச் சென்ருர். பொட்னூரி, சிம்மாத்திரி வரை சென்று அங்கு அவர் தம் பாசறையை அமைத்தார்.

சாளுவ திம்மண்ணாவின் சூழ்ச்சியின் விளைவாக, கஜபதி தம் தளபதிகளிடையே தம்மைக் கொல்லச் சூழ்ச்சி நடைபெறுவதாகவும், தாம் எல்லாவற்றையும் இழந்துவிட்டதாகவும் ஐயம் கொண்டு தம் தலைநகரைவிட்டு இரவோடு இரவாகக் காட்டைநோக்கி ஓட்டம் பிடித்தார்.

அவருடைய தளபதிகளும் இச் செய்தியைக் கேட்டுத் தங்கள் காவலிடங்களை விட்டுப் பின்வாங்கினர். எனவே, கிருட்டிணதேவ ராயர் வெகு எளிதாகக் கஜபதியின் தலைநகரைக் கைப்பற்றினார். தம் வீரர்களுக்குக் கஜபதியின் அரண்மனையில் இருப்பவருக்கோ அவர்தம் குடும்பத்தினருக்கோ எந்தவிதமான துன்பமும் செய்யக் கூடாது என்று ராயர் கட்டளையிட்டதன் மூலம் அவருடைய பெருந் தன்மை புலப்படுகிறது.

கஜபதியின் அமைச்சர்கள் மூலம், ராயர் தாம் கஜபதியிடம் உடன்படிக்கை செய்துகொள்ளத் தயாராக இருப்பதாகவும், மற்றும் வெற்றிபெற்ற நாடுகளை மீண்டும் கஜபதிக்கே திருப்பித்தரத் தாம் இணங்குவதாகவும் செய்தியனுப்பினார். இதைக் கேள்வியுற்ற கஜபதி, மிக்க மகிழ்ச்சிகொண்டு அம் மகிழ்ச்சியின் அடையாள மாகத் தம் மகளைக் கிருட்டிணதேவராயருக்குத் திருமணம் செய்து வைத்தார். கிருஷ்ணா நதியின் தெற்கேயுள்ள தம் நாடுகளை மகளுக்குச் சீதனமாகக் கொடுத்தார்.

பிறகு, கிருட்டிணதேவராயர் குல்பர்க்காவை நோக்கிப் படை யெடுத்தார். அதன் கோட்டை கொத்தளங்களை அழித்தொழித்து நீண்ட இடைவெளிக்குப் பின், தம் தலைநகர் திரும்பினார். அதன் பின்னர்த் தம் ஆட்சிக்குட்பட்ட நாடுகள் முழுவதிலும் சுற்றுப் பயணம் செய்யலானார். அவர் ஸ்ரீசைலம், காளஸ்திரி, சிதம்பரம் போன்ற சைவத் திருத்தலங்களுக்கும் ஸ்ரீரங்கம், காஞ்சி, திருப்பதி போன்ற வைணவத் திருத்தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபட்டார். காவேரி, தாமிரபரணி ஆகிய புனித நதிகளில் நீராடினார். அவரைப் பாராட்டி அவருக்கென்றே காணிக்கையாக வழங்கப்பட்ட இலக்கியங்களில் 'மனுசரித்திரம்' மிகவும் முக்கியமானதாகும்.

(4) பாரிஜாத அபஹரணம்

(ஆக்கியோர் : நந்தி திம்மையா)

இந் நூலின் தொடக்கத்தில் 'கிருட்டிணதேவராய'ரின் குடும் பத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் இறைவன் கிருஷ்ண பகவானே கிருட்டிணதேவராயராக இப் பூவுலகில் பிறந்திருக்க வேண்டுமென விவரிக்கப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் அருகில்

காவேரி நதிக்கரையில், இவர் செய்த பெரும் போரில் மாண்ட பல்லாயிரக் கணக்கான பகைவர்களின் குருதி காவேரியில் கலந்து அதன் நீர் செந்நீராக மாறி ஓடியது. கொண்டவீட்டிற்கு அருகில் பிரதாபருத்திராவின் குமாரனைத் தோற்கடித்து அவனைச் சிறைப் பிடித்தார். பிறகு அவனை மன்னித்து அவனுக்கு வாழ்வளித்தார். கஜபதியின் நாடுகளில் வெற்றிநடைபோட்டு ராயர் உதயகிரி, விணுகொண்டா, கொண்டவீடு, பெல்லகொண்டா, வெலுபு கொண்டா, ஜல்லிபல்லி, அனந்தகிரி, கம்பம்மெட் ஆகிய இடங்களைக் கைப்பற்றினர். கஜபதி தம் தலைநகரான 'கட்டாக்கை' நோக்கி வரும் அவருடைய படையெடுப்பைக் கேட்டுக் கூக்குரலிட்டுப் பயந்தோடினர். காவியத்தின் முற்பகுதியின் இறுதியில் அவர் ஆண்டுதோறும் வசந்தகாலத்தில் நடத்தும் ஒரு விழாவில், தம் பட்டத்தரசிகளுடன், இக் காவியத்தை இயற்றிய புலவரைத் தம் போர் வெற்றியைப்பற்றிப் பாடக்கேட்டு மகிழ்ந்ததாக விவரிக்கப் பட்டுள்ளது. இரண்டாம் பகுதியின் தொடக்கத்தில் 'மலைய கூடம்' எனும் அரண்மனையில் ராயர் தங்கியிருந்ததாகவும், அப் பகுதியின் இறுதியில், உமட்டூர்க் கோட்டைச் சுவர்களை இடித்ததாகவும், உமட்டூர் அரசரின் சிறந்த கோட்டையான சிவசமுத்திரத்தின் கோட்டைச் சுவர்களைச் சின்னபின்னப்படுத்தியதாகவும் விவரிக்கப் பட்டுள்ளது.

இக் காவியத்தின் ஐந்தாம் பகுதியின் கடைசியில் புலவர் தம்முடைய சொந்தக் குடும்பத்தைப் பற்றிய சில செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். இப் புலவர், அறிவுசான்ற மலையமாருதக் கவியின் மைத்துனனை நந்தி சிங்கமத்தியாவுக்கும் திம்மாம்பா வுக்கும் குமாரராவார். இவர், அகாரா சிவாச்சாரியாரது மாணவராவார். இவருக்குக் கிருட்டிணதேவராயர் அக்ரஹாரம் ஒன்றைப் (பிராமணக் குடியிருப்பை) பகடையாடும் திறமைக்காக அன்பளிப்பாக அளித்தார். தம் எடைக்கு எடையுள்ள முத்துகளைக் கற்றறிந்தோர் அனைவருக்கும் வழங்குவதான, 'மௌக்திகா துலா புருஷா' எனும் தானத்தை ராயர் செய்ததாக இதையடுத்த பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(5) தமிழ் நாவலர் சரிதை

விசயநகரைச் சேர்ந்த கிருட்டிணதேவராயரைப் பற்றிக் குறிப்பிடும் கீழ்க்கண்ட செய்யுட் பகுதி 'தமிழ் நாவலர் சரித்திரம்' எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

குமார சரஸ்வதி என்ற புலவரால் இயற்றப்பட்ட முதற்பாடலில் 'ஒரிஸ்ஸா' நாட்டு அரசனை கஜபதியின்மீது கிருட்டிணதேவ ராயர் தொடுத்த போரினைப்பற்றியும், அந் நாட்டு இளவரசியை இவர் திருமணம் செய்துகொண்டதைப் பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது. அப் பாடல் பின்வருமாறு.

குமார சரசுவதி, ஒட்டியனைச் (கிருட்டிணராயர்) செயித்தபோது பாடியது

கலிங்க மிழந்துநதிக் கைச்சங்கந் தோற்று
மெலிந்துகட கந்நழுவ விட்டாள்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மானகிருட்ண பூபாலா வுன்றனுக்குப்
பின்னிட்ட வொட்டியன்பொற் பெண். (210)

தத்துவப் பிரகாசரின் அடுத்த மூன்று பாடல்களில் திருவாரூர்க் கோவிலில் தினந்தோறும் நடைபெறும் வழிபாட்டில் உள்ள நிர்வாகக் குறைபாடுகளைப் பற்றிய முறையீடு குறிப்பிடப் பட்டுள்ளது. இம் முறையீட்டைச் செவிமடுத்த கிருட்டிணதேவ ராயர், அவ் வாசிரியர் யாருக்கு எதிராகச் சோக கீதம் பாடினரோ, அக் குற்றமுள்ள கோவில் பணியாளர்களைப் பணியிலிருந்து நீக்க ஆணை பிறப்பித்தார். இதனால் அவர்கள் தங்களின் தவறான செய்கைகளின் மூலம் தங்களின் உயர்நிலையைத் தாழ்த்திக் கொண்டனர் என்பது புலனாகிறது. அப் பாடல்கள் பின்வருமாறு:

தத்துவப்பிரகாசர் திருவாரூர்க் கொடியிறக்காமற் றகைந்தது

மருவுபுகழ்க் கிருஷ்ண மகராச ராணை
அரிய வடமலையா ராணை—திருவாரூர்ப்
பாகற் கொடியறுப்பார் பாதத் திருவாணை
த்யாகக் கொடியிறக்கா தே. (212)

ஊழித் துலுக்கல்ல வொட்டியான் றானுமல்ல
வீழித் துலுக்குவந்து மேலிட்டே—யாழி
சிறந்ததே ராரூர்த் தியாகருடைப் பூசை
யிறந்ததே கிருட்டிணரா யா. (213)

இது கேட்டு ராயர் சில பட்டரை, மாற்றியபோது தத்துவப்பிரகாசர் பாடியது

உண்ட வயிற்றி லுமிக்காந்த லிட்டதே
தொண்டரே வீழித் துலக்கரே—பண்டெல்லா
மப்ப மவலென் றதிரசமுந் தோசைகளுங்
கப்புவது போச்சே கவிழ்ந்து. (214)

கடைசிப் பாடலில் கோவில் குருக்களான நாகராச நம்பி அவர்களால் 63 நாயன்மார்களின் உலோக உருவச்சிலைகளில் இரண்டு அழிந்துபட்டது ராயரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவாரூர் நாகராசநம்பி செய்த குற்றங் கிள்ளைக்குச் சொல்லுவித்துத் தலத்தார் ராயனுக்குச் சொல்லி யறிவித்தது

முன்னு றறுவத்து மூவரிருந் தாரதனி
லின்னு ளிரண்டு பேரேகினுர்—கன்னு
னருக்கின்ருன் வந்துவிட்ட நாகராச நம்பி
யிருக்கின்ருன் கிருட்டிணரா யா. (177)

யார் இக் குறைபற்றி முறையிட விரும்பினரோ, அவர்கள் கிளி ஒன்றினுக்கு இப் பாடலைக் கூறி, அது அப் பாடலைக் கிருட்டிண தேவராயர் காதில் விழுமாறு பாடச் செய்ததுதான் இக் கதையில் சுவை மிகுந்த கட்டமாகும்.

13. பாமினி சுல்தான்கள்

முதலாம் அலாவுதீன் : தில்லியில் ஆண்ட முகம்மது துக்ளக்கின் கொடுங்கோன்மையினுல் 1343 முதல் 1351 வரை நாட்டில் எங்கும் குழப்பங்கள் இருந்தன. அதனைப் பயன்படுத்திக்கொண்டு தில்லி சுல்தானின் 'ஆசன்' என்ற பெயருடைய ஓர் ஆப்கானிய வீரர் தக்காணத்திலுள்ள தௌலதாபாத் என்னுமிடத்தை 1347-ல் கைப்பற்றினுர். அதைத் தலைநகராகக்கொண்டு தக்காணத்தில் பாமினி மரபினைத் தோற்றுவித்தார். அவரை முதலாம் அலாவுதீன் என்று அழைக்கலாயினர். அவருக்குப் 'பாமன்' என்ற பட்டப் பெயர் இருந்ததால், அந்த மரபு 'பாமினி' என்று அழைக்கப் பட்டது. 1551-ல் முகம்மது துக்ளக் இறந்தவுடன் தக்காணத்தில் பல இடங்களைக் கைப்பற்றிக்கொண்டு தம் ஆட்சியை விரிவு படுத்தினுர். குல்பர்க்கா அதனுடைய தலைநகர் ஆயிற்று. 1358-ல் அவர் இறக்கும்போது அவரது ஆட்சிஎல்லை மேற்கில் கடலும், கிழக்கில் 'போங்கீர்' வரையிலும், வடக்கில் வெயின் கங்கை ஆறு முதல் தெற்கில் கிருஷ்ணு நதி வரையிலும் பரவியிருந்தது. அவருடைய நாடு குல்பர்க்கா, பீடார், தௌலதாபாத், பேரார் என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது.

முதலாம் முகம்மது

அலாவுதீனுக்குப் பிறகு அவரது மூத்த குமாரர் முகம்மது என்பவர் பட்டத்திற்கு வந்தார். அவர் விசயநகரம், வாரங்கல் இந்து அரசர்களோடு போரிட்டார். அப் போரில் அரை மில்லியன் இந்துக்கள் இறந்ததாகக் கூறப்படுகிறது. அவர் கள்வர்களுக்கு மரண தண்டனை விதித்தார். எட்டு மந்திரிகள் அடங்கிய ஒரு சபையை வைத்துக்கொண்டு அவர் ஆட்சியை நடத்தினுர். அவர்கள் படைத்தலைவர், மேற்பார்வை அமைச்சர், பொருள் அமைச்சர், முதல் அமைச்சர், பீஷ்வா, காவல்துறை மேற் பார்வையாளர், அயல் நாட்டுத்துறை அமைச்சர், உதவிப்பொருள்

அமைச்சர், முறை வழங்குவோரின் தலைவர், அறநிலைப் பாது காப்பாளர் ஆவர். குடிப்பதில் அதிகமாக ஈடுபட்டிருந்ததால் அவர் இறந்ததாகக் கூறப்படுகிறது.

குல்பர்க்காவில் மிகச் சிறந்த அழகான பள்ளிவாசல் ஒன்று அவர் காலத்தில் கட்டப்பட்டது. மண்டலத் தலைவருக்கு அரச ·க் குரிய அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. அத் தலைவர்கள் தங்களுக்கு வேண்டிய 'படைகளைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றனர். மேலும், பல அலுவலர்களை அவர்களே நியமித்தும் வந்தனர். அவர்களைக் கட்டுப்படுத்த முகம்மது அடிக்கடி மேற் பார்வையிட்டுச் சுற்றி வருவது வழக்கம்.

முதலாம் முகம்மதுக்குப்பின், அவரது குமாரர் முஜாஹித் பதவி ஏற்ருர். அவர் அதிகமாகக் குடிப்பார். அவரை அவரது சிறிய தகப்பனரின் குமாரர் தாவுத் என்பவர் கொன்றுவிட்டு 1378-ல் பட்டத்திற்கு வந்தார். அவரை அவருடைய அடிமை கொன்றுவிட்டதால், அவரது சகோதரர் இரண்டாம் முகம்மது அதே ஆண்டில் பதவி ஏற்ருர். அவர் காலத்தில் எத்தகைய போரும் நிகழவில்லை. 1387 முதல் 1395 வரை நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. சுல்தான் திறமையினல் பெருந்தன்மையோடு மக்களின் வறுமையைப் போக்கினர் என்ருலும், முகம்மதிய மக்களுக்கே பேருதவி செய்ததாகக் கூறப்படுகிறது. அவருக்குப் பின் அவரது குமாரர் கியாசுதின் என்பவர் 1397-ல் பதவி ஏற்ருர். ஆனல், அவருடைய கண்களைக் குருடாக்கி, அவரைப் பதவி விட்டு நீக்கி, அவருடைய சகோதரர் ஷேமுதின் பட்டத்திற்கு வந்தார். அவரையும் பதவிவிட்டு நீக்கிச் சிறை செய்ததாகப் 'பெரிஷ்டா' என்ற அறிஞர் கூறுகிருர். அவருக்குப் பின் முதலாம் முகம்மதுவின் இளைய சகோதரர்களின் குமாரர் பிரோஸ் என்பவர் 1397-ல் பட்டத்திற்கு வந்தார். அவர் காலத்தில் விசயநகர அரசரான இரண்டாம் அரிஹரன் அவர்மீது படையெடுத்து வந்தார். பெருமழை பெய்ததால் படைகள் சின்னபின்னப்படுத்தப் பட்டன; படைகள் விசயநகரை நோக்கி ஓடலாயின. அப் போரில் அரிஹரனுடைய குமாரர் கொல்லப்பட்டார் என்ருலும், 1406-ல் 'பிரோஸ்' இந்துக்களின் மீது போர்தொடுத்து விசயநகர இளவரசியைத் திருமணம் செய்துகொண்டார். ஆட்சியின் தெற் கெல்லையாகத் துங்கபத்திரா நதியை அமைத்துக்கொண்டார். அவருக்குக் குடியிலும், இசையிலும் அதிக ஆர்வம் உண்டு. ஐரோப்பியப் பெண்கள் பலரைத் தம் அரண்மனையில் வைத்துக் கொண்டார். அவ்வப் பெண்களின் தாய்மொழியிலேயே அவர் பேசும் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் கட்டடக்கலையில் சிறந்து

விளங்கினர். பீம நதிக்கரையில் 'பிரோஸாபாத்' என்ற நகரை அமைத்தார். அவர் குலத்தில் அவரே சிறந்த பேரரசர் எனப் 'பெரிஷ்டா' கூறுகிறார். அவர் தம் கடைசிக் காலத்தில் இரு துருக்கி அடிமைகளிடம் நிர்வாகப் பொறுப்பை விட்டுவிட்டுப் பக்தியில் ஈடுபட்டார். அவருடைய சகோதரர் அகம்மது என்பவர் அடிமைகளிடம் ஆட்சியை விட்டதைக் குறித்து வருந்தி அவரை வேலையிலிருந்து நீக்கிக் கொன்றுவிட்டார். பின்னர், தாமே பாமினிசுல்தானகப் பதவி ஏற்றார்; இந்துக்களுடன் போரைத் தொடங்கினர்; விசயநகரப் பேரரசைத் தாக்கினர் இருபதாயிரம் பேரைக் கொன்றபின் ஒரு விழாவினை நடத்திவிட்டு மேலும் போருக்குச் செல்வது அவர் வழக்கம். விசயநகர அரசருடன் சமாதானம் செய்துகொண்டு திரும்பினர். குல்பர்க்காவை தலைநகராகக்கொண்டு ஆட்சி நடத்திய அகம்மது நோய்வாய்ப்பட்டதால் அந்நகரம் சுகாதார வசதி அற்றது என்று கருதித் தலைநகரைப் பீடாருக்கு மாற்றினர். 1435-ல் அவர் இறந்தவுடன் அவரது குமாரர் இரண்டாம் அலாவுதீன் பட்டத்திற்கு வந்தார். அவரும் விசயநகர அரசர்களுடன் போரிட்டார். போரின் முடிவில் சுல்தானுக்கு அனுகூலமான உடன்படிக்கை ஏற்பட்டது. பின்னர்த் தம் கடமைகளை மறந்துவிட்டுக் குடிப்பதிலும் பெண்களோடு பழகுவதிலும் காலத்தைக் கழித்தார்.

1457-ல் அவருக்குப் பின் அவரது குமாரர் ஹுமாயூன் பட்டத்திற்கு வந்தார். ஏற்கெனவே அவர் மிகவும் கொடூரமானவர் என்ற செய்தி நிலவியிருந்ததால், மக்கள் அவருடைய இளைய சகோதரரைப் பட்டத்திற்குக் கொண்டுவரலாம் என்ற ஆசையுடன் அவரைப் பதவியிலிருந்து நீக்க முயற்சி செய்தார்கள். அதை அறிந்த ஹுமாயூன் சந்தேகப்பட்டவர்களையெல்லாம் கொலை செய்யலானர். அவருடைய கொடுமையான ஆட்சியைப்பற்றி மக்கள் பெரிதும் கவலை கொண்டார்கள். அவருடைய அமைச்சரில் முக்கியமானவர் 'முகம்மது காவன்' என்பவர். அவர் சிறந்த திறமை உடையவர் என்றாலும் அரசரை நல்வழிப்படுத்த முடியவில்லை.

அவருக்குப் பின் அவரது குமாரர் 'நிஸாம்' என்பவர் 1461-ல் பதவியேற்றார். அவர் இளைஞர். அவர் 1462-ல் இறந்துவிட்டார். அவருக்குப் பின் அவருடைய சகோதரர் மூன்றும் முகம்மது 1463-ல் சுல்தான் ஆனார். முகம்மது காவனின் துணைகொண்டு அவர் இருபது ஆண்டுகள் அரசோச்சினர். பல நாடுகளை வென்றார். அவர் காலத்தில் பஞ்சம் வந்தது. மக்கள் பலர் இறந்தனர். அவர் விசயநகரத்தின் மீது படையெடுத்ததோடு காஞ்சிபுரத்தைச்

கூறையிடலானூர். அவரது வாழ்நாளில் கடைசி ஆண்டில், தம் நண்பனுயும், சிறந்த அமைச்சராயுமிருந்த முகம்மது காவன்மீது ஐயங்கொண்டார். முகம்மது காவன் பாரசீக மரபைச் சார்ந்தவ ரானதால் அவரை அந்நியர் என்றே வெறுக்கும் சூழ்நிலை அவருக் கேற்பட்டது. குடிப்பழக்கதில் அதிக ஈடுபாடு கொண்ட அவர், தெலுங்கானத்தில் ஆளுநராகவிருந்த மாலிக்ஹேசன் என்பவரின் தூண்டுதலின்பேரில் முகம்மது காவன் கையொப்பமிட்டதாகக் கொண்டுவரப்பட்ட ஒரு சதித் திட்டம் அடங்கிய கடிதத்தை நம்பினுர். அது உண்மையாயிருக்குமா என்று ஆராயாமல் குடி போதையில், தம்பால் நம்பிக்கையுடன் பணிபுரிந்த அமைச்சரான முகம்மது காவனுக்கு, அவரது தள்ளாத வயதில் மரணதண்டனை விதித்தார். மேடோஸ் டேய்லர் என்பவர் 'முகம்மது காவன் இறந்தது பாமினி அரசின் வீழ்ச்சிக்கு ஆரம்பம்' எனக் கூறியுள்ளார். காவன் இறந்த பின்னரே மூன்ரும் முகம்மது அதிக மாகக் குடிக்கலானுர். அதனுல் அவர் 1482ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் மரணமடைந்தார்.

இம் மரபின் கடைசி அரசராக மூன்ரும் முகம்மதுவின் குமாரர் 'முகம்மது' 1482-ல் அரியணையில் அமர்ந்தார். அவர் பதவியேறும் போது அவருக்கு வயது பன்னிரண்டு. ஏதோ அவர் அரசர் எனப் பெயரளவில் 1518 வரை ஆண்டாரேயொழிய அவருக்கு முழு அதிகாரமும் இல்லை. ஆங்காங்கு மாநில ஆளுநர்களாக இருந்தவர் கள் தங்கள் இடங்களில் சுயேச்சையுடன் தாங்களே அரசாள முனைந்தனர். முகம்மதுவின் தலைநகரைச் சுற்றியுள்ள இடங்கள்தாம், அவருடைய அரசாட்சிக்கு எஞ்சி நின்றன. அதற்குள், நாட்டில் கலகங்களும் கொலைகளும் நிகழலாயின. அவர் 1518-ல் இறந்தார். அவருக்குப்பின் 1526 வரை திறமையான அரசர்கள் யாரும் பதவியில் இல்லை. அவரது குமாரர்கள் நால்வரும் ஒருவர் பின் ஒருவராகப் பெயரளவிற்கு ஆட்சி நடத்தினர். அவர்கள் முறையே அகமத் (1518–21), அலாவுதீன் (1521-22), வாலியுல்லா (1522-25), கலிமுல்லா (1525–27) என்பவர் ஆவர். இறுதியாக வந்த பாமினி மன்னர் பீடாரில் ஆட்சி நடத்திய அமீர்பரீத்திற்கு எதிராக முகலாய அரசர் பாபரின் துணையை நாடினுர். அதனுல் பயன் விளையாது போகவே அவர் 1577-ல் பீடாரிலிருந்து பீஜப்பூருக்கு ஓடினுர். அதற்குப்பின் அகமது நகருக்குச் சென்ற தாகத் தெரிகிறது. எனவே, அமீர்பரீத் உரிமையுடன் ஆளத் தொடங்கிவிட்டார். இவ்வாறு பாமினிகுலம் முடிவுற்றதால் ஐந்து சுல்தான்களின் தனித்தனி இராஜ்ஜியங்கள் தக்காணத்தில் தோன்றலாயின.

பாமினிப் பேரரசு நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுப் பின்னர் முகம்மது காவன் காலத்தில் ஐந்து பிரிவுகளாக இயங்கியது. அவை முறையே (1) பேரார், (2) பீஜப்பூர், (3) அகமதுநகர், (4) பீடார், (5) கோல்கொண்டா அரசுகளாகும்.

1. பேரார் இமாட்ஷாஹியர்

முகம்மது காவன் கொலை செய்யப்பட்டபின் போரில் பத்துல்லா என்பவர் இமாட்ஷாஹி குலத்தின் ஆட்சியைத் தோற்று வித்தார். அவர் 1490-ல் உரிமை பெற்றிருந்தபோதிலும் அரசப் பட்டத்தைச் சூட்டிக்கொள்ளவில்லை. அவருடைய குமாரர் அலாவுதீன் என்பவர் 1504-ல் அரசரானார். அவருடைய காலத்தில் பேராருக்குரிய இரு இடங்களை அகமதுநகரம் கைப்பற்றிக் கொண்டதால் அடிக்கடி அகமதுநகரத்துடன் அவர் போரிட்டார்.

அவர் 1529-ல் இறக்க, அவரது குமாரர் 'தார்யா' என்பவர் ஆட்சிக்குவந்தார். அவரும் அண்டை நாடுகளுடன் போரிடலானார். 1554-ல் பீஜப்பூருக்கு எதிராக அகமதுநகருடன் நட்புக்கொண்டார். ஆனால், அந் நட்புறவு நீடிக்கவில்லை. மேலும், விசயநகர மன்னருக்கு உதவி செய்ய அவர் நினைத்ததால், விசயநகர அரசை அழிக்கும் நோக்கத்துடன் அகமதுநகர், பீஜப்பூர், பீடார், கோல் கொண்டா ஆகிய நாடுகள் அமைத்த கூட்டுறவில் பேரார் அரசர் சேரவில்லை. அதனுடன் விசயநகர அரசுக்குத் துணையாக இருந்த பேரார் அகமது நகரின்மீது படையெடுத்தது. அதனை அறிந்து அகமது நகரம், கோல்கொண்டா நாட்டின் துணைகொண்டு பேரார் மீது படையெடுத்தது. என்றாலும் அவர்களின் முயற்சி பலிக்க வில்லை.

தார்யாவுக்குப்பின் பர்ஹான் ஹிமாட்ஷா என்பவர் 1562-ல் பட்டம் ஏற்று 1574 வரை ஆட்சி புரிந்தார். அவருக்குத் 'துபால் கான்' என்ற அமைச்சர் பெரிதும் உதவியாக இருந்தார். பேராரை அழிக்கவேண்டுமென்று மீண்டும் அகமது நகரும், பீஜப்பூரும் கூட்டு முயற்சி செய்தன. அதை அறிந்த அமைச்சர் 'துபால்கான்' பீடார், காண்டேஷ் நாடுகளின் துணையை நாடினார். அவர் முயற்சி பலன் அளிக்காது போகவே, அகமது நகரம் 1572-ல் பேரார்மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றிக் கொண்டது. பின்னர் அரசை யும், அமைச்சரையும் கைதுசெய்து அவர்களை அகமதுநகரச் சிறை யில் அடைத்தது. அங்கு அவர்கள் இறந்ததாகத் தெரிகிறது. அத னுடன் பேரார் ஆட்சி முடிவுற்றது. பின்னர் பேராரை அகமது நகரம் அக்பருக்கு வழங்கியது.

2. பீஜப்பூர் அடில்ஷாஹியர்

பீஜப்பூரில் அடில்ஷாஹியர் என்ற குலத்தைத் தோற்று வித்தவர் யூசுப் என்ற துருக்கியவராவார். அவரை முகம்மது காவன் என்ற அமைச்சர் விலைக்குவாங்கி, அவரது திறமையை மெச்சி அவருக்கு 'அடில்கான்' என்ற பட்டத்தைச் சூட்டினார். அவர் 1472-ல் தௌலதாபாத்தின் ஆட்சித் தலைவராக நியமிக்கப் பட்டார். காவன் கொலையுண்டபிறகு, மூன்றும் முகம்மதுவுடன் அவர் ஒத்துழைக்க மறுத்தார். அதனுடன் தௌலதாபாத்தை விட்டு வெளியேறி, தம் தலைவரான காவனுக்கு உரிய பகுதியான பீஜப்பூரை ஆட்சி செய்தார். யூசுப் அடில்கானின் உரிமை பெற்ற ஆட்சி 1490-ல் பீஜப்பூரில் தொடங்கியது. அவர் எல்லாச் சமயத்தவர்களையும் ஒன்றுகவே நடத்தினார். அருகில் உள்ள நாடு களுடன் திறமையாகப் போர் நிகழ்த்தி, பீஜப்பூரின் பெருமையை நிலைநாட்டினார்.

அவருக்குப் பின் அவரது குமாரர் இஸ்மெயில் என்பவர் 1510-ல் பதவி ஏற்றார். அப்பொழுது அவருக்கு வயது பதின்மூன்று. அத் தருணத்தில் உள்நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. அதனை அவருடைய தாயார் ஓரளவு அடக்கினார் என்றாலும், விசயநகரப் பேரரசர் ரெய்ச்சூர் தோ-ஆப் பகுதியையும், போர்ச்சுகீசியர் கோவாவையும் பீஜப்பூர் ஆட்சியிலிருந்து கைப்பற்றிக் கொண் டார்கள். பிற அண்டை நாடுகளான பீடார், கோல்கொண்டா, அகமது நகரம் ஆகிய நாடுகள் படையெடுத்தபோது பீஜப்பூர் வீரர்கள் வெற்றி கொண்டார்கள். ஆயினும் கிருட்டிணதேவ ராயரிடம், இஸ்மெயில் ரெய்ச்சூரில் தோல்வியடைந்தார். அதனுடன் ராயர் நிற்காமல் மேற்கொண்டு குல்பர்க்காவையும் கைப்பற்றி அதனையும் அழித்தார். ஆனால், கிருட்டிணதேவராயர் இறந்த பின்பு இஸ்மெயில் ரெய்ச்சூர் தோ-ஆப் பகுதியை மீண்டும் கைப் பற்றிக் கொண்டார். அவர் கோல்கொண்டாமீது படையெடுத்து அதனையும் வெற்றி பெற்றார். அவர் சிறந்த போர் வீரர்; கல்விமான் என்று பலரால் பாராட்டப்பட்டார்.

இஸ்மெயில் இறந்த பின்பு அவருடைய தலைமகனை 'மல்லு' என்பவர் பதவிக்கு வந்தார். அவர் ஒழுக்கக்கேடராக இருந்ததால் பதவியை விட்டு விலக வேண்டியதாயிற்று. அவரை விசயநகர அரசர் அச்சுதராயர் தோற்கடித்துவிட்டார்.

அவருடைய இளவல் 'இப்ரஹிம்' 1535-ல் பதவி ஏற்றார். அவர் விசயநகர அரசில் தலையிட்டு ராயரை அடிபணியச் செய்தார். இந்து அரசர்களிடமிருந்து பரிசில்கள் பல பெற்றார். அண்டை

நாடுகள் அனைத்தையும் ஒன்றுசேரவொட்டாதவாறு அவற்றின் கூட்டுறவை அழித்தார். ஆனால், போர்ச்சுகீசியரை மட்டும் அவரால் அடக்க முடியவில்லை.

இப்ரஹிமின் குமாரர் 'அலி' என்பவர் 1558-ல் பதவி ஏற்றார். அவர் முதலில் விசயநகரத்துடன் சேர்ந்துகொண்டு அகமது நகரைத் தாக்கினார். பின்னர் இராமராயரும் அவரது படைகளும் முகம்மதியரை இழிவுபடுத்தியதாக அறிந்து அப் பேரரசுக்கு எதிராகச் சுல்தான்களின் கூட்டுறவில் சேர்ந்துகொண்டார். 1565-ல் விசயநகரம் அழிவுற்ற பிறகு தெற்கில் தம் நாட்டைப் பரப்ப முனைந்தார். அலிக்குப் பின் 'இரண்டாம் இப்ரஹிம்' 1580-ல் பட்டம் ஏற்றார். அவர் எல்லாச் சமயத்தவர்களிடமும் பெருந்தன்மையாக நடந்து கொண்டார். அவர்.போர்ச்சுகீசியருடன் நல்லுறவு கொண்டிருந்தார். அடில்ஷாஹி குலத்தவரில் அவரே சிறந்த அரசராக விளங்கினார். அகமது நகரத்தின் வீழ்ச்சிக்குப்பின் அக்பருடன் நட்புறவு கொண்டார். ஜஹாங்கீருக்கு அவர் கப்பம் கட்டினார். கடைசியாக ஔரங்கசீப் அடில்ஷாஹி குலத்தைத் தோற்கடித்து, தம் நாட்டுடன் பீஜப்பூரைச் சேர்த்துக்கொண்டார்.

3. அகமதுநகரத்தின் நிஸாம்ஷாஹியர்

'மலிக் அகமது' என்பவர் 1490-ல் அகமது நகரத்தில் நிஸாம் ஷாஹி என்ற குலத்தைத் தோற்றுவித்தார். அவர் தௌலதாபாத் மண்டலத் தலைமைப் பதவியைப் பெற்றார். அவருடைய தந்தையார் பாமினி சுல்தானால் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டு, சுல்தானிடம் வெறுப்புக் கொண்டார். எனவே 1490-ல் பீஜப்பூர், பேரார் ஆட்சித் தலைவர்களைத் துணையாகக் கொண்டு உரிமை அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அவர் பூனாவிற்கு அருகில் உள்ள 'ஜீன்னார்' என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டார். 1494-ல் அகமது நகரை நிறுவி அதனையே புதிய தலைநகரமாக்கினார்.

அவரது குமாரர் 'முதலாம் பர்ஹான்' என்பவர் 1509-ல் பட்டம் ஏற்றார். அப்போது அவருக்கு வயது ஏழு. எனவே, அவருடைய அமைச்சர் 'முகமல்கான்' என்பவரே உண்மையில் ஆட்சியை நடத்தினார். அந்தச் சமயத்தில் ஏற்பட்ட பேரார் படையெடுப்பை முகமல்கான் முறியடித்தார். பின்னர், பீஜப்பூர் அரசுடன் நட்புக் கொள்வதற்காக அங்கு ஆண்ட இஸ்மெயில் அடில் ஷாவின் உடன் பிறந்தவளை 1524-ல் பர்ஹான் திருமணம் புரிந்து கொண்டார். என்றாலும், அவ்விரு நாடுகளுக்கும் பகைமை குறைய

வில்லை. எனவே, அடுத்த ஆண்டிலேயே அகமதுநகர், பேரார், பீடார் ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றுசேர்ந்து பீஜப்பூரைத் தாக்கின.

பர்ஹானுக்குப் பிறகு அவர் மகன் 'முதலாம் ஹுசேய்ன்' 1553-ல் பதவி ஏற்றார். அப்போது பீஜப்பூர், விசயநகர அரசுடனும் கோல்கொண்டாவுடனும் சேர்ந்துகொண்டு 1558-ல் அகமது நகரைத் தாக்கியது. விசயநகர அரசரான இராமராயர் ஆணைக்கு அகமது நகரம் இணங்க வேண்டியதாயிற்று. என்றாலும், 1562-ல் அகமதுநகரம் கோல்கொண்டாவுடன் சேர்ந்துகொண்டு விசய நகரத்தை எதிர்த்தது. ஆனால், வெற்றிகொண்ட விசயநகரம், அகமது நகரை அழித்தது. விசயநகர அரசர் இராமராயர் அப் போரில் முகம்மதியரைத் துன்புறுத்தியதால் முஸ்லிம் நாடுகள் ஒன்றுசேர்ந்தன. 1564-ல் அகமது நகரம், பீஜப்பூர், பீடார், கோல்கொண்டா ஆகிய நாடுகள் ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டுறவை அமைத்தன. அவை 1565-ல் தலைக்கோட்டைப் போரில் விசய நகரத்தை அழித்து வெற்றிபெற்றன.

ஹுசேய்னின் மகனும் அவருக்குப்பின் வந்தவரும் சரியாக ஆட்சி புரியாததால் நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. ஹுசேய்னின் மகளான 'சந்த் பீபீ' அகமதுநகர அமைதியை நிலைநாட்ட முயன்றாள். ஆனால், அவ் வீரப் பெண்மணியினுடைய முயற்சி பலனளிக்கவில்லை. 1596-ல் முடிசூடிய பகதூரை முகலாயர்கள் சிறை செய்தனர். பின்னர் அகமதுநகரம் முகலாயர் பகுதியில் சேர்க்கப்பட்டது.

4. பீடார் பரீத்ஷாஹியர்

பரீத்ஷாஹி குலத்தைத் தோற்றுவித்தவர் 'அமீர் காசிம் பரீத்' என்பவராவார். அவர் பீஜப்பூரின் அதிகாரத்தைக் குறைத்து, பீடாரில் தம் ஆட்சியை வலியுறச் செய்ய வேண்டுமென்று விரும்பினார். அதற்காக விசயநகரத்துடன் சேர்ந்துகொண்டு யூசுப்புக்கு எதிராகச் செயலாற்றினார்.

அவருடைய குமாரரான 'அமீர் அலி பரீத்' என்பவர் மிகவும் தந்திரசாலியாக விளங்கினார். சமயத்திற்கு ஏற்றாற்போல் அண்டை நாடுகளுடன் தொடர்பு கொண்டார். என்றாலும், அவர் முயற்சி தோல்வியே அடைந்தது. 1527-ல் அவர் உரிமை வாய்ந்த ஆட்சித் தலைவரானார். 1542-ல் பீஜப்பூரைத் தாக்கும்போது அவர் இறந்தார்.

அவரது குமாரரான 'அலிபரீத்ஷா' 1542-ல் பதவியேற்ருர். அவரது பீஜப்பூரைத் தாக்கும் முயற்சி தோல்வியுற்றது. அவர் 1564-ல் மற்ற முஸ்லிம் நாடுகளுடன் சேர்ந்துகொண்டு விசய நகரத்தைத் தாக்கினர். அதன் பின்னர் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. பீடாரை அகமது நகருடன் இணைக்கும் முயற்சிகள் நடைபெற்றன. ஆனல், அவ்வாறு இணைக்க முடியவில்லை. அலி பரீத்துக்குப் பின் வந்த அரசர்கள் திறமையற்று இருந்ததால் பீடாரின் சிறப்புக் குன்றிவரலாயிற்று. கடைசியாக 1619-ல் பீஜப்பூர், பீடாரை இணைத்துக்கொண்டது.

5. கோல்கொண்டாவின் குதுப்ஷாஹியர்

'சுல்தான் குலி' என்பவர் கோல்கொண்டாவில் 'குதுப்ஷாஹி' என்ற குலத்தைத் தோற்றுவித்தார். அவர் வாரங்கல் நாட்டு ஆட்சித் தலைவராய் இருந்து 1512-ல் அரசுரிமை பெற்ருர். அவர் பீஜப்பூரை எதிர்த்து இருமுறை போரிட்டார். அவரது குமாரர் 'ஜாம்ஷீத்' என்பவர் 1543-ல் பட்டம் ஏற்ருர். அவரும் பீஜப்பூருடன் போரிட்டுத் தோல்வியடைந்தார்.

அவருக்குப் பின் இப்ரஹிம் என்பவர் 1550-ல் பதவியேற்ருர். தலைக்கோட்டைப் போரில் அவர் பங்கு மிக அதிகமானது. அவர் காலத்தில் வாணிகம் சிறந்து விளங்கியது. அவருக்குப் பின் அவரது குமாரர் 'முகம்மது குலி' என்பவர் 1580-ல் பட்டம் ஏற்ருர். அவர் தம் மகன் 'ஹைதரின்' பெயரால் 'ஹைதராபாத்' என்ற நகரை ஏற்படுத்தினர். அவர் காலத்துக்குப் பின் கோல்கொண்டா மூகலாயர் ஆட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.


14. சமகாலத்தவர் பட்டியல்

விசயநகர அரசர்கள்	பாமினி சுல்தான்கள்	பீஜப்பூர்ச் சுல்தான்கள்
முதலாம் அரிஅரன்–1336		
	முதலாம் அலாவுதீன்–1347	
முதலாம் புக்கன்–1354		
	முதலாம் முகம்மது –1358	
	முஜாஹித்–1373	
இரண்டாம் அரிஅரன் –1377		
	தாவுத்–1378	
	இரண்டாம் முகம்மது –1378	
	கியாசுதின்–1397	
	ஷேமுதின்–1397	
	பிரோஸ்–1397	
இரண்டாம் புக்கன்–1404		
முதலாம் தேவராயன் –1406		
வீரவிசயன்–1422	அகம்மது–1422	
இரண்டாம் தேவராயன்–1426		
	இரண்டாம் அலாவுதீன்–1435	
மல்லிகார்ச்சுனன்–1447		
	ஹுமாயூன்–1457	
	நிஸாம்–1461	
	மூன்றும் முகம்மது –1463	
விருபாக்ஷன்–1465		
	முகம்மது–1482	
பிரௌததேவராயன் –1485		
சாளுவ நரசிம்மன்–1486		
		யூசுப்–1490
இம்மடி நரசிம்மன்–1492		
வீர நரசிம்மர்–1506		
கிருட்டிணதேவராயர் –1509		
		இஸ்மெயில்–1510
அச்சுதராயர்–1529		
		மல்லு–1534
		முதலாம் இப்ராஹிம்–1535
சதாசிவராயர்–1542		
		அலி–1557

15. மரபுவழிப் பட்டியல்

விசயநகரப் பேரரசர்கள்

(அ) சங்கம வம்சம்



விசயநகரப் பேரரசர்கள்—தொடர்ச்சி

(ஆ) சாளுவ வம்சம்


குந்தா (Gunda)
- 1. நரசிம்மர் (1485—90)
  - 2. திம்மா (1490-91)
  - 3. இம்மடி நரசிம்மர் (1491-1505)

(இ) துளுவ வம்சம்

1. நரச நாயகர் (பிரதிநிதி—Regent) (1490—1503)
- *2. வீர நரசிம்மர் (1503-09)
- 3. கிருட்டிண தேவராயர் (1509-29)
  - திருமலை தேவ மகாராயர் (பட்டாபிஷேகம் செய்து அரசராக்கப்பட்டார். ஆனால் தந்தை இருக்கும் போதே உயிர் துறந்தார்)
- ரங்கராயர்
- 4. அச்சுதராயர் (1530-42)

*வீரநரசிம்மர் கி.பி. 1505-ல் தாமே முடிசூட்டிக்கொண்டார்.

துளுவ மரபினர்


சந்திரன்
புதன்
தூர்வசு
திம்மா = தேவகி
ஈஸ்வரா = புக்கம்மா
நரசா
திம்மா
மனைவி திப்பம்மா
மனைவி நாகமாம்பா
மனைவி ஒபமாம்பா
வீர நரசிம்மர்
கிருட்டிண தேவராயர்
அச்சுதராயர்
ரங்கராயர்
திருமலா
திம்மலாம்பா
=
அலிய ராமராயா
சின்ன வெங்கடாத்ரி
சதாசிவா
கிருஷ்ண
பெத்ததிம்மா

விசயநகரப் பேரரசின் முக்கிய ஆண்டுகளும் நிகழ்ச்சிகளும்

(கிருட்டிணதேவராயர் ஆட்சிவரை)

கி.பி. 1336 — முதலாம் அரிஅரன் ஆட்சியேறல்; விசயநகர ஆட்சித் தோற்றம்.

கி.பி. 1340 — பெனுகொண்டாவைப் புக்கர் கைப்பற்றல்.

கி.பி. 1342 — மூன்றும் வீர வல்லாளர் இறத்தல்.

கி.பி. 1343 — நான்காம் விருபாட்ச வல்லாளர் ஹொய்சள அரசராதல்.

கி.பி. 1346 — புக்கர் ஹொய்சள அரசைக் கைப்பற்றல்.

கி.பி. 1352 — குமார கம்பணர் மாபார் சுல்தானைத் தோற்கடித்தல்.

கி.பி. 1356 — முதலாம் புக்கர் அரியணை ஏறல்.

கி.பி. 1362 — முதலாம் முகமது பாமினி விசயநகரப் படையெடுப்பு.

கி.பி. 1374 — குமார கம்பணர் இறத்தல்.

கி.பி. 1377 — முதலாம் புக்கர் இறத்தல். இரண்டாம் அரிஅரன் பதவியேறல்.

கி.பி. 1390 — பாமினி சுல்தான்கள் துணைகொண்டு விசயநகரத்தின் மீது வேலமார்கள் படையெடுத்தல்.

கி.பி. 1398 — இரண்டாம் அரிஅரன் பாமினி அரசின்மீது படையெடுத்தல்.

கி.பி. 1405 — இரண்டாம் புக்கர் விருபாட்சரை நீக்கிவிட்டு அரியணையேறல்.

கி.பி. 1406 — முதலாம் தேவராயர் இரண்டாம் புக்கரை நீக்கி அரியணையேறல்.

கி.பி. 1419 — பிருஸ் பாமினி, சுல்தானைத் தேவராயர் தோற்கடித்தல்.

கி.பி. 1422 — முதலாம் தேவராயர் இறத்தல்; முதலாம் விஜயனும், இரண்டாம் தேவராயரும் கூட்டாட்சி நடத்தல்; அகமது பாமினி விசயநகரத்தின் மீது படையெடுத்துத் தோற்றல்.

கி.பி. 1428 — இரண்டாம் தேவராயர் கொண்டவீடு வெற்றி பெறல்.

கி.பி. 1433 — இரண்டாம் தேவராயர் பாமினி அரசுடன் போருக்கு எழுதல்.

கி.பி. 1446 — தேவராயர் இறத்தலும் முறையே விஜயராயரும் மல்லிகார்ச்சுனரும் அரியணையேறல்.

கி.பி. 1456 — சாளுவ நரசிம்மர் செல்வாக்குப் பெறுதல்.

கி.பி. 1465 — மல்லிகார்ச்சுனர் இறத்தலும் இரண்டாம் விருபாட்சர் பதவியேறலும்.

கி.பி. 1469 — சாளுவ நரசிம்மரின் ஒரிஸ்ஸா படையெடுப்பு.

கி.பி. 1470 — சாளுவ நரசிம்மரின் உதயகிரி வெற்றி.

கி.பி. 1479 — வல்லாபாச்சாரியின் பிறப்பு.

கி.பி. 1480 — சாளுவ நரசிம்மரின் கொண்டவீடு வெற்றி.

கி.பி. 1485 — இரண்டாம் விருபாட்சர் பிறப்பும் ப்ரௌத தேவராயர் பட்டம் ஏறலும்.

கி.பி. 1486 — சாளுவ நரசிம்மர் பதவியேற்றல்.

கி.பி. 1490 — சாளுவ நரசிம்மர் இறத்தல், திம்மா பதவி யேற்றல். நரச நாயகரிடம் அதிகாரம் இருத்தல்.

கி.பி. 1497 — ஒரிஸ்ஸா அரசர் புருஷோத்தமன் இறத்தலும், பிரதாபருத்ரன் பதவியேற்றலும்.

கி.பி. 1503 — வீர நரசிம்மன் அதிகாரம் பெறல்.

கி.பி. 1505 — இம்மடி நரசிம்மரைக் கொலை செய்துவிட்டு வீர நரசிம்மர் அரசரென அறிவித்தல்.

கி.பி. 1509 — வீர நரசிம்மர் இறத்தலும், கிருட்டிணதேவ ராயர் அரச பதவியேற்றலும்.

கி.பி. 1510 — ஆல்புகர்க் கோவாவைக் கைப்பற்றல்.

கி.பி. 1512 — கிருட்டிணதேவராயர் ரெய்ச்சூரைக் கைப் பற்றல்.

கி.பி. 1513 — கிருட்டிணதேவராயர் உதயகிரியை வெற்றி கொள்ளல்.

கி.பி. 1520 — கிருட்டிணதேவராயர் பீஜப்பூர்ப் படைகளைத் தோற்கடித்தல்.

கி.பி. 1529–30. கிருட்டிணதேவராயர் இறத்தல்.

மேலும் படித்தற்குரிய நூல்கள்

Ayyangar, S. K. — *Sources of Vijayanagara History*, Madras University Historical Series, No. 1, Madras, 1919.

Sastri, K. A. N. & Venkataramanayya, N. *Further Sources of Vijayanagara History*, 2 Vols. Madras University Historical Series, No 11. Madras, 1946.

Mahalingam, T. V. — *Administration and Social Life under Vijayanagara Empire*, University of Madras, 1951.

Mahalingam, T. V. — *Economic Life in the Vijayanagara Empire*, University of Madras. 1951.

Mahalingam, T. V. — *South Indian Polity*, Madras University Historical Series, No. 21. Madras, 1955.

Sewell, R. — *A Forgotten Empire*, London, 1900.

Chakravarti, C. H. — *Origin of Vijayanagara*, IC. VI. 107–09.

Dikshit, C. S. — *Krishnadevaraya's Conquest of Orissa*, Quarterly Journel of the Mythic Society. XXI, 1-6.

Goetz, H. — *Krishnadevaraya's Conquest of Rachol*, AIOC, V, 348–54.

Pantulu, H. R. — *Krishnaraya and the Story of Karnata Kingdom*. Quarterly journel of the Andhra Historical Research Society, II, 204–19.

Ramachandraiya, O. — *Krishnadevaraya and Fr. Luis, Embassy to Vijayanagara*. PIHC, III, 728–46.

Ayyangar, S. K. — Krishnadevaraya of Vijayanagar.

GENERAL:

Vincent, A. Smith — *The Oxford History of India*, pp. 303–319.

K. A. Neelakanta Sastri—*A History of South India*, pp. 254–299.

R. C. Majumdar and Others — *An Advanced History of India*, pp. 359-376.

R. C. Majumdar and Others—*The Delhi Sultanate*, pp. 271-320.

R. சத்தியநாதன் & D. பாலசுப்பிரமணியன், இந்திய வரலாறு—இரண்டாம் பாகம், பக்கம் 319–34.

கலைச்சொற்கள்

A

Abdication	—	அரசு துறத்தல்
Accountant	—	கணக்கு வைப்போர்
Administration	—	நிர்வாகம்
Aggression	—	வலியத்தாக்குதல், ஆக்கிரமிப்பு
Agriculture	—	வேளாண்மை
Ambassador	—	அரசாங்கத் தூதர்
Anklet	—	காப்பு
Appreciation	—	பாராட்டு
Architecture	—	கட்டடக்கலை
Armlet	—	வாகுவலயம்
Authority	—	அதிகாரம்
Autonomy	—	தன்னாட்சி, சுய ஆட்சி

C

Capture	—	கைப்பற்றல்
Cavalry	—	குதிரைப்படை
Central Government	—	மத்திய அரசு
Charities	—	நன்கொடைகள்
Commander	—	தானைத்தலைவர்
Commercial tax	—	வணிக வரி
Community	—	சமூகம், வகுப்பு
Convension	—	பாரம்பரிய வழக்கம்
Coronation	—	முடிசூட்டல்
Council	—	சபை

D

Dynasty	—	மரபு
Diplomat	—	அரசியல் தந்திரி

E

Economic condition — பொருளாதார நிலை
Endowments — அறக் கட்டளைகள்
Exile — நாடு கடத்தல்
Exise duties — கலால் வரி
Expansion — விரிவாக்கு

F

Fillet — பட்டம்
Finance — நிதி
Fines — அபராதங்கள்
Feudalism — நிலமானிய முறை
Foreign Policy — அயல்நாட்டுக் கொள்கை

G

Governor — ஆளுநர்

H

Harem — அந்தப்புரம்
Havoc — பேரழிவு
Heriditary — பரம்பரை

I

Imperialism — பேரரசுக் கொள்கை, ஏகாதிபத்தியக் கொள்கை
Inscription — வெட்டெழுத்து
Invasion — படையெடுப்பு

J

Jaghir — ஜாகீர்
Judicial — நீதித்துறை

L

Law and order — சட்டமும் ஒழுங்கும்
Literature — இலக்கியம்

M

Military — இராணுவம்
Mythology — புராணவியல்

N

Native Chiefs — நாட்டுச் சிற்றரசர்கள், தலைவர்கள்

O

Order	— ஒழுங்கு, உத்தரவு

P

Priest	— புரோகிதர்
Professional tax	— உத்தியோக வரி
Province	— மாநிலம்
Property	— சொத்து
Punishment	— தண்டனை

R

Religion	— சமயம்
Revenue	— வருமானம்
Revolution	— புரட்சி
Route	— போக்கு, வழி

S

Secretariat	— செயலகம்
Selection	— தேர்ந்தெடுத்தல்
Siege	— முற்றுகை
Social	— சமூக
Sources	— ஆதாரங்கள்
Sword	— வாள்

T

Tax	— வரி
Treasury	— கருவூலம்
Trustee	— அறங்காவலர், தர்மகர்த்தா

U

Urban	— நகர்ப்புறம்
Unification	— ஐக்கியம்

V

Vassal house	— பண்ணையாள் வீடு
Version	— பதிப்பு